

கல்கி
தீபாவளி மலர்
ALKI . அக்டோபர் 24, 1954 . விலை
1 ரூபாய்
DEEPAVALI SPECIAL NUMBER




Simpson's
SPECIALITIES
ஸிம்ஸன் & கோ., லிட்,
மதராஸ். 2.
கிளைகள் : பெங்களூர் - உதகமண்டலம் - திருச்சிராப்பள்ளி - செகிந்திராபாத் (டெக்கான்)



எமது அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்
SIMCO SHIKARI
SAFETY MATCHES
40 குச்சி 'கோபுரம்', 'சிம்கோலேட்', 'சிம்கோ சைகிள்' தீப்பெட்டிகளும் 60 குச்சி 'சிம்கோ சிகாரி' தீப்பெட்டிகளும் ஐம்பது டிகிரி பாரன் ஹீட்டில் குச்சி கழிவின்றி பற்றும்.
○★○
சிம்கோ
காந்திய முறைப்படி எமது கம்பெனியில் குடிசைத் தொழிலாகத் தினசரி தயாராகும் ஐந்து லட்சம் தீப்பெட்டிகள் எங்களுடைய டிப்போக்களில் செலவாகி வருகின்றன
சதர்ன் இந்தியா மாட்ச் கம்பெனி
போன்: 63
சிவகாசி
தந்தி 'SIMCO'

கவர்ச்சி மிக்கது
சக்தி வாய்ந்தது
நம்பகமானது



ராயல் என்பீல்ட்

125 C.C.	G 350 C.C.
என்ஸைன் 150 C.C.	புல்லெட் 350 C.C.
250 C.C.	மீடியார் 700 C.C.

மற்றும் இதர மாடல்களுமுண்டு.

எங்கெல்லாம் மோட்டார் சைகிள்கள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் பெரும்பாலும் இவைகளையே காண்பீர்கள்

சுலபமான தவணைகளில் பணம் செலுத்தலாம்


பரிவர்த்தனை வேண்டுமானாலும் ஆலோசிக்கப்படும்.

தி மதராஸ் மோட்டார்ஸ் லிமிடெட்

(மோட்டார்சைகிள் நிபுணர்கள்)

36-C, மவுண்டு ரோட் :: மதராஸ்-2.


The Housewife needs it too!
WILSON REGD.
இல்லாளுக்கும் இது தேவைதான்!
வாகோபில்
ஏரோபில்
Wilson
VacOfil Pen
REGD.
வில்ஸன்
ஜூனியர்
வாகோபில்
ரூ. 3/12
வில்ஸன்
மேஜர்
வாகோபில்
ரூ. 5/12
வில்ஸன்
டிலக்ஸ்
வாகோபில்
14 கேரட்
தங்க நிப்
ரூ. 8/12
வில்ஸன்
அட்மிரல்
வாகோபில்
14 கேரட்
பெரிய சைஸ்
தங்க நிப்
ரூ. 12/8
Sole Distributors for India
KIRON & CO. LTD.
73-75, CHHIPI CHAWL, NEAR ZAYERI BAZAR, BOMBAY 2
BRANCHES IN CALCUTTA & MADRAS



தீபாவளிக்கு
தகுந்த பரிசு
ஸ்டாண்டர்ட் 8
உலகிலேயே மிகப் பெரிய
சிறிய கார்!
தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) லிமிடெட்
29, மவுண்ட் ரோட், மதராஸ்-2
SMZ-11A




Eau-de
Cologne


The National Hindu Hotel
THE HOME FOR SOUTH-INDIAN COMFORTS IN BOMBAY
NATIONAL HINDU HOTEL.
FRERE ROAD AND MINT
ROAD TRAM JUNCTION
FORT, BOMBAY
Phone 25624
TELEGRAM "SUKHNIVAS"

The Hindu

There is not a dull moment in this fast moving picture which follows the fortunes of a young out law who takes it upon himself to defeat the plots of greedy lustful men.........

The Mail

Pakshiraja's "Malaikkallan" tells the suspenseful tale of a handsome dashing adventurer and his romance. The story is developed cogently, and there is never a dull moment. Pleasing music and good dialogue make the picture a good entertainment.

The Indian Express

Poet Laurette Namakkal Kavingnar's famous novel "Malaikkallan" has been made into a film by Pakshiraja Studio with Banumathi and Ramachandran leading the cast. Dorairaj, by and large steals the show by contributing much to its liveliness and pep......"

Flash

Mr. S. M. Sriramulu Naidu has added one more feather to his hat in presenting "Malaikkallan" which is acclaimed as the best entertainer of the season. The picture is reported to be having repeat audience all over.

Picture Post

The Merit in direction is that Sriramulu Naidu has selected a story which is not only simple but also straight forward. Additionally, his imagination and skill resulted in making the picture entertaining and enjoyable. There is no doubt that Sriramulu Naidu is one of our best directors and he will soon place his company on top.

சுதேசமித்திரன்

கத்திச் சண்டை, குத்துச் சண்டை கரடி—புலிச் சண்டை போன்றவை யெல்லாம் திகட்டும் வரையில் விறுவிறுப்புக் குறையாதவாறு புனைந்திருக்கிறார் நாமக்கல் கவிஞர். வசனமோ கருணாநிதியினுடையது. கருத்துக்கினிய பாட்டுகள்.

கல்கி

வீரம், தீரம், வாள் யுத்தம், காதல், பகைமை, பரோபகாரம், ஆபத்து, எதிர்பாராத உதவி, மிரட்டல், உருட்டல், கொள்ளை, அக்ஞாதவாசம், ஒருவர் பல வேஷங்களில் தோன்றுதல், இப்படி பலதரப்பட்ட விஷயங்களை ஒருங்கே கொண்ட ஒரு களிப்பூட்டும் படம் பார்க்க வேண்டுமானால், கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோஸ் தயாரித்திருக்கும் "மலைக்கள்ளன்" படம் பார்க்க வேண்டும்.

தினமணி

பானுமதியின் நடிப்பைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. படத்திற்கே அவரால் தான் கவர்ச்சி. நடிப்பதுடன் நடனங்களும் ஆடியுள்ளார் என்றால் ரசிகர்களின் கண்களுக்கு நல்ல விருந்து கிடைக்கிறது என்று சொல்லவா வேண்டும். 'ஏட்டு' (ஹெட்கான்ஸ்டேபிள்) கருப்பையாவாக வரும் டி. எஸ். துரைராஜ் திரையில் தோன்றினால் போதும். தியேட்டரில் ஒரே சிரிப்புதான். போலீஸ் இலாகாவின் குறைகளை அவர் கிண்டல் செய்வதும், 'பெரிய' மனிதர்களின் வண்டவாளங்களை அம்பலப் படுத்துவதும் யாரையும் 'கொல்' எனச் சிரிக்க வைத்துவிடும்.

தினத்தந்தி

படப்பிடிப்பு மிக நன்றாக அமைந்துள்ளது. காட்சி ஜோடனைகள், வெளிப்புறக் காட்சிகள் எல்லாம் நன்றாகவே இருக்கின்றன. நல்ல தமிழ் பாட்டுகள் கேட்க இனிமையாக உள்ளன. பலே ஜோர் பானுமதி! சிரிக்க வைக்கும் துரைராஜ்! சுமூன்றும் சகோதரிகள்.

நாரதர்

ஆபாசமற்றும் அதே சமயத்தில் உயர்ந்த தமாஷ்களுடனும், சில சாகசச் செயல்களுடனும் சில நல்ல நடன காட்சிகளுடனும் கண்யமாக சில காதல் காட்சிகளுடனும் கூடிய படமாக இருந்தால், பொது ஜனங்களால் வரவேற்கப்படும் என்பதற்கு பக்ஷிராஜாவின் "மலைக்கள்ளன்" படம் ஒரு தகுந்த உதாரணமாகும்.

பாரததேவி


படம் முதல்தரமான படம். டைரக்டர் ஸ்ரீ ராமுலு நாயுடுவுக்கு இப்படம் மற்றொரு வெற்றி.


தென்னாடெங்கும்
அமோக ஆதரவுடன்
வெற்றிக்கொடி
நாட்டி வருகிறான்
பக்ஷிராஜாவின்
மலைக்கள்ளன்
டைரக்ஷன்
S.M. ஸ்ரீராமுலு நாயுடு
எமது அடுத்த வெளியீடு...
பிரபல நட்சத்திரங்கள் நடிக்கும்
புகழ் பெற்ற துப்பறியும் நவீனம்
மரகதம்
(கருங்குயில் குன்றத்துக் கொலை)

வனப்புடன் இசைந்த வசதி 1954



டி-ஸோடோ



வனப்பு

தாழ்ந்து படிந்த அதன் அழகான வெளியமைப்பு, லாவண்யமான உட்புறம் - இவற்றைக் கண்டு மகிழுங்கள்.

அதன் ஆச்சரியகரமான ஓடும் திறனைக் கவனியுங்கள் - முற்றிலும் புதிய அடித்தள அமைப்பு, சஸ்பென்ஷன் ஏற்பாடு.

உழைப்பு

திறமை மிக்க 6 சிலிண்டர் இஞ்சின் பொருத்தப்பட்டிருப்பதால் வண்டி இலாவகமாகச் செல்கிறது. ஓட்டிப் பாருங்கள்.

வசதி

உல்லாசமாக யாத்திரை செய்யுங்கள். குஷியான ஆசனங்கள். விசாலமான சாளரங்கள். ஒரே துண்டாலான முன்புற முகப்புக் கண்ணாடி.

சில்லரை விலை : ரூ18,890/-எக்ஸ்-பாக்டரி,
உள்ளூர் வரி வேறு

இவ்வழகியை உங்கள் வியாபாரியிடம் பார்வையிடுங்கள்

முன்னேற்றத்தோடு தயாரிப்பவர்


தி பிரிமியர் ஆடோமொபைல்ஸ் லிட்




கல்கி
தீபாவளி
மலர்
1954


Diwali Greetings & best Wishes from—
The MINIATURE "N"
Rolled Gold 30 Micron Quality Rs. 220
18 ct. Solid Gold ... ... Rs. 355
The SECUNDUS MODERN
Centre - Second 10½'' Size
Rolled Gold 20 Micron Quality Rs. 152
WEST END WATCH Co
BOMBAY ★ CALCUTTA


தரத்திலும்
குணத்திலும்
முன்னணியில் நிற்பவை...
K.T.R
★ பன்னீர்
★ சந்தனாதி தைலம்
★ அரைக்கீரை விதைத் தைலம்
★ பொன்னாங்கண்ணி தைலம்
★ சேரன், சோழன், பாண்டியன்
ஜவ்வாது பத்திகள்
★ குல்கந்து, ஊறுகாய்
★ சந்தனப் பவுடர்
K.T.R. வாசனாதி திரவியசாலை, விஜயபுரம். தஞ்சை ஜில்லா.


ROSE BRAND
REGISTERED TRADEMARK
BUTTER MELTED
PURE GHEE
ரோஜா மார்க் நெய்
LINGAM & CO
COIMBATORE
"ரோஜா மார்க்" நெய் கலப்பில்லாமல் இருக்க கீழ்க்கண்ட இயற்கை குணங்களையும், ரசாயன பரிசோதனை முடிவுகளையும் கொண்டு தயாரிக்கப் படுகின்றது.
1. Butyro-Refractometer Readings at 40°C } 42·5 to 43·0
2. Reichert-Meissl Value-27 and above
3. Boudin Test - Negative (ரசாயனம் சேர்க்கும்போது சிவப்பு நிறம் வருதல் கூடாது)
4. Phytosteryl Acetate Test } 114·2°C to 115·2°C
நெய் அதிக நாட்கள் கெடாமல் இருக்க அதில் உள்ள புளிப்பு, Oleic அமில வடிவத்தில் ஒரு குறிப்பிட்ட சத விகிதத்துக் குட்பட்டிருப்பதை பட்டில் கவனித்து, புதிய டின்களில் சீல்செய்தும் பத்திரவாயில் லேபில் வைத்தும் அனுப்பப்படுகின்றன.
ரோஜா மார்க்
நெய்
லிங்கம் & கோ, கோயமுத்தூர்.



பொருளடக்கம்

1954 அக்டோபர் 24

கல்கி

மலர் 14 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 13

கைத்தறித் தீபாவளி கொண்டாடுங்கள்!

மங்களகரமான தீபாவளி பண்டிகையை முன்னிட்டுக் "கல்கி" நேயர்கள் யாவருக்கும் வாழ்த்துக் கூறுகிறோம்.

சுதந்திர பாரதப் பெருமக்கள் பல்வளம் பெருகி என்றென்றும் சுபிட்ச வாழ்வு பெற வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

தீபாவளி புண்ணிய தினத்தன்று குறிப்பாக, தமிழ் நாட்டில் மக்கள் மங்களஸ்நானம் செய்கின்றார்கள்; புது ஆடை உடுத்துகின்றார்கள்; 'பட்டாசு' வெடிகள் வெடிக்கின்றார்கள்; நரகாசுரன் கதையை நினைவு கூர்கின்றார்கள்.

நரகாசுரன் கதையைக் காட்டிலும் மிகப் பழைய கதை ஒன்றையும் இச்சந்தர்ப்பத்தில் எல்லோரும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

உலகத்திலே பருத்தி நூலைக் கொண்டு துணி உற்பத்தி செய்யும் கலை நரகாசுரன் காலத்துக்கு முன்பே முதன் முதலாகப் பாரத நாட்டில்தான் பிறந்தது.

இந்த அற்புதத்தைக் கண்டு உலக மக்கள் அதிசயித்த காலம் உண்டு.

இன்று நவீன நாகரிகத்துக்கு நடுநாயகமாக விளங்கும் ஐரோப்பிய நாடுகளில் மக்கள் மரப் பட்டைகளை உடுத்திக்கொண்டு காட்டு மிராண்டிகளாகத் திரிந்த காலத்தில், பாரத நாட்டு மக்கள் பருத்தி ஆடைகளும் பட்டு ஆடைகளும் உடுத்தி, நாகரிகத்திலும் கலாச்சாரங்களிலும் சிகரமாக விளங்கி வந்தார்கள்.

இந்தச் சிறப்பைப் பற்றிய விவரங்கள் அனாதி காலம் தொட்டுப் பரத கண்டத்திலே அனுஷ்டானத்தில் இருந்து வரும் வேதங்களில் காணப்படுகின்றன!

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இந்தியாவுக்கு விஜயம் செய்த வெளி நாட்டுச் சரித்திராசிரியர்களும், இந்தியா பருத்தி ஆடை உற்பத்தி செய்யும் அதிசயத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"இந்தியாவில் அதிசயமான ஒரு வகை மரம் இருக்கிறது. அதிலிருந்து பழமோ, காயோ கிடைப்பதில்லை. ஆனால் அம்மரத்திலிருந்து அபூர்வமான பூக்கள் கிடைக்கின்றன. அவற்றிலிருந்து இந்தியர்கள் நூல் எடுத்து, ஆடைகள் நெசவு செய்வது உலகிலேயே இராத விசித்திரமாக இருக்கிறது."

இவ்வாறு, இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு விஜயம் செய்துவிட்டுச் சென்ற கிரேக்கச் சரித்திராசிரியர் ஹிரொடோடஸ் குறிப்பிட்டுள்ளார்.

வட இந்தியாவில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் பூமிக்குள் புதைந்துபோன மொஹெஞ்சதரோ நகரத்தைத் தோண்டிக் கண்டு பிடித்திருக்கிறார்கள் அல்லவா?

அதிலிருந்தும், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியர்கள் கைத்தறி நெசவுக் கலையில் உலகமே பிரமிக்கத் தக்கவாறு தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன.

பதினெட்டாவது நூற்றாண்டு வரையில் கூட இந்தியக் கைத்தறி நெசவுத் துணிகள் கிரீஸ், ரோம், எகிப்து, பாரசீகம், அரேபியா முதலிய பல நாடுகளுக்கும் ஏராளமாக ஏற்றுமதியாகி வந்தன.

அன்னியர் ஆதிக்கமும் அசுர சக்தி பொருந்திய ஆலைகளும் இந்தியாவில் ஏற்பட்டதிலிருந்து, கைத்தறி நெசவுத் தொழில் ஆபத்துக்கு உள்ளாகியது எல்லோரும் அறிந்ததே.

இந்தியாவிலிருந்து அன்னியர் ஆதிக்கம் மறைந்து ஏழு ஆண்டுகள் சென்றுவிட்டன.

எனவே, கைத்தறி நெசவுத் தொழிலின் முன்னேற்றத்துக்கு அன்னியர் ஆதிக்கம் இடையூறாக இருக்கிறது என்று இனி யாரும் சொல்ல முடியாது.

உன்னத சிகரத்திலிருந்து நாளடைவில் சறுக்கிப் பாதாளத்தில் விழுந்து கிடந்த கைத்தறி நெசவுத் தொழில் விஷயத்தில் பொதுமக்களும் சர்க்காரும் சில மாதங்களுக்கு முன் கவனம் செலுத்த முற்பட்டதன் பலனாக, அத் தொழில் மீண்டும் புத்துயிர் பெற்று வருகிறது.

மெலிந்து நலிந்து மறையும் தறுவாயில் இருந்த கைத்தறி நெசவாளர்கள் மறுபடியும் தலை தூக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

அவர்களும் அவர்களை அண்டியிருக்கும் குடும்பங்களும் சுபிட்ச வாழ்வு பெறுவது, கைத்தறி நெசவுத் தொழில் மறுபடியும் பழைய உன்னத நிலையை அடைவது, ஓரளவுதான் சர்க்காரின் பாதுகாப்பு முறைகளைப் பொறுத்திருக்கிறது; ஆனால் பெரிதும் பொது மக்கள் அளிக்கும் ஆதரவிலே தான் இருக்கிறது.

சர்க்கார் கைத்தறித் தொழிலுக்காகச் செய்யும் உதவிகள் அவர்களுடைய நல்ல நோக்கத்துக்கு அறிகுறியே தவிர, அவை மேற்படி தொழில் அபிவிருத்திக்குப் போதுமானவையல்ல.

கைத்தறித் தொழிலைப் பாதுகாக்கும் விஷயத்தில் சுதந்திர இந்திய சர்க்கார் காந்திஜி ஒப்புக்கொள்ளக் கூடிய முறையில் காரியம் செய்யவில்லை. காந்திஜியை அடியோடு மறந்து விட்டுத்தான் காரியம் செய்து வருகிறார்கள்.

சர்க்கார் கொள்கை எப்படியிருந்தாலும், பொது ஜனங்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டியது அவசியம். முக்கியமாக அவர்கள் இந்தத் தீபாவளிக்குக் கைத்தறி, கதர்த் துணிகளைத் தவிர வேறு எதுவும் வாங்குவதில்லை என்று உறுதி கொள்ள வேண்டும்.

தீபாவளிப் பண்டிகை தமிழர்களுக்குரியது அல்ல என்றும், அதைத் தமிழர்கள் கொண்டாடக்கூடாது என்றும் சொல்வோர் சிலர் தமிழ் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

மற்றப் பண்டிகைகளைப் போல் தீபாவளிப் பண்டிகையில் வைதிகச் சடங்குகள் ஏதுவுமில்லை. ஜாதி, சமய வேற்றுமையின்றிப் பரம ஏழை முதல் யாவரும் எண்ணெய் ஸ்நானம் செய்து, புத்தாடை உடுத்தி, மனைவி மக்களுடன் மகிழ்ந்திருப்பதற்குரிய பண்டிகை தீபாவளிப் பண்டிகை.

தீபாவளி காலத்தில் துணிகள் நெசவு செய்யும் ஏழைக் கைத்தறி நெசவாளர்கள் மிகுந்த பலன் அடைகிறார்கள். எல்லாக் கடைகளிலும் வியாபாரம் நன்றாக நடைபெறுகிறது. எண்ணெய்த் தொழிலாளர்கள் லாபம் பெற்று, நன்மை அடைகிறார்கள். பட்டாசு வெடிகளும் வாணங்களும் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்குப் பிழைப்புக் கிடைக்கின்றது. இவ்வாறு எத்தனையோ தொழிலாளர்களுக்குப் பயன்படக் கூடியதாகவும், விசேஷமாக எல்லா மக்களும் குதூகலமாகக் கொண்டாடக் கூடியதாகவும் உள்ள வேறு பண்டிகை ஒன்றைக் குறிப்பிட முடியாது.

ஆகையினாலேதான் தீபாவளிப் பண்டிகை கொண்டாடக் கூடாது என்ற அர்த்தமற்ற பிரசாரத்துக்குத் தமிழ் நாட்டில் யாரும் செவி கொடுப்பதில்லை.

இந்த வருஷத் தீபாவளியைத் தமிழ் மக்கள் வழக்கத்தைக் காட்டிலும் அதிக குதூகலத்துடன் கொண்டாடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அவர்களுடைய கொண்டாட்டம் லட்சக் கணக்கான கைத்தறித் தொழிலாளிகளின் வீடுகளில் விளக்கேற்றி வைக்கும் கொண்டாட்டமாகவும் நடைபெற வேண்டும் என்று விரும்புகிறோம்.

புது ஒப்பந்தம்

சென்ற ஜனவரி மாதம் புதுடில்லியில் ஏற்பட்ட இந்தியா—இலங்கை ஒப்பந்தம் இந்தியாவின் வடகோடியில் உள்ள காஷ்மீரிலிருந்து இலங்கையின் தென்கோடியில் உள்ள காலி வரையில் ஏராளமான மக்களை உற்சாக வெள்ளத்தில் ஆழ்த்தியது. அந்த ஒப்பந்தத்தினால் இரண்டாயிரம் வருஷத்திய இந்தியா—இலங்கைப் பிரச்னை தீருவதற்கு வழி பிறந்து விட்டதாக இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலை பரவசம் அடைந்தார். இந்தியா—இலங்கைத் தகராறைத் தீர்க்க முதல் அடி எடுத்து வைத்து விட்டதாக ஜவாஹர்லால்ஜி மகிழ்ச்சி அடைந்தார். அவ் விஷயமாக அப்போது எல்லோரையும் போல் நாமும் உற்சாகம் அடைந்தோம். ஆனால், மேற்படி ஒப்பந்தம் ஏற்பட்ட சில தினங்களுக்குள்ளேயே, அதனால் எழுந்த ஆனந்தமும் உற்சாகமும் மறைந்து விட்டன; சோர்வும் பீதியும் ஏற்பட்டு விட்டன. அந்த ஒப்பந்த ஷரத்துகளில் ஒன்றாவது நியாயமான முறையில் நிறைவேறுவதற்கு வழி இராமல் போய் விட்டது. மேற்படி ஒப்பந்தம் ஏற்பட்ட பத்து மாதங்களுக்குள் நெருக்கடி முற்றி மற்றொரு ஒப்பந்தம் செய்து கொள்ளும் படியான நிலைமை உண்டாகியதெனில், முதல் ஒப்பந்தத்தைப் பற்றி 'வியாக்கியானம் எதுவும் தேவையில்லை' அல்லவா! இப்போது புதிதாக ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தம் பற்றியும் முன்போலவே ஸர் ஜான் கொத்தலாவலை குதூகலத்தைத் தெரிவித்திருக்கிறார். மற்றும் பலரும் சந்தோஷத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இதிலிருந்து நாம் ஒன்றும் முடிவு கட்டி விடுவதற்கில்லை. இந்த ஒப்பந்த ஷரத்துக்களை இலங்கை சர்க்கார் நல்ல நோக்கத்துடன், நியாயமான முறையில் அமுலுக்குக் கொண்டு வர முற்படும் பட்சத்தில் இந்தியா—இலங்கைப் பிரச்னை நாளடைவில் நல்லபடியாகத் தீர இடம் உண்டு. அவ்வாறு செய்யாமல் இலங்கை சர்க்கார் புது ஒப்பந்தத்தைக் குறித்தும் விசித்திர வியாக்கியானத்தில் இறங்குவார்களாயின், மறுபடியும் விபரீத நிலைமையே ஏற்படும்.

இப்போது ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் சரிவர அமுலுக்கு வந்தால்கூட இந்தியா — இலங்கைப் பிரச்னை நிரந்தரமாகத் தீரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இலங்கையைத் தாயகமாகக் கொண்டு தலைமுறை தலைமுறையாக அங்கு வாழ்ந்து வரும் எட்டு லட்சம் இலங்கை இந்தியர்களுக்கும் இலங்கை சர்க்கார் பிரஜா உரிமை அளித்தாலன்றி, அந்தப் பிரச்னை தீராது. அத்தகைய உரிமை அளித்து ஏற்படும் ஒப்பந்தமே இந்தியா—இலங்கையின் நிரந்தரமான நட்புக்கு அஸ்திவாரமாக இருக்கும்; இலங்கை சர்க்காரின் பெருமைக்கும் நற்பெயருக்கும் இழுக்கு ஏற்படாமல் இருப்பதற்கு உதவியாக இருக்கும்.

வாழ்த்துக் கூறுகிறோம்

நேற்று வரையில் யாருக்கும் தெரியாமல் இருந்த ஏேழர் என்ற சிறிய கிராமம் இன்று சரித்திரப் பிரசித்தி பெற்று விட்டது!

இவ்வாறு ஒரு சிற்றூர் ஒரே நாளில் சரித்திரத்தில் நிரந்தரமான இடம் பெற்ற சம்பவம் இதற்கு முன் உலகில் நிகழ்ந்ததில்லை எனலாம்.

புதுச்சேரியிலிருந்து பத்து மைல் தூரத்தில் உள்ள, பிரஞ்சு இந்தியாவைச் சேர்ந்த ஏேழர் கிராமத்தில் பிரஞ்சு இந்திய மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய மகாசபை கூடி, பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டும் என்று பெருவாரியான வாக்குகளால் தீர்மானித்து விட்டது. சபைக்கு வந்திருந்த நூற்று எழுபத்தெட்டு பிரதிநிதிகளில் நூற்று எழுபது பேர் பிரஞ்சு இந்தியா பாரத நாட்டுடன் இணைவதை ஆதரித்து வாக்குக் கொடுத்தார்கள்.

எனவே, இருநூற்று ஐம்பது வருஷத்திய பிரஞ்சு ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்த அந்தப் பிரதிநிதிகளை என்றென்றும் மறக்க முடியாது.

இப்போது ஏற்பட்டுள்ள இந்திய – பிரஞ்சு சர்க்கார் ஒப்பந்தத்தின்படி, இதுவரையில் பிரஞ்சு ஆட்சிக்கு உட்பட்டிருந்த புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம் ஆகிய பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் அடுத்த நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து இந்திய சர்க்காரின் நிர்வாகத்துக்கு வந்துவிடும்.

சுதந்திர இந்திய சர்க்கார் பல முக்கியப் பிரச்னைகளையும் தீர்க்கத் தவறிவிட்டார்கள் என்று சில தினங்களுக்கு முன் பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஆச்சாரிய கிருபளானி இந்தியப் பார்லிமெண்டில் குறை கூறினார். அவர் குறிப்பிட்ட முக்கியப் பிரச்னைகளில் ஒன்றான பிரஞ்சு இந்தியா விஷயம் இப்போது இந்தியாவுக்குச் சாதகமாக முடிவடைந்துள்ளது. நாளடைவில் மற்றப் பிரச்னைகளையும் திருப்திகரமாகத் தீர்ப்பதில் இந்திய சர்க்கார் வெற்றி பெறுவார்கள் என நம்புகிறோம்.

பிரஞ்சு இந்தியப் பிரச்னை இவ்வளவு சீக்கிரமாகவும் வெற்றிகரமாகவும் தீருவதற்குப் பிரஞ்சு இந்தியத் தலைவர்களே காரண புருஷர்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் தாங்கள் ஆரம்பித்த விடுதலைப் போராட்டத்தில் தைரியத்துடனும் உறுதியுடனும் நின்றதாலேயே பிரஞ்சு இந்தியா மக்கள் அன்னிய ஆட்சியிலிருந்து இவ்வளவு விரைவில் விடுதலை பெற்று சுதந்திர இந்தியாவுடன் இணைவது சாத்தியமாயிற்று. தங்களுடைய புனிதமான இலட்சியத்தில் அமோக வெற்றி பெற்ற பிரஞ்சு இந்தியத் தலைவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

முகப்புச் சித்திரம்

செம்பொற் சோதி

கங்கா ஸ்நானம் செய்து, புத்தாடை உடுத்தி, கையில் தீப ஆராதனைத் தட்டுகளுடன் வரும் மங்கையர்களைப் பாருங்கள்.

அவர்கள் கூட்டத்தின் நடுவே இருக்கும் குத்து விளக்கைக் கும்பிடவே வந்திருக்கிறார்கள். ஜோதி வடிவமான ஆண்டவனை வணங்கக் கையில் தீப ஜோதிகள் ஏந்தி வந்திருக்கிறார்கள்! இந்தப் பொருத்தத்தைப் பார்க்கும்போது, 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்று நம் பெரியோர்கள் கூறுவதின் பொருளும் விளங்குகிறதல்லவா!

நீரிலும் நெருப்பிலும், காற்றிலும் கல்லிலும், மண்ணிலும் மரத்திலும் எங்கும் நிறைந்திருக்கும் ஈசன் நம்முடைய மனத்திலும் இருக்கிறான் அல்லவா! எல்லாத் தொழிலும் அவன் தொழிலாக இருக்கும் போது, அவனை வணங்குவது மட்டும் நம் தொழில் எப்படியாகும்! அதனால் தான் 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்றனர். அந்தப் பெண்கள் ஏதோ பாடிக் கொண்டே தீப தரிசனம் காட்டுகிறார்கள். அந்தப் பக்தி யூட்டும் அப்பர் பெருமானின் பாடலை நாமும் சற்று செவி கொடுத்துக் கேட்போம்:

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி யிருந்தாய் நீயே

நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே

பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே,
புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் நீயே

செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா(று) அகலாத செம்பொற் சோதீ.

[செல்வாய செல்வம்: சென்று அடைதற்குரிய பேரின்பச் செல்வம்.]

இப்படிப் பரமனைப் பாடிப் பரவும் மங்கையருடன் நாமும் இப்புனித நாளில் பணிவோமாக!

சகுந்தலை பெற்ற மதலை

நமது நாட்டுக்குப் பாரத தேசம் என்றும் பரத கண்டம் என்றும் பெயர். சகுந்தலை பெற்ற வீரப் புதல்வன் பரதன் ஆண்ட தேச மாதலினாலே இதற்கு அந்தப் பெயர் நிலவுவதாயிற்று.

சகுந்தலை பெற்ற மதலை சிங்கக் குட்டியுடன் விளையாடும் காட்சியை (192-அ பக்கத்தில்) பாருங்கள். அதைவிட அதிசயமாயிருக்கிறது ஒரு குழந்தை சிங்கத்துடன் விளையாடிக் கொண்டிருக்க, பெற்ற தாய் சற்றும் பயமோ பீதியோ கொள்ளாமல் இனியுடன் கொஞ்சிக் கொண்டிருப்பது! எதைக் கண்டாலும் அஞ்சும் சுபாவம் படைத்துவிட்ட நமக்கு அப்படித் தோன்றலாம்.

முன்னாட்களில் பாரத நாடு வீரம் செறிந்த நாடாக இருந்தது. குழந்தைப் பருவ முதலே ஆண்மையும் வீரமூட்டும் செயல்களைப் புனிதத் தாய்மார் குழந்தைகளைப் பயிற்றி வளர்த்து வந்தனர்.

அத்தகைய தாய்க்குலம் மீண்டும் நம் நாட்டில் தோன்றுவதாக! அத்தகைய வீரப் புதல்வர்கள் நம் நாட்டில் தோன்றுவார்களாக!

சகுந்தலை பெற்றதோர் பிள்ளை சிங்கத்தினைத்
தட்டி விளையாடி—நன்று
உகுந்ததோர் பிள்ளைமுன் பாரதாணி
ஒளியுறப் பெற்ற பிள்ளை!



அத்தியாயம் 15

விசாரணை

மந்திரமூர்த்தி மறுநாள் திருநந்திபுரம் சென்றார். சந்திரமணிக்கு அவர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினார். காசிலிங்கத்தை ஜாமீனில் விடுதலை செய்து அழைத்துக் கொண்டு வந்தார்.

இது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை. போலீஸ் தரப்பில் காசிலிங்கம் பெரிய 'ரௌடி' என்றும், ஜாமீனில் விடுதலை செய்யக் கூடாது என்றும் வாதாடினார்களாம்.

ஆனால் மந்திரமூர்த்தி பெரிய கெட்டிக்கார வக்கீலை அமர்த்தியிருந்தார். அவர் மாஜிஸ்ட்ரேட்டிடம் சண்டை போடுவதுபோல் காரசாரமாகப் பேசி ஜாமீனில் விடுதலை செய்யும்படி பண்ணினார். மந்திரமூர்த்தியும் அவருடைய சிநேகிதரான இன்னொரு பெரிய மனிதரும் ஜாமீன் கொடுக்கவேண்டியதாயிருந்தது.

கோர்ட்டில் ஜாமீன் மனு விசாரணையின்போது என் தாயாரின் பெயரும் அடிபட்டதாம். காசிலிங்கத்தை ஜாமீனில் விடக் கூடாது என்ற கட்சிக்கு ஆதரவாக அவர் என் தாயாரைக் கலியாணமாவதற்கு முன்பே அழைத்துக் கொண்டு வந்தது பற்றிப் பேசினார்களாம். இது என் தந்தைக்குக் கோபமூட்டியதாம். நல்ல வேளையாக அவர் எதுவும் பேசுவதற்கு முன்னால், வக்கீலே ஆத்திரமாகவும் கோபமாகவும் அடித்துப் பேசி, அதற்கும் இந்த வழக்குக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று சொன்னாராம். எப்படியோ, மந்திரமூர்த்தி தம்முடைய வாக்கை நிறைவேற்றி விட்டார். காசிலிங்கத்தை அழைத்துக் கொண்டு வந்து விட்டார்.

ஆனால் காசிலிங்கத்தின் வருகை வீட்டில் உடனே குதூகலத்தை உண்டு

பண்ண வில்லை. அவரைப் பார்த்ததும் சந்திரமணிக்கு அடக்க முடியாமல் அழுகை வந்து விட்டது. அவளுடைய அழுகை காசிலிங்கத்துக்குத் தாங்க முடியாத கோபத்தை ஊட்டியது.

"நான் இன்னும் செத்துப் போகவில்லையே? உயிரோடு தானே வந்திருக்கிறேன்? எதற்காக அழுகிறாய்? ஜமீன்தார் அல்லவோ செத்துப் போனார்? அவருக்காக அழுகிறாயா?"

இந்தக் குரோதமான வார்த்தைகள் சந்திரமணியின் துக்கத்தை மேலும் அதிகப் படுத்தி விட்டன.

நல்ல வேளையாக, அதற்குள் மந்திரமூர்த்திப் பண்ணையார் வந்து சேர்ந்தார். இருவரையும் சாந்தப்படுத்தக் கூடிய வார்த்தைகள் கூறினார்.

"இதோ பாருங்கள்! நடந்தது நடந்து விட்டது. வருத்தப் படுவதினாலோ, கோபப் படுவதினாலோ பயன் ஒன்றும் இல்லை. நேற்று மத்தியானம் காசிலிங்கம் இந்த ஊரில் இருந்திருந்தால், நிலைமை எவ்வளவு மோசமாகி யிருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்......"

"நிலைமை எப்படி மோசமாகியிருக்கும்? ஒருநாளும் ஆகி யிராது. ஜமீன்தாருடன் நானும் இருந்திருப்பேன். எந்தப் பயல் அவரைத் துணிந்து சுட்டிருப்பான்?" என்றார் காசிலிங்கம்.

இதிலிருந்து ஜமீன்தாருடைய மரணத்துக்குப் பேச்சுத் திரும்பியது. அவரை யார் சுட்டிருப்பார்கள் என்பதைப் பற்றிச் சர்ச்சை நடந்தது.

அப்போது காசிலிங்கம் ஜமீன்தாரிடமிருந்து தாம் அறிந்த சில விவரங்களைச் சொன்னார். சென்ற சில மாத காலமாக ஜமீன்தாருடைய உள்ளத்தில் ஏதேதோ பயங்கள் தோன்றிக் கொண்டிருந்தனவாம். அவர் எங்கேயாவது தனியாகப் போனால், அவருக்குத் தெரியாமல் அவரை யாரோ பின் தொடர்ந்து வருவது போலத் தோன்றியதாம். இரவில் அவர் படுத்திருக்கும் அறையின் கதவையும், ஜன்னல் கதவையும் யாரோ சத்தமின்றித் திறந்து எட்டிப் பார்ப்பது போல் இருந்ததாம். "யார் அங்கே?" என்று கேட்டால், பதில் ஒன்றும் வருவதில்லையாம். படுக்கையை விட்டு எழுந்து போய்ப் பார்த்தால், ஏதோ தூரத்தில் நிழல் மறைவதுபோல் இருக்குமாம்.

"பண்ணையாரே! ஜமீன்தார் ரொம்பப் பயந்து போயிருந்தார். நாங்கள் மலைப் பாதையில் போகும்போது ஏதாவது சலசலப்புச் சத்தம் கேட்டால் கூடத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்ப்பார். அவருக்கு விரோதிகள் ரொம்பப் பேர் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தார். என்னை அவருடனேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப் பட்டார். 'உன்னை என் ஜமீனுக்கு மானேஜர் ஆக்கி விடுகிறேன். மாதம் இருநூறு ரூபாய் சம்பளம் போட்டுத் தருகிறேன். நீ இந்த ஊரிலேயே இருந்து விடு; என்னுடனேயே இருந்து விடு!' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். நேற்று அவருடன் நான் போகாமல் போனேனே என்று வருத்தமா யிருக்கிறது. போயிருந்தால், அவர் இறந்து போயிருக்க மாட்டார்!"

இதையெல்லாம் கேட்டுப் பண்ணையார் ஆச்சரியமடைந்து போனார். "தம்பி! ஜமீன்தார் அவ்விதம் பயந்ததற்கு ஏதாவது ஆதாரம் இருக்கும் என்று உனக்குத் தோன்றியதா?" என்று கேட்டார்.

"முதலில் அவர் ஏதோ வீண் பிரமையில் பயந்து உளறுகிறார் என்று நினைத்தேன். ஆனால் சில முறை அவருடன் பேசிய பிறகு, அப்படி முழுதும் சித்தப் பிரமையல்ல, உண்மையாகவும் இருக்கக் கூடும் என்று தோன்றியது. 'யாரை நீங்கள் சந்தேகிக்கிறீர்கள்?' என்று ஒரு நாள் கேட்டேன். 'இப்போது சொல்ல மாட்டேன்; சமயம் வரும்போது சொல்லுகிறேன்' என்றார். ஈசுவர மூர்த்தியிடம் அவருக்கு ரொம்பக் கோபம் உண்டு என்று மட்டும் தெரிந்தது. ஆனால் அவர் தம்மைக் கொல்ல முயற்சிப்பதாக ஒரு போதும் சொல்லவில்லை!"

"ஈசுவர மூர்த்தியின் பேரில் அவருக்குக் கோபம் ஏற்படப் போதிய காரணம் இருந்தது. அந்தக் கோபம் இல்லாவிட்டால், உன்னை நேற்றுத் திருநந்திபுரம் போவதற்குக் கூட அனுமதித்திருக்க மாட்டார்!"

"'அந்தச் சனீசுவர மூர்த்தியின் மீசையைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கி விட்டு வா!' என்று எவ்வளவு உற்சாகமாகச் சொன்னார் என்று நினைக்கிறீர்கள்? பாவம்! அவருடைய ஆசையை ஒருநாள் நான் நிறைவேற்றியே தீர வேண்டும். இல்லாவிட்டால், அவருடைய ஆத்மா சாந்தி அடையாது!"

மந்திரமூர்த்தி அப்போது "தம்பி! நான் எண்ணியதைக் காட்டிலும் ஜமீன்தார் உன்னிடம் அதிக விசுவாசமும் நம்பிக்கையும் வைத்திருந்ததாகத் தெரிகிறது. அப்படியிருக்க, 'ஜமீன்தாருடன் வேட்டையாடப் போவது இதுதான்

கடைசித் தடவை' என்று சந்திரமணியிடம் நீ ஏன் சொன்னாய்? அதை எவ்வளவு விபரீதமான சாட்சியமாக்க முயற்சித்தார்கள், தெரியுமா?'' என்றார்.

"பெண் பிள்ளைகளிடம் ஒன்றையுமே சொல்லக் கூடாது என்பது இதற்காகத்தான். அவர்களால் எதையும் மனத்தில் வைத்துக் கொண்டிருக்க முடியாது'' என்றார் காசிலிங்கம்.

"பெண் பிள்ளைகளையெல்லாம் கடவுள் ஊமைகளாகப் படைத்திருக்கக் கூடாதா? அவர்களுக்குப் பேசத் தெரிந்திருப்பது புருஷர்களுக்கு எவ்வளவு பெரிய தொல்லையாயிருக்கிறது!'' என்றாள் சந்திரமணி.

"கடவுளுடைய படைப்பை நம்மால் மாற்ற முடியாது. பெண்களின் சுபாவத்தையும் மாற்ற முடியாது. நீ எதற்காக அப்படி 'இதுதான் கடைசித் தடவை' என்று சொல்லி விட்டுப் போனாய், காசிலிங்கம்! உண்மையாகவே அவ்விதம் உத்தேசித்திருந்து சொன்னாயா! அல்லது அந்தச் சமயத்துக்குச் சால்ஜாப்பு சொல்லிவிட்டுப் போனாயா?''

"சொல்லத்தான் வேண்டும் என்றால், சொல்லுகிறேன். ஜமீன்தாருடன் இனிமேல் வேட்டைக்குப் போவதில்லையென்றுதான் உத்தேசித்திருந்தேன்.''

"ஏன் அப்படி? அவர்தான் அவ்வளவு விசுவாசமாயிருந்திருக்கிறாரே?''

"அவருடைய விசுவாசம் எனக்கு அவ்வளவாகப் பிடிக்காததுதான் காரணம். நீங்கள் இரண்டு பேருந்தான் அடிக்கடி 'ஜமீன்தார் சிநேகம் வேண்டாம்!' என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே! அது என் மனத்தில் பதிந்திருந்தது. அவர் சொன்ன விவரங்களிலிருந்து, அவருக்கு யாரோ விரோதிகள் இருக்கிறார்கள் என்பது எனக்கு நிச்சயமாயிற்று. நமக்கு இருக்கிற தொல்லைகளே போதும், மற்றவர்களுடைய தொல்லைகளையும் வாங்கிக் கொள்ள வேண்டாம் என்று எண்ணினேன். அவர் என்னைச் சம்பளம் வாங்கிக் கொண்டு தம்மிடம் வேலைக்கு இருக்கச் சொன்னதும் எனக்குப் பிடிக்கவில்லை. 'மானேஜர்' வேலை என்று அவர் சொன்னது வெறும் பேச்சு என்றும், ஈசுவரமூர்த்தி தம்முடன் அடி ஆள் ஒருவனை வைத்துக் கொண்டிருக்கிறாரே, அந்தமாதிரி வேலைக்காகத்தான் என்னை அமர்த்திக் கொள்ள விரும்புகிறார் என்றும் நினைத்தேன். இன்னும் என்ன வெல்லாமோ சந்தேகங் கூட எனக்கு உண்டாயிற்று. பாவம்! அது எல்லாம் வீண் சந்தேகம் என்று இப்போது தெரிகிறது......''

"'வீண் சந்தேகம்' என்றுதான் எப்படிச் சொல்ல முடியும்? ஜமீன்தார் ஒரு மாதிரி மனிதர் என்பது ஊர் அறிந்த விஷயம். இல்லாவிட்டால், அவருக்கு எதற்காக விரோதிகள் ஏற்படுகிறார்கள்? அவரை யாரோ கொலை செய்ய முயற்சிப்பதாக அவர் ஏன் சந்தேகப் படவேண்டும்?'' என்றார் மந்திரமூர்த்தி.

இம்மாதிரி என்னை வளர்த்த தந்தை அப்போது கூறினார் என்றாலும், பின்பு அவருடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள நேர்ந்தது. என்னிடம் அடிக்கடி அவர், "இந்து! துஷ்டர்களுக்குத்தான் விரோதிகள் ஏற்படுவார்கள் என்று நான் ஒரு காலத்தில் எண்ணியிருந்தேன். அது முற்றும் தவறான எண்ணம் என்று அறிந்து கொண்டேன். ஒருவருக்கும் ஒரு கெடுதலும் நினையாத சாதுக்களுக்கும் விரோதிகள் ஏற்படுகிறார்கள். பார்க்கப் போனால், நல்லவர்களுக்குத்தான் விரோதிகள் அதிகமாயிருக்கிறார்கள். உன்னைப் பெற்ற தந்தை எவ்வளவோ நல்ல மனிதர்தான். ஆனாலும், அவரிடம் சிலர் எதற்காக அவ்வளவு வைஷம்யம் பாராட்டினார்கள், குரோதம் கொண்டார்கள் என்பது எனக்கு அன்றைக்கும் தெரியவில்லை; இன்றைக்கும் தெரியவில்லை!'' என்பார்.

காசிலிங்கத்துக்கு அப்போது உலகத்திலேயே மந்திரமூர்த்தியைத் தவிர வேறு யாரும் சிநேகிதர் இல்லையென்றும், எல்லாரும் அவருடைய விரோதிகள் என்றும் நினைக்குமாறு காரியங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்தன.

ஜமீன்தாருடைய கொலை சம்பந்தமாக நடந்த போலீஸ் விசாரணையில் காசிலிங்கம் விசாரிக்கப் பட்டார். அப்போது போலீஸ் அதிகாரிகள் அவரைக் கேட்ட கேள்விகள் அவரைப் புண்படுத்தின.

ஜமீன்தாருக்கும் அவருக்கும் எத்தனை நாளாகப் பழக்கம்? அவருடைய வீட்டுக்கு ஜமீன்தார் அடிக்கடி வருவது உண்டா? அவருடைய மனைவியுடன் பேசுவதுண்டா? அது காசிலிங்கத்துக்குப் பிடிக்காமல் அவர் ஆட்சேபித்ததுண்டா? ஜமீன்தாருடைய நடத்தையைப் பற்றி அவர் சந்தேகித்ததுண்டா? அவருடைய மனைவி என்று சொல்லப்படுகிறவள், உண்மையில் தாலி கட்டிக் கலியாணம் செய்து கொண்ட மனைவிதானா, அல்லது யாருக்கும் தெரியாமல் அழைத்



துக் கொண்டு வந்து, வெறுமனே ஊருக்காக 'மனைவி' என்று சொல்லிக் கொண்டிருக்கிறாரா?......

ஏற்கெனவே முன் கோபக்காரரான காசிலிங்கத்துக்கு இம்மாதிரியான கேள்விகள் எவ்வளவு ஆத்திரத்தை உண்டு பண்ணி யிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆத்திரம் அதிகமாகி வெறியாகவும் பைத்தியமாகவும் மாறும் நிலைமை ஏற்பட்டு விட்டது. அதனால் போகப் போகத் தாறுமாறாகப் பதில் சொல்லத் தொடங்கி விட்டார்.

ஜமீன்தார் தம்மை யாரோ ஒரு விரோதி இரகசியமாகத் தொடர்ந்து வருவதாய்ச் சந்தேகித்ததைப் பற்றிக் காசிலிங்கத்திடம் சொல்லி யிருந்தார் அல்லவா? விசாரணையின்போது அதைப் பற்றி ஒன்றும் சொல்ல வேண்டாம் என்று மந்திரமூர்த்தி கூறி யிருந்தார். காசிலிங்கமும் தாம் அதைப் பற்றிப் பிரஸ்தாபிப்பதில்லை யென்று ஒப்புக் கொண்டிருந்தார்.

ஆனால் போலீஸார் கேட்ட கேள்விகள் அவர் மனத்தை அடியோடு குழப்பி விட்டன. ஜமீன்தாருக்கும் அவருக்கும் ரொம்ப சிநேகிதம் என்பதைக் காட்டு



வதற்காக அதைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். யாரோ தம்மைக் கொல்ல முயற்சிப்பதாக ஜமீன்தார் சந்தேகப்பட்டதாகவும், அவரைப் பாதுகாத்துக் கொள்ளக் காசிலிங்கத்தின் உதவியைக் கோரியதாகவும் சொன்னார்.

"நீர் இந்த ஊருக்கு வந்து சில மாத காலந்தானே ஆகிறது? வேறு யாரிடமும் சொல்லாத இரகசியத்தை உம்மிடம் சொல்லுவானேன்? அவ்வளவு நெருங்கிய சிநேகத்துக்குக் காரணம் என்ன? யார் பேரிலாவது குறிப்பிட்டு ஜமீன்தார் புகார் சொன்னாரா?......"

இம்மாதிரி கேள்விகளினால் காசிலிங்கம் மேலும் கோபம் அடைந்து தாறுமாருகப் பேச ஆரம்பித்து விட்டார்.

போலீஸாரின் கேள்விகளின் போக்கைப் பார்த்தால், ஜமீன்தார் கொலையுண்டதின்பொறுப்பைக் காசிலிங்கத்தின் மீது சுமத்த முயலுவதாகத் தோன்றியது.

மலை மீது ஜமீன்தாரைச் சுட்டுக் கொன்று விட்டுக் காசிலிங்கம் அவசரமாகத் திருநந்திபுரத்துக்குப் போய்க் கலாட்டா செய்து அங்கே அன்று இருந்ததற்குத் தகுந்த சாட்சியம் தயார் செய்து கொண்டதுபோலப் போலீஸின் குறுக்குக் கேள்விகள் அமைந்தன.

ஆனால் அவர்களுடைய முயற்சி ஒன்றும் பலிக்கவில்லை. காசிலிங்கம் அன்று பத்தரை மணிக்கே பஸ் ஏறியதற்கும் பன்னிரண்டரை மணிக்குத் திருநந்திபுரம் போய்ச் சேர்ந்ததற்கும் அசைக்க முடியாத சாட்சியங்கள் இருந்தன. ஜமீன்தாருடைய உடலைப் பரிசோதனை செய்த டாக்டர் அவர் பிற்பகல் இரண்டு மணிக்கு முன்னால் இறந்திருக்க முடியாது என்று உறுதியாகச் சொன்னார். பொய்கைக் கரையில் குடிசையில் தங்கியிருந்த காட்டிலாகா சேவகன் அன்று ஒருமணிக்கு ஜமீன்தார் குடிசைக்கு வந்து "சாப்பாடு இன்னும் வரவில்லையா?" என்று விசாரித்து விட்டுப் போனதாகச் சத்தியம் செய்தான்.

தெய்வாதீனமாக இத்தகைய பலமான சாட்சியங்கள் இருந்தபடியால் காசிலிங்கத்தின் பேரில் கொலைக் குற்றத்தைச் சுமத்த முடியவில்லை.

ஆனால் போலீஸ் விசாரணையின் போது கேட்கப்பட்ட கேள்விகள் அவருடைய உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்தி விட்டன. சந்திரமணியிடம் சொல்லிச் சொல்லி வருத்தப் பட்டார்.

"ஜமீன்தார் கொலை சம்பந்தமாக விசாரணை நடந்ததாகவே எனக்குத் தோன்றவில்லை. எனக்கும் உனக்கும் சட்டப்படி விவாகம் நடந்ததா இல்லையா என்பதைப் பற்றித்தான் வழக்கு நடப்பதுபோல் கேள்வி கேட்டார்கள். எனக்குக் கோபம் வராமல் எப்படி இருக்கும்? பண்ணையார் எனக்குப் பொறுமை உபதேசம் செய்கிறார்!" என்றார் காசிலிங்கம்.

"அதையெல்லாம் கேட்டால் எனக்கே கோபம் வருகிறதே? உங்களுக்கு எப்படிக் கோபம் வராமல் இருக்கும்!" என்றாள் சந்திரமணி.

"கேட்டீர்களா, பண்ணையார்! உங்கள் மகள் என்ன சொல்கிறாள், கேட்டீர்களா?" என்றார் காசிலிங்கம்.

"உங்களுக்குக் கடவுள் எவ்வளவு கருணை செய்திருக்கிறார் என்பதை நீங்கள் இரண்டு பேரும் உணரவில்லை. அதனால் தான் இப்படி யெல்லாம் பேசுகிறீர்கள். காசிலிங்கம் மட்டும் அன்று இங்கே இருந்திருந்தால், இத்தனை நேரம் இவ்வளவு உல்லாசமாக நாம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்க முடியுமா?" என்றார் மந்திரமூர்த்தி.

"கடவுளுடைய கருணையைப் பற்றி நான் ஒன்றும் குறை கூறவில்லையே? மனிதர்களைப் பற்றி யல்லவா கூறுகிறேன்? மனிதர்கள் எதற்காக இவ்வளவு இரக்க மற்றவர்களா யிருக்கிறார்கள்? ஒரு காரணமுமில்லாமல் எதற்காகத் துவேஷம் பாராட்டுகிறார்கள்!" என்றார் காசிலிங்கம்.

"எனக்கும் அதுதான் விளங்கவில்லை. நாங்கள் யாருக்கு என்ன கெடுதல் செய்தோம்? எதற்காக எங்களைப் பார்த்து எல்லாரும் விரோதிக்க வேண்டும்?" என்று கேட்டாள் சந்திரமணி.

"இத்தனை நாள் உலகத்தில் பழகியும் உங்களுக்கு இது தெரியவில்லையா? மனிதர்களுடைய துவேஷத்துக்குக் காரணமே வேண்டியதே யில்லை. நீங்கள் யாருக்காவது தீங்கு செய்தால்தான், அவர்கள் உங்களை விரோதிப்பார்கள் என்று எண்ணவேண்டியதில்லை. இரண்டு பேர் சௌக்கிய மாகவும் சந்தோஷமாகவும் இருந்தாலே போதும்; அவர்களிடம் மற்றவர்கள் விரோதம் கொள்வதற்கு அதுவே போதுமான காரணமாகும். அவர்களை எப்படியாவது தொலைத்து விடுகிறதென்று கங்கணங் கட்டிக் கொள்ளும் மனிதர்களும் இந்த உலகில் இருக்கிறார்கள்!"

"நீங்கள் சொல்லுவது எனக்கு விசித்திரமாயிருக்கிறது. அது உண்மையாகவே இருந்தாலும், நாங்கள் என்ன அப்படிச்


DIL BAHAR
Diwali greetings
On this auspicious occasion of the Festival of Lights we wish the users of the famed Kaminia Toiletries a happy Diwali and a prosperous New Year of lasting beauty and loveliness.
Aiding you in reaching new heights in beauty and charm are these ace products:
KAMINIA HAIR OIL
DILBAHAR TOILET SOAP
OTTO DILBAHAR
KAMINIA SNOW
KAMINIA COLD CREAM
ANGLO INDIAN DRUG AND CHEMICAL CO. BOMBAY 2


BY. 6656
துணியைப் பற்றிய பேச்சுகளில்
மதிப்பு உடையதாகக் கருதப்படுபவை
பின்னி ஜவுளிகளே!
பாரத நாட்டில் இமய முதல் குமரிவரை எங்கு சென்றாலும் சரி, ஜனங்கள் துணிமணிகளைப்பற்றி பேசும்போதெல்லாம் உண்மை மதிப்பிற்கு எடுத்துக்காட்டாக ஏற்றுக்கொள்ளும் ஜவுளி வகை ஒன்றே ஒன்று— அதுதான் பின்னியினுடையது.
அதற்குக் காரணம் என்னவென்னில், பின்னி தயாரிப்பு எப்பொழுதுமே நல்ல ரகமாக இருந்து வருகிறது. தொடர்ந்து ஆராய்ச்சி செய்து மேலுமேலும் மேம்படச் செய்ய முயன்று வருவதால் எக்காலத்திலும் அது சிறப்பாக விளங்குமென்பது நிச்சயம். பூரணச் சிறப்பிலேயே நாட்டமும் அதை அடைவதற்கு ஒரு விழைவும் இருப்பதால்தான் ஒவ்வொரு ஜோடும் பின்னித் துணியிலும் உயர்மதிப்பு இழையோடிக் காணப்படுகிறது.
மதிப்பு விஷயத்தில் நாட்டின் அபிப்பிராயம் ஒருமுகமாக இருப்பதிலிருந்து அது சரியானதென்று நீங்கள் அனேகமாக நம்பலாம்!
வெளியிடுபவர்கள் :
தி பெங்களூர் வுல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிட்., பெங்களூர் ஸிடி
தி பக்கிங்ஹாம் & கர்நாடிக் கம்பெனி லிமிடெட், மதராஸ்.
மானேஜர்கள் : பின்னி & கம்பெனி (மதராஸ்) லிட்., மதராஸ்

சந்தோஷமாகவும் சௌக்கிய மாகவும் இருக்கிறோம்'' என்றாள் என் அன்னை.

"நல்ல கேள்வி கேட்டாய், சந்திர மணி! உங்களுக்குக் கடவுள் அளித்த பாக்கியத்தை நீங்கள் உணரவில்லை யென்று அதனாலேதான் சொல்லு கிறேன். இதற்குப் பதில் சொல்! நீ காசிலிங்கத்திடம் பரிபூரண அன்பு வைத்திருப்பது உண்மையா, இல்லையா?"

சந்திரமணி அன்பு ததும்பிய கண்களினால் காசிலிங்கத்தைப் பார்த்து, "அவரையே கேளுங்கள்!'' என்றாள்.

"சரி; அவரைக் கேட்டுக் கொள்கிறேன். காசிலிங்கம் உன்னிடம் பரிபூரண அன்பு வைத்திருக்கிறார் என்பதையாவது ஒப்புக் கொள்வாயா?"

காசிலிங்கம், "பண்ணையார்வாள்! போலீஸார் கேட்ட கேள்விகளே தேவலை போலிருக்கிறதே!'' என்றார்.

"அப்படி எண்ணாதே, காசிலிங்கம்! அவர்கள் ஏன் அவ்வாறெல்லாம் கேள்வி கேட்டார்கள் என்பதற்குக் காரணம் நான் சொல்லப் போகிறேன். நீங்கள் இரண்டு பேரும் ஒருவரோ டொருவர் அன்பா யிருக்கிறீர்கள். இந்த உலகத்தில் இரண்டு பேர் அன்பாக இருந்தால் அதைக் காட்டிலும் பாக்கியம் வேறொன்றும் கிடையாது. ஆகையால், நீங்கள் பாக்கியசாலிகள். அதனாலேதான் மற்றவர்களுக்கு உங்களைக் கண்டால் ஆகவில்லை. நீங்கள் சந்தோஷமா யிருப்பதைக் கண்டு அவர்களுக்கு எரிச்சலா யிருக்கிறது. சமயம் வந்தால், தலைக்கு ஒரு கல்லைத் தூக்கிப் போடுவதற்கு எல்லாரும் தயாராயிருக்கிறார்கள்!"

"இது நல்ல நியாயமா யிருக்கிறதே! மற்றவர்களுக்கு எரிச்சலா யிருக்கும் என்பதற்காக நாங்கள் அன்பாயிருக்கக் கூடாது என்கிறீர்களா?"

"அன்பு தெய்வத்தின் அருளால் ஏற்படுவது. அதைக் காட்டிலும் பெரிய பாக்கியம் இல்லை என்பதை உணர வேண்டும். அப்படி உணர்ந்தால், ஏதாவது சிறிய கஷ்டம் வரும் போது அதிகமாகக் கவலைப்பட மாட்டோம். உங்களைப் போன்ற பாக்கியசாலிகளுக்கு ஏதேனும் சிறிய கஷ்டம் வந்தால், அதை வரவேற்க வேண்டும். அதனால் மற்றவர்களுடைய பொறாமையும் துவேஷமும் குறையும்! இதைவிடப் பெரிய கஷ்டமாக வராமல் இந்த மட்டில் போயிற்றே என்று ஆறுதல் அடைய வேண்டும்."

மந்திரமூர்த்தி இம்மாதிரி பல உபதேசங்களை என் பெற்றோர்களுக்குச் செய்தார். அந்த உபதேசங்கள் அவர்களுக்கு மிகவும் அவசியமா யிருந்தன:

என் பெற்றோர்களுக்கு மந்திரமூர்த்தி செய்த உபதேசங்களை யெல்லாம் எனக்கும் அவர் செய்வதற்குச் சந்தர்ப்பம் பின்னால் ஏற்பட்டது.

"அன்பு என்பது மனித வாழ்க்கையில் பெறற்கரிய பாக்கியம். அந்த பாக்கியத்தை அடைந்தவர்களுக்கு மற்றக் கஷ்டங்கள் சில வாழ்க்கையில் நேரிடத்தான் செய்யும். காவியங்கள், கதைகள், இதிகாசங்கள் எல்லாம் நமக்கு இந்த உண்மையைத்தான் முக்கியமாக உணர்த்துகின்றன. இராமரும் சீதையும் கொண்டிருந்த அன்புக்கு எதுவும் இணையில்லை. அவர்களுக்கு எவ்வளவு பெரிய கஷ்டங்கள் வந்தன? சாவித்திரியும் சத்யவானும், தமயந்தியும் நளனும்,- இவ்வாறு இணையற்ற காதலர்களாயிருந்தவர்கள் மகத்தான கஷ்டங்களையும் அநுபவித்திருக்கிறார்கள். மேனாட்டுக் காவியங்களிலும் இதைக் காணலாம். ரோமியோ - ஜூலியட் கதையைக் காட்டிலும் சோகமானகதை வேறு உண்டா?"

இவ்வாறெல்லாம் மந்திரமூர்த்தி என் அன்னைக்குப் பல முறை எடுத்துச்சொன்னார். என்னுடைய தாயின் வாழ்க்கையும் அப்படி அன்பின் சிகரமான சோக வாழ்க்கையாகவே முடிந்தது.

அத்தியாயம் 16

தீர்ப்பு

திருநந்திபுரம் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் காசிலிங்கத்தின் பேரில் நடந்த வழக்கு நாலு மாதம் வரையில் நீடித்து நடந்தது. மந்திரமூர்த்தி அமர்த்தியிருந்த வக்கீல் மிகவும் கெட்டிக்காரர். அவர் காசிலிங்கத்தை விடுதலை செய்வதற்குரிய முறையில் சாமர்த்தியமாக வழக்கை நடத்தி வந்தார். காசிலிங்கம் வீட்டுக்குள் நுழைந்தது உண்மையானாலும் அவர் கலாட்டா செய்ததற்குச் சாட்சியம் எதுவும் இல்லையென்றும், அவ்வளவு பேருக்கு முன்னால் ஒருவராகக் கலாட்டா செய்திருக்கவும் முடியாது என்றும், மற்றவர்கள்தான் அவரைச் சூழ்ந்து

கொண்டு அடித்துத் துன்புறுத்தி யிருக்க வேண்டும் என்றும் வாதமிட்டார். ஈசுவரமூர்த்தி ஜில்லா போர்டு தலைவர் ஸ்தானம் வகிக்கும் பொது மனிதராகையால், அவர் வீட்டுக்குள் எவரும் குறை சொல்லிக் கொள்ள நுழைவது இயற்கையென்றும், அது அத்து மீறிச் சென்று கலாட்டா செய்ததாகாது என்றும் வற்புறுத்தி வாதாடினார்.

மாஜிஸ்ட்ரேட் முதலில் சில சமயம் காசிலிங்கத்துக்குச் சாதகமாக இருந்ததாகவே தோன்றியது. அவர் இடையிடையே பேசிய வார்த்தைகளைக் கேட்டவர்கள் மாஜிஸ்ட்ரேட் பாரபட்சமாக இருப்பதாகவே சொல்லத் தொடங்கி விட்டார்கள். மந்திரமூர்த்தியும் மிக்க உற்சாகமாகவும் தைரியமாகவும் இருந்தார். போகப் போக, நிலைமை மாறிக் கொண்டு வந்தது. வழக்குப் போட்டவர்களின் வக்கீல் தம்முடைய கட்சி தோல்வியடைந்து வருவதைப் பார்த்துக் காசிலிங்கத்துக்குக் கோப மூட்டும் முறையைக் கையாண்டார். அவருடைய பூர்வோத்திரத்தைப் பற்றியும், அவர் 'மனைவி' என்று சொல்லிக் கொள்ளும் பெண்ணைப் பற்றியும், சட்டப்படி அவர்களுக்குக் கலியாணம் நடந்ததா என்பது பற்றியும் கேள்வி கேட்கத் தொடங்கினார். காசிலிங்கத்தின் ஜீவனம் இப்போது எவ்விதம் நடந்து வருகிறது, யாருடைய ஆதரவில் அவருடைய மனைவி இருக்கிறாள், வழக்கு நடத்த யார் பணம் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் கேட்டார். காசிலிங்கத்தின் பொறுமை சிதைந்து போய் விட்டது. மேலும் மேலும் கோபமாகப் பதில் சொல்லி வழக்கைக் குட்டிச் சுவராக்கி விட்டார். மாஜிஸ்ட்ரேட் மனத்தில், இவன் பெரிய சண்டைக்காரன், கலகம் செய்திருப்பான் என்று தோன்றும்படி செய்து விட்டார்.

தீர்ப்பு விரோதமாகப் போய் விடும் என்று தெரிந்து போய் விட்டது. காசிலிங்கம் ஒருநாள் பாங்கியிலிருந்த மூவாயிரம் ரூபாயையும் வாங்கிக் கொண்டு வந்து மந்திரமூர்த்தியிடம் கொடுத்தார். "ஐயா! என்னை எப்படியும் சிறையில் போட்டு விடப் போகிறார்கள். எப்போது திரும்பி வருவேனோ, தெரியாது! அது வரையில் சந்திரமணியையும் குழந்தையையும் காப்பாற்றுவது உங்கள் பொறுப்பு. எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் நீங்கள் செய்யும் செலவையெல்லாம் தனியாகக் கணக்கு எழுதி வைத்துக் கொண்டு வாருங்கள். வெளியில் வந்ததும் எந்த வழியிலாவது சம்பாதித்துத் தங்கள் கடனைத் தீர்த்து விடுகிறேன்!" என்றார்.

மந்திரமூர்த்தி பணத்தை வாங்கிக் கொண்டு, காசிலிங்கத்துக்கு ஆறுதலாகப் பதில் சொன்னார். "அதற்கென்ன, அப்படியே செய்து விடலாம். உனக்கு ஒரு உத்தியோகம் கிடைப்பதுதானா பிரமாதம்? இந்த வழக்கு முடியட்டும். நானே முயற்சி செய்து உத்தியோகம் பண்ணி வைக்கிறேன். வழக்கு நமக்கு விரோதமாகப் போனாலும், தண்டனை அப்படியொன்றும் நீ நினைப்பது போல இராது. நூறு இருநூறு அபராதம் போட்டு விட்டு விடுவார்கள்!" என்றார்.

பண்ணையார் உண்மையாக நம்பித்தான் இவ்விதம் சொன்னார். முடிவில் மாஜிஸ்ட்ரேட் "ஆறுமாத கடுங்காவல்; இருநூறு ரூபாய் அபராதம். அபராதம் கட்டத் தவறினால் இன்னொரு மூன்று மாதம் கடுங்காவல்" என்று தீர்ப்புச் சொன்னபோது, மந்திரமூர்த்திப் பண்ணையார் திணறிப் போய் விட்டார்.

கோர்ட்டில் காசிலிங்கம் அவருக்குத் தைரியம் சொல்லும்படி நேர்ந்துவிட்டது. "ஒன்பது மாதமும் ஒன்பது நாளாகக் கழித்து விட்டு வந்து விடுகிறேன். அபராதம் செலுத்த வேண்டாம். சந்திரமணியிடம் தைரியமாக இருக்கச் சொல்லுங்கள். குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லுங்கள்!" என்று பண்ணையாரிடம் காசிலிங்கம் கூறிக் கொண்டிருக்கும்போதே அவரைப் போலீஸார் பிடித்துச் சென்றார்கள்.

வீட்டுக்கு வந்து சந்திரமணியிடம் செய்தியைச் சொல்லுவதற்கு மந்திரமூர்த்தி ரொம்பவும் கஷ்டப்பட்டுப் போனார். அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, சந்திரமணி அந்தச் செய்தியைக் கேட்டு அழுது புலம்பவில்லை; தைரியமாகவே இருந்தாள். மந்திரமூர்த்திக்கும் தைரியம் கூறினாள்.

"அப்பா! நான் இவருடன் வந்துவிடத் தீர்மானித்தபோது இதைக் காட்டிலும் எத்தனையோ பெரிய கஷ்டங்களையெல்லாம் எதிர்பார்த்தேன். உலகமே எங்களுக்கு விரோதமாயிருக்கும் என்று நினைத்தேன். அந்தப்படியேதான் நடந்து வருகிறது. இவ்வளவு கஷ்டங்களுக்கிடையில் உதவி செய்வதற்கு நீங்கள் ஒருவர் கிடைத்தீர்களே என்பதை நினைத்து நினைத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். இம்மாதிரி நிலைமையில் நீங்கள் ஒருவர் ஒத்தாசைக்கு இல்லா

விட்டால், எங்களுடைய கதி என்ன ஆகி யிருக்கும்?" என்ருள் என் தாயார்.

மாஜிஸ்ட்ரேட்டின் தீர்ப்பின் பேரில் அப்பீல் செய்ய வேண்டும் என்று மந்திர மூர்த்தி அபிப்பிராயப் பட்டார். காசி லிங்கத்தைச் சிறையிலே போய்ப் பார்த்துக் கேட்டார். "அதெல்லாம் கூடவே கூடாது. இனிமேல் ஒரு தம்பிடிகூட எனக்காக நீங்கள் செலவழிக்கக் கூடாது. அப்பீலுக்கு நான் கையெழுத்துப் போடமாட்டேன்!" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

காசிலிங்கத்தின் பேச்சை ஒரு விஷயத்தில் மந்திரமூர்த்திப் பண்ணையார் கேட்கவில்லை. ஆறு மாதம் முடியும் சமயத்தில் அபராதத் தொகையைக் கொண்டு போய்க் கட்டி விட்டார்.

சந்திரமணியிடம் "இன்னும் பதினைந்து நாளில் வந்து விடுவார்; பதினாலு நாளில் வந்து விடுவார்!" என்று கணக்கு எண்ணிச் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அவருடைய கணக்கு மறுபடியும் பொய்யாய்ப் போய் விட்டது. அது பொய்யாகும்படி காசிலிங்கம் செய்து விட்டார்.

விடுதலை தினத்துக்கு இன்னும் பத்து நாள் இருந்தபோது, சிறைக்குள்ளேயே ஏதோ அடிதடிக் கலாட்டா நடந்ததாம். யாரோ ஒரு கைதியைச் சிறை அதிகாரி கொடுமையாக அடித்தாராம். அதைப் பார்க்கச் சகியாமல் காசிலிங்கம் குறுக்கிட்டாராம். இன்னும் சில கைதிகளும் அவருடன் சேர்ந்து கொண்டார்களாம். சிறைச் சாலையில் கலகம் செய்ததாக அவர் பேரில் இன்னொரு வழக்கு ஏற்பட்டது. இதைப் பற்றி வெளியில் நிச்சயமான தகவல் தெரியவில்லை. சிறைக் குள்ளேயே மாஜிஸ்ட்ரேட்டை அழைத்துப் போய்ச் சுருக்கமாக விசாரணை நடத்தி முடித்து விட்டார்கள். அதன் பலனாக, காசிலிங்கத்துக்கு மேலும் ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. அந்த ஊர்ச் சிறையிலே யிருந்து உடனே அவரை மாற்றி வேறு சிறைக்கு அனுப்பி விட்டார்கள்.

எந்த ஊர்ச் சிறைக்கு அனுப்பினார்கள் என்று முதலில் தெரியவில்லை. பிறகு விசாரித்து, வேலூர் சிறைக்கு அனுப்பி யிருப்பதாகத் தெரிந்து கொண்டார்கள். வேலூர் சந்திரமணியின் பிறந்த ஊர் அல்லவா? அந்த ஊர்ச் சிறையிலேயே காசிலிங்கம் போய் இருக்க நேர்ந்தது பற்றி சந்திரமணிக்குச் சொல்லமுடியாத துக்கம் உண்டாயிற்று. வேலூருக்குப் போய்ச் சிறையில் அவரைப் பார்க்கக் கூட அவள் விரும்பவில்லை. காசிலிங்கமும் "இங்கே யாரும் வர வேண்டாம்" என்று கண்டிப்பாகக் கடிதம் எழுதி யிருந்தார்.

காசிலிங்கம் சிறையி லிருந்தபோது சந்திரமணியின் மாமன்மார்கள் இரண்டு தடவை குங்குமத்துறைக்கு வந்திருந்தார்கள். ஜமீன்தார் வீட்டில் தங்கினார்கள். மாப்பிள்ளை ஜமீன்தார் சொக்கையாவையும் அழைத்துக் கொண்டு மந்திரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தார்கள். சந்திரமணியைப் பார்க்க வேண்டும் என்றார்கள். சந்திரமணி அவர்களுடன் முகங் கொடுத்துப் பேசவில்லை. அவர்களுக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமும் இனி இல்லை யென்றும், தன்னைப் பற்றி அவர்கள் எந்தவித சிரத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றும் சொல்லி விட்டாள். அவர்கள் ஏதாவது உதவி தேவையா யிருந்தால் செய்வதாகச் சொன்னார்கள். அதுவும் வேண்டாம் என்று சொல்லி விட்டாள்.

• • •

ஒன்றரை வருஷ காலமும் சிறையில் இருந்துவிட்டுக் காசிலிங்கம் வந்து சேர்ந்தார். அவருடைய சுபாவமே மாறுதல் அடைந்து விட்டதாகத் தோன்றியது. முன்மாதிரி குதூகலமாகச் சிரிப்பது, வேடிக்கையாகப் பேசுவது ஒன்றுமில்லை. திடீர் திடீரென்று கோபித்துக் கொள்ளும் வழக்கமும் போய் விட்டது. வெகு சாதாரணமான விஷயத்தைப் பற்றிக் கூட நிதானமாக யோசனை செய்து பேச ஆரம்பித்தார். அவருடைய மனத்தில் ஏதோ ஒரு பெரிய வேதனை இருந்தது என்பது மட்டும் சந்திர மணிக்குத் தெளிவாகத் தெரிந்தது.

காசிலிங்கத்துக்கு உற்சாக மூட்டுவதற்குச் சந்திரமணியும் மந்திரமூர்த்தியும் பல முயற்சிகள் செய்தார்கள். அவர்களுடைய முயற்சி சிறிது சிறிதாகப் பலன் தந்து வந்தது. அதற்கு நான் மிகவும் ஒத்தாசையாக இருந்தேன். மந்திர மூர்த்தி அடிக்கடி சொல்லுவதுண்டு. "இந்து! உன் தாயாரும் நானும் எவ்வளவோ விதமாகப் பேசிப் பார்ப்போம். காசிலிங்கத்தின் முகத்தில் ஒரு சிறிய புன்னகையைக் கூடக் காண முடியாது. நீ தவழ்ந்து வந்து உன் குஞ்சுக் கையை நீட்டி உன் தந்தையைக் கன்னத்தில் தொட்டால் போதும்; உடனே விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்குவார். நடக்க முயன்று கீழே விழுவதைப் பார்த்துச் சிரிப்பார். உன்னாலேதான் அம் மறுபடியும் பழைய காசிலிங்கம் ஆகிக்

கொண்டிருந்தார். ஆனால், அந்தப் பாவி சொக்கையா ஒருநாள் அவ்வளவையும் கெடுத்து விட்டான்!" என்பார்.

என் குழந்தைப் பிராயத்தில் நடந்த அந்த முக்கியமான சம்பவத்தைப் பற்றி இப்போது எழுதுவது அவசியமாயிருக்கிறது. அதை எழுதுவதற்கு எனக்கு அவ்வளவாகப் பிரியமில்லை. ஆயினும் ஒன்றையும் விடக் கூடாது என்று அவர் சொல்லியிருக்கிறதை நினைத்துக் கொண்டு எழுதுகிறேன்.

பண்ணையார் வீட்டில் என் தாயார் வந்து வசிக்கத் தொடங்கியதிலிருந்து, குங்குமத்துறை வாசிகள் பெரும்பாலும் அவர் வீட்டுக்கு வருவதை நிறுத்தி விட்டார்கள். ஜமீன்தார் கொலை வழக்கில் போலிஸ் விசாரணையின் போது கேட்கப்பட்ட கேள்விகள் ஊரெல்லாம் பரவி விட்டன. வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு அவல் கிடைத்தது என்று சொல்லுவது போல், ஊர் ஜனங்கள் என் பெற்றோர்களைப் பற்றி வம்பு பேசுவதற்கு அவை உதவியாக இருந்தன. கிட்டத்தட்ட அந்த ஊர் ஜனங்கள் மந்திரமூர்த்திப் பண்ணையார் வீட்டையே பகிஷ்காரம் செய்திருந்தது போல் நடந்து கொண்டார்கள்.

மந்திர மூர்த்தி அதைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. என் தாயாரோ என் தந்தையைப் பற்றிய பெருங் கவலையில் ஆழ்ந்திருந்தாள். ஊர் ஜனங்களுடன் பழகுவதற்கோ, சிநேகம் செய்து கொள்வதற்கோ வேண்டிய உற்சாகம் அவளுக்கு இல்லை. தன்னைப் பற்றி ஊரார் பலவிதமாகப் பேசிக் கொள்கிறார்கள் என்பது வேறு தெரிந்திருந்தது. அதனால் ஏற்பட்ட கூச்சமும் அவளை வீட்டை விட்டு வெளியில் புறப்படாமலிருக்கும்படி செய்தது. அருவிக்கு எப்போதாவது குளிக்கப் போவது என்றால் கூட, அதிகக் கூட்டமில்லாத புனலருவிக்குப் போய்க் குளித்துவிட்டு வந்துவிடுவது வழக்கம். வீதியில் போகும் போதும் வரும்போதும் அப்பால் இப்பால் திரும்பிப் பார்ப்பதே இல்லை. கர்வங் காரணமாக என் தாயார் இப்படி நடந்து கொள்கிறாள் என்று நினைத்து ஊர் மக்கள் மேலும் அவள் மீது விரோதம் பாராட்டினார்கள்.

என் தந்தை சிறையிலிருந்து வந்து சிலநாள் வரையில் அவரும் வீட்டுக்குள்ளேயே இருந்து வந்தார். "எதற்காக வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டும்? குங்குமத்துறையைப் போல் அழகான ஊர் தென்னிந்தியாவிலேயே கிடையாது. தினம் கொஞ்ச நேரம் வெளியில் போய்ச் சுற்றிவிட்டு வாருங்களேன்!" என்றார் மந்திரமூர்த்தி.

அதுமுதல் என் தந்தை என்னையும் என் அன்னையையும் அழைத்துக்கொண்டு வெளியில் போக ஆரம்பித்தார். சில சமயம் குன்றுகளின் மேல் ஏறிச் செல்வார். சில சமயம் யாரும் அதிகமாக வராத அருவிக் கரைக்குச் செல்வார். கையில் சாப்பாடு எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். காலையில் கிளம்பிப் போய் விட்டுச் சாயங்காலம் திரும்பி வருவதும் உண்டு.

"இந்து! உன் அன்னை சந்திரமணி மிகவும் சந்தோஷமாக இருந்த நாட்கள் இவை தான். பகலெல்லாம் சுற்றி அலைந்து விட்டு வந்தாலும், சாயங்காலம் திரும்பி வரும்போது உன் அன்னையின் முகம் பிரகாசமாயிருக்கும். நீயும் நன்றாக வளர்ந்து கொண்டு வந்தாய். உனக்கு வயது இரண்டரைதான் என்றாலும், பார்த்தவர்கள் நாலு வயதுக் குழந்தை என்று மதித்தார்கள்!" என்று மந்திரமூர்த்தி சொல்வார். அந்த நாட்களைப் பற்றிச் சொல்லும் போது அவர் முகத்திலேயே ஒரு தனிப்பட்ட பிரகாசம் உண்டாகும்.

ஒரு நாள் என் பெற்றோர்கள் என்னையும் தூக்கிக் கொண்டு குங்குமத்துறைக்கு மூன்று மைல் தூரத்திலிருந்த வள்ளிமலையின் அடிவாரத்துக்குச் சென்றார்கள். அங்கேயும் ஒரு சிறிய அருவி உண்டு. பார்ப்பதற்கு இனிமையான பல காட்சிகள் உண்டு. வள்ளியம்மன் கோயில் ஒன்றும் அங்கே இருந்தது.

அம்மனுக்கு வேண்டிக் கொண்டவர்கள் மா விளக்கு ஏற்றச் சில சமயம் அங்கே வருவார்கள். மற்றப்படி ஜன நடமாட்டம் அதிகம் கிடையாது.

கோயிலுக்கு எதிரே ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் அடியில் ஒரு மேடை அமைத்திருந்தது.

என் தாயும் தந்தையும் அந்த மேடையில் உட்கார்ந்து என்னுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தார்கள். என் தந்தை என்னுடன் விளையாட ஆரம்பித்தால் அவரும் ஒருபச்சைக்குழந்தைபோல் ஆகி விடுவாராம். அதுமட்டுமல்ல; சர்க்கஸில் சேர்ந்திருந்த போது அவர் செய்த வித்தைகளை யெல்லாம் எனக்குச் செய்து காட்டிச் சிரிக்கப் பண்ணுவாராம்.

வள்ளிமலை அடிவாரத்தில் குரங்குகள் அதிகம். நாங்கள் எந்த மரத்தினடியில்

இருந்தோமோ, அந்த மரத்தின்மேல் ஒரு தாய்க் குரங்கு குட்டிக் குரங்கை அணைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது.

காசிலிங்கம் அந்தக் குரங்கையும் குட்டியையும் சுட்டிக் காட்டிச் சந்திரமணியிடம் பரிகாசமாகப் பேசினார். "நாம் ஏறி வந்த வண்டியின் மேல் திடீரென்று குதித்து வண்டி குடை யடிக்கும்படி செய்ததே, அந்தக் குரங்குதானே, என்னமோ இது? அதற்கும் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது; உனக்கும் பிறந்திருக்கிறது!" என்றார்.

அப்புறம் குரங்கு மாதிரி யெல்லாம் கோமாளி செய்து எனக்குப் பலப் பல வேடிக்கைகள் காட்டினார்.


இச் சமயத்தில் மோட்டார் வண்டி ஒன்று வரும் சத்தம் கேட்டது. சமீபத்தில் மோட்டார் வந்து நின்றது. அதிலிருந்து, காலஞ்சென்ற ஜமீன்தாருடைய மகனும், ஜமீன்தாருடைய மைத்துனர் சொக்கையாவும் இறங்கினார்கள்.

ஜமீன்தாருடைய குமாரருக்கு அப்போது சுமார் எட்டு வயது இருக்கும். அவரே இப்போது ஜமீன்தா ராகையால் எல்லாரும் "மகாராஜா" என்று அழைக்கத் தொடங்கி யிருந்தார்கள். அவர் முதலில் வண்டியிலிருந்து இறங்கி நேரே நாங்கள் இருந்த மரத்தடிக்கு வந்தார். என் தந்தையை அவர் ஏற்கெனவே அரண்மனையில் பார்த்ததுண்டு. ஆகையால் என் தந்தை அவருடன் பேச்சுக் கொடுத்தார். அரண்மனையில் உள்ளவர்களின் சௌக்கியத்தைப்பற்றி விசாரித்தார். இளைய ஜமீன்தார் அதை அவ்வளவாகக் கவனியாமல், என் தாயின் மடியில் சிரித்துக் கொண்டு படுத்திருந்த என்மீது கவனம் செலுத்தினார். "இந்தக் குழந்தைக்குப் பெயர் என்ன?" என்று கேட்டார். "இந்துமதி" என்று காசிலிங்கம் சொன்னதும், "நீங்கள் ஏன் முன்மாதிரி அரண்மனைக்கு வருவதில்லை? இந்தக் குழந்தையையும் அழைத்துக் கொண்டு வாருங்களேன்! என் தங்கைகள் சந்தோஷப் படுவார்கள்!" என்றார்.

இதைக் கேட்டுக் கொண்டு சொக்கையா அங்கே வந்து சேர்ந்தார். அவருடன் ஒரு வேட்டை நாயையும் அழைத்து வந்தார். அவர் பேசிய போது வேட்டை நாய் குரைப்பது போலவே இருந்தது.

இளைய ஜமீன்தாரைக் கழுத்தைப் பிடித்து அப்பால் இழுத்துக் கொண்டே, "முட்டாளே! அரண்மனைக்கு நல்ல மனிதர்களை அழைக்கிறாய்? உன் தங்கைகளுடன் விளையாடுவதற்கும் நல்ல சிநேகம் பிடிக்கிறாய்?" என்றார். (தொடரும்)




GENUINE SPARE PARTS
Perkins
1. Cylinder head assembly complete
2. Cover timing gear housing front
3. Manifold exhaust
4. Crank shaft
5. Housing timing gear
6. Fuel and Oil Pump drive assembly
7. Cylinder head gasket
8. Manifold induction
9. Sump Lubrication oil assembly with well and baffleplate.
1
2
3
4
5
6
7
8
9
MANUFACTURERS AND ALL INDIA DISTRIBUTORS:
Simpson & Co. Ltd
MADRAS-2
Branches: BANGALORE OOTACAMUND
TIRUCHIRAPALLI SECUNDERABAD (Dn.)
SALES & SERVICE THROUGHOUT INDIA
CONTACT YOUR NEAREST PERKINS DEALER

ராஜா மாடசாமியின் தீர்ப்பு



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

[இந்தக் கதை ஒரு பழைய வைதிக புத்தகத்திலிருக்கும் கதை. கொஞ்சம் சேர்த்துப் புதுப்பித்து எழுதியிருக்கிறேன். உண்மைச் சரித்திரமென்று வைத்துக் கொள்ள வேண்டாம். —ராஜாஜி]

பாண்டியனுக்குக் கப்பங் கட்டி வந்த குறுநில மன்னர் பலர். அவர்களில் ஒருவன் முருக நாட்டு ராஜா. முருக நாட்டு மன்னர்கள் மிகத் திறமையாக ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார்கள். சின்ன சுந்தரத் தேவன் பல வருஷங்கள் சிறப்பாக ஆண்டான். மதுரைப் பாண்டியனுக்கு அவனிடம் மிக்க அன்பு.

அவனுக்கு மூன்று மனைவிகள். இருந்தாலும் துரதிர்ஷ்டம் காரணமாக அவனுக்கு ஆண் சந்ததி உண்டாகவில்லை. ஆனபடியால் சின்ன மனைவியின் மாமன் மகன் மாடசாமித் தேவனைத் தத்து மகனாக எடுத்து வளர்த்து வந்து, அவனையே இளவரசனாக்கினான்.

சுந்தரத் தேவன் இறந்த பின் மாடசாமி பட்டத்துக்கு வந்து விட்டான். யார் எப்படிச் சொன்னாலும் அப்படிக் கேட்பான். இவ்வளவு நல்ல ராஜா நமக்குக் கிடைத்தானே என்று முருக நாட்டுப் பெரியோர்கள் எல்லோரும் மிகத் திருப்தி அடைந்தார்கள்.

பெரிய புரத்தில் (அதுதான் முருக நாட்டுத் தலைநகரம்) ஒரு நாள் ஓர் ஏழைப் பிராமணன் வீட்டில் திருடன் கன்னம் வைத்தான். புது வீடு, மண் சுவர். சுவரில் பொந்து செய்து திருடன் உள்ளே நுழைந்தான். வழக்கம் போல் முதலில் கால் உள்ளே செலுத்திப் புகுந்தான். தலை உள்ளே போவதற்குள் சுவர் 'பொத' 'பொத' வென்று விழுந்து கழுத்து அகப்பட்டுக் கொண்டு மூச்சு விடவும் தப்பித்துக் கொள்ளவும் முடியாமல் அங்கேயே செத்துப் போனான். திருடனுடைய மனைவி மிகத் துக்கப்பட்டுத் தன் இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு ராஜா



விடம் சென்று வழக்குப் போட்டாள். "பிராமணன் என் வீட்டுக்காரனைக் கொன்று விட்டான். விசாரிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

"என்ன நடந்தது, சொல்!" என்று அரசன் கேட்க,


"ராஜாதி ராஜாவே! என் கணவன் இந்தப் பிராமணன் வீட்டில் கன்னம் வைத்தான். சுவர் 'பொத' 'பொத' வென்று விழுந்து என் புருஷன் அதில் சிக்கிச் செத்துப் போய் விட்டான். இப்படி ஈரச் சுவர் வைத்திருக்கலாமா? உங்கள் அரசாங்கத்தில் இப்படிக் கொலை நடக்க விடுவீர்களா? இனி நான் எப்படிப் பிழைப்பேன்? பிராமணனைத் தருவித்து நீதி செய்யுங்கள், துரையே!" என்று முறையிட்டாள்.

ராஜா பிராமணனைப் பிடித்து வர உத்தர விட்டான். சேவகர்கள் போய்ப் பிராமணனைப் பிடித்து, அழைத்து வந்தார்கள்.

"ஓய்! பிராமணரே! உம் வீட்டில் இந்த ஏழையின் புருஷன் கன்னம் வைத்தான். அவன் மேல் உம்முடைய வீட்டுச் சுவர் விழுந்து செத்துப் போனான் அதற்கு நீர்தான் காரணம். அவன் குடும்பம் கஷ்டப்படுகிறது. நீர் இருபது வராகன் அந்தத் திருடன் மனைவிக்குத் தர வேண்டும் இல்லாவிட்டால் சிறைச் சாலை" என்றான்.

"ஐயோ, நான் ஏழை. என்னிடம் இருபது வராகன் ஏது? ஐந்து வராகன் தான் ஏது? சிறைச் சாலையில் கொடுக்கும் கஞ்சியைக் குடித்து எப்படிப் பிழைப்பேன்? நான் ஒரு தவறும் செய்ய வில்லையே! அந்தப் பாழும் சுவர் வைத்த ஒட்டனைத் தண்டியுங்கள். அவன் வைத்த ஈரச் சுவர் இப்படி மோசம் செய்து விட்டது. கன்னம் வைத்தால் சுவர்





விழுந்து போகும்படி கட்டியது அவன் தவறு" என்று கூறினான் பிராமணன்.

"பிராமணன் சொல்லுவது நியாயமே, மந்திரி! ஒட்டப் பயலை இங்கே வரவழை, விசாரிக்கலாம்" என்றான் ராஜா.

ஒட்டன் திம்மனைச் சேவகர்கள் பிடித்து வந்தார்கள்.

"ஐயோ, நான் என்ன செய்வேன், மகாராஜா! மண்ணுக்குத் தண்ணீர் ஊற்றிய அந்தச் சிற்றாள் மோசம் செய்து விட்டான். ஜலம் அதிகமாக வார்த்து விட்டான். இது அவன் பிசகு. அவனை அழைத்துத் தண்டியுங்கள்" என்று சொன்னான் ஒட்டன் திம்மன்.

அரசன் யோசித்தான். "இதுவும் நியாயமாகவே இருக்கிறது. மந்திரி! தண்ணீர் ஊற்றியவனைப் பிடித்துவரச் சொல். அவனால்

அல்லவோ இந்த ஏழைத் திருடனுடைய உயிர் போகும்படி நேரிட்டு விட்டது?'' என்றான்.

அவனும் வந்தான். மிகப் பயந்து நடுங்கிக் கொண்டே பேசினான். "உண்மை! நான் தண்ணீர் அதிகமாகத் தான் வார்த்து விட்டேன். அதனால்தான் மண் அதிக ஈரமாகப் போய் விட்டது. ஆனால் நான் என்ன செய்ய முடியும்? தண்ணீர் மொண்டு வந்த பானை பெரிதாக இருந்தது. அதனால் தான் இந்த ஆபத்து நேர்ந்தது. பானை செய்த அந்தப் பாவிக் குயவன்தான் இதற்கு ஜவாப்தாரி'' என்று அழுதான்.



"இந்தச் சிறுவன் சொல்லுவதும் நியாயமாகத் தான் தோன்றுகிறது! மந்திரியே, அந்தக் குயவனைப் பிடித்து வரச் சொல்!'' என்றான். சேவகர்கள் போய்க் குயவனைப் பிடித்து வந்தார்கள்.

"ஏனடா, குயவா! நீ பானையைப் பெரியதாகச் செய்து விட்டது உண்மையா, இல்லையா? பொய் சொல்லாதே! அதனால் ஒரு ஏழை இறந்தான். தண்டனைக்குத் தயாராவாய்!'' என்றான் அரசன்.

"ஐயோ, மன்னிக்க வேண்டும், அரசனே! நான் செய்தது தவறு என்று ஒப்புக் கொள்ளுகிறேன். பெருமாள் கோயிலில் விளக்கு ஏற்றுகிற அந்த மீனாட்சி அன்று தெருவில் கிழக்கும் மேற்கும் போவதும் வருவதுமாக இருந்தாள். பானை செய்யும்போது அவளைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டேன். அதனால் பானை கொஞ்சம் பெரிதாய்ப் போய் விட்டது. அந்தக் குலுக்குக்காரி மீனாட்சியைக் கொண்டு வந்து தண்டியுங்கள்'' என்றான் குயவன்.

இந்தக் காரணத்தைக் கேட்ட ராஜா குயவன் பேரில் பரிதாபம் கொண்டான். "அழைத்து வா, அந்த மீனாட்சியை!'' என்று கூறினான்.



குயவனே போய் மீனாட்சியை அழைத்து வந்தான்.

"ராஜாவே! எனக்குப் பயமாயிருக்கிறது. ஏன் எனக்கு இந்த உத்தரவு?'' என்று கேட்டாள் மீனாட்சி.

"குயவன் பானை செய்து கொண்டிருந்த போது நீ அனாவசியமாகத் தெருவில் ஏன் இப்படியும் அப்படியும் நடந்து அவன் கவனத்தைக் கெடுத்தாய்? இந்த ஏழைப் பெண்ணின் குடும்பம் உன்னால் கெட்டதல்லவா?'' என்று அவளுக்கு நடந்ததையெல்லாம் விவரமாக எடுத்துச் சொன்னான்.

மீனாட்சி, "ஐயோ, இப்படியாயிற்றா? இப்படியாகும் என்று நான் கொஞ்சமும் எண்ணவில்லை. என் புடவை வண்ணாத்திக்குக் கொடுத்திருந்தேன். அவள் தாமதப்படுத்தி விட்டாள். எனக்கு உள்ள நல்ல புடவை ஒன்றே. அடுத்த நாள் கோயில் திருவிழா. ஊரெல்லாம் கோயிலில் கூடும். நான் சலவைக்குப் போட்டிருந்த புடவையை வண்ணாத்தி 'தருகிறேன், தருகிறேன்' என்று ஏமாற்றி வந்தாள். ஆகவே வண்ணாத்தி வீட்டுக்கே போய்க் கேட்கும்படியாகி விட்டது. அவள் வீட்டுக்குப் போக வேண்டுமானால் குய

வன் வீட்டு வழியாகத்தான் போக வேண்டும். அதுவும் பல தடவை போக வேண்டியதாயிற்று. ஆகவே மகா ராஜா, என்னை மன்னிக்க வேண்டும். அந்தப் பாவி வண்ணாத்தியையும் தயவுசெய்து விசாரியுங்கள் '' என்றாள்.

“ இவள் சொல்லுவது உண்மை போலிருக்கிறது. அந்த வண்ணாத்தியைத் தருவியுங்கள் '' என்று அரசன் வண்ணாத்தியின் பேரில் கோபங் கொண்டு மந்திரிக்கு உத்தரவிட்டான்.

வண்ணாத்தி சின்னம்மாளும் வந்தாள். “ சுவாமி! இந்த மீனாட்சி சொல்லுவது உண்மை. இவளுடைய சேலையைத் துவைக்கத் தாமதமாகி விட்டது. ஆனால் அது என் தவறல்ல. நான் அப்படி ஒரு நாளும் தாமதிக்க மாட்டேன். ஆற்றில் துணி துவைக்கும் கல்லின்மேல் ஒரு சாமியார் உட்கார்ந்து கொண்டேயிருந்தார். ஜபம் செய்து வந்தார். அவரை எப்படி நான் ‘ எழுந்து போ ’ என்று சொல்லுவது? நான் போனபோதெல்லாம் அந்தக் கல்மேலேயே அவர் உட்கார்ந்து மூக்கைப் பிடித்துக் கொண்டிருந்தார். அவரைக் கூப்பிட்டு விசாரியுங்கள் '' என்றாள்.

முருக நாட்டு ராஜா உடனே உத்தரவிட்டான். “ அந்தச் சாமியாரை எங்கேயிருந்தாலும் பிடித்து அழைத்துக் கொண்டு வாருங்கள்!'' என்று கூறினான்.

சாமியாரை அழைத்து வந்தார்கள். சாமியார் அப்போது மௌன விரதத்திலிருந்தார். என்ன கேட்டாலும் ஒன்றுக்கும் பதில் பேசவில்லை. தலை அசைத்துக் கொண்டு சும்மா நின்றார்.

“ குற்றத்தை மறுக்கவில்லை. கொண்டு போ, இந்தச் சாமியாரைச் சிறைச் சாலைக்கு!'' என்று ராஜா உத்தரவு பிறப்பித்து விட்டான்.

அரசன் ஆணைப்படி, பாவம், சாமியார் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

அடுத்த கூரை நாட்டு ராஜாவுக்கு இந்தச் சாமியாரிடத்தில் மிகுந்த பக்தி. இந்தச் சமாசாரம் அவனுக்கு எட்டியதும் கோபம் கொண்டு, முருக நாட்டின் மீது படையெடுத்துக் கோட்டைக்குள் புகுந்து நாட்டைத் தன் வசப்படுத்திக் கொண்டு விட்டான். மாடசாமியைச் சிறையில் அடைத்து விட்டு, தூதர்களை அனுப்பிப் பாண்டியனுக்கும் செய்திகளை வினயமாகத் தெரிவித்து விட்டான். முருக நாடு கட்ட வேண்டிய கப்பத்தைத் தானே கட்டி விடுவதாகச் சொன்ன படியால் பாண்டிய மன்னனும் அதற்கு ஒப்புக் கொண்டான்.

அட்டைப்பட விளக்கம்

அவன் காவலன்தானா?

அதோ குழலோசை கேட்கிறது!

அந்த நாட்களில் குழலோசை கேட்டாலே சோழ நாட்டிலுள்ளவர்கள், ‘மாடுகள் வீடு நோக்கி வருகின்றன; சூரியாஸ்தமன நேரமாகி விட்டது; கூடிய சீக்கிரத்தில் இரவு கவிந்து விடும்' என்று புரிந்து கொள்வார்கள். அதற்கு ஏற்ப வேலைகள் செய்வார்கள்.

சோழ மன்னன் மீது காதல் கொண்ட பெண் மட்டும் குழலோசை கேட்டதும் ‘ ஐயோ இரவு வந்து விடுமே,' என்று கவலையுற்றாள். அந்தக் கவலையில் அந்தக் குழலின்மீதும் அந்த நாட்டு மன்னனின் மீதுமே ஒரு வித சலிப்பும் கோபமும் ஏற்பட்டு விட்டது.

‘ இந்தச் சோழனை ‘சென்னி' என்றும், ‘வளவன்' என்றும், மண்ணகத்தைக் காப்பவன் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். எனக்கென்னமோ அப்படியெல்லாம் தோன்றவில்லை. பிறரைத் துன்புறுத்தும் காரியத்தைத் தடுத்தால் அல்லவோ, பாதுகாக்கிறான் என்று சொல்ல முடியும்' என்று எண்ணுகிறாள்.

தெண்ணீர் நறுமலர்த்தார் சென்னி இளவளவன்
மண்ணகம் காவலனே என்பரால் — மண்ணகம்
காவலனே ஆனக்கால் காவானோ மாலைக்கண்
கோவலர் வாய் வைத்த குழல்

முத்தொள்ளாயிரம்

[காவானோ : தடுக்க மாட்டானோ; கோவலர் : இடையர்]

“ இந்தக் கவியில் உண்மையான மனப்பாங்கு இருக்கிறது. ஒரு பரிதாபம் இருக்கிறது. இந்த இரண்டோடு ஹாஸ்யமும் இருக்கிறது. பாட்டின் உருவம் பூர்வமான உயர்ந்த கவிப் பண்பைக் காட்டுகிறது '' என்கிறார் இந்த நூலைப் பதிப்பித்த ரஸிகமணி.

நமது சித்திரக்காரர் சந்திரா தீட்டிய இந்த ஆண்டு தீபாவளி மலரின் அட்டைச் சித்திரமும் பாட்டுக்கேற்ப விளங்குகிறதல்லவா! தீபாவளித் திருநாளில் புதுமணத் தம்பதிகளுக்குச் சித்திரமும் பாடலும் புதியதோர் மகிழ்ச்சியை நல்கும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த மகிழ்ச்சி அவர்கள் வாழ்க்கையில் என்றென்றும் நிலவுவதாக.


கல்லும் கவி பாடுமே!
1
2
3
4
5
!
அடடா, என்ன மணம்! அந்த T.A.S. ரத்தினம் பட்டணம் பொடியிலே எனக்கும் ஒரு சிட்டிகை கொடுங்கோ.
T.A.S. ரத்தினம் பட்டணம் பொடி
1151
S.R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

மதிப்பில் முதன்மையானது

ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த பச்சை 'கோலினாஸ்'



. . . . . . ஏனெனில் அது உங்கள் பற்களை சுத்தம் செய்வது தவிர, மேற்கொண்டும் உதவுகிறது!

நீங்கள் உபயோகிக்கும் டூத்பேஸ்டு பற்களை பளபளப்பாக்குவதுடன் நிற்காமல், மேற்கொண்டும் உதவக்கூடியதாக இருக்கவேண்டும். இதோ தற்கால விஞ்ஞானம் உங்களுக்கு அத்தகைய டூத்பேஸ்டு ஒன்று வழங்குகிறது—அதுவும் அதிகப்படி செலவு ஏதுமின்றி! ஆக்டிவ்க்ளோரோபில் சேர்ந்தபச்சைக் 'கோலினாஸ்' உங்கள் பற்களை வெண்மையாக்குவதுடன், பல் சிதைவிற்குக் காரணமான கிருமிகளை ஒழித்து, ஈறுகளை திடமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கிறது. இதன் இரகசியம் அற்புதமான 'கோலினாஸ்' நுரையில்தான் அடங்கியுள்ளது. அது ஆக்டிவ் க்ளோரோபிலை வாயின் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் எடுத்துச்செல்கிறது. உங்கள் சுவாசம் மணிக்கணக்கில் புதுமை மணம் பெற்று விளங்குகிறது.

'கோலினாஸ்' அதிக நாள் வருகிறது


ஈரமில்லாத பிரஷில் அரையங்குல அளவே தேவை. ஆதலால் தான் ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த 'கோலினாஸ்' எவ்வளவோ அதிக மதிப்புடையதாக விளங்குகிறது! இன்றே இந்த நவீன டூத்பேஸ்டை உபயோகிக்கத்தொடங்குங்கள்

உங்கள் குழந்தைகளுக்கு **இலவசம்**

''நகைமுகனும் அவனுடைய பிராணிகள் பற்களும்'' என்ற ரஸமான சித்திரக் கதைக்கு இப்பொழுதே எழுதுங்கள்:

நகைமுகன்,
இலாகா 50 F.
த. பெ. 541,
பம்பாய்





'கோலினாஸ்' புன்னகையில் ஆரோக்கியம் ததும்புகிறது

GK. 215 (7)



கோகிலா

ரமண்லால் வஸந்தலால் தேசாய் ✣ மொழிபெயர்ப்பு: ரா.வீ.

23. மனமும் மணமும்

மணம் புரிந்து கொண்டுதான் ஆக வேண்டும் என்ற பழக்கம் இந்த மானிட சாதியிடம் படிந்து விட்டது. அதுவும் முக்கியமாகப் பாரத மக்களிடையே இந்தப் பழக்கம் அசைத்தாலும் அசைக்க முடியாத படி வேரூன்றிக் கிளை விட்டு நிலை பெற்று விட்டது. பெண்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு முறையாவது கல்யாணம் செய்து கொண்டே தான் தீர வேண்டும். கல்யாணம் செய்து கொள்ளாமல் அவர்களுக்குக் கதி மோட்சமே கிடையாது. தகுந்த மணமகன் கிடைக்க வில்லையென்றாலும் கிணற்றுத் தலையிட்டுடனோ அல்லது அரச மரத்துடனோ கடைசி பட்சமாக அவர்களுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டுத்தான் மறு காரியம் பார்க்கிறார்கள், நம் பாரத மக்கள். காரணம் என்ன? பெண்மணிகள் மணம் செய்து கொள்ளாமல் கன்னியாகவே இருப்பது என்பது இந்த நாட்டில் நடவாத காரியம்; நினைத்துக் கூடப் பார்க்க முடியாத காரியம். ஆனால் நாளுக்கு நாள் முன்னேறி வரும் மேல் நாட்டுக் கல்வி முறை வெகு நாட்களாக வேரூன்றி விட்ட பல பழக்க வழக்கங்களை வேர் பறிக்க முற்பட்டு விட்டது. அதன் பலனாக நம் நாட்டில் பல பெண்கள், விவாகம் செய்து கொள்ளாமலே தங்கள் வாழ்நாளை ஓட்டி விட முடியும் என்று கனவு காணத் தொடங்கி யிருக்கிறார்கள். குஸுமாவும் அந்தக் கோஷ்டியில் ஒருத்தியாகத்தான் திகழ்ந்தாள். எனவே, அவளும் அத்தகைய கனவு காண்பதில் எத்தகைய குறைவும் வைக்க வில்லை.

நவநாகரிக மங்கை தன் தகுதியைத் தனிக் கண்கொண்டு காண்கிறாள். அதோடு அவள் பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவளாயிருந்து விட்டாலோ கேட்க வேண்டியதில்லை. அவளுக்குக் கிட்டும் மட்டும் மரியாதையும் சொல்லுக்கு அடங்காது. பற்றாக் குறைக்குத் தன் தந்தையின் குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பும் அப் பெண்ணிடமே ஒப்படைக்கப் படுமானால், அவளுடைய கௌரவம் ஏகமாக உயர்வதற்குக் கேட்க வேண்டுமா? அத்தகைய நிலையில் அந்தப் பெண் தன்னை அந்தக் குடும்பத்துக்கு இன்றியமையாதவள் என்று எண்ணத் தொடங்கினால் அதில் என்ன தவறு? அவளுடைய அந்த எண்ணத்தைக் கொண்டு அவளைத் தலைக் கர்வம் பிடித்தவள் என்றோ, பணச் செருக்கில் மூழ்கிக் கிடப்பவள் என்றோ முடிவு கட்டி விடுவது மூளையின் பெருமைக்கு உகந்த விஷயமாகுமா?

குஸுமா கொஞ்சமும் கர்வம் பிடித்தவள் அல்ல. அப்படிக் கர்வப்பட வேண்டிய தேவையும் அவளுக்கு இல்லை. பணக்காரத் தந்தையின் பிரியத்துக்குப் பாத்திரமான பெண்ணாகப் பிறந்த காரணத்தினால் அவளுக்கு உயர்தரக் கல்வி பெறும் பேறு கிடைத்திருந்தது. அதனால் ஆண்களிடையே சாதாரணமாகக் காணக் கிடைக்கும் யோக்கியதையெல்லாம் அவள் கண்களுக்கு அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லை. சிறு பிராயத்திலேயே தாயாரை இழந்து விட்ட அவள், நினைவு தெரிந்த நாள் முதலாகக் குடும்பக் காரியங்களில் அக்கறை செலுத்தும் அறிவைப் பெற்றிருந்தாள். அதன் பலனாகப் பொறுப் பேற்றுக் கொள்ளும் பிராயம் வந்ததும் ஸர் பிஹாரிலால் குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் அவளிடமே ஒப்படைத்துவிட்டார். எனவே, குடும்பக் காரியங்களில் கருத்தைச் செலவிட்டு விட்ட அவளுக்குக் கல்யாணம் செய்து கொண்டு புருஷன் வீட்டுக்குப் போக வேண்டும் என்ற ஆவலோ துடிப்போ அதிகமாக எழ வில்லை.

ஆயினும் கல்வி கேள்விகளில் சிறந்து கருத்தைக் கவரும் வனப்புடன் விளங்கும் வாலிபன் யாராவது அவளுடைய மலர் விழிகளில் பட்டு அவள் கவனத்தைக் கவர முயன்றால், அவள் தன்னை மறந்து பெண்களுக்கு இயல்பான முறையில் பற்பல யோசனைகளில் ஆழ்ந்து விடுவாள்; கருத்தை அவனைப் பற்றிய கனவுகள் காண்பதில் செலவிடத் தொடங்கி விடுவாள். ஆனால் முன்னவனைக் காட்டிலும் மேலான மற்றொருவனைப் பார்க்க நேர்ந்து விட்டால், முன்ன

வனை மறந்து பின்னவனைப் பற்றி எண்ணத் தொடங்கி விடுவான்.

பொது வாழ்வில் பெயரும் புகழும் பெற்ற வாலிபனோ, எண்ணற்ற ஐசுவரியத்துக்கு எசமானனாகப்போகும் இளைஞனோ, அல்லது அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகம் பெற்று வெற்றி வாகை சூடிக்கொண்டு மேலும் மேலும் முன்னுக்குச் சென்றுகொண்டிருக்கும் காளைப் பருவத்தினனோ தன் கருத்தைக் கவர்ந்து விட்டால், குஸுமாவுக்குத் தந்தையின் தனிமை வாழ்வு நினைவுக்கு வரும். தன் திருமண விஷயத்தைப் பற்றித் தந்தைக்கு அதிகக் கவலை வைக்கக் கூடாது, சீக்கிரமாகக் கல்யாணம் செய்து கொண்டு அவர் கவலையைக் குறைப்பதோடு தொழில் துறையில் அவருக்கு உதவியாக இருக்குமாறு தனக்கு வரப்போகும் மணாளனைச் செய்து விட வேண்டும் என்ற பெரு நோக்குடன் கனவு காண்பாள். சொல்வதன் கருத்து என்னவென்றால், அவள் தன் திருமணத்தைப் பற்றித் தீவிரமாக எதுவும் யோசனை செய்ய வில்லை; குழந்தைகள் போல் கிளிக் கூண்டு கட்டி அழித்து வேடிக்கை வாழ்வு வாழ்ந்தாள் என்பது தான். காரணம் என்ன? பண்படாத உள்ளமா? இல்லை, அவள் மனத்தை அப்படிக் கவர்ந்தவர்கள் யாருமே இல்லை யென்ற எண்ணமா? சாதாரணமாகப் பேச்சுக் கொடுத்துப் பார்த்தால், அவள் கல்யாணம் செய்து கொள்ளாமல் கன்னியாகவே காலம் கழித்து விடுவதாகத்தான் உத்தேசம் என்று சொல்லி வந்தாள். 'அவளுடைய இந்தப் பேச்சு விவரம் தெரிந்தவர் பேசும் பேச்சா?' என்று பலருக்குத் தோன்றலாம்; வியப்பை அளிக்கலாம். ஆனால் நாளடைவில்தானே அவள் உண்மை மனம் தெரிய வேண்டும்?

ஒரு பெண்ணோ ஆணோ மணம் செய்து கொள்ளட்டும்; கொள்ளாமல் இருக்கட்டும். செய்து கொள்ளாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் வேண்டுமானாலும் கூறட்டும். ஆனால் இயற்கைக் கவர்ச்சிக்கு நாங்கள் வசப்பட வில்லையென்று மனத்தைத் தொட்டு அவர்களைச் சொல்லச் சொல்லுங்கள். அவர்களால் முடியாது. அப்படிச் சொல்லி விட்டால் அவர்களை யோக சித்தி பெற்றவர்கள் என்றோ அமானுஷ்யமான பிறவிகள் என்றோதான் கூற வேண்டும். ஏனெனில் தேவதைகள்கூட இருதயத்துச் சாதனைக்கு அடிபணிந்து விடுகின்றனர்.

இருதய சாதனைக்கு இலக்காகி அபூர்ணமே உருவான மனிதன் தன் ஆயுள் முழுவதற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டானா இல்லையா என்ற கேள்வி ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் இருதயம் செய்யும் அற்புத சாகஸச் செயல்களை இருதயம் படைத்த குஸுமா கேள்விப்பட்டிருக்க மாட்டாள் என்று சொல்வது கேலிக் கூத்தாக முடியும். அப்படிச் சொன்னால் அதையும் அமானுஷ்யக் கற்பனைகளில் ஒன்றாகத்தான் சேர்க்க வேண்டும். ஏனெனில் என்ன இருந்தாலும் குஸுமாவும் ஒரு பெண்தானே? பெண் உள்ளம் படைத்தவள் தானே? அவள் மனத்தில் எழும் ஆசாபாசங்களுக்கும் கற்பனைக் கனவுகளுக்கும் ஒரு கங்கு கரை இருக்க முடியுமா?

வக்கீல் சுகபாலைப் பல பொது மேடைகளில் சொல்மாரி பொழிய அவள் கண்டிருக்கிறாள். சுகபால் பேசும் முறையே அலாதி; கேட்போரின் உள்ளத்தை அள்ளக் கூடிய திறன் வாய்ந்தது. சுகபால் சிறந்த பேச்சாளன் என்று கூறினால், அது மிகைப் படுத்திக் கூறும் குற்றத்துக்கு ஒருநாளும் இலக்காகாது. பேச்சு என்னும் மோக வலையிலே அவன் மக்களை மகுடிப் பாம்பாகக் கட்டிப் போட்டு விடுவான். அவன் உணர்ச்சி வேகத்தில் அள்ளி வீசும் எத்தனையோ அடுக்குச் சொற்களும் அடைமொழிகளும் கேட்போரின் காதுகளிலே பல நாட்கள் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும். அவன் பிரசங்கம் புரியும் பொழுது நிற்கும் தோரணை, அவன் கண்களில் சுடர் விடும் ஒளி, பிரசங்கத்துக்கு இடையிலே அவன் பிடிக்கும் பல அரிய பெரிய அபிநய முத்திரைகள் ஆகியவை இளைஞர்களின் இருதயத் திரையில் அழியாச் சித்திரமாக நின்றன. பிறர் பார்த்துப் பின்பற்ற வேண்டும் என்று சொல்லுவதற்கு எடுத்துக் காட்டாக இருந்தது அவனுடைய பிரசங்க பாணி என்று சொல்வது தவறு. ஏனெனில் அவனைச் சூழ்ந்திருந்த நண்பர் குழாம் தான் முன்னிருந்தே அவனைப் பின்பற்றி வந்ததே! சுகபால் மேடைக்கு வருகிறான் என்றால் அவனைப் புடை சூழ்ந்து ஒரு பெரிய சிஷ்ய கோஷ்டியும் வரும். அதன் கரகோஷத்தின் ஆரவாரத்தில் பந்தல் அதிரும்.

இக்காட்சியைப் பல தடவைகள் நேரில் கண்டிருக்கும் குஸுமாவின் கண்களுக்குச் சுகபால் ஒரு மகா புருஷனாகவே தோற்றமளித்தான். ஸர் பிஹாரிலாலுக்கு எதிராக அவன் பொது மேடைகளில் வாயில் வந்தபடியெல்லாம் பேசுவான். ஆனால் அதிலும் ஒரு விதரணை தொனிக்கும். தன் தந்தைக்கு எதிராகப் பேசுகிறானே என்று கொஞ்சமும் கோபப் படாமல் குஸுமா தன் தந்தைக்கு எதிரிலேயே அவனைப் பற்றி வாயார வானளாவப் புகழ்வாள். ஸர் பிஹாரிலால் அவள் சொல்வதையெல்லாம் பொறுமையாகக் கேட்பார்; புன்முறுவல் புரிவார். சிற்சில சமயம், "மனிதனாகப் பிறந்தவன் தன் நாக்கையும் இருதயத்தையும் அடக்கியாள வேண்டும்!" என்று சொல்லிப் போவார். அவருடைய அந்தச் சொற்களில் என்ன என்னவெல்லாம் பொருள்கள் பொதிந்திருந்தன என்பதை அப்பொழுது யார் என்ன கண்டார்கள்?

சாந்திப் பிரியனையும் குஸுமா பல முறைகள் பார்த்திருந்தாள். பேச்சிலே அவனும் பலே கைகாரன்தான். அவனுடைய

ஒவ்வொரு சொல்லிலும் ஒரு குத்தல் இருக்கும். தன் வாயில் விழுந்தவர்கள் யாராயிருந்தாலும் எள்ளி நகையாடி ஏளனத்துக்கு இலக்காக்கும் அபாரக் கலையை அவன் கற்றுத் தேர்ந்திருந்தான். அவன் வாயில் புகுந்து புறப்பட்டவர்கள் யாருமே கிடையாது என்றுகூட ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். இந்த அவனியில் அவன் அறியாத விஷயங்கள் இல்லை. எனவே, அறிவுக் களஞ்சியம் என்ற பெயரும் புகழும் அவனைத் தாமாகவே தேடிக் கொண்டு வந்து விட்டன. மக்களின் அந்தரங்க விஷயங்களில் அக்கறை காட்டி அவன் அறிந்து வைத்துக்கொண்டிருந்தாற் போல் வேறு யாருமே அறிந்து வைத்துக் கொண்டதில்லை. அப்படி அறிந்து வைத்துக் கொள்ள முயன்றாலும் அது அவர்களால் முடியாத காரியம்.

'வைசிராய் அளித்த விருந்தில் குறிப்பிட்ட ஆணும் பெண்ணும் குறிப்பிட்ட பிரகாரம் உட்கார எந்த யுக்தியைக் கையாண்டார்கள்? அப்பொழுது அவர்கள் என்ன என்ன பேசினார்கள்? அவர்களுடைய அரசியல் வாழ்க்கை எப்படிப்பட்டது? சமூக வாழ்க்கை எத்தகையது? சொந்த வாழ்க்கை எவ்வாறானது? இது போன்ற பல விஷயங்கள் அவன் அறிவுக்கு அப்பாற்பட்டவையல்ல; அற்றுபடியானவை. சர்க்கார் மாளிகையில் நடந்த நாட்டிய விருந்தில் கலந்து கொண்ட ஆண் பெண்களில், யார் யார் எப்படி எப்படிப் பேசினார்கள், என்ன என்ன பேசினார்கள் என்பதை அவன் கால் புள்ளி, அரைப் புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி முதற் கொண்டு கன கச்சிதமாக வைத்து வர்ணிப்பான். அந்த வித்தையில் அவனை மிஞ்ச யாராலுமே முடியாது. அதற்கென்றே பிறந்தவனாக அவன் திகழ்ந்தான்.

கர்ஜனைப் பத்திரிகையின் கடிவாளம் அவன் கையில் இருந்தது. பத்திரிகையைப் பொறுத்த வரையில் அவன் வைத்ததுதான் சட்டம். அதில் வெளியாகும் வியாசங்களும் கட்டுரைகளும் கூரிய கத்தியைப் போல் கருக்கானவை. அவனது கட்டுரைகள் பலருக்கு ஆபாசக் களஞ்சியமாகத் தோன்றிய பொழுதிலும் பெரும்பாலான மக்களின் மனத்தைக் கவருவதாகவே இருந்தன.

சாந்திப் பிரியனும் தேச பக்தர்களின் வரிசையிலே முதலில் நிற்பவன்தான். குஸுமாவுடன் அவனுக்கு அவ்வளவாகப் பரிச்சயம் கிடையாது. இருந்த பொழுதிலும் அவன் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே குஸுமா சிந்தனையில் ஆழ்ந்து விடுவாள். சாந்திப் பிரியன் எத்தனையோ நாட்களாகப் பிஹாரிலாலைப் பேட்டி காண வந்து கொண்டிருந்தான். சிற்சில சமயம் குஸுமா ரமேஷ் இருவரையும்கூட அவன் கண்டு பேசிப் போவதுண்டு.

ஒரு கட்சியை ஆதரிப்பது என்றால் ஏகமாகப் புகழ்ந்து உச்சாணிக் கிளையில் தூக்கி வைப்பது, எதிர்ப்பது என்றால் மூர்த்தண்யமாக எதிர்ப்பது என்ற கொள்கையைக் கடைப்பிடிக்காமல், நடுநிலைமையை நிலைநாட்டும் நோக்கத்துடன் அரசியல் உலகில் ஒரு சுதந்திரக் கட்சி உருவாகி வருகிறது என்று அவன் நம்பினான்; அதனால் நாட்டுக்கு நல்ல பலன் கிட்டக் கூடும் என்றும் நினைத்தான். எனவே, அத்தகைய கட்சிக்கு ஆக்கம் அளித்து ஸ்தூல உருவம் கொடுத்து நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்று அவன் விரும்பினான். அதற்காக அவ் விஷயத்தில் அதிக ஆர்வம் கொள்ள வேண்டும் என்று ஸர் பிஹாரிலாலை ஊக்கினான், தூண்டினான்; வற்புறுத்தவும் செய்தான்.

* * *

குஸுமா அடுத்தபடியாக மனோஹரின் பெயரையும் எத்தனையோ முறை கேள்விப்பட்டிருந்தாள். இரண்டொரு தடவை அவனைப் பார்க்கவும் பார்த்திருந்தாள். இருந்தாலும் குஸுமாவின் மனத்திரையில் அவனுக்கு இடம் கிடைக்கவில்லை. காரணம், வேறு ஒன்றும் இல்லை. பிஞ்சில் பழுத்த நதையாக, அவன் கம்பீரமே உருவாகக் காட்சி யளித்ததுதான். அந்த அந்த வயதுக்கு இருக்க வேண்டியதைக் காட்டிலும் தோற்றத்தில் மாறுபாடு தொனிக்குமானால் யாருக்குமே ஒருவிதமாகத் தோன்றுவது இயல்புதானே? ஆனால் அந்தக் காம்பீர்யத்தையே தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவன் தேசத் தலைவர்களிடையே முதன்மையான ஸ்தானத்தைப் பெற முயன்றான். மனோஹர் நல்லொழுக்கம் நிறைந்தவன்; தூய்மை தோய்ந்தவன். இருந்தாலும் குஸுமாவுக்கு அவனைக் கண்டால் ஏனோ பிடிக்க வில்லை.

ஒரு பெண், தான் அணிந்திருக்கும் வைரம் பதித்த வளையல்களை எந்த எந்தக் கோணத்தில் எல்லாம் காட்டி மகிழ்வானோ, அதே போல் அவன் தன் சிவந்த மணிக் கட்டில் கட்டி யிருக்கும் விலையுயர்ந்த கடிகாரத்தைக் காட்டி மகிழ்வான். அவன் தலையில் ஒருபுறமாகச் சாய்ந்து காணப்படும் கதர்க் குல்லாயும், கண்களை மறைத்திருக்கும் கனமான 'பிரேம்' போட்ட கறுப்புக் கண்ணாடியும், மீசையில்லாத முகமும் பார்ப்போரின் கவனத்தை அவன்பால் கவர்ந்தன. ஆனால் குஸுமாவின் மனத்தைக் கவர மட்டும் அவனால் முடியவில்லை. "என்ன அலங்காரம் வேண்டிக் கிடக்கிறது, பெண் பிள்ளை மாதிரி!" என்று வாய்விட்டே அவள் அபிப்பிராயம் கூறி வந்தாள். அவள் கூறிய அந்த அபிப்பிராயம் அவன் காதுவரை எட்டி யிருக்குமோ, எட்டியிராதோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்! ஆனால் அதைக் காட்டிலும் வெட்ட வெளிச்சமாக அவள் அவனைப் பற்றி அபிப்பிராயம் கூறவில்லை; கூறவேண்டிய தேவையும் இருப்பதாக நினைக்கவில்லை. (தொடரும்)

தமிழ் மக்கள் அனைவருக்கும், "புரு" மார்க் தீப்பெட்டிகளை ஆதரிக்கும் வியாபாரிகளுக்கும் பொது ஜனங்களுக்கும், எங்கள் மனமார்ந்த

தீபாவளி வாழ்த்துகள்



"புரு மார்க்" தீப்பெட்டிகளை

எல்லோரும் வாங்கி உபயோகியுங்கள்

குச்சிகள் வெண்மையாகவும் எண்ணிக்கை சரியாகவும் இருக்கும். மழை காலத்திற்கும் காற்றுக்கும் உத்திரவாதமுள்ளது.

★

விற்பனை டிப்போக்கள் :

விழுப்புரம்	மங்களூர்	கண்ணனூர்
பாலக்காடு	கோயமுத்தூர்	திரூர்
பண்ருட்டி	கள்ளிக்கோட்டை	நாகப்பட்டினம்
கூடலூர்	திருச்சிராப்பள்ளி	பையனூர்
மதராஸ்	தலைச்சேரி	

★

தீ லோட்டஸ் மாட்ச் ஒர்க்ஸ்

த.பெ.நெ. 52. **சிவகாசி** *தந்தி: 'LOTUS'*


நமது
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
தீபாவளி
வாழ்த்துக்கள்
ஆப்கான் ஸ்னோ
அண்டு
கோல்ட் க்ரீம்
ஆசியாவிலேயே தலைசிறந்த
அழகு சாதனங்கள்
Patanwala
FOP PERFUMES AND COSMETICS


யானைமுகப் பெருமான்
திங்களோடு கங்கைசூடி
சேர்த்தவன் நீயே!
திரிபுரங்கள் நீறுபடப்
பார்த்தவன் நீயே!
சங்கினோடு சக்கரங்கை
தாங்கியமால் நீயே!
தசமுகனைப் போரிலுயிர்
வாங்கியமால் நீயே!
நங்கைகலை மங்கைதவழ்
நாவின்அயன் நீயே!
நாரணனார் உந்திதரு
பூவினயன் நீயே!
எங்குமுள பரம்பொருளே!
என்றுமுள பொருளே!
யானைமுகப் பொருளே! வந்
தேழையெனக் கருளே!
மணியம்



சூரியன் எழுந்து வந்திடானோ?


பல்லவி

இருளும் நீங்கிடாதோ? — சூரியனும்
எழுந்து வந்திடானோ?

கண்ணிகள்

ஆழி நெடுந் தேரும்—வழியில்
அச்சு முறிந்ததுவோ?
ஏழு குதிரைகளும்—ஒன்றாய்
இடறி வீழ்ந்தனவோ?
அரவின் வாய்ப்பட்டே—அவனும்
அழிந்து போனானோ?
பரவையில் விழுந்து — மீளாப்
பாதலம் சேர்ந்தனனோ?
ஏறவொட்டாதபடி — விந்தம்
எழுந்து நின்றதுவோ?
வேறு வழியாகச் — சென்று
மேற்கில் அடைந்தனனோ?
கோழி கூவிடாதோ? — காகமும்
கூட்டில் மடிந்ததுவோ?
தோழி இரவுதான்—யுகமாய்த்
தொடர்ந்து நீண்டிடுமோ?
வீசும் தென்றலினால் — உடலும்
வெந்து கருகுதடி!
பூசிய சந்தனமும் — தணலாய்ப்
பொரிந்து போகுதடி
இன்று வருவாரோ?—அவர்தான்
இன்னும் சில நாட்கள்
சென்று வருவாரோ—தோழி!
தெரிந்து சொல்லாயோடி!


மணியம்




முருகன் திருப்பதிகள்

பல்லவி


பாடிப் பணிவோமே!—பக்தியோடு
பாடிப் பணிவோமே!

கண்ணிகள்

பாரகம் போற்றிப் பரவும் பரங்குன்றில்
தாரக மாகவே தங்கும் தயாளனை
இந்திரற் குற்ற இடரினைப் போக்கிய
செந்தில் முருகனை, தெய்வானை கேள்வனை
புள்ளி மயிலேறும் புண்ணிய மூர்த்தியை
வள்ளி மணாளனை ஐயா புரியானை
வீராதி வீரனை விசாகப் பெருமானை
ஈராறு கையனை ஏரகத் தண்ணலை
காலைக் கதிரெனக் காணும் பழமுதிர்
சோலைக் குமரனைச் சூரசம் மாரனைப்
இன்றமிழ் வாணருக் கென்றும் அருள்வானைக்
குன்றுதோ றாடும் குகனைக் குழகனை
சிங்க முகனுயிர் சிந்திய காலனைக்
கங்கையின் மைந்தனைக் கதிர்காம வேலனை



இது இயற்கைதான்!




எப்பொழுதேனும் ஏதாவது அசந்தர்ப்பம் ஏற்படுமோ என்று அதை எதிர்பார்த்து அதற்கென ஒரு மாற்று வைத்துக்கொள்ள முடியுமா! சாமான்கள் பட்டுவாடாவுக்காக வெளியில் செல்லும் உங்களது டிரக்குக்கு ரஸ்தாவில் ஏதாவது பழுது ஏற்பட்டுவிட்டால் அதற்கென்று உங்களதுகாரியம் தாமதமாகாத முறையில்...முதலில் கால தாமதத்தைத் தவிர்க்க ஏற்பாடு செய்யுங்கள். வாடிக்கைக்காரர்களது அவசரத்தையோ அவசியத்தையோ நீங்கள் உணராதிருக்கலாம். உங்கள் சரக்குகள் உரிய காலத்தில் போய்ச் சேராததால் ஒரு வாடிக்கைக்காரரின் வியாபாரத்திற்கே ஒருக்கால் குந்தகம் விளையலாம். இத்தகைய நெருக்கடிகளையெல்லாம் எதிர்பார்த்துத்தான்—தேசத்தின் தொழில், வியாபார அபிவிருத்தியில் சிரத்தை கொண்டுதான்—வர்த்தக சமூகத்தின் சேவைக்காகவே நாங்கள் ஒரு பெரும் போக்குவரத்து ஸ்தாபனத்தை நிர்வகிக்கிறோம். அதன் வசதிகளைப் பெற சுற்று வழியில் செல்ல வேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றுதான்......உங்கள் விலாஸத்துடன் தேவையை எங்களுக்கு போன் செய்யுங்கள். சில நிமிஷத்துக்குள்ளாகவே உங்கள் சேவைக்காக எங்கள் சிப்பந்திகளும் வேண்டிய அளவுக்குள்ள டிரக்குகளும் வந்துவிடும். நகரத்தின் எல்லைக்குள் கால அளவுப்படி குறித்த கட்டணங்களை மட்டும் செலுத்தினால் போதும்.

தொலைவிலுள்ள இடங்களுக்குச் சாமான்களை குறைந்த நேரத்தில் நியாயமான கட்டணங்களில் எடுத்துச் செல்லும் வசதி பூரணமாக எங்களிடம் உண்டு. விவரத்திற்கு எழுதவும்.

ஸ்ரீ ராம விலாஸ் சர்விஸ் லிமிடெட்


டின்ரோஸ் எஸ்டேட் - மவுண்ட் ரோடு - மதராஸ்-2

போன்: 84008 தந்தி: "ROADHAUL"



Simpson's

Perkins



எல்லாவிதமான
பஸ், லாரி முதலிய வண்டி
களின் இயக்கச் செலவைக்
குறைக்க ஸாதகமாக உள்ள
என்ஜின் பேர்கின்ஸ் ஒன்றேதான்

இந்தியா முழுவதும் விற்பனையும் ஸர்விஸும் உண்டு

விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள
பெர்கின்ஸ் வியாபாரியை விசாரிக்கவும்

தயாரிப்பவர்களும் அகில இந்திய விநியோக உரிமையாளர்களும் :

ஸிம்ஸன் & கோ. லிட்.


மதராஸ் - 2.

கிளைகள் : பெங்களூர் - உதகமண்டலம் - திருச்சிராப்பள்ளி - செகந்திராபாத் (டெக்கான்)

சங்கீத மாப்பிள்ளை !



"ஒசந்த வரன் வந்திருக்கு; மூஞ்சியைத் திருப்பிக்காதே! அதுக்கென்ன? உனக்குப் பாட்டுப் பிடிக்குமேன்னு மாப்பிள்ளையைப் பாடச் சொல்லி போட்டோ எடுத்து அனுப்பித்திருக்கா!"


வாழ்வில் வாசனை கூட்டுவன
TSR
தசாங்கம்
ஸ்னானப் பொடி
சந்தனத் தூள்
சந்தன வில்லைகள்
அரகஜா
பன்னீர்
டி.எஸ்.ஆர் & கம்பெனி,
கும்பகோணம், தென்னிந்தியா.
EP.



பண்டிகை நாட்களிலும்

மற்றும் எல்லா நாட்களிலும்


துஷார்

வனஸ்பதி



துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்.,

கர்னூல், தென் இந்தியா



வந்தனை செய்திடுவோம்

ஆசைப் பசுங் கிளியே—அன்னை
யாரென் றறிகுவையோ—எந்த
தேசமும் காணு மகத்துவ பாரத
தேவி யென்றே மனந் தேர்!

மூவுலகும் அறியாப்—புகழ்
மேவுந் திருமுடியாள்—கவி
நாவில் நடந்து கலைகள் வளர்த்திடும்
நாயகி தன் திரு நா.

வேதம் பொழிந்திடும் வாய்—கீத
வெள்ளம் பொழிந்திடும் வாய்
ஓதும் மொழிகள் உண்மைக ளனந்தம்
உரை செய்யுந் தாயவள் வாய்.

பேதைச் சிரிப்பினிலே—மதலையர்
பிள்ளை மொழியினிலே—பூந்
தா தவிழ் சோலையிலே—நகைக்கும்
தாமரைச் செவ்வித ழான்

இடரெது வந்தாலும்—கண்டு
எள்ளி நகைத்திடுவாள்—ஞானச்
சுடர்விழி பார்த்துலகில்—படர்ந்தே
சூழும் இருள் களைவாள்!

இன்னிசை நன்மொழிகள்—எனில்
எங்கும் செவி கொடுப்பாள்
மன்னுயிர் மூச்சினிலே—இசைந்தே
வாழ்ந்திடும் மாண்புடையாள்.

நொந்தார்க் கருமருந்தோ—தேடி
வந்தார்க் கொரு விருந்தோ
சிந்தாமணியோ எழில் மிகும் பாரத
தேவியின் திரு முகமே.

வீரம் சுமந்திடும் தோள்—புகழ்
ஆரம் சுமந்திடும் தோள்—பரி
பூரணனோடு நின்றாடிய காளிதன்
பூரித் தடர்ந்த மென்றோள்

காண்டீப மேந்திய கை—அன்று
கவுரவர் ஆணவம் போக்கிய கை
மாண்டவர்க்கும் நல்ல வாழ்வுதர
வான்புனல் கங்கையைத் தான்தரும் கை—நல்

அறங்கள் வளர்த்திடுங் கை—மறம்
அழிக்க வேலேந்திய கை
குரங்கினம் கொண்டொரு இலங்கை பொடி செய்த
குமரி எந்தாய் திருக் கை

எண்ணரும் மேதைகயோர்—தம்மை
ஈன்ற வயிறுடையாள்
புண்ணிய மாநதிகள்—பொலியும்
வண்ணப் பொன் மேகலையாள்

ஆழி மணி யிறைத்தே—வந்து
அலம்புந் திருவடியாள்
வாழியெம் பாரதத் தாயென்று சொல்லி
வந்தனை செய்திடுவோம்!

—ராஜம் சீதாராமன்



குயில் கொட்டிய முரசு

ரா. பி. சேதுப்பிள்ளை

தென்னாட்டில் வேங்கை மார்பன் என்பவன் ஒரு குறுநில மன்னன்; ஆண்மையும் அழகும் வாய்ந்தவன்; பற்றாரை வேரறுப்பவன்; அற்றாரை ஆதரிப்பவன்; போர் என்றால் அவனுள்ளம் துள்ளி மகிழும்; தோள்கள் பொங்கி நிமிரும்.

வேங்கையைப் போர்க்களத்திற் காணலாம். இல்லையேல் பூஞ்சோலையிற் காணலாம். அவன் மாளிகையின் அருகே அழகிய சோலையொன்று உண்டு. அங்குள்ள நறுமலர்களைப் பறிப்பதும், அவற்றை மாலையாகத் தொடுப்பதும் அவன் மனதுக்கு உகந்த இன்ப விளையாட்டு.

வசந்த காலம் வந்தது; மெல்லிய பூங்காற்று வீசிற்று; குயில் கூவிற்று; பூஞ்சோலை மணம் கமழ்ந்தது. வேங்கை காலையில் எழுந்து அச் சோலையின் உள்ளே சென்றான். மலர்களின் செவ்வியைக் கண்டு மகிழ்ந்தான். காலைக் கதிரொளியில், களித்திலங்கும் மலர்களைக் காணத் தன் காதல் மனையாள், வரவில்லையே என்று எண்ணினான். அவன் மனத்துக்கு இனிய மலர்களைக் கொய்து வண்ண மாலையாகத் தொடுத்து, அவள் தலையில் அணிந்து மகிழ ஆசைப்பட்டான். பூத்த செடிகளையும், கொடிகளையும் ஆவலோடு நோக்கி, பல வண்ண மலர்களைப் பறித்துக் கொண்டிருந்தான்.

அப்போது, அச் சோலையினுள்ளே வந்து சேர்ந்தாள் பூம்பாவை. தன் காதலன் கண்ணும் கருத்தும், பூச்செடிகளில் ஈடுபட்டிருக்கக் கண்டு களிப்புற்றாள். மெல்ல அடிமேல் அடி வைத்து நடந்து அவன் பின்னே சென்றாள். பூவிலே கவிந்திருந்த வேங்கையின் கண்களைப் பொத்தினாள்.

வீரன் மேனி சிலிர்த்தது. அவன் மனம் திகைத்தது. 'யார் அது?' என்று கேட்டான். உடனே பூம்பாவை தன் கைகளைப் பளிச் சென்று எடுத்தாள். வேங்கை திரும்பிப் பார்த்தான். கண் கலங்கி, கண்ணீர் வடித்து நின்ற காதலியைக் கண்டான்; திடுக்கிட்டான். "என் கண்ணினும் இனிய பாவாய்! நீதானா கண்ணைப் பொத்தினாய்? உனக்காகத் தானே இந்த நறு மலர்களை நான் பறித்தேன்? என் பூம்பாவையின் அழகைப் பூமாலையால் அழகு செய்து பார்க்க ஆசைப்பட்டேன். இதோ, இந்த மலர்களைப் பார்!" என்றான்.

பூம்பாவை, "போதும்! போதும்!! போலிக் காதல். கண்ட இடத்தில் 'என் கண்ணே!' என்பீர்; காணாத இடத்தில் கண்ட மாதர் மீது காதல் கொள்வீர். காலையில் இங்கு நீர் தவறாது வருகின்ற காரணத்தை இன்றுதான் அறிந்தேன். காதல் புரியும் மாதரைக் காண்பதற்காகவே, பொழுது புலரும் முன் இப் பூஞ்சோலைக்கு வருகின்றீர்; மலர் பறிக்கின்றீர்; அவர்களோடு மகிழ்ந்து விளையாடுகின்றீர். உம்மோடு கொஞ்சி விளையாடும் மாதர் எத்தனையோ? கண்ணைப் பொத்தி, விளையாடும் காதலியர் எத்தனையோ? பல மாதர் அப்படி விளையாடுவதுண்டு என்பதை உமது வாய்ச்சொல் வெளிப்படுத்திவிட்டதே!



பல காலைக் களவு ஒரு நாள் வெளிப்பட்டது. இனி இங்கே எனக்கென்ன வேலை?" என்று சொல்லிப் புறப்பட்டாள்.

வேங்கை, "ஐயோ! என்ன இப்படியெல்லாம் பேசுகிறாய்? உன்னையொழிய ஒரு பெண்ணையும் நானறியேனே. இதோ! எழுந்து வரும் கதிரவன் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். உன்னைக் கண்ட கண்களால் மற்றொரு பாவையை நான் கண்டதில்லை. உனக்காகவே இப்பூக்களைப் பறித்தேன். உன்னழகுக்கு அழகு செய்ய ஆசைப்பட்டேன்.

"பொன்னே, கொடியே, புன்னைபூங் கோதாய்
நாணின் பாவாய், நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி"

இம்மலர்களை ஏற்றுக் கொள். மாளிகைக்குச் செல்வோம்" என்றான்.

பூம்பாவை: "களவொழுக்கம் உடையவர்க்குக் கவிதையும் சரளமாய் வருமே! கதிரவன் மேல் ஆணை; கார்மேகத்தின்மேல் ஆணை; என்று ஆணை மேல் ஆணையாக அடுக்குவதெல்லாம் வஞ்சகர் வழக்கம். நெஞ்சறிய நீர் செய்த கள்வை உமது சொல்லே வெளிப்படுத்தி விட்டது. 'யார்?' என்று நீங்கள் கேட்ட கேள்வியே உம்மைக் காட்டிக் கொடுத்தது. காதல் புரியும் மாதர் பலர், உமது கண்ணைப் பொத்தி விளையாடும் பழக்கம் இருந்தாலன்றோ, 'அன்னவருள் யார் இப்பொழுது வந்தது?' என்று வினவினீர். உம்மோடு கண் பொத்தி விளையாடும் உரிமையுடைய மாதர் பலர் என்பதற்கு வேறென்ன சான்று வேண்டும்? உமது வாக்குமூலம் ஒன்றே போதும்" என்று கண்ணீர் சிந்திக் கொண்டு சோலையைவிட்டு வெளியே சென்றாள் பூம்பாவை. இக்காதற் பிணக்கத்தைப் பாடினார் ஒரு கவிஞர்.

"போர்என்ன வீங்கும் பொருப்பன்ன
பொலங்கொள் திண்தோள்
மாரன் அனையான் மலர்கொய்து
இருந்தானை வந்தோர்
காரன்ன கூந்தல் குயிலன்னவள்
கண் புதைப்ப
ஆர்என்ன லோடும் அனையென்ன
அயிர்த் துயிர்த்தாள்."


பிணக்குற்ற பூம்பாவையைப் பின் தொடர்ந்து சென்றான் வேங்கை.

அன்று அந்திமாலை. நந்தனூர் என்ற ஊரில், கம்பராமாயணச் சொற்பொழிவு நிகழ்த்தினார் ஒரு புலவர். ஊரார் பலர், அவர் பேச்சைக் கேட்டனர், இன்புற்றனர். அவர்களுள் ஒருவன் மணிவண்ணன். அன்று அவன் பெற்ற இன்பம், என்றுமே பெற்றதில்லை. தான் பெற்ற இன்பத்தைத் தன் காதல் மனையாளும் பெற வேண்டுமென்ற ஆசையால் வீட்டை நோக்கி விரைந்து சென்றான். இனிமொழி என்னும் தன் மனையாளைக் கண்டான். ஆனந்தமாகப் பேசத் தொடங்கினான்.

மணிவண்ணன்: இனிமொழி! இன்று மாலை நம் ஊர் மைதானத்தில், நிகழ்ந்த அருமையான தமிழ்ப் பேச்சை நீ கேட்கவில்லையே! கம்பர் பாட்டு ஒன்றை எடுத்துக் கொண்டு, ஒருமணி நேரம் அழகாகப் பேசினார் புலவர். விடுகதையும், விகடப்பேச்சும், இடையில் வரவே இல்லை. நயமாகச் சுவையாகப் பேசினார்.

இனிமொழி: ஒருமணி நேரம் பேசுவதற்கு ஒரு பாட்டில் என்ன இருக்கிறது? நானும் கம்ப ராமாயணத்தை அங்கு மிங்குமாகப் படித்திருக்கிறேன்.

மணிவண்ணன்: 'கற்றலிற் கேட்டலே நன்று' என்பது உண்மையல்லவா? புலவர்



STANDARD
Electric Crackers
Red Fort
அபாயமற்றது
உயர்தரமானது
"ஸ்டாண்டர்ட்" கம்பி மத்தாப்புகள்!
"ரெட்போர்ட்" பட்டாசு ரகங்கள்!
"தீபாவளி" மத்தாப்பு வகைகள்!
"மயில்" மார்க்கேப், மற்றும் பல நூதன ரகங்கள்!
தயாரிப்பாளர்
ஸ்டாண்டர்ட் பயர் ஒர்க்ஸ் இண்டஸ்ட்ரீஸ், சிவகாசி.
சேல்ஸ் டிப்போக்கள்:
14-B. ஆண்டர்ஸன் தெரு - - சென்னை-1
1.B. தாதா மான்ஸில், 67/69, முகம்மதலி ரோடு, பம்பாய்-3

கூறிய சொல் நயம், பொருள் நயங்களில், சிலவற்றைச் சொல்லுகிறேன் கேள்.

கிளிமொழி : நல்லது சொல்லுங்கள்.

மணிவண்ணன் : கதாநாயகனுகிய இராமர், மிதிலைமா நகரில், சீதையை மணம் செய்து கொண்டாரல்லவா? அந்த நன்னுளில், சீதைக்கு ஒரு வாக்குத் தந்தாராம் இராமர். அது வேறெவர்க்குந் தெரியாதாம். அந்த வாக்கைப் பெரியதோர் வரமாகப் போற்றினுளாம் சீதை. இச் செய்தியைக் கம்பர் எங்கே கூறுகிருர் தெரியுமா?

கிளிமொழி : நான் படித்த பாடல்களில் அது வரவில்லையே!

மணிவண்ணன் : அப்படியானுல் சொல்லுகிறேன், கேள். தனக்கும், தன் நாயகனுக்கும் மட்டும் தெரிந்த சில செய்திகளை அசோக வனத்தில் வைத்து அனுமனிடம் கூறுகின்ருள் சீதை.

கிளிமொழி: நாயகன் மறைவாகச் சொன்ன செய்திகளை, மற்றையோரிடம் சொல்லுவது முறையோ?



மணிவண்ணன் : பொதுவாகச் சொல்லுதல் கூடாதுதான். ஆனுல், சொல்ல வேண்டிய அவசியம் சீதைக்கு ஏற்பட்டது. தன்னை அனுமன் நேரில் கண்டவன்தான் என்பதை ஐயந் திரிபற, இராமன் அறிந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தை மனத்திற் கொண்டு பேசினுள் சீதை.

கிளிமொழி : அப்படியானுல் சரி தான். அனுமனிடம் என்ன செய்தி சொன்னுள்?

மணிவண்ணன் : அப்பா, அனுமனே! உன்னிடம் ஒரு செய்தி சொல்லுவேன். அதைத் தனியாக இருக்கும் வேளை பார்த்து, என் தலைவனிடம் நீ சொல்ல வேண்டும். அவர் மிதிலைமா நகருக்கு வந்தார். என்னைத் திருமணம் செய்து கொண்டார். அப்போது, எனக்கு ஒரு வரம் தந்தார். "இந்த இப்பிறவியில் உன்னையன்றி மற்ருெரு பெண்ணைச் சிந்தையாலும் தொடேன்" என்ருர். அவ் வரத்தை நம்பியே, ஏழையேன் இன்றளவும் உயிர்வாழ்ந்து இருக்கின்றேன் என்பதை அவர் திருச் செவியில் நீ உணர்த்த வேண்டும்" என்று வேண்டினுள் சீதை. இச் செய்தியடங்கிய பாட்டை எடுத்துக்கொண்டு அதன் நயங்களைப் புலவர் விளக்கிச் சொல்லும்போது எல்லோர் செவிகளிலும் இன்பத் தேன் வந்து பாய்ந்தது.

கிளிமொழி : அப்பாட்டையும் பயனையும் எனக்குச் சொல்லுங்கள், கேட்கிறேன்.

மணிவண்ணன் :—சீதை சொல்கிருள்,

"வந்து எனைக்கரம் பற்றிய வைகல்வாய்
'இந்த இப்பிறவிக்(கு) இரு மாதரைச்
சிந்தையாலும் தொடேன்' என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்"

என்று. பெண்களின் மனப்பான்மையை நன்ருக அறிந்தவராம் கம்பர். காதலர், தம்மை நாடி, வரவேண்டுமென்று ஆசைப் படுவது பெண்களின் இயல்பாம். அந்த முறையில் ஆசைப்பட்டாள் சீதையும். அவளிருந்த ஊரை, நாடி வந்தார் இராமர். மணம் புரிந்தார். அச்செய்கையை எண்ணிப் பெருமிதம் அடைகின்ருள் சீதை. 'வந்து' என்ற முதற்சொல் 'வலிய வந்து' என்ற குறிப்பை உணர்த்துகின்றதாம். அப்படி வலியவந்து திருமணம் செய்த நாளில், "இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்ற வரம் தந்தாராம். 'இந்தப் பிறவி' என்ருலே போதும்; 'இப் பிறவி' என்ருலும் போதும். ஆயினும் தன் மன உறுதியைச் சீதை தெள்ளத் தெளிய உணர்ந்து கொள்ள வேண்டுமென்று கருதி, 'இந்த இப்பிறவி' என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னுராம் இராமர். 'இந்த இப் பிறவி' என்பதற்கு இலக்கணமெல்லாம் எடுத்துரைத்தார் புலவர். கற்ருேர் மெச்சினர்; மற்ருேர் மெய்ம் மறந்திருந்தனர்.



அவர் சொல்லமுதத்தைப் பருகும்பொழுது, நான் உன்னை நினைந்தேன். நமக்குத் திருமணம் நிகழ்ந்த நாளில், இப்படி ஒரு வாக்கு உனக்குத் தராமற் போனேனே என்று வருந்தினேன்.

கிளிமொழி : என்ன வாக்குத் தராமற் போனீர்கள்?

மணிவண்ணன் : "இந்த இப் பிறவியில் உன்னையன்றி ஒரு பெண்ணை மனத்தாலும் கருதேன்" என்று கம்பரைக் கற்றிருந்தால் நானும் வாக்களித் திருப்பேன். ஆயினும், இப்போது ஒன்றும் தப்பி விடவில்லை. மணிவண்ணனாகிய இராமன், சீதைக்கு அன்று அளித்த வாக்கை, இன்று நான் உனக்கு மனமார அளிக்கின்றேன்.

கிளிமொழி : ஐயோ! நான் என்ன குற்றம் செய்தேன். உம்மையே தெய்வமாகக்கொண்டு வாழ்கின்றேனே இராமாயணம் கேட்டதனால், விபரீதம் விளைந்து விட்டதே.

மணிவண்ணன் : மாதே! நான் என்ன தவறு செய்தேன்? ஏன் இப்படிக் கண்ணீர் வடிக்கின்றாய்?

கிளிமொழி : இதனினும் என்ன கொடுமை செய்ய வேண்டும்? என்றென்றும் உம்மோடு வாழவேண்டும் என்ற என் ஆசாபாசத்தை அறுத்துவிட்டீரே! இப் பிறப்போடு, நமது பாசம்தீர்ந்துவிட்டதென்று உமது வாயால் சொல்லிவிட்டீரே! எழு பிறப்பும் தொடரும் காதலை ஒரு பிறப்போடு ஒழித்துவிட்டீரே! வரம்பறியாத என் அன்புக்கு, வரையறை செய்து விட்டீரே! இந்தப் பிறவிக்குப் பின்னால் எந்த மாதையும் விரும்பி மணப்பதற்கு, வழி தேடிக் கொண்டீரே!

இவ்வாறு கூறிவிட்டுக் கிளிமொழி எழுந்து போய் விட்டாள்.

இதற்கு நான் என்ன செய்வேன் என்ற கவலையுள் ஆழ்ந்தான் மணிவண்ணன்.

பொழுது விடிந்தது. இரு மனையிலும் பிணக்கம் தீர்ந்தபாடில்லை. அப்போது வீதியில் அரசன் முரசொலி கேட்டது. ஆண்களும், பெண்களும் வாசலில் வந்து நின்றனர். குயிலோன் என்னும் தூதுவன் அரசன் ஆணையை அறிவிப்பானாயினன் :

"நாட்டில் வாழும் நன்மக்களே! உங்கள் எல்லோர்க்கும் நமது மன்னர் ஒரு செய்தி அறிவிக்கின்றார் கேளுங்கள். அவர் ஆட்சி தொடங்குங் காலம் இது. பிணக்குற்றோர் எல்லாம் இனி இணக்கமுற்று வாழ்தல் வேண்டும். ஊடிய மக்கள் கூடியின்புற வேண்டும். இதுவே வசந்த மன்னன் — உருவிலானன் — மன்மதனின் கட்டளை" என்று முரசறைந்தான் குயிலோன்.

"ஊடினீரெல்லாம் உருவிலான் தன்ஆணை
கூடுமின் என்று குயில்சாற்ற"க் கேட்ட

அந்த நாட்டு மக்களெல்லாம் பிணக்கம் நீந்து இணக்க முற்றனர். ஊடினோரெல்லாம் கூடி மகிழ்ந்தனர். பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?


சர்வ தேசக் குழந்தைகள்
தீபாவளியை முன்னிட்டு நமது சித்திரக் காரர் குழந்தைச் சித்திரங்களாக வரைந்து தள்ளியிருக்கிறார்
ஐஸன்ஹோவர்
–அமெரிக்கக் குழந்தை எழுதியது
மாலங்கோவ் – ரஷ்யக்குழந்தை வரைந்தது





சித்திரக் கண் காட்சி
பிவான்
ஆட்லி
பிரிட்டிஷ் தொழிற்கட்சி
—ஆங்கிலேயக் குழந்தை
சியாங் கை ஷேக்—
சீனக்குழந்தை



இந்தியக்குழந்தைகளின் சித்திரங்கள்
விஜயலட்சுமி பண்டிட்
லண்டன்
சர்க்கரைமூட்டை
கித்வாய்
டெல்லி-பாம்பர் விமானம்
அமிர்த கௌர்
அஸ்திவாரக் கற்கள்


ராஜாஜி கார் ஓட்டுகிருர்!
அசோக மேத்தா
வினேபா பவே
ஆந்திரகேசரி
காங்கிரஸ்


SUNDAY
24
OCT
IFW



அடாடா! இவ்வளவு கூச்சலிலும் ரகளையிலும் இந்த மனுஷன் எப்படித்தான் தூங்குகிறானே!
ஓஹோ! இப்போது தெரிகிறது! ஐ. ஈ. டபிள்யூ. விசிறியின் கீழ் தூங்குகிறார்! அதனால்தான்.....
The INDIA ELECTRIC WORKS LTD
29, MOUNT ROAD, MADRAS. 2.
Makers of the Famous...
BEHALA...BHARAT...RANJIT & TARA FANS.






அன்னதான சிவன் அன்புப்பணிகள்









அன்னதான சிவன் சங்கத்தார் கும்பகோணம், அம்மாசத்திரம், திருபுவனம், நடுவக்கரை, சுவாமிமலை, திருவிடமருதூர் ஆகிய ஊர்களில் சிசு நல விடுதிகளும், மாதர் நலச் சங்கங்களும் நிறுவி மக்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள். அம்மா சத்திரத்தில் உள்ள அன்னதான சிவன் பாடசாலையில் 174 ஏழைச் சிறுவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. பல அனாதைக் குழந்தைகளுக்கு உணவும் உடையும் அளித்து வருவதுடன் கல்வியும் கைத்தொழிலும் கற்றுக் கொடுத்து வருகின்றனர். அன்னதான சிவன் சங்கத்தார் ஆற்றி வரும் அன்புப் பணிகளில் சிலவற்றை இந்தப் பக்கத்தில் உள்ள படங்களில் காணலாம்.

1. அம்மாசத்திரம் அன்னதான சிவன் மாணவர் இல்லத்தில் மாணவர்கள் காலைப் பிரார்த்தனை செய்கின்றனர். 2. மாணவர்கள் மூங்கில்தட்டி பின்னும் தொழில் பயிலுகின்றனர். 3. மாலையில் உற்சாகமாக விளையாடுகின்றனர். 4. பாய் பின்னும் கலையைக் கற்கின்றனர். 5. மாதர் நலச் சங்கத்தினர் நூல் நூற்கின்றனர். 6. சிறுவர்கள் ஊக்கு செய்யும் தொழிலைப் பயிலுகிறார்கள். 7. காலை வேளையில் மாணவர்கள் தேகப் பயிற்சி செய்கின்றனர். 8. மாதர்கள் முறம், சல்லடை முதலியவைகளை முடைகின்றனர்.





சித்ரா

கதைச் சுருக்கம்

மகாகவி ரவீந்திரநாத தாகூர் எழுதிய அற்புத காவியங்களில் 'சித்ரா' என்னும் நாடகம் மிக்க புகழ் பெற்றது.

மகா பாரதத்திலுள்ள ஒரு சின்னஞ்சிறு கதையை ரவீந்திரர் ஆழ்ந்த கருத்துக்களும் அற்புத கற்பனைகளும், நுட்பமான மனோபாவங்களும் கொண்ட ஓர் அழகிய சொல்லோவியமாகத் தீட்டியிருக்கிறார்.

மணிபுரி மன்னனான சித்ரவாகனனுக்கு, சித்ராங்கதை என்ற ஓரே பெண்தான் பிறந்தாள். அவளுக்கு வீர ஆண் மகனுக்கு வேண்டிய பயிற்சிகள் எல்லாம் அளித்தான். எனவே, ஆண் உடைதரித்து சித்ரா(ங்கதை) தான் ஒரு பெண் என்ற உணர்ச்சியை இழந்து திரிந்து வந்தாள்.

ஒரு நாள் அவள் ஆண் வேடத்தில் குதிரை மீது வனத்தில் சஞ்சரித்தபோது, தான் இரவும் பகலும் காண வேண்டும் என்று விழைந்த அர்ஜுனனை எதேச்சையாகச் சந்தித்துக் காதல் கொண்டாள். உடனே அவள் தன் ஆண் உடைகளைக் களைந்து எறிந்து விட்டு, பெண்ணுக்கேற்ற புடவையையும் ஆபரணங்களையும் அணிந்து அர்ஜுனனிடம் சென்றாள். அப்பொழுதும் அவள் உடலில் ஆண்மை பொங்கி நிற்கவே, அர்ஜுனன் மிகுந்த வெறுப்புக் கொண்டு அவள் காதலை நிராகரித்து அனுப்பினான். தான் பன்னிரண்டு ஆண்டுகள் கடும் பிரம்மச்சரிய விரதம் அனுஷ்டித்து வருவதாகவும் சொல்லிச் சித்ராவை அனுப்பினான்.

புண்ணுற்ற நெஞ்சுடன் சித்ரா திரும்பி வந்து மன்மதனைக் கருதித் தவம் இருந்தாள். தவம் பலித்தது. காதல் தேவனாகிய மன்மதனும் இளமைப் பருவத்துக்கு அதிதெய்வமாகிய வஸந்தனும் தோன்றி ஓராண்டு காலத்துக்குச் சித்ராவுக்கு இளமையும் எழிலும் நல்கினார்கள்.

ஆகா! இப்பொழுதைய சித்ரா என்ன அழகு! என்ன அழகு! இந்த அழகியைக் கண்டதும் அர்ஜுனன் நிலை குலைந்தான். சித்ராவைக் காதல் பிச்சை கேட்கவும் துணிந்து விட்டான்!

சித்ராவோ, அர்ஜுனனை எள்ளி நகையாடத் தொடங்கி விட்டாள். "பன்னிரண்டு ஆண்டுகள் பிரம்மச்சரியம் அனுஷ்டிக்கப் போவதாக அல்லவா கேள்விப்பட்டேன்! கடைசியில், இன்று இருந்து நாளை மறையும் மேனி அழகைக் கண்டா உங்கள் உறுதி தளர்கிறது!" என்று கேட்டு விட்டுப் போய் விட்டாள்.

ஆனால் அவள் உண்மையில் அர்ஜுனன் மீது கொண்ட காதலினால் மெய்யுருகி வந்தாள்! ஆகவே, சில தினங்களுக்கெல்லாம் திரும்பி வந்து அர்ஜுனனுடன் வனத்திலேயே இருந்து வந்தாள்.

இதற்குள் நகர்ப் புறங்களிலிருந்து குடிபடைகள் பயமும் பீதியும் கொண்டு ஓடிவந்தனர். அர்ஜுனன் அவர்கள் ஓடி வருவதன் காரணம் விசாரித்தான். தங்கள் நாட்டை ஆளும் வீராங்கனை சித்ராங்கதை தீர்த்தயாத்திரை சென்றிருக்கிறாள் என்றும், இதுதான் சமயம் என்று கொள்ளைக்காரர்கள் துன்புறுத்துகிறார்கள் என்றும் கூறிச் சென்றனர்.

இதைக் கேட்டதிலிருந்து அர்ஜுனனுக்கு வீராங்கனை சித்ராவைக் காண வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டு விடுகிறது. ஆம், அர்ஜுனனுக்குத் தன் ஆருயிர்க் காதலிதான் அந்த வீராங்கனை என்பது தெரியாதே!

ஆனால் சித்ரா, அர்ஜுனன் சதா வீராங்கனை சித்ராவின் நினைவில் மூழ்கியிருப்பதைப் பார்த்து விட்டு, வீராங்கனையின் வாழ்க்கை, நடை, உடை ஒன்றுமே ஆண்களுக்கு இனிக்காது என்று கூறி அவன் மனத்தைத் திருப்ப முயன்றாள். ஆனால் அர்ஜுனனோ அவளை மறக்காமல் அவள் நினைவாகவே இருந்து வந்தான்.

அப்போது சித்ராவுக்குப் பெரும் குழப்பம் நேர்ந்தது. தன் அழகிய உருவம் மாறி, பழைய வடிவுடன் காட்சியளித்தால் அர்ஜுனன் தன்னை ஏற்பானா என்று சந்தேகம் எழுந்தது. அத்துடன் மன்மதன் அளித்த வரம், ஓராண்டு காலம் முடியும் சமயமும் நெருங்கிற்று.

ஆகவே, தன்னைப் பற்றிய உண்மையை இனியும் மூடி வைப்பதற்கில்லையென்று அர்ஜுனனுக்குத் தெரிவித்து விடத் தீர்மானித்து விடுகிறாள். அப்படியே ஒரு நாள் அர்ஜுனனுக்கும் தெரிவிக்கிறாள். அர்ஜுனனும் சித்ராவைப் பற்றிய உண்மையை அறிந்து, தன் வாழ்வு நிறைவு பெற்ற பெரும் திருப்தியடைகிறான். உண்மையே என்றும் நிலையான இன்பத்தைப் பயப்பது அல்லவா!



சித்ரா: "ஒரு நாள் நான் வேட்டையாடுவதற்காகப் பூர்ணிமா நதிக்கரையிலுள்ள கானகத்துக்குச் சென்றேன். என் குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு நான் துரத்தி வந்த மானைப் பின் தொடர்ந்து சென்றேன். மரம், செடி, கொடிகள் புதராக மண்டிக் கிடந்த இடத்தில் ஒரு ஒற்றை யடிப்பாதை செல்வதைப் பார்த்தேன். அதில் நான் சென்று கொண்டிருந்தபோது சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு மனிதர் இலைச் சருகுகளை விரித்துப் போட்டு, என் வழியின் குறுக்கே படுத்திருந்தார். நான் கர்வத்தோடு அவரைப் பார்த்து எனக்கு வழியை விடச் சொன்னேன். அவர் என் வார்த்தையைப் பொருட் படுத்தவில்லை. படுத்தே இருந்தார். உடனே என் வில்லின் கூரிய நுனியினால் குத்தினேன்!...... அவர் என்னைப் பார்த்தார். அப்பொழுதுதான் முதல் தடவையாக, நான் ஒரு பெண் என்பதையும் என்முன் ஓர் ஆடவர் இருக்கிறார் என்பதையும் உணர்ந்தேன்... ...பிறகு அவரை 'நீர் யார்!' என்று கேட்டேன். 'நான்தான் அர்ஜுனன்' என்றார். நான் சிலையைப்போல் நின்றேன். அவருக்கு வணக்கம் செலுத்தவும் மறந்தேன். என் கனவில் கண்டு மகிழ்ந்த அதே அர்ஜுனனா என்று வியந்தேன்......மறுநாள் என் ஆண் உடைகளைக் களைந்து தூர வைத்துவிட்டுப் பாதச் சிலம்புகளையும், வளைகளையும், சிவப்புப் பட்டுப் புடவையும் அணிந்துகொண்டு அர்ஜுனன் தங்கி இருந்த சிவாலயத்திற்குச் சென்றேன்......"



ஆனால் சித்ராவின் மேனியில் ஆண்மையே மேலோங்கி நின்றது. எனவே அர்ஜுனன், தான் பிரம்மச்சரியம் விரதம் எடுத்திருப்பதாகக் கூறி அவள் காதலை நிராகரித்தான். தான் அழகாக இல்லை என்பதனாலன்றோ, பெண்களுக்கு இயல்பான மென்மையும் நளினமும் இல்லாததனாலன்றோ, தன்னை நிராகரித்தார் என்று மனம் புண்ணுற்றுச் சித்ரா அழகைப் பெறக் காதல் கடவுளாகிய மன்மதனை வேண்டித் தவம் இருந்தாள். மன்மதனும், அவன் தோழன் இளவேனிற் காலத்துக்கு அதிதெய்வமான வஸந்தனும் தோன்றினார்கள்.

சித்ரா : "மன்மதனே! வஸந்தனே! என் உடலில் ஏற்பட்டுள்ள அடிப்படையான அநியாயத்தைப் போக்குங்கள். என் கவர்ச்சியற்ற தன்மையைப் போக்குங்கள். ஒரே ஒரு நாளைக்கு, என் உள்ளத்தில் திடீர் என்று மலர்ந்த காதலைப்போல் என்னையும் அழகியாக்குங்கள். ஒரு நாளைக்கு மட்டும் இந்தப் பேர் எழிலைக் கொடுத்தால் போதும், அதற்குப் பின் வரும் நாட்களை நான் எப்படியேனும் சமாளித்துக் கொள்கிறேன்."

மன்மதன் : "பெண்ணே! நீ கேட்ட வரத்தை ஈந்தேன்!"

வஸந்தன் : "ஒரு நாளைக்கு அல்ல! ஓராண்டு காலம் வஸந்த காலத்தின் அழகும் கவர்ச்சியும் உன் உடலில் ஒவ்வொரு அங்கத்திலும் பின்னிப் பிணைந்திருக்கும். நீ ஒப்பற்ற பேரழகியாய் விளங்குவாய்."



அர்ஜுனன்: ''நான் அப்பொழுது கனவு கண்டேனா, அல்லது அந்த ஏரியின் அருகே கண்ட காட்சி உண்மையிலேயே நிகழ்ந்ததுதானா! நான் அந்தப் புல் தரையில், மாலை வேளையில் உட்கார்ந்து கடந்து போன நாட்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தேன். அப்போது இருள் மூடிய வனப் பிரதேசத்திலிருந்து அழகே உருவமான ஒரு பெண் தோன்றினாள். அவள் ஏரிக்கரை யோரமாக இருந்த ஒரு பாறையின்மீது ஏறி நின்றாள். அவள் பாத ஸ்பரிசம் பட்டதற்குப் பெரு மகிழ்ச்சி யடைந்து பூமியின் உள்ளம்கூடப் பொங்கிப் பொருமியது போல் தோன்றியது. அவள் கண்ணாடிபோல் மின்னிக் கொண்டிருந்த ஏரியின் தண்ணீரில் தன் முகத்தின் பிரதி பிம்பத்தைப் பார்த்தாள். அவளுக்கு ஒரே வியப்பாகப் போய் விட்டது. சற்று நேரம் அப்படியே அசையாமல் நின்றாள். பிறகு சிரித்துக் கொண்டாள். தன் பாதங்கள்வரை நீண்டுள்ள அழகிய கூந்தலை அவிழ்த்து விட்டுக் கொண்டாள். அடுத்த கணம் அவள் முகத்தினின்று அந்தப் புன்சிரிப்பு மறைந்தது. இனந் தெரியாத சோகம் அவள் கண்களில் எப்படியோ புகுந்து நிலைத்து விட்டது. அவள் தன் அழகிய கூந்தலை முடித்து, தாவணியைச் சரிப்படுத்திக் கொண்டு பெருமூச்சு விட்டவாறே, மோகனமான மாலை நேரம் இருளுக்குள் மறைவது போல் மெள்ள நடந்து மறைந்து விட்டாள். அந்தக் கணம், ஆசையின் பரிபூரண நிறைவு எப்படி யிருக்கும் என்று எனக்கு உணர்த்திவிட்டு மறைந்து விட்டாற் போன்ற பிரமை ஏற்பட்டது.''



ஆம், அர்ஜுனன் புது அழகு பெற்று விளங்கிய சித்ராவை, தான் முன்பு நிராகரித்த ஆண்மை மிகுந்த சித்ராதான் என்று அடையாளம் கண்டு கொள்ளவில்லை. யாரோ ஓர் பேரழகி என்றே அவளைப் பற்றி அர்ஜுனன் எண்ணிக் கொண்டிருந்தான்.

அர்ஜுனன் : "இது யார்! கதவைத் தள்ளிக் கொண்டு யாரோ வருகிறார்களே!...... ஆ!...... அவளே! ஆம் அவளேதான்! 'பெண்ணே, என்னைக் கண்டு பயப்படாதே! நான் ஒரு க்ஷத்திரியன்.' "

சித்ரா: 'மதிப்பிற்குரிய ஐயா, நீங்கள் என் விருந்தாளி. நான் இந்தக்கோயிலில் வசிப்பவள். நான் தங்களுக்கு எந்தவிதத்தில் அதிதி உபசாரம் செய்வது என்பதே புரியவில்லையே."

அர்ஜுனன் : "அழகியே! உன்னைப் பார்த்து மகிழும் வண்ணம் என் கண் எதிரில் வந்திருப்பதே பெரிய அதிதி உபசாரம் ஆயிற்றே!"

இப்படிப் பேச ஆரம்பித்து, தன் எதிரில் இருப்பவன்தான் அர்ஜுனன் என்று தெரியாதது போல், தான் வீர அர்ஜுனனிடம் தீராக் காதல் கொண்டிருப்பதாகக் கூறினாள். தானே அந்த வீர அர்ஜுனன் என்று பெரு மகிழ்ச்சியுடன் கூறிக் கொண்டான்.

சித்ரா : *வீரா! அப்படியானால் பன்னிரண்டு ஆண்டுகள் கடும் பிரம்மச்சரியம் அனுஷ்டிக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டார்களே, அது பொய்யா!*

அர்ஜுனன் : *இரவானது இருளில் மறைந்து இருக்கத்தான் விரும்புகிறது. ஆனால் பூரண சந்திரன் அதை விரட்டியடித்துவிடுவது இல்லையா! அதுபோல் என் பிரம்மச்சரிய பிரதிக்ஞையும் உன் சுந்தரவதனத்தைப் பார்த்த மாத்திரத்தில் மறைந்து விட்டது!*



அர்ஜுனனின் காதலை எள்ளி நகையாடி விட்டு வந்த சித்ரா கொடி வீட்டில் வந்து படுத்துக் கொண்டாள். அவள் அந்தரங்கத்தில் அர்ஜுனன்மீது கொண்டிருந்த காதல் மேலோங்கி நின்றது.

சித்ரா: "அவர் பகர்ந்த காதல் மொழிகளையெல்லாம் நினைவு கூர்ந்தேன்...என் நித்திரையில் தீபச் சுடரைப் போன்ற நீண்ட விரல்களால் தூங்கும் என் உடலைத் தீண்டுவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. நான் விழித்துக் கொண்டேன். தவசி அர்ஜுனன் என் எதிரில் நிற்பதைப் பார்த்தேன். அவர் இதழ்கள் 'அன்பே! என் ஆருயிரே!' என்று மெல்லக் கூறின. எனது சென்றுபோன பிறவிகள்கூட ஒன்று சேர்ந்து பதில் கூறுவன போல் 'என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்! என்னை முழுதும் எடுத்துக் கொள்ளுங்கள்!' என்று என் கைகளை நீட்டி விரித்தேன். சந்திரன் பரிபூரணமாக மரங்களிடையே மறைந்தான். இருள் என்னும் திரை எல்லாவற்றையும் மறைத்தது! இம்மையும் மறுமையும், காலமும் இடமும், இன்பமும் துன்பமும், வாழ்வும் மரணமும் யாவும் எல்லையற்றதோர் இன்பத்தின் காரணமாக ஒன்றாய்ப் பிணைந்தாற் போன்றதோர் பேர் இன்ப உணர்ச்சி ஏற்பட்டது...பொழுது விடிந்ததும் என்னைச் சுற்று முற்றும் பார்த்தேன். பழைய பூமியே இருக்கக் கண்டேன். நான் எப்படியெல்லாம் இருந்தேன் என்பதை நினைத்துக் கொண்டேன். மான் தன் நிழலைக் கண்டு மிரண்டு ஓடுவதுபோல் அந்தக் கானகத்தில் ஓடினேன். பிறகு தனியானதோர் இடத்துக்குச் சென்று இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு அழுதேன். சொட்டுக் கண்ணீர்கூட வரவில்லை."



இருடர்களுக்குப் பயந்து கானகத்துக்கு ஓடிவந்த கிராமவாசிகளைப் பார்த்து, "உங்கள் நாட்டைக் காப்பாற்ற யாரும் இல்லையா!" என்று கேட்டான் அர்ஜுனன்.

கிராமவாசிகள்: "இளவரசி சித்ரா என்றால் அயோக்கியர்களுக்கு ஓரே நடுக்கம். அவள் இந்த நாட்டிலிருந்த வரையில் இயற்கையாய் எய்தும் மரணத்தைத் தவிர வேறு எவ்வித பயமும் இருக்கவில்லை. இப்போது அவள் தீர்த்த யாத்திரை செய்யப் போயிருக்கிறாள். அவளை எங்கே கண்டு பிடிப்பது என்பது ஒருவருக்கும் தெரியவில்லை."

அர்ஜுனன்: "இந்த நாட்டைப் பாதுகாப்பவர் ஒரு பெண்ணா......!"

மக்கள்: "ஆமாம். அவளே எங்களுக்குத் தாயும் தந்தையும்."

இவ்விதம் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். இச் சமயம் சித்ரா அங்கே வந்தாள்.

சித்ரா: "ஏன் தனியாக உட்கார்ந்திருக்கிறீர்கள்!"

அர்ஜுனன்: "இளவரசி சித்ரா, எத்தகைய மங்கையாக இருப்பாள் என்று கற்பனை செய்து பார்க்கிறேன். அவளைப் பற்றிப் பல பேரிடமிருந்து பலவகைக் கதைகள் கேட்கிறேன்!"

சித்ரா: ஆ! அவள் அழகாக இருக்கமாட்டாள். எனக்கிருப்பது போன்ற அழகிய கண்கள் அவளுக்குக் கிடையா. அவள் விற்கணை எந்தக் குறியைப் பார்த்தும் துளைத்து விடும். ஆனால் அவள் விழிக்கணைக்குக் காதலனின் உள்ளத்தைத் துளைக்கும் சக்தி கிடையாது!



அழகி சித்ரா, அர்ஜுனன் மனத்தை வீராங்கனை சித்ராவின் நினைப்பிலிருந்து மாற்ற எவ்வளவோ முயன்றாள். பலிக்கவில்லை.

அர்ஜுனன்: "என் மனக் கண்முன் அவள் ஓர் வெண் புரவியின் மீது ஆரோகணித்து, கம்பீரமாகத் தனது இடது கையில் கடிவாளத்தையும் வலக் கையில் வில்லையும் பிடித்துக் கொண்டு வெற்றித் திருவைப் போல், தான் பார்க்கு மிடங்களில் எல்லாம் ஆனந்தத்தை அள்ளிச் சொரிந்து கொண்டுபோவது போன்ற காட்சியைக் காண்கின்றேன்."

சித்ரா: "அர்ஜுனா! ஏதோ ஒரு மாய மந்திர சக்தியினால் நான் இந்த மென்மையையும் அழகையும், இரவல் வாங்கிய துணியைப்போல் களைந்து எறிந்துவிட்டுக் காட்சியளித்தால் உங்களால் அப்போது என்னைப் பார்க்க முடியுமா!........"

அர்ஜுனன்: "என்னால் உன்னைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. தங்க விக்கிரகத்தில் மறைந்துள்ள தேவியைப் போல்தான் நீ எனக்குத் தோன்றுகிறாய். என்னால் உன் உள்ளத்தைத் தொட முடியவில்லை. நீ எனக்கு அளித்த விலை மதிக்க முடியாத பரிசுகளுக்கெல்லாம் தக்கபடி பிரதியுபகாரம் செய்யவும் முடியவில்லை. எனவே என் காதலும் நிறைவு பெறாமலே இருந்து வருகிறது!"




ஓராண்டு முடியும் கடைசி நாள். சித்ரா கைநிறைய மலர்களை ஏந்திக்கொண்டு அர்ஜுனன் இருக்கும் இடத்துக்கு வந்தாள். அர்ஜுனனைப் பார்த்து, "அன்பே, இது தான் என் கடைசி அன்பளிப்பு. சுவர்க்கத்திலிருந்து ஒப்பற்ற அழகுவாய்ந்த மலர்களைக் கொண்டு வந்து என் இதயத் தரசரைப் பூஜித்தேன். பூஜை முடிந்து, மலர்களும் வாடி விட்டால் கோவிலிலிருந்து வெளியே எறியவேண்டியதுதானே!" என்றுகூறி, அர்ஜுனனை வணங்கி விட்டு எழுந்தாள். அவள் அழகு மறைந்தது. வீராங்கனை சித்ரா ஆண் உடையிலிருந்தாள்.

சித்ரா: "இந்த மலர்களின் அழகு பெற்றுத் தங்களைப் பூஜித்த சித்ரா இப்போது இல்லை. முன்பு பெண் உடைகளையும் ஆபரணங்களையும் அணிந்து ஆணைப்போல் உங்களைக் காதலிக்க வந்தவளை நினைவிருக்கிறதா! அப்போது அவள் காதலை நிராகரித்தீர்கள். நல்ல காரியமே செய்தீர்கள். அந்தச் சித்ராதான் நான்......என் வயிற்றில் இப்போது தங்கள் சிசு வளர்கிறது. பிறக்கும் குழந்தை ஆணாகப் பிறந்தால் அவனை இரண்டாவது அர்ஜுனனாக வளர்த்துச் சமயம் வாய்க்கும்போது தங்களிடம் அனுப்புவேன். அப்போது சித்ராவைப் பற்றிய உண்மை அறிவீர்கள். இன்று ஓர் அரசனின் மகளாகிய சித்ராவைத்தான் தங்களுக்கு அளிக்க முடியும்."

அர்ஜுனன்: "ஆருயிரே! என்வாழ்வு நிறைவு பெற்றது!"

மலர் விழி



பகீரதன்

அன்று காலை. வயல் பக்கம் போனேன். காற்றிலே இலேசாக மிதந்து வந்த கீதம் என் காதில் வந்து விழுந்தது. அருமையான சங்கீதம். அதைக் கேட்டு என் நரம்புகள் புடைத்துத் துடித்தன. இனிமையான சங்கீதம் வந்த திசையை நோக்கி ஆவலோடு திரும்பிப் பார்த்தேன்.

வயல் வரப்பில் வளைந்து நின்ற பனைமரத்தில் இரண்டு பேர் உட்கார்ந்திருந்தனர். கூர்ந்து பார்த்தேன். இளம் தம்பதிகள் போல் தோன்றியது. அந்த வாலிபனை எங்கோ பார்த்ததுபோல் நினைவு வந்தது. யார் என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் பனை மரத்தை நெருங்கிச் சென்றேன்.

"ஆ, நல்லான், நீயா!" என்றேன். அவன் அருகில் தங்கப் பதுமை போல் நின்று கொண்டிருந்த நங்கையை அதிசயத்தோடு பார்த்தேன்.

உழைத்து உழைத்து உரம் ஏறிய நல்லானின் உடல் சூரிய வெளிச்சத்தில் மினு மினுத்தது. அவன் செம்பவள உதட்டில் தவழ்ந்து விளையாடிய புன் சிரிப்போ இளம் சூரியனைப் போல் இருந்தது.

"இவள் என் மனைவி, மலர்விழி. எனது உழைப்பைப் பாராட்டி அளிக்கப்பட்ட என் வாழ்க்கைத் துணைவி" என்றான். மலர்விழி நாணத்தால் தலையைக் குனிந்து பூமியைப் பார்த்து நின்றாள்.

அவளைப் பார்த்து நல்லான் புன்னகை புரிந்தான். ஒரு காலத்தில் மேடும் பள்ளமுமாய், காடும் கரம்புமாய் இருந்த பொட்டல் வெளி, ஒன்றுக்கும் உதவாது என்று ஊராரால் ஒதுக்கப்பட்ட இடம், இப்பொழுது நெல் விளையும் பூமியாக மாறி, பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் பசுமையான நெற் பயிர்களுடன் காட்சியளிக்கும் வயலைப் பார்த்தான். அதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சொன்னான்:

"அதை நினைத்தால் பயமாகத்தான் இருக்கிறது. மேடும் பள்ளமுமா யிருந்த பொட்டல் காட்டை வெட்டிச் சீர்திருத்தும்போது அந்த மேடுகள் சீக்கிரம் கரையவில்லை. முழு மூச்சுடன் எங்களை எதிர்த்துச் சீறியது. மண்ணை வெட்டும் போது பூமியில் ஏற்படும் பிளவைப் பார்த்தால் எங்களை அப்படியே விழுங்கி விடுவதற்கு வாயைப் பிளப்பது போலிருக்கும். அப்பொழுது உண்டாகும் புழுதியோ பூமித்தாய் மனிதர்களைப் பார்த்து 'ஹஹ்ஹஹ்ஹா!' என்று சிரித்து மூச்சு விடுவது போல் கோர உருவத்துடன் தோன்றும். அவைகளை எல்லாம் சமாளித்து, பூமியைத் தைரியத்துடன் வெட்டிச் சமன் செய்தோம். எலும்புகள் வலிக்கப் பாடுபட்டு உழைத்தோம். பாடுபட்டுக் களைத்து உட்காரும்போது மலர்விழி எனக்கும், அவள் தந்தை,—அவர்தான் என் மாமாவுக்கும் சாப்பாடு கொண்டு வருவாள். அடாடா! அவள் தலையில் சாப்பாட்டைச் சுமந்து கொண்டு மேட்டிலும் பள்ளத்திலும் நடந்து வருவதைப் பார்த்தால் என் களைப்பெல்லாம் காற்றோடு காற்றாய்ப் பறந்து விடும். என் இதயத்தில் எங்கிருந்தோ புதிய பலம் உண்டாகும். சாப்பாட்டைக் கொண்டு வந்து எங்களுக்கு எதிரில் வைத்து விட்டுத் தன் நீண்ட கண்களால் என்னைப் பார்ப்பாள் மலர்விழி. அந்த ஒரு பார்வைக்காகவே இந்த உலகில் உள்ள அத்தனைப் பொட்டல் காடுகளையும் சீர்திருத்தி வளம் கொழிக்கும் பூமியாக்கும் உற்சாகம் எனக்கு ஏற்படும். அப்போதெல்லாம் மலர் விழியைப் பார்த்து மாமா சொல்வார். 'மலர்விழி! இந்த மேட்டைத் திருத்தி வயலாக்கி யார் உழுது பயிரிடும் நிலமாக்குகிறானோ அவனுக்குத்தான் உன்னைக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறேன்' என்பார். என்னைப் பார்த்து இலேசாகச் சிரிப்பார். அந்த வார்த்தைகள் என் உழைப்புக்கு மேலும் ஊக்கம் கொடுத்தது. காடும் கரம்புமாகக் கிடந்த வெளியில் நாங்கள் சிறு துரும்பு போலக் காட்சி யளித்தோம். மரத்தை வெட்டினோம்; மேட்டை அழித்தோம்; பள்ளத்தைத் தூர்த்தோம். அந்தச் சமயங்களில் பூமியின் சோக முகத்தைப் பார்க்க முடியவில்லை."

நல்லான் தன் கைகளை ஒருமுறை நீட்டிப் பார்த்துக் கொண்டான். நீல நிறப் புடவை அணிந்து நின்று கொண்டிருந்த மலர்விழியைப் பார்த்தான். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

பிறகு பெருமையோடு பேசினான்: "'இந்த மாதிரி ஒரு சில மனிதர்கள் காட்டையும் மேட்டையும் திருத்தி நெல் விளையும் நிலமாக்க முடியாது. இதெல்லாம் வீண் வேலை' என்று சொன்னவர்களுக் கெல்லாம் என் மாமா பதில் சொல்லுவார். 'மனிதனால் ஆகாத காரியம் இல்லை. அவன் சோம்பலை மறந்து உழைக்க ஆரம்பித்து விட்டானானால் அவனை வெல்ல முடியாது. பூமிதேவி தன்னை நேசிக்கும் மனிதர்களை ஒருபோதும் புறக்கணிப்பதில்லை' என்பார். அவர் சொல்வதை

அந்தச் சமயத்தில் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. 'பைத்தியக்காரன்! வேலை யில்லாதவன்; வீணாகச் சிரமப் படுகிறான்' என்றெல்லாம் சொல்லிக் கேலி செய்தார்கள். ஆனால் அப்படிக் கேலி செய்தவர்களே போகப் போக அவர் சொல்லுவதுதான் உண்மை என்பதை உணர்ந்தார்கள்.

"பூமி தேவியின் இதயத் துடிப்புக்கு உதவி புரியும் வகையில் நிலத்தைச் சீர்படுத்தி உழுவதற்காகத்தான் மனிதன் படைக்கப்பட்டான்" என்று எதிரில் இருந்த நிலத்தைப் பார்த்துக் கொண்டே கணீரென்று சொன்னான் நல்லான்.

"இது நான் சொன்னதல்ல. என் மாமாதான் சொல்லுவார். அந்தத் தைரியத்தில் காட்டையும் மேட்டையும் திருத்தி அதன் நடுவில் ஒரு கிணற்றையும் தோண்டுவதற்குள் அவரோடு பாடுபட்ட பலர் இறந்தே போனார்கள். ஒரு சமயம் கிணறு வெட்டும்போது கிணற்றுக்கு அடியில் மண் சரிந்து விழுந்து ஒருவர் மடிந்து விட்டார். அந்த அதிர்ச்சியில் சிலர் சித்தப் பிரமைகூடப் பிடித்து அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள்.

"இதையெல்லாம் பார்த்த என் மாமா மனம் ஒடிந்து போனார். இருந்தாலும் தைரியமாக என்னையும் இன்னும் சில ஆட்களையும் வைத்துக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தி, கிணறு தோண்டும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டார்.

"கடைசியில் ஒருநாள் அவர் காலில் மண்வெட்டி பட்டுப் பெரிய புண் உண்டாகி விட்டது. மாமா வலுவுள்ளவர் தான். வலியைப் பொறுத்துக் கொண்டு ஒரு வாரம் படுக்கையில் கிடந்தார். அப்போது ஒரு நாள் சொன்னார். 'நல்லான்! என் காலம் முடிந்து விட்டது. மலர் விழியை மணந்து கொள்ளுபவன் அந்த நிலத்தைத் திருத்தி நெல் விளைவித்தவனாக இருக்க வேண்டும். உழைப்பு தான் செல்வம். அதை மறந்து விடாதே! பூமி தேவி மக்களை எப்போதும் காப்பாற்றுவாள்' என்றார். 'அப்படியே செய்கிறேன். மலர் விழியைத் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பவனையே மணம் செய்து கொள்ளும்படி செய்கிறேன்' என்று அவருக்கு வாக்குறுதி அளித்தேன்.

"பிறகு அவர் நீண்ட நாள் உயிருடன் இருக்கவில்லை. கரம்பு நிலம் கனி கொஞ்சும் நிலமாவதைக் காணாமல் மலர் விழியைத் தனியே விட்டு மறைந்து விட்டார்" என்றான்.

நல்லான் ஒருமுறை மலர் விழியையும், பசுமை நிறைந்த வயல்களையும் பார்த்தான். வைரம் பாய்ந்த தன்னுடைய கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு கம்பீரமாகப் பேசினான்:

"நாம் ஈடுபடும் காரியங்களில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் உழைக்க வேண்டும். கடவுள் யார் யார் எதை எதை விரும்புகிறார்களோ அதைத்தான் அளிப்பார். உழைப்பவனுக்கு அவன் உழைப்பில் வெற்றியைக் கொடுப்பார். சோம்பேறிக்கு நல்ல தூக்கத்தைக் கொடுப்பார் என்று மாமா அடிக்கடி சொல்லுவார். அது மந்திரம் போல் என் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. சில ஆட்களைத் துணைக்கு வைத்துக் கொண்டு நிலத்தைச் சமமாக்கினேன். கிணறு தோண்டுவதில் ஈடுபட்டேன். அதில் வெற்றி கண்டேன். தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தைப் பொருத்தினேன். தண்ணீரை நிலத்துக்குப் பாய்ச்சினேன். கரம்பாகக் கிடந்த நிலத்தை மேடும் பள்ளமுமான பூமியைப் பொன்விளையும் பூமியாக்கி விட்டேன். வெற்றி பெற்ற மகிழ்ச்சி என்னைப் பற்றிக் கொண்டது. பிசாசு மாதிரி உழைத்தேன். சோர்வை உணராமல் உழைத்தேன். உற்சாக மூட்டும் மொழிகள் இல்லாமலே உழைத்தேன். நிலம் பண்பட்டது. பண்படுத்திய நிலத்தில் முதன் முதலில் நெற்பயிர் நாற்றை நட்டேன். அப்படி நடும்போது என் உள்ளத்தில் உண்டான ஆனந்த உணர்ச்சியை என்னால் இப்பொழுது விவரிக்க வார்த்தைகளே இல்லை. நாற்று நட்ட நிலத்தில் ஒவ்வொரு இளம் பயிரையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தேன். வயலைச் சுற்றிச் சுற்றி வந்தேன். இரவில் அங்கேயே படுத்துக் கொண்டேன். நாட்கள், வாரங்கள் என்று மாதங்கள் உருண்டன. பச்சைப் பசேல் என்ற நெற்பயிர்கள் இளம் காற்றில் ஆடி அலைந்தன. அது என் இதயத்தில் இன்ப நடம் புரிவது போலிருந்தது. பயிர் முற்றி நெல் விளைந்தது. தங்க நிற நெற்கதிர்களைப் பார்க்கும் போது அதில் ஆனந்தக் கண்ணீர் வடித்து நின்ற என் மாமாவின் திருமுகத்தைக் கண்டேன். அவருக்குப்பின்னால் நின்று இந்த நிலத்தில் பாடுபட்ட பாட்டாளியின் முகங்களைக் கண்டேன். உழைப்பின் பெருமையை உணர்ந்தேன். கண்ணீர் வடித்தேன். வயலில் விளைந்திருந்த நெற்கதிரை வணங்கிப் பணிந்தேன். மாமாவின் ஆசையை நிறைவேற்றி விட்டதை உணர்ந்தேன். திடு திடென்று மலர் விழியிடம் ஓடினேன். 'மலர் விழி! மாமா சொல்லிச் சென்றதை நிறைவேற்றி விட்டேன். மேட்டையும் பள்ளத்தையும் திருத்தி நெல் விளையும் நிலமாக்கி விட்டேன். கண்ணைப் பறிக்கும் நெற்கதிர்கள் சாய்ந்து கிடப்பதை வந்து பார்' என்று கூறி மலர் விழியை அழைத்து வந்து வளம் கொழித்து நிற்கும் வயலைக் காண்பித்தேன். என்னை மணந்து கொள்ள அவளுடைய சம்மதத்தைப் பெற்றேன். இந்த வயல் வெளியிலேயே பூமி தேவி சாட்சியாக உழைப்புத் தந்த உத்தமப் பரிசாக மலர் விழியைக் கைப்பற்றி மணந்து கொண்டேன்.

"மணம் புரிந்து கொண்ட அன்று நானும் மலர் விழியும் மாமாவின் சமாதியிடம் சென்றோம். 'மாமா! உங்கள் வாக்கை நிறைவேற்றி விட்டேன்; மலர்விழியை என் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டேன். உழைப்பைப் பாராட்டித் தாங்கள் அளித்த பரிசாக எண்ணி மகிழ்கிறேன். எங்களை ஆசீர்வதியுங்கள்!' என்றேன். இருவரும் சமாதிக்கு எதிரில் நின்று கைகூப்பி வணங்கி விட்டுப் பசுமை நிறைந்த வயல் வெளிக்கு வந்தோம்.

"இப்போது எங்களுக்கு ஊரில் உள்ளோர் எல்லாம் மரியாதை செய்கின்றனர். உழைப்பின் பலன் நிலைத்து நிற்பதைக் கண்டு மகிழ்கின்றனர்" என்று சொல்லி விட்டு மகிழ்ச்சி நிறைந்த முகத்துடன் மலர்விழியைக் கூர்ந்து பார்த்தான்.

மலர்விழியின் சுருண்ட கேசம் அவன் கழுத்தைச் சுற்றித் தொங்கிக் கொண்டிருந்தது! வாழ்க்கைத் துணையாக மலர்விழியைப் பெறுவதற்கு எத்தனை மேட்டையும் பள்ளத்தையும் வேண்டுமானாலும் திருத்தி நிலமாக்கலாமே என்று எண்ணினேன்.

அந்தச் சமயத்தில் வயலைப் பார்த்த வண்ணம்,

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்!—வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்!"

என்று நல்லான் பாட ஆரம்பித்தான். அவன் பாட்டைக் கேட்டுத் தலையை ஆட்டி ஆமோதிப்பது போலப் பயிர்கள் இளம் காற்றில் அசைந்தாடின.

தக்ஷிண ரெயில்வே

குறைந்த கட்டணத்திற்கு
ஸ்தல யாத்திரை டிக்கெட்டுகள்

இரண்டாம் வகுப்பு, இண்டர் & மூன்றும் வகுப்புகளுக்குக்
கொடுக்கப்படுகின்றன

சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரங்கள், புண்ய ஸ்தலங்கள், தீர்த்தங்கள் அடங்கிய ஐந்து குறிப்பிட்ட யாத்திரை மார்க்கங்கள்

மார்க்கம்	மைல்கள்	கட்டணங்கள் 2-வது				கட்டணங்கள் இண்டர்				கட்டணங்கள் 3-வது			
1	4754	ரூ.	301	7	6	ரூ.	196	12	6	ரூ.	113	0	6
2	5573	ரூ.	354	2	6	ரூ.	231	1	6	ரூ.	132	13	6
3	1620	ரூ.	101	14	0	ரூ.	66	15	0	ரூ.	38	5	0
4	1767	ரூ.	109	10	0	ரூ.	72	15	6	ரூ.	41	12	0
5	2275	ரூ.	142	14	0	ரூ.	94	6	0	ரூ.	54	4	0


இவற்றைத் தவிர

பிரயாணிகளே அமைத்துக் கொள்ளும் மார்க்கங்களுக்கும்
ரெயில்வேயின் அங்கீகாரத்தின் பேரில்
சுற்றுப் பிரயாண டிக்கெட்டுகள் கொடுக்கப்படும்

டிக்கெட்டுகள் மூன்று மாத காலத்திற்குச் செல்லுபடியாகும்


முழு விவரங்களுக்கு

சீப் கமெர்ஷியல் சூபரின்டெண்டெண்டு, பார்க் டவுன், சென்னை-3
அல்லது பொதுஜன தொடர்பு அதிகாரி, 18-ஏ, மவுண்ட் ரோடு, சென்னை-2
அல்லது சமீபத்திலுள்ள ஜில்லா டிராபிக் அதிகாரிக்கு எழுதுங்கள்





டன்லப்பில்லோ கொடுங்கள்



ஆயுள் பூராவும்
உபயோகமுள்ள பரிசு

கீழே குறித்துள்ள புதிய பரிசுவகைகள் எந்த சந்தர்ப்பத்திலும் வழங்கக் கூடியவை; எப்பொழுதும் நன்கு விரும்பப்படுபவை. நய விலையுடையதாயினும் ஒவ்வொன்றுமே நிலைத்திருக்கக்கூடிய பரிசாகும். டன்லப்பில்லோ என்றால் நீடித்த சுகம் என்று பொருள்.

வட்டமான, திருப்பி வைக்கக் கூடிய பின்புற மெத்தை ரூ 12-8-0 (உரை இல்லாதது)

ஆபீஸ் நாற்காலி மெத்தை ரூ 7-12-0 (உரை இல்லாதது)



மடக்கக்கூடிய கார் மெத்தை ரூ 12-8-0 (உரை இல்லாதது)



தலையணைகள் ரூ 13-8-0 முதல்



பிரயாணத்திற்கான மெத்தை தலையணைசெட் ரூ 138-0-0

தவிர உள்ளூர் வரி

டன்லப்பில்லோ

லேடெக்ஸ் நுரையில் முதன்மையான பெயர்;

மிகச்சிறந்ததும் கூட.

ஒவ்வொரு நாளும் ஜனங்கள் 24,90,496

ப்ருக் பாண்ட் தேயிலை

பாக்கெட்டுகளை வாங்குகிறார்கள்

அதற்குச் சிறந்த காரணங்கள் உள்ளன...

முதல் காரணம் அதன் புத்தம்புதிய தன்மையே

ப்ருக் பாண்ட் தேயிலை அதிவேகமாக தோட்டத்திலிருந்து கடைகளுக்கு அனுப்பப்படுவதால் அது அவர்களுக்கு என்றும், எப்பொழுதும் புதிதாகக் கிடைக்கிறது.

மற்றொரு காரணம் அது பரிசுத்தமாக இருப்பதே

காற்றுப் புகாமல் நன்றாக பாக் செய்யப்படுவதால் ப்ருக் பாண்ட் தேயிலை மாசு மருவற்று, கலப்பற்று, களங்கமற்று, சுத்தமாகக் கிடைக்கிறது.



யோசித்து வாங்குங்கள்!
செலவைக் குறையுங்கள்!

ஞாபகமிருக்கட்டும். ப்ருக் பாண்ட் தேயிலையே உங்களுடைய பணத்திற்கு அதிகப்படியான, ருசியான தேநீரை அளிக்கிறது.





கதையும் காதலும்

லெப்டினன்ட் கவர்னர் க. சந்தானம்

சென்னை ஸென்ட்ரல் ஸ்டேஷனில் டில்லி எக்ஸ்பிரஸ் புறப்படும் பொழுது நீல மேகன் 'மாலினிகி ஜே' என்று கத்திச் சிரித்தான்.

மாலினியின் தந்தை ராஜாராமனும், தாய் பார்வதியும் அதைக் கேட்டுச் சிரித்தனர்.

மாலினிக்கோ ஒருபுறம் வெட்கம், ஒருபுறம் வெறுப்பு ; ஆனால் அவள் மனத்தின் மூலையில் ஒரு புது வித உணர்ச்சி தோன்றியது.

வண்டி நகர்ந்தது. மூவரும் நான்கு படுக்கையுள்ள இரண்டாவது வகுப்புப் பெட்டியில் இருந்தனர். நான்காவது நபர் யாரும் இல்லாததால் தனி அறை அவர்களுக்குக் கிடைத்தது.

"குறும்புப் பயல்" என்றார் ராஜாராமன்.

"நீங்கள் செய்வதைப் பார்த்து யார்தான் சிரிக்க மாட்டார்கள்!" என்றாள் மூறுவலுடன் மனைவி.

"நானும் எவ்வளவோ கதைகள் படித்திருக்கிறேன்" என்று மாலினி பேசத் தொடங்கவே அவள் அன்னை குறுக்கிட்டாள்.

" எனக்குத் தெரியாதா ! ஐந்து வருஷமாக ஒரு இதழ் விடாமல் எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளையும் படித்து வருகிறாயே !" என்றாள் பார்வதி.

மாலினி அதைக் கவனிக்காமல் மேலேசொல்லிக் கொண்டு போனாள். "ஆனாலும், இவ்வித மானக் கேடான செயலைப் பற்றி நான் படித்ததில்லை. நமக்குச் சுயமரியாதை என்பதே கிடையாதா !" என்று ஆவேசத்துடன் வினவினாள்.

" அது என்னமோ உண்மைதான். எனக்கும் இது சிறிது கூடப் பிடிக்கவில்லை. ஆனால் உன் அப்பா சங்கதிதான் தெரியுமே" என்றாள் தாயார்.

ராஜாராமன் மெதுவாக நகைத்து, " மாடு வீட்டில் விலையாகா விட்டால், சந்தைக்குக் கொண்டு போக வேண்டியதுதானே " என்றார்.

" பார் அம்மா, நான் விலை போக வேண்டிய மாடாம். சந்தைக்குக் கொண்டு போனாலும் பரவாயில்லை. இன்னொருவர் வீட்டுக்கு அழைத்துப் போய்க் காட்டுவது கண்ணியமா !" என்று கண்ணீர் கலங்கினாள் மாலினி.

அதைக் கண்டு தந்தை சிரித்தாரே யொழிய சிறிதும் வருந்தவில்லை.

" இதென்ன பெரிய காரியம் ! அசடே, உன் கதைகளில் எங்கேயாவது அந்தப் பெரியவர் எனக்கு எழுதிய கடிதத்தைப் போல் படித்திருக்கிறாயா ! மறுபடியும் படிக்கிறேன் கேள் :

'ராஜாராமனுக்கு ஆசீர்வாதம்.

உன் குலம் கோத்திரங்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். பழைய நாட்களாக இருந்தால், கடித மூலமாகவே காரியத்தை முடித்திருக்கலாம். ஆனால் இக்காலத்தில் பெண், பிள்ளைகள் பார்த்துக் கொள்ளுவது வழக்கமென்பது உனக்குத் தெரியும். என் வீட்டுக்காரியும் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்கிறாள். எங்களுக்கோ, இப்பொழுது எங்கும் செல்லச் சௌகரியமில்லை. நீயாவது பெண்ணை அழைத்து வந்து போக முடியுமாவென்று எழுத விரும்பினேன். அதனால் ஒருவேளை நமக்குள் மனஸ்தாபமுண்டாகுமோவென்று இதுவரை எழுதவில்லை.

நாகபுரி
15-5-'54
வேங்கடராமன்'

இந்தக் கடிதத்தைப் பார்த்த பின் நாம் என்ன தான்செய்வது!" என்று முடித்தார் ராஜாராமன்.

"கடிதத்தைக் கிழித்து விட்டு வேறு பிள்ளை பார்க்கக் கூடாதோ!" என்றாள் தர்மபத்தினி.

"அப்பா என்னை எங்கேயாவது தள்ளிவிட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறார்" என்றாள் மாலினி.

"ஆனால் இந்தப் பிள்ளைக்கு என்ன குறை! அப்பாவுக்கு ஐந்நூறு ரூபாய் பென்ஷன் வருகிறது. இவனுக்கும் கல்லூரியில் மூந்நூறு ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. குடும்பச் சிக்கல் அதிகமில்லை. தவிர, பிள்ளையின் தாயார் மிகவும் நல்லவள். இந்த வரன் முடிந்தால் உனக்கு அதிர்ஷ்டம் தான்" என்றார் ராஜாராமன் உற்சாகத்துடன்.

2

ரயில் நாகபுரி ஸ்டேஷனுக்கு காலை 11 மணிக்குப் போய்ச் சேர்ந்தது. அவர்கள் இறங்கும் பொழுது ஒரு வாலிபன் வந்து "நீங்கள் வேணுகோபாலன் வீட்டுக்குப் போகிறீர்களா!" என்று கேட்டான். ராஜாராமன் 'ஆம்' என்றார். உடனே அவ்வாலிபன் ஒரு ஆளைக் கூப்பிட்டுச் சாமான்களை எடுத்து வரச் சொல்லி, அவர்களை ஒரு டாங்கா வண்டியில் ஏறிக் கொள்ளும்படி சொன்னான். வண்டிக்காரனிடம் வீட்டின் விலாசத்தைக் கூறினான். 'சாமான் தூக்கி வந்த ஆளுக்குப் பன்னிரண்டணாவும், வண்டிக்காரனுக்கு இரண்டு ரூபாயும் கொடுங்கள்' என்று சொல்லி விட்டு வேகமாகச் சென்று விட்டான். அவனோடு ஒரு வார்த்தை பேசக்கூடச் சாவகாசமில்லை.

"மாப்பிள்ளை அதிகக் கணக்குப் பேர்வழி போலிருக்கிறது" என்றார் ராஜாராமன்.

"இதற்குள்ளேயே கல்யாணம் நிச்சயம் செய்து விட்டீர்களா!" என்றாள் பார்வதி.

"ஒரு வாடகை மோட்டாராவது வைக்கக் கூடாதா! இக்காலத்தில் இப்படித்தான் ஒரு வீட்டுக்குப் போவார்களோ!" என்றாள் மாலினி.


"அந்தப் பையன் நமக்கு ஏதாவது அவகாசம் கொடுத்தால்தானே! ஒருவேளை இந்த ஊரில் வாடகை மோட்டார் அதிகமிராது" என்று தந்தை ஆறுதல் கூறினார்.

வண்டி மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. வழியில் யாரோ ஒருவன் குடை பிடித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தான். அவன் பின் பக்கத்தைத்தான் பார்க்க முடிந்தது. ஆனால் அவன் நடை தனி விதமாக விருந்தது. ஒவ்வொரு அடி வைக்கும் பொழுதும் கால் வளைவதுபோல் தோன்றியது. மாலினி இதைப் பார்வதியிடம் காண்பித்துப் புன்னகை செய்தாள். 'என்ன கோரம்' என்று தாயும் முகத்தைச் சுளித்தாள்.

வண்டி வீடு சேர்ந்ததும் வேங்கடராமனும், அவர் மனைவி சாரதாம்பாளும் வாசலில் வந்து வரவேற்றனர். இருவரும் கிழவர்களாகையால், ராஜாராம், பார்வதி, மாலினி மூவரும் அவர்களுக்கு நமஸ்காரம் செய்தனர்.

பிறகு எல்லோரும் போய் ஒரு பெரிய அறையில் உட்கார்ந்தார்கள்.

சாரதாம்பாள் சாமர்த்தியமாக மாலினியைத் தன் பக்கம் அழைத்து ஒரு சோபாவில் தன்



னுடன் உட்கார வைத்தாள். பார்வதி சிறிது தூரத்தில் இருந்த ஒரு நாற்காலியில் உட்காரவேண்டி யிருந்தது. ராஜாராமன் வேங்கடராமனுக்கு அருகில் உட்கார்ந்தார்.

சாரதாம்பாள் மாலினியைத் தலையிலிருந்து கால் வரையில் உற்றுப் பார்த்தாள். வெட்கத்தால் மாலினி நேரில் அவளைப் பார்க்கவில்லை. கடைக் கண்ணால் மட்டும் அவளைக் கவனித்தாள்.

சிறிது நேரம் மௌனமாக ஏறிட்டுப் பார்த்து விட்டு, "உனக்கு என்ன வயது?" என்று சாரதாம்பாள் கேட்டாள்.

"இருபது" என்றாள் மாலினி.

சற்று உரத்த குரலில் சாரதாம்பாள், "நான் பதினாறு, பதினேழுதான் இருக்குமென்று நினைத்தேன். இதுவரையில் என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று வினவினாள்.

மாலினி நாணத்தால் ஒன்றும் பதில் கூறவில்லை.

இதற்குள், தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே பார்வதி, "இண்டர்மீடியட் படித்து முடித்தாள். மூன்று வருஷமாக அவளுக்கு வரன் தேடிக் கொண்டிருக்கிறோம்" என்று உரக்கச் சொன்னாள்.



"அப்படியா! வீணில் வீட்டில் வைத்துக் கொண்டிராமல், பி. ஏ. படிக்க வைத்திருக்கலாமே! இங்கே பி. ஏ. படிக்காத பெண்ணே இல்லை" என்றாள் சாரதாம்பாள்.

பார்வதிக்காக உரத்த குரலில் அவள் பேசியதால், இது புருஷர்களின் காதிலும் விழுந்தது.

"நானும் மாலினியை பி. ஏ. படிக்க வைத்திருப்பேன். ஆனால் இக்காலத்துப் பையன்களுக்கு பி. ஏ. பாஸ் செய்த பெண்களிடம் ஒரே பயம். அவர்கள் பெற்றோருக்கும் பி. ஏ. படித்த பெண்களைப் பிடிப்பதில்லை" என்றார் ராஜாராமன்.

"நீ சொல்வது சரிதான், அப்பா. வேணுவும் அப்படித்தான்" என்றார் வேங்கடராமன்.

"குமாரர் எங்கேயாவது போயிருக்கிறாரோ?" என்று ராஜாராமன் கேட்டார்.

"நீங்கள் வருவதற்குச் சற்றுமுன்தான் வெளியே போனான். ஒருவேளை நீங்கள் வழியில் பார்த்திருக்கலாம். குடை பிடித்துக் கொண்டு, கால் நடையாகத்தான் போனான். ஒரு மணிக்கு வருவதாகச் சொன்னான்" என்றாள் சாரதாம்பாள்.

இதைக் கேட்டுத் திகைப்புடன் மாலினியும் அவள் தாயும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். அவர்கள் கண்கள் தெளிவாகப் பேசிக்கொண்டன.

"கோமாளி நடைப் பேர்வழி இந்தப் பையன்தான்" என்று இருவரும் முடிவு செய்தனர்.

"உன் பெண்ணுக்குப் பாட வருமோ?" என்று கேட்டாள் சாரதாம்பாள்.

"வீணையும், கொஞ்சம் வாய்ப்பாட்டும் வரும். ரேடியோவில்கூடப் பாடி யிருக்கிறாள்" என்றாள்.

"அப்படியானால் அடுத்த வீட்டிலிருந்து வீணை வாங்கி வா. மாலை நாலுமணிக்குப்பாடட்டும். இப்பொழுது களைப்பாக இருப்பார்கள். வேணுவுக்காகக் காத்திருக்க வேண்டாம். ராஜாராமன், வாருங்கள், நாம் சாப்பிடலாம். அவர்களும் சமையல் கட்டில் சாப்பிடட்டும்" என்று எழுந்தார் வேங்கடராமன்.

நான்கு மணிக்கு எல்லோரும் கூடினர். வேணு கோபாலனும் இருந்தான். அவன் மாலினியை விட ஓர் அங்குலம் குட்டை, சிறிது இரட்டை நாடி சரீரம், நல்ல சிவப்பு நிறம். ஆனால் முகம் ஒரு மாதிரியாக இருந்தது. அதற்குக் காரணம் மந்த புத்தியா, அல்லது குழந்தைபோல் சாத்வீக குணமா என்று சொல்ல முடியவில்லை.

மாலினி பாடத் தொடங்கினாள். மிகவும் நன்றாகப் பாடினாள். அவள் அழகும் கவர்ச்சியு முள்ளவள். எனவே வேணு அவளையே பார்த்துக்கொண்டிருந்ததைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த ராஜாராமன் மெதுவாக வேணுவின் வேலை, சம்பளம் முதலிய விவரங்களைப் பற்றிக் கேட்க ஆரம்பித்தார். ஆனால் வேணு இதெல்லாம் காதில் படாதது போல் பாட்டிலேயே லயித்திருந்தான்.

பாட்டு முடிந்ததும் வேணு எழுந்தான். தன் தந்தையிடம், "நான் என் சிநேகிதர்களோடு ஐம்பது மைல் தூரத்திலுள்ள ஓரிடம் போக வேண்டியிருக்கிறது. நானே இரவுதான் வருவேன்" என்று சொல்லிவிட்டு, ராஜாராமனைப் பார்த்து, "மன்னிக்க வேண்டும், எல்லா விவரங்களையும் அப்பாவிட மிருந்து தெரிந்து கொள்ளுங்கள்" என்று கூறினான்.

பிறகு பார்வதிக்கும் மாலினிக்கும் நமஸ்காரம் செய்து விட்டு வெளியே போய் விட்டான்.

ராஜாராமனின் குடும்பத்தினரின் முகம் வாடியது. இப்படித் தங்களைச் சென்னையிலிருந்து வரவழைத்து விட்டு வேணு போனது வேண்டுமென்று அவமானம் செய்வது போல இருந்தது. அவர்களின் மனத்தை அறிந்த வேங்கடராமன், "தப்பெண்ணம் வேண்டாம், ராஜாராமன்! வேணுவின் சுபாவம் அதுதான். அவனுக்கு உலக விவகாரமே கொஞ்சமும் தெரியாது. ஆனால், தங்கமான பிள்ளை" என்றார்.

மூவரும் மௌனமாகத் தம் அறை போய்ச் சேர்ந்தனர். கதவை மூடும் வரையில் கூடப் பார்வதிக்குப் பொறுக்க முடியவில்லை. நல்ல பாம்பு போலக் கணவன் பேரில் சீறி விழுந்தாள்.

"உங்கள் புத்திக்குத் தங்கப் பதக்கம் போட வேண்டும். மானத்தை விட்டு வந்ததற்குச் சரியான தண்டனை. இப்பேர்ப்பட்ட வரனைப் பார்க்கப் பெண்ணையும் அழைத்து வந்தீர்களே. கோணல் நடை, குட்டை, பருமன், எல்லா அவலட்சணங்களும் பொருந்தியிருக்கின்றன."

"கோபத்தினால் ஏன் அம்மா வீணுகப் பிறரைக் குறை கூற வேண்டும்!" என்றாள் மாலினி.

"ஓகோ, உனக்குப் பிடித்து விட்டது போலிருக்கிறது. சுயம்வரம் பலித்து விட்டது என்று எண்ணுகிறேன். பின்னே பாம்பைக் கண்ட தவளை போல் மயங்கிக்கிடந்தாளே" என்று பார்வதி ஆத்திரத்துடன் கூறிவிட்டு மூலையில் உட்கார்ந்தாள்.

ராஜாராமன் முகத்தில் அசடு தட்டியது.

இரண்டு நாட்களுக்குப் பின் ராஜாராமன் குடும்பத்துடன் பம்பாய் எக்ஸ்பிரஸில் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன் சேர்ந்ததும் நீலமேகன் காத்துக் கொண்டிருந்தான். வண்டி நிற்பதற்கு முன்னதாகவே, அவன் ஒரு கடிதத்தை மாலினியிடம் கொடுத்து, "இது நாகபுரியிலிருந்து வந்திருக்கிறது. கண்டதும் காதலா!" என்று அவன் காதில் ரகஸ்யமாகக் கூறினான்.

"கடிதத்தைப் பிரித்துப் பார்!" என்றான்.

"எல்லாம் வீட்டுக்குப் போய்ப் பார்த்துக்கொள்ளலாம்" என்று அடக்கி விட்டார் ராஜாராமன்.

வீடு போய்ச் சேர்ந்ததும் மாலினி அவசரமாக மாடியில் தனது அறைக்குள் போய்த் தாளிட்டுக்கொண்டு கடிதத்தைப் பிரித்தாள்.

'குமாரி மாலினிக்கு,

எனக்குச் சம்மதம். என் பெற்றோருக்கும் சம்மதம். உனக்குச் சம்மதமாவென்று உன் கையெழுத்தில் எனக்கு ஒரு வாரத்துக்குள் தெரிவிக்க வேண்டும். அதன் பிறகு என் தந்தை உன் பிதாவுக்கு எழுதுவார்.

என்னை மணப்பதானால் உனது கடமைகளும் உரிமைகளும் என்ன வென்பதைச் சொல்லி விடுகிறேன். அவை பின்வருமாறு :

கடமைகள் : (1) சமையல் முதல் வண்ணான் கணக்கு முடிய எல்லா வீட்டுவேலைகளையும் சோம்பலின்றிச் செய்ய வேண்டும். (2) கொடுக்கும் பணத்தில் குடும்பம் நடத்த வேண்டும். (3) என் படிப்பில் தலையிடக் கூடாது.

உரிமைகள் : (1) நான் சம்பாதிப்பதில் முக்கால் பங்குத் தொகை குடும்பச் செலவுக்குக் கொடுக்கப்படும். (2) ஓய்வு நேரத்தை நீ இஷ்டப்படி செலவழிக்கலாம். (3) கணக்குக் கேட்கப்பட மாட்டாது. (4) மிகவும் மோசமாக இருந்தாலொழிய, சமையலைப் பற்றி எவ்விதக் குறையும் கூறப்பட மாட்டாது.

காதல் மனக் கோட்டைகளுக்கும், கற்பனைக் குதூகலங்களுக்கும், ஜொலிக்கும் நக்ஷத்திர வாழ்வுக்கும் இங்கு இடமிராது என்பதை நன்குணர்ந்து நிச்சயித்து எழுத வேண்டும்.

வேணுகோபாலன்'

கடிதத்தை இரண்டு தடவை மாலினி படித்தாள். குழப்பமும் திகைப்பும் அவள் முகத்தில் காணப்பட்டன; சிறிய முறுவலும் பூத்தது.

சிறிது நேரம் ஒன்றும் புரியாமல் இருந்து பிறகு கதவைத் திறந்து கீழே தன் பெற்றோர்களும் தம்பியும் இருக்குமிடம் சென்றாள்.

ராஜாராமன் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவர் கடிதத்தைப் படிக்க ஆரம்பிக்கையில் பார்வதியும், நீலமேகனும் இரண்டு பக்கங்களில் நின்று படிக்க முயன்றனர். முதல் வரியைக் கண்டு பார்வதி, "கண்டதுங் காதல் இல்லையடா, கண்டதும் கல்யாணம்" என்றாள்.

"சத்தம் போடாதிர்கள்" என்று கூறி விட்டு ராஜாராமன் உரக்கப் படித்து முடித்தார்.

முடிவில், "நீ என்ன பதில் எழுதப் போகிறாய்!" என்று வினவினாள் பார்வதி.

மாலினி பேசவில்லை. "புதுமைப் பெண்ணைப் பற்றிப் பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். இது புதுமைப் பிள்ளையாக அல்லவா இருக்கிறது, அக்கா!" என்றான் நீலமேகன்.

"மாலினி இஷ்டப்படி பதில் எழுதட்டும். பிறகு நமக்குச் சொன்னால் போதும்!" என்றார் ராஜாராமன்.

"இவள் சம்மதித்துக் கிழவரும் கிழவியும் அதிகச் சீர் கேட்டால் என்ன செய்வது!" என்று ஒரு புதிய பிரச்னையைக் கிளப்பினாள் பார்வதி.

"அப்படி யொன்றும் கேட்க மாட்டார்கள்! கேட்டால் பார்த்துக் கொள்ளலாம்!" என்று முடித்து விட்டார் ராஜாராமன்.

அன்று மாலை மாலினிக்கும் அவள் தந்தைக்கும் இதைப் பற்றி வெகு நேரம் ஆலோசனை நடந்தது. அதன் முடிவாக "உங்கள் கடிதத்தைப் பார்த்தேன். எனக்குச் சம்மதம்" என்று மாலினி பதில் எழுதி அன்றையத் தபாலில் அனுப்பினாள்.

4

இதற்குப் பிறகு சம்பவங்கள் சீக்கிரமாக நடந்தன. பார்வதி எதிர்பார்த்ததற்கு நேர் விரோதமாக வேங்கடராமன் தங்களுக்குப் பணமாகவோ, சாமான்களாகவோ எவ்விதச் சீரும் வேண்டாமென்றும், விவாகத்தை விரைவில் திருப்பதியில் அதிகச் செலவின்றி நடத்த வேண்டுமென்றும் எழுதினார். அப்படியே இரண்டு வாரத்தில் எல்லாம் எவ்வித இடைஞ்சலுமில்லாமல் முடிந்து விட்டது. மணம் முடிந்த மறுநாளே மாலினியை அழைத்துக் கொண்டு வேணு நாகபுரி



மனைவி:—இனி உங்களுக்கென்று ஏதாவது வேண்டுமானால் நீங்களே கடைக்குப்போய் வாங்கிக் கொள்ளலாம்!



நீங்கள் இன்று
புரோடெக்ஸ்
உபயோகித்தீர்களா?
நீங்கள் நாள் முழுதும் புதுமையுடனும்
வாசனையுடனும் இருக்க, உயர்ந்த,
புதிய புரோடெக்ஸ் ஆல்-பர்பஸ் டாய்லட்
பவுடர். மென்மையும், நறுமணமும்
சேர்ந்த புரோடெக்ஸ் குடும்ப முழுதுக்குப்
வெப்பத்தில் குளுமையும்
இனிமையும் தருகிறது.
ஸ்நானத்துக்குப் பின்
வாசனைப் பூஷணம். ஈரத்தை
உறிஞ்சி புதுமை தருகிறது.
குளுமை! குதூகலம்!
கோடையின் கொடுமையில்
நேர்த்தியும் மென்மை!
யும்-குழந்தைக்கு ஏற்றது.
மிக எடுப்பானது
உங்கள் வதனத்தை அழகு
படுத்தும் பவுடர்.
புரோடெக்ஸ்
ஆல் பர்பஸ்
டாய்லட் பவுடர்
புதிது!!
PROTEX
All-Purpose
TOILET POWDER
கால்கேட்டின் புதிய
சிறந்த தயாரிப்பு

புறப்பட்டான். அவன் பெற்றோர்கள் திருநெல்வேலியில் தங்கள் கிராமத்துக்குச் சென்றனர்.

அவர்கள் இருந்த கம்பார்ட் மெண்டில் நான்கு அயலார் இருந்ததால் ஊர் சேரும் வரையில் வேணுவும் மாலினியும் ஒரு வார்த்தை கூடப் பேசிக்கொள்ளவில்லை. அந்தந்தச் சமயத்தில் மௌனமாக அவள் கணவனுக்குச் சாப்பாடு கொடுப்பதையும், இரவில் படுக்கை விரிப்பதையும் கண்டு கூட இருந்தவர்களுக்கு வேடிக்கையாக யிருந்தது. ஆனால் சிரித்தோ வேறு விதமாகவோ அதை வெளிக் காட்டவில்லை.

நாகபுரி ஸ்டேஷனில் வேணுவின் நண்பர்கள் சிலர் வந்திருந்தனர். மாலினியைக் கண்டு அவர்கள் வேணுவின் சாமர்த்தியத்தை வியந்தனர். ஒருவன் வேணுவைத் தனியாக அழைத்துப் போய் "நீ இவ்வளவு கெட்டிக்காரன் என்று நான் நினைக்கவில்லை. நல்ல குதிரையாகப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறாயே!" என்றான்.

வேணு மாலினி பக்கம் பார்த்து மெதுவாக முறுவல் செய்தான். தன்னை அறியாமலே மாலினியும் புன்னகை பூத்தாள்.

இருவரும் வீடு செல்லக் காலை பதினொரு மணிக்கு மேல் ஆயிற்று.

"இன்று ஓட்டலில் இருந்து சாப்பாடு ஏற்பாடு செய்கிறேன்" என்றான் வேணு.

"வேண்டாம். நீங்கள் போய்க் குளித்து உங்கள் வேலையைப் பாருங்கள். ஒரு மணிக்குள் சாப்பாடு தயாராகி விடும்!" என்று பதிலளித்தாள் பத்தினி.

அன்று முழுதும் வீட்டை ஒழுங்கு செய்வதில் மூழ்கியிருந்தாள் மாலினி. இரண்டு மூன்று தடவைகள் வேணு அவள் பக்கம் வந்து எட்டிப் பார்த்தான். அவனைப் பார்க்காதது போலவே மாலினி தன் வேலையில் கவனத்தைச் செலுத்தினாள். அதைக் கண்டு அவன் பேசாமல் போய் விட்டான். முடிவில் மாலை ஆறு மணிக்குத் தன் மனத்தை உறுதி செய்து கொண்டு அவள் முன்னால் வந்து, "இன்று நாமிருவரும் சினிமாவுக்குப் போகலாம். மீதி வேலையை நாளை பார்த்துக் கொள்ளலாம்" என்றான்.

"இப்படிப் பாதியில் விட்டு வர முடியாது. வேறொரு நாள் போகலாம்" என்று திடமாகக் கூறி விட்டாள் மாலினி. ஆனால் அவனைக் கடைக் கண்களால் நோக்கிப் புன் சிரிப்புடன் அவள் பேசியதால் வேணு கோபிக்க முடியாமல் குழப்பத்துடன் திரும்பிச் சென்றான்.

இரவில் எட்டு மணிக்குச் சாப்பாடு முடிந்தது. வேணு தன்னறைக்குப் போய் ஏதோ ஒரு புத்தகத்தில் ஆழ்ந்து விட்டான். அதில் ஒரு அத்தியாயம் முடித்துக் கடிகாரத்தைப் பார்க்கும் பொழுது பத்து மணி ஆகிவிட்டது. அது வரையில் மாலினி வராதது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எழுந்து போய்ப் பார்த்தான். சாப்பாட்டு அறையில் ஒரு கட்டு தமிழ்ப் பத்திரிகை களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அதில் ஒன்றிலுள்ள தொடர் கதையைப் படித்துக் கொண்டிருந்தாள் மாலினி.

"உனக்கென்ன, களைப்பென்பதே கிடையாதா! படுக்க நேரமாகவில்லையா!" என்று கேட்டான்.

அவள் எழுந்து நின்றாள். "கதை படித்துக் கொண்டிருந்தேன். ஓய்வு நேரத்தில் நான் இஷ்டப்பட்டதைச் செய்யலா மல்லவா!" என்று கூறிச் சிரித்துக்கொண்டே அவள் அவன் எழுதியிருந்த கடிதத்தைப் பிரித்துக் காட்டினாள்.

வேணுவுக்கும் அடங்காத சிரிப்பு வந்தது. அவளிட மிருந்து அந்தக் கடிதத்தைப் பிடுங்கிச் சுக்குநூறாகக் கிழித்தெறிந்தான்.

"படுக்கப் போகலாம், வா!" என்றான்.

"அதைப் பற்றியும்தான் நான் ஆலோசித்துக் கொண்டிருந்தேன். அது கடமையா, உரிமையா என்று விளங்கவில்லை" என்றாள்.

"கடமை, உரிமை இரண்டுக்கும் மத்திய ஸ்தலம்" என்று சொல்லி அவளுடைய இரு கைகளையும் பிடித்து அழைத்துச் சென்றான்.

5

இவ்விதம் விசித்திரமாகத் தொடங்கிய வேணுவின் குடும்பம் சிமெண்ட் ரோட்டின் மீது புதிய மோட்டார்போல் இனிதாகச் சென்றது. உடலும் மூளையும் வளர்ந்து மீதி அம்சங்களில் குழந்தையாகவே இருப்பதாக மாலினி தனது கணவனைக் கருதினாள். அவனைத் தாய்போல் பார்த்துக் கொள்வதே தன் கடமை யென்று நினைத்தாள். அவளது உழைப்பையும், சாமர்த்தியத்தையும் கண்டு வேணு மிகவும் மகிழ்ந்தான். ஆனால் நாள் முழுதும் வேலை செய்து விட்டு, இரவில் அவள் வெகு நேரம் பத்திரிகைக் கதைகளைப் படிப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் தனது குடும்ப வாழ்க்கை சாரமற்றதென்று அவள் நினைப்பாளோ என்று பயந்தான். அதனால் அவளிடம் ஒன்றும் சொல்லாமல் தன் வேலையைக் கவனிப்பதே புத்திசாலித்தனம் என்றெண்ணினான்.


காதல் மீது குடும்பத்தை அமைப்பது கண்ணாடிச் சுவர் மேல் வீடு கட்டுவது போலாகும். அற்ப காரணங்களால் அது எளிதில் உடைந்து போகும். உடையாத வரையில் மிகவும் சோதி மயமாகத் தோன்றும். நிலைபெற்றிருக்க வேண்டுமாகில் பரஸ்பர ஆதரவும், உழைப்பும், சகிப்புத் தன்மையும் கூடி நாளடைவில் மாறாத அன்பாகப் பரிணமிக்கும்பொழுதே குடும்பம் ஸ்திரமாகும்.

ஆனால் உணர்ச்சி மிகவும் குறைந்த தாம்பத்தியத்தினிடம் ஓர் பெரிய அபாயமுண்டு. தம்பதிகள் ஒருவர் மற்றொருவரைத் தன் சொத்தாகப் பாவித்து அதற்கு ஏதாவது அபாயம் வந்தாலொழிய அலட்சியம் செய்வது சகஜமாகிவிடலாம்.

தனது படிப்பிலும் ஆராய்ச்சியிலும் மிதமிஞ்சி ஆழ்ந்து, போதிய ஓய்வு இல்லாமையால், வேணுவின் தூக்கம்கெட ஆரம்பித்தது. சரியாகத் தனது உணவைக் கவனிக்காமல், மாலினியின் ஆரோக்கியமும் குலையத் தொடங்கியது. இதைப் பற்றிச் சங்கோசத்தால் ஒருவரும் பிரஸ்தாபிக்கவில்லை.

வேணுவுக்கு என்ன செய்வதென்று புரியாமல் தன் பெற்றோர்களை உடனே வரவேண்டுமென்று எழுதினான். அவர்கள் வந்து சேர்ந்ததும் தானாகவே நிலைமை சீராகி விட்டது. சாரதாம்பாள் மாலினியின் வேலையில் பங்கு போட்டுக் கொண்டு, தன் கையாலேயே அவளுக்குச் சாதம் போட்டு, அடிக்கடி தம்பதிகள் வெளியே போவதற்கும், சினிமா, பாட்டுக் கச்சேரிகளுக்குச் செல்வதற்கும் ஏற்பாடு செய்தாள். தனது படிப்பைக் குறைத்துக் கொண்டு தந்தையைக் கவனிக்க வேண்டியிருந்ததால் வேணுவும் மூளைக் கோளாறிலிருந்து நல்லவேளையாகத் தப்பினான்.

ஒரு வருஷத்தில் ஒரு குழந்தையும் பிறந்து குடும்பம் பூர்த்தியாயிற்று. அவிபக்த குடும்பங்களிலும், பெரிய குடும்பங்களிலும் பெரிய கஷ்டங்களிருக்கின்றன. ஆனால், பெரியோரில்லாமல், குழந்தைகளில்லாமல், தனித் தாம்பத்யம் செய்ய விரும்புவதும் மதியீனம். மூன்று தலை முறைகளும் மிதமாக இருக்கும் குடும்பமே இன்புற்று நிலைத்திருக்கும்.



வீரத்தாய்

☆ யோகி சுத்தானந்த பாரதி ☆

ஸ்டாலின் கிராட் நகரில் உள்ள மம்மாய் குன்று சரித்திரப் புகழ் பெற்றது. செங்கிஸ்கான் அங்கே படை விடமைத்துப் போர் செய்தான். தன் மனைவி **மம்மாய்** பெயரால் அந்தக் குன்றை அழைத்தான். அந்தப் பெயரே நிலைத்து விட்டது.

அதன் மண்ணெல்லாம் வீர ரத்தத்தால் பிசையப்பெற்றது. எங்கே தோண்டினாலும் குண்டுத் துண்டுகளும் கண்ணிகளும் துப்பாக்கித் துணுக்குகளும் தோட்டாக்களும் காணலாம். சென்ற போரின் மிகக் கொடிய படுகொலைச் சமர் அங்கேதான் நடந்தது.

அதன் பக்கத்தில் வால்கா நதி வெள்ளம் இன்னும் கண்ணீர் விட்டுச் செல்லுகிறது. அங்கே ஜெர்மன் படைத் தலைவனிடமிருந்து முதலில் கைப்பற்றிய **டாங்கு** ஒன்றை வைத்திருக்கிறார்கள். ஒரு மேடை மேல் டாங்கு விளங்குகிறது. நான் வால்காவில் குளித்து விட்டு, தன்னந் தனியாக அதே இடத்தில் தியானித்துக் கொண்டிருந்தேன். அங்கே இரத்தம் சிந்தி இறந்த வீரர்களின் ஆவியெல்லாம் எழுந்து இந்தியாவை நோக்கி "சாந்தம், சாந்தம்!" என்று முறையிடுவது போல் எனக்குத் தோன்றியது.

அப்போது ஒரு மாது என் அருகே வந்தாள். 'வருக தாயே' என்று நான் வணங்கினேன்.

அவளும் வணங்கி என் அருகே யமர்ந்தாள்.

அவளுக்கு வயது அறுபதிருக்கும். முகத்தில் கவலையின் சரித்திரம் எழுதப்பட்டிருந்தது. வெளுப்பும் கறுப்புமான கூந்தல் அவள் அனுபவித்த சுக துக்கங்களைக் காட்டின.

அவள் சட்டைப் பைமேல் இரண்டு பதக்கங்கள் இருந்தன. அவை வீரத் தாயின் சின்னங்கள். ரஷ்யாவில் மூன்று குழந்தைகளுக்கு மேல் பெற்றவர்களுக்குப் பரிசு வழங்குகிறார்கள். பத்துக்கு மேல் பெற்ற தாய்க்கு முடிப்பாக 25000 ரூபிள் தந்து, மாதம் 150 ரூபிள் உதவி மரியாதை செய்து **வீரத்தாய்** என்ற பட்டமும் பதக்கமும் கொடுத்துக் கௌரவிக்கிறார்கள்.

நான் கண்ட அம்மையார் வீரத்தாய் பதக்கத்துடன் அதற்குமேல் தியாகப் பதக்கமும் போட்டிருந்தாள். அவள் முதல் நாள் என் பேச்சைக் கேட்டிருந்தாள். என்னைப் பார்க்கவே விரும்பி வந்தாள். நான் "ஸ்டாலின் கிராடு உலகைக் காத்தது" என்று ஒரு கவிதை ஆங்கிலத்தில் புனைந்து பாடியதை அவள் கேட்டதுண்டு. "தாயே! தங்கள் மார்பில் வீரப்பதக்கம் மின்னுகிறது. தங்கள் கண்களில் நீர் ததும்பி அதை நனைக்கிறதே, குழந்தைகள் க்ஷேமமா?" என்று கேட்டேன்.

"நேற்று நீங்கள் பாடினீர்களே...'இந்த ஊர் அலிகளுக்கும் மலடிகளுக்குங் கூடக் குழந்தையுண்டு, அதுதான் வீர சுதந்திரம்.' ஆனால் நான் மலடியில்லேன். எனக்குப் பதினொரு குழந்தைகள் உண்டு; ஆனால் ஒன்றே மிச்சம். அந்த ஒரு குழந்தை பிறந்தது இந்த டாங்கிலிருந்தே" என்றாள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"டாங்கு எப்படியம்மா குழந்தை பெறும்? தயவு செய்து உன் அதிசயக் கதையைச் சொல்லு; எனது நாட்டுக்கு நான் அதைச் சொல்லுவேன்" என்றேன்.

வீரத் தாய் சொன்ன கதையை ஒவ்வொரு இந்தியனும் கேட்க வேண்டியது அவசியமாகும். அவள் சொல்லத் தொடங்கினாள்:

"ஸ்டாலின் கிராடைக் கைப்பற்றுவது; அங்கிருந்து கிழக்கே தாவி மத்திய ஆசியாவை ஆக்கிரமித்து உங்கள் இந்தியாவிலும் புகுவது – இதுதான் ஹிட்லரின் இரத்தக் கனவு. இந்தக் கனவை நனவாக்க அவன் எங்கள் நட்பை முறித்தான். மனிதத் தன்மையை முறித்தான். எல்லைக் கோட்டைத் தாண்டினான். நூற்றுக் கணக்கான மைல்களுக்குப் படை நிறுவி யந்திர சாதனங்களால் கொலையைத் தூவிக் கொண்டு, கொள்ளைப் படையுடன் இங்கே புகுந்தான். ஜெர்மன் சேனைத் தலைவன் **வான் பௌலஸ்** மிக மிடுக்காகப் புலிப்பாய்ச்சலில் வந்தான். கோட்டை விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன. இந்த மம்மாய் குன்றைத் தாக்கி, எதிரிகள் கைப்பற்றி, தண்டவாளம்போட்டு ரயிலில் வந்து குவிந்தனர். அதோ தெரியும் மாபெரும் இரும்புத் தொழிற்சாலையைக் கைப்பற்றினர். இங்கேயே டாங்குகள் செய்தனர். குண்டுகள் செய்தனர். எங்கள் ஊரில் செய்த குண்டுகளால் எங்களைக் கொன்று

குவித்தனர். ஏழடுக்கு மாடிகளெல்லாம் தொப்புத் தொப்பென்று இடிந்து விழுந்து மண்ணாயின. ஊர் நரகத் தீக்காடானது. காற்றெல்லாம் பிணவாடை யடித்தது. வீடுகளெல்லாம் எரிந்து கரிந்து சிதைந்து பொக்கை வாய் போல் காணப்பட்டன; தெருவெல்லாம் போர்ப் பேயின் வெறி நடனமா யிருந்தது. 'யார் இன்னார்' என்றே அறிந்து கொள்ள முடியாமல் ஊரெல்லாம் பகைக்காடா யிருந்தது.

"ஜெர்மானியர் வெற்றி முரசு கொட்டி வீறுப்புடன் டாங்குகளை ஊர்வலமாகக் கொண்டு வந்தனர். யாராவது செங்கொடி பிடித்தால் சுட்டுத் தள்ளினர்.

"இவ்வாறாக உயிர்த் துடிப்பே யில்லாமல் ஸ்டாலின் கிராடு செத்துக் கிடந்தது.

"இந்தச் சமயமே மாஸ்கோவில் தோற்ற நாஜிப் படைகள் ஸ்டாலின்கிராடுக்கு வந்தன. மீதியிருக்கும் மக்களையும் கொன்று குவிக்க ஹிட்லர் உத்தர விட்டான்.

"என்ன கொடுமை செய்தாவது ஸ்டாலின் கிராடு தமக்காக வேண்டியது என்பதே அந்தப் போர் வெறியன் கட்டளை...ஏன் தெரியுமா? சுடுகாடான ஸ்டாலின் கிராடில் வெற்றிப் பவனியுடன் நாஜிப்படை புகுந்தது. டமார், டமார் என்று மூலை முடுக்குகளிலிருந்தும், ஓட்டை வீடுகளிலிருந்தும், சந்து பொந்துகளிலிருந்தும் குண்டுகள் புறப்பட்டன. செம்படை எதிர்ப்போர் தொடங்கியது.

2

"ஸ்டாலின் தன் பெயரால் உள்ள மாபெரும் நகரை, (40 மைல் நீண்ட நகரை) எப்படியாவது மீட்கப் புறப்பட்டான். தன் முழுக் கவனமும் அங்கே செலுத்த வேண்டும். உள்நாட்டு விவகாரங்களை யார் கவனிப்பது? ஆட்சி முறை எப்படியாவது? சிந்தித்தான். அறிக்கை விட்டான். 'எல்லோரும் வாருங்கள்! நாட்டுக்கு ஆபத்து! நம் உயிரைக் கொடுப்போம்! நாட்டைக் காப்போம்! நம்மை வலுச் சண்டைக்கு இழுத்த பகைவரை நொறுக்குவோம்! உலக சமாதானத்துக்காகப் போர் புரிவோம்!'

"அவன் மொழிகளைக் கேட்டதும் ஆண் பெண் இருபாலாரும் கும்பல் கும்பலாக முன் வந்தனர். அப்போதுதான் பெண் மணிகள் தங்கள் மக்களுடன் வந்து 'இதோ மக்களுடன் நாட்டை மீட்க வந்தோம். கட்டளையிடுக' என்றனர்.

"ஸ்டாலின் பெண்கள் சேவையை ஏற்றான். அவர்களுக்கேற்ற பலவகைத் தொழில்களை அமைத்தான்.

"பெண்கள் ஆயுதச் சாலையிலும், குண்டுக் கிடங்குகளிலும் வேலை செய்தனர். அப்போதுதான் ரொபாட் என்ற யந்திர மனிதனை ஆக்கினர் ரஷ்ய விஞ்ஞானியர். அதை இயக்கியது பெண்ணினமே.

"வந்தது சைபீரியா செம்படை, பாழ் வீடுகளில் புகுந்து மறைந்திருந்தது. அங்கே நுழைந்த நாஜிகளைச் சுட்டுக் கொன்றது. முதலில் இரும்புத் தொழிற்சாலையைக் கைப்பற்றியது. அங்கே போர்க் கருவிகள் செய்ய இருபாலாரும் உழைத்தனர்.

"ஹிட்லர் பல்லைக் கடிக்கிறான். கிராப்புத் தலையைப் பிய்த்துக் கொள்ளுகிறான். 'ஸ்டாலின்கிராடு அல்லது சுடுகாடு...போங்கள்' என்று நாஜிப் படைகளை ஏவுகிறான். வான் பௌலஸ் மம்மாய் குன்றில் பாதையமைத்துப் புகை வண்டியில் பெருஞ் சேனையேற்றி வருகிறான். குன்றில் குண்டு மாரி பெய்கிறது. போர் மூண்டது. இந்தச் சமயத்திலேதான் எங்கள் பாவ்லோவ் இரண்டாயிரம் நாஜி விமானங்களை எதிர்த்துத் தீயுமிழ்ந்தான். பாவ்லோவ் ஒரு பாட்டினால் அத்தனை விமானங்களும் நொறுங்கச் செய்தான்.

"சோவியத் சேனையில் ஒரு கவிவாணன். அவன் இரவில் உட்களம் பார்க்கும் கடமை காத்தான். நள்ளிரவில் அவனுக்கு ஒரு பாட்டு உதித்தது:

நம்முயிர் நாட்டுயிரே—இந்த
நாட்டுயிர் நம்முயிரே
நம்முயிர் ஈந்திடுவோம்—நமது
நாடுயிர் வாழ்ந்திடவே
செம்படை வீரர்களா—வந்து
சேருங்கள் போர்க்களத்தில்
வெம்பகை பட்டொழிய—நாம்
வெற்றி முரசொலிப்போம்.

3

"எனக்குப் பதினொரு குழந்தைகள். கடைசிப் பையனுக்கு எட்டு வயது; தலைச்சனுக்கு இருபத்தைந்து வயது.

"தலைச்சன் பாவ்லோவின் நண்பன்; அவனே மேற் சொன்ன பாட்டைப் பாடிப் போர்க்களம் சென்றான். நான் அவனை லெனின் பெயரால் ஆசிர்வதித்துக் கட்டி முத்தமிட்டு யுத்தத்துக்கு அனுப்பினேன். என் அருமை மகன் வேட்டை விமானத்தை ஒரு எரி கனலால், வீழ்த்தினான்.

"இவனைக் குறி வைத்து பௌலஸே சுட்டு வீழ்த்தினான். அவன் உயிர் துடிக்கும்போது எனது இரண்டாவது மகன் அருகே நின்றான். 'தம்பி! உயிர் பெரிதன்று. நாடே பெரிது. எனது தம்பிமார்களையெல்லாம் பலி வைத்து நாட்டுக்குப் போர் புரி. தாயாரும் சேவை செய்ய வரட்டும். வாழ்க சோவியத் ரஷ்யா' என்று கூறி இறந்தான் என் மகன்.

"அவன் உடலைக் கண்ட எனக்கு ரஷ்யாவே உயர்ந்ததுபோலத் தோன்றியது. என்னிடம் உள்ள பத்துயிர்களையும் தர முனைந்தேன். நானும் குண்டுக் கிடங்கில் வேலை செய்தேன். என் கடைசிப் பையன் சிறிது கூடப் பயமே அறியான்.

"'அம்மா நான்போய் அந்தப் பௌலஸைப் பிடித்து வந்து பாவ்லோவ் வீட்டுத் தூணில் கட்டிப் போட்டுச் சுடுகிறேன்' என்றான்.



சூப்பர்
இந்தியா
டயர்களையே
கேட்டு
வாங்குங்கள்
“டயர்களில் மிகச் சிறந்தவை”

"'அப்பா நீ சிறுவன். உன் அண்ணன்மார் போர் முனை செல்லட்டும்; நீ இரு' என்றேன்.

"காலையில் எங்கள் பாவ்லோவின் எக்காளம் கேட்டது. சிறுவன் எப்படியோ வீட்டிலிருந்து தப்பி ஓடிச்சென்றான்.

"மறு நாள் அவன் உடல் எங்கள் வீட்டு வாசலில் வந்து கிடந்தது. நான் பெருமையுடன் அதை எடுத்து அணைத்துக் கொண்டு வீரச் சமாதியில் வைத்தேன்.



ஸ்டாலின்கிராடு மம்மாய் மலைக் காட்சி.

"என் மக்கள் ஒவ்வொருவராகப் பாவ்லோவ் பின்னே சென்றனர்; போர் தொடுத்தனர்; மார்பில் குண்டுபட்டு இறந்தனர். செய்தி வரவரப் பெற்ற மனம் பெருமூச்சு விட்டது. ஆனால் ரஷ்யாவின் மானம் என்னுள் துடித்தது. இன்னும் ஒரே மகன் பாக்கி.

"என் ஐந்தாவது மகன் பெட்ரோவ்ஸ்கி. அவன் வயது பதினாறுதான். அப்போதுதான் அவன் விஞ்ஞானப் பட்டம் பெறப் படிக்கிறான். அவன் நல்ல உயரம், நல்ல திட சரீரம், விசால உள்ளமும் தேசபக்தியும் படைத்தவன். அந்த உள்ளத்தில் துடிப்பதெல்லாம் ரஷ்யாவின் ஆன்மா.

"பாவ்லோவ் அவனுடைய வீரத்தைப் புகழ்ந்து பாராட்டினான்.

4

"நாளை ரயில் வருகிறது. அதில் ராக்ஷஸப் படை எங்களை நிர்மூலமாக்கக் குமுறி வருகிறது. இதோ எஞ்சின் மம்மாய் மலையில் ஏறிவிட்டது. செம்படை பதறுகிறது. அப்போது ஓர் இளம் வீரன் பாவ்லோவ் கையிலிருந்து ஒரு கண்ணியைப் பறித்தான். சட்டென்று எஞ்சினுக்கு முன் புதைத்தான். படார், டமார்! எஞ்சின் ஓரேயடியாகத் தூக்கியடித்துச் சில்லுச் சில்லானது. வண்டி குடை சாய்ந்து உருண்டது.

"நாஜிப் படைகள் உருண்டனர். அவர்களைச் செம்படை சுட்டது.

"பௌலஸ் பெரிய டாங்கைக் கொண்டு குண்டு வீசினான். அந்த டாங்கின்மேல் இடது கையால் ஓர் இளம் வீரன் குண்டடித்தான். டாங்கு திகைத்து நின்றது. அதிலிருந்து ஒரு குண்டு புறப்பட்டு இளம் வீரன் மார்பில் விழுந்தது.

"வீரன் 'வாழ்க சோவியத்' என்று கூறியபடியே தரையில் வீழ்ந்தான்.

"இதற்குள் எங்கள் பாவ்லோவ் படையுடன் வந்து பொருது, நாஜிகளை முறியடித்தான். ரஷ்யப்படை கடும்போர் புரிந்து முடிவில் பௌலஸைப் பிடித்து விட்டது. பகைவர் பூனைபோல் ஒடுங்கிப் பணிந்தனர்.

"ஸ்டாலின்கிராடு சுடுகாடானாலும் முடிவில் வெற்றி செங்கொடிக்கே. யுத்தப்பாழில் வெற்றி முரசு வீறிட்டது. அதைக் கேட்டு அந்த இளம் வீரன் காயப் படுக்கையிலிருந்து மகிழ்ந்து எழுந்தான். ஆனால் மறுபடியும் விழுந்தான். நான் அவனைத் தாங்கிப் பிடித்தேன். 'மகனே, அமைதியாயிரு!' என்றேன்.

"என் வீரன் 'புதிய ஸ்டாலின்கிராடைப் பார்க்குமட்டும் அமைதி ஏதம்மா?' என்றான். மயக்கமாய் வீழ்ந்தான். உயிர் நீத்தான்.

"அவன் கைகள் இரண்டும் தேசத்துக்குப் பலியாயின. ஒன்று கண்ணி வைத்து முறிந்தது; மற்றொன்று குண்டு வீசி முறிந்தது. அவன் உயிர் ரஷ்யாவின் பலி பீடத்தில் உறங்குகிறது. அவன் மார்பில் பாய்ந்த குண்டு அவனுடன் புதைந்தது.

"இந்த இளம் வீரன் தாயாரே நான்—பாவலோவா. சமாதான உடன்படிக்கையானது. எனக்குப் பதினொரு குழந்தைகள் என்று சோவியத் அரசாங்கம் அறியும். நான் யுத்த சேவையும் செய்தேன். எனக்கு ஒரு நாள் அழைப்பு வந்தது:

'அருமைப் பாவலோவா, மாண்புள்ள தாயே, தங்களுக்கு வீரத் தாய்ப் பட்டம் தர அழைக்கிறோம். அதற்காகத் தங்கள் மக்களையும் அழைத்து வருக. தங்களுக்கு வழக்கப்படியே 25000 ரூபிள் முடிப்பும் மாதா மாதம் 150 ரூபிள் சன்மானமும் வரும்.

தங்கள் யுத்தகால சேவைகளை மெச்சி ஒரு பதக்கம் அளிக்கப்படும். வருக.

ஸ்டாலின்கிராடு சோவியத் அதிகாரி.'

"சென்றாள் பாவலோவா. பதினொரு குண்டு சில்லிகளை அதிகாரிமுன் வைத்தாள். வீர மகனின் துப்பாக்கியையும் வைத்தாள். கண் கலங்கி நின்றாள்.

"'உன் மக்கள் எங்கேயம்மா?' 'ஐயா, நாட்டுக்காக இரத்தம் சிந்திப் பலிதானமான மக்களை மக்களென்று ஏற்றுக் கொள்வீரா? ஆனால் நான் பதினொரு மக்களையும் பலி தந்து என்னையும் தேச சேவைக்கே ஈந்த

தாய். உண்மையான வீரத் தாய். எனக்கு உங்கள் பதக்கம் தேவையில்லை. தேச சேவை தாருங்கள்' என்று கூறி நின்றாள்.

"அதிகாரி, 'அம்மா உனக்கு மிச்சமுள்ள குழந்தைகள் எத்தனை?' என்று கேட்டார்.

"'ஐயா ஒரே குழந்தைதான், என் மார்பில் சந்தோஷமாகத் தவழுகிறது.'

"'அம்மா அக்குழந்தையின் பெயர் என்ன?'


"'அதுதான் ஐயா வீர சுதந்திரக் குழந்தை. அதுதான் எனது நெஞ்சத்தின் துடிப்பு. ஸ்டாலின் கிராடை மீட்ட குழந்தை அது தான். அதை நினைத்தே பதினோரு குழந்தைகளைப் பலி கொடுத்த தாய் மகிழ்ச்சி யடைகிறேன், பெருமை யடைகிறேன்.'


"அதிகாரி துள்ளி யெழுந்தான்.

"'அம்மா நீயே ஜய வீரத்தாய். இந்தாருங்கள், நானே உனக்கு வீரத்தாய்ப் பதக்கம் சூட்டுகிறேன். அதற்குச் சிகரமாகத் தியாகப் பதக்கம் சூட்டுகிறேன். அது தங்கம், இது வைரம்' என்று சூட்டினான் அதிகாரி."

அவளை நோக்கினேன், அந்த டாங்கை நோக்கினேன், வால்காவை நோக்கினேன். குன்றை நோக்கினேன். எல்லாம் வீர சுதந்திர பலி தானத்தைப் பாடின.

நாட்டுயிர் நம்முயிரே—இனி
நம்முயிர் நாட்டுயிரே
நாட்டுயிர் வாழ்ந்திடவே—வாரீர்
நம்முயிரைத் தந்திடுவோம்.





மேலே காணப்படும் அட்டவணையின் உதவியினால் உங்கள் குழந்தையின் எடையைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். இதன்படி குழந்தையின் வளர்ச்சி சரியாக இல்லாவிடில் குழந்தைக்கு வேண்டிய அளவு பால் உணவு கிடைப்பதில்லை என்பதை அது குறிப்பதாகும். இன்றே உங்கள் குழந்தைக்கு டூமெக்ஸ் பால் உணவைக் கொடுக்க ஆரம்பித்து வளர்ச்சியில் மாறுதலைக் கவனியுங்கள். இந்த அட்டவணைப்படி குழந்தையின் எடை சரியானபடி இருந்த போதிலும் அதன் வளர்ச்சிக்கு அதிக போஷாக்கு தேவை. இப் போஷாக்கை டூமெக்ஸ் உதவியினால் குழந்தைக்குக் கிடைக்கும்படி நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். இது நிர்பயமான ஓர் நல்வழி.

டூமெக்ஸ் பால் உணவு இதுவே.

- டூபர் கொலின் டெஸ்டெட் பாலினின்று தயார் செய்யப்பட்டது.
- இது வெகு சுலபமாக தண்ணீரில் கரையக் கூடியது.
- இதிலுள்ள சத்துக்கள் எளிதில் ஜீரணிக்கப்படும்.
- இதில் இரும்புச் சத்து; விடமின் B6 மற்றும் D சேர்க்கப்பட்டது.

உங்கள் குழந்தைகளுக்கு டூமெக்ஸ் பால் உணவைக்கொடுத்து அவர்களின் வளர்ச்சியைக் கவனியுங்கள்



கண்டிராத பரிசு

ஆர். எஸ். ஞானம்பாள்



"ஒரு ஆடியில்லை, ஆறும் மாசம் இல்லை. இரண்டாயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு ஒரு அனாதையைக் கட்டி அழ வைத்திருக்கிறது தெய்வம். அப்பா, அம்மா யாரும் இல்லாத இந்தப் பெண் வேண்டாமென்று முட்டிக் கொண்டேன். என் பேச்சு எடுபடவில்லை. பிடிப்பிடியாகத்தான் சம்பாதிக்கிறான். கல்யாணத்துக்கு அப்புறம் மாமனார் வீடு என்று ஒரு நாள் போயிருக்க வழியுண்டா! ஒரு பாயசம் வைத்து அவன் இலையில் போட யாராவது உண்டா! அதற்கு என்ன செய்வது! அவன் தலையெழுத்து அப்படியிருக்கிறது. எத்தனை பேருக்கு வேட்டகம் நன்றாக அமையவில்லை. அவன் பண்ணின பாவம்" என்று சீதையம்மாள் அடுக்கினாள், கூடத்தில் உட்கார்ந்த வண்ணம்.

குனிந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த மணி நிமிர்ந்து ராதாவைப் பார்த்தான். ராதா அடுப்பிலிருந்து எதையோ இறக்குபவள் போலத் திரும்பிக் கொண்டாள். மணி சாப்பிடாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஆபீஸுக்கு நேரமாக வில்லையா! என்னையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்களே!"

அவள் குரல் கம்மியிருக்கவில்லை. கண்களில் நீர் துளிக்கவில்லை. ஆனாலும் அவள் முகத்தில் மனத்திலுள்ள வருத்தத்தின் சாயல் நன்றாகத் தெரிந்தது.

மணி இரண்டே வாயில் சாதத்தை அள்ளிப் போட்டுக் கொண்டு அவசரமாக எழுந்து விட்டான்.

"பிரசவத்துக்குக் கூட இங்கே தானா! என்னடி அதிசயம்! தலைச்சன் பிரசவத்துக்குக் கூட நீயே செய்ய

வேண்டுமா !" என்று கேட்டுக் கொண்டிருந்தாள் எதிர் வீட்டுக் கிழவி.

"எல்லாம் இங்கேதான். இதுகளுக்குப் போக்கிடம் ஏது ! என்னல் ஒரு காரியமும் ஆகாது. ஆள் போட்டுச்செய்து கொள்வாளோ, ஆஸ்பத்திரிக்குப் போவாளோ! புருஷன் பாடு, பெண்டாட்டி பாடு, நமக்கென்ன !" என்று மாமியார் விட்டேற்றியாகப் பேசுவது காதில் விழவும், ராதாவின் கண்களில் நீர் குபுகுபுவென்று பெருகியது.

கையலம்பிக் கொண்டு எதிரே வந்த மணி, "ராதா ! நீ இப்படி அழலாமா ! அம்மா என்ன சொன்னுலும் நீ பாராட்ட வேண்டாம் என்று நான்தான் அடிக்கடி சொல்கிறேனே. நான் உன்னையோ உன் பிறந்த வீட்டையோ குறை சொன்னேனு, அழுவதற்கு !" என்றான்.

ராதா விம்மினள். "அம்மா சொல்லுகிறூரே என்று எனக்குக் கோபமில்லே. நிஜத்தைத்தானே சொல்லுகிறூர். இத்தனை அந்தஸ்தும், படிப்பும், உத்தியோகமும் இருக்கும் நீங்கள் என்னை விட்டு வேறு யாரையாவது கல்யாணம் செய்து கொண்டிருந்தால், அம்மா சொல்லுகிற மாதிரி எத்தனையோ மரியாதையும், விதவிதமான சீர் வரிசைகளும் உங்களுக்குக் கிடைத்திருக்கும். என்னல் உங்களுக்கு என்ன சுகம் !" என்று தேம்பினள்.

"ஆமாம். எவளையாவது செய்து கொண்டிருந்தால் சீரெல்லாம் கிடைத்திருக்கும். ஆனல் நீ கிடைத்திருக்க மாட்டாயே, ராதா ! நீ அழாமலிருந்தால் சாயங்காலம் உனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தரும்படியான புது விஷயம் ஒன்று சொல்வேன்" என்றான் மணி உற்சாகத்துடன்.

"என்ன புது விஷயம், சொல்லுங்களேன்!" என்று மிகுந்த ஆவலுடன் கேட்டாள் ராதா, புடவைத் தலைப்பினல் கண்ணைரத் துடைத்துக் கொண்டே.

"இப்பொழுது சொல்ல முடியாது. எதற்கும் நீ 'டிரஸ்' செய்து கொண்டு தயாராக இரு."

"எங்கே ! சினிமாவுக்கா !"


ராதாவின் ஆவல் அதிகமாயிற்று.

"அதெல்லாம் ஒன்றும் இப்பொழுது சொல்ல மாட்டேன்" என்று சிரித்த வண்ணம் சொல்லி விட்டு அங்கிருந்து போய் விட்டான் மணி.

** ** **

பேசிக் கொண்டிருந்த கிழவி விடைபெற்றுக் கொண்டு போனதும், மாமியாரும் மாட்டுப் பெண்ணும் சாப்பிட்டார்கள்.

"எனக்கும் புத்தி மழுங்கிக் கிடந்தது. வஞ்சனத்தின் பெண் கமலத்தைக் கொடுக்கிறேன் என்று கெஞ்சினன். இவன் பேச்சைக் கேட்டு நானும் பெண் நன்றாயில்லே யென்று மறுத்தேன். பக்கத்து வீட்டுக் காமாட்சி தன் பிள்ளைக்குப் பண்ணிக் கொண்டாள். அவளுக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது. மூவாயிரம் ரூபாய் எதிர் ஜாமீன், ஐயாயிரத்துக்குச் சீர் எல்லாம் செய்தார்கள். ஒரு பண்டிகை, பருவம் விடாமல் நேரில் அழைக்க வந்து விடுகிறூர்கள். தீபாவளிக்காக மாப்பிள்ளைக்குச் சைக்கிளாம், ரேடியோவாம், வைர மோதிரமாம். பின்னே எப். ஏ. கூடத் தேறவில்லே. காலணு சொத்துக் கிடையாது. அதுதான் நல்ல அதிர்ஷ்ட மிருக்கிறதே! காமாட்சி பார்த்துப் பார்த்துப்



பூரிக்கிறான். இங்கே என்ன இருக்கும் என்ன! தலை தீபாவளிக்கு ஒரு இழை பருத்தி நூலுக்குக் கூட விதியில்லை. 'நித்ய தரித்திரம் பிறந்தகம்; அஷ்ட தரித்திரம் அம்மானகம்' என்ற கதையாக இருக்கிறது" என்று பொரித்துக் கொட்டிக் கொண்டிருந்தாள் சீதையம்மாள்.

ராதா பதிலே சொல்லவில்லை. அவளுக்குப் பேச வாயேது! மாமியார் சொல்லுகிற வார்த்தை ஒவ்வொன்றும் உண்மையாக இருந்தது.

பிறந்ததுமே தாயை இழந்துவிட்ட துரதிர்ஷ்ட சாலி ராதா. தாயை உருட்ட வந்த துக்கிரிப் பெண்ணைக் காணவே பிடிக்காமல் வெறுத்தார் அவள் தந்தை விசுவநாதன். 'அப்பா' என்று தவழ்ந்து வந்து காலைக் கட்டிக் கொள்ளும் குழந்தையைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் நடந்து விடுவாராம். அவளுக்கு அப்போது மூன்று வயது தான். நன்றாக நினைவுகூட இல்லை. கடைசியாக அவள் அப்பா ஊரை விட்டே போய் விட்டார்.

"விசுவத்தின் மனம் எனக்குப் புரியவே இல்லை. மனைவியை இழந்தால் அவள் பிரதிபிம்பமான குழந்தை மீது எல்லோரும் உயிரை வைத்திருப்பார்கள். இவன் போக்கோ அலாதியாக அல்லவா இருக்கிறது!" என்று அடிக்கடி சொல்வார் ராதாவின் மாமா.

அவர்தான் ராதாவை வளர்த்தார். குழந்தையில்லாத மாமா ராதாவை அன்பாக வளர்த்தது அதிசயமில்லை. மாமியும் அன்பாகவே இருந்தாள். ராதாவின் கல்யாணப் பேச்சு வந்த பொழுதுதான், மாமியின் மனம் மாறும்படி காரியங்கள் நடந்து விட்டன. மாமிக்கு ராதாவைத் தன் அண்ணா பிள்ளைக்குக் கொடுத்து விடவேண்டும் என்ற ஆசை. பிள்ளையில்லாத சொத்து ராதாவுக்கு மட்டும் சேருவானேன்; தன் பிறந்தகத்து மனிதர்களுக்கும் சேரட்டுமே என்று அவள் எண்ணினாள்.

ஆனால், மனைவியின் பிறந்த வீட்டாரைக் கண்டாலே வெறுக்கும் மாமா அந்த ஏற்பாட்டுக்குச் சிறிதும் ஒத்து வரவில்லை.

மாமிக்கு மிகுந்த கோபம் வந்து விட்டது. கணவன் மேலிருந்த கோபமெல்லாம் சேர்ந்து ராதாவின் மீது திரும்பியது.

மனிதர் மனம்தான் எவ்வளவு சீக்கிரம் மாறி விடுகிறது! ராதா, ராதா என்று நொடிக்கு நூறு தரம் கூப்பிட்டுக் கொண்டு பெற்றவளுக்கு மேல் பிரியமாக இருந்த மாமி, ராதாவை விஷம்போல் வெறுக்க ஆரம்பித்தாள். அறுபது நாழிகையும் கொடுமையாகவும், நிஷ்டூரமுமாகவே பேசினாள். மாமா அவளை லட்சியமே செய்யவில்லை. ராதாவுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது.

ஒருநாள் மணியைக் கூட்டிக் கொண்டு வந்தார் மாமா. கடும் கோடையில் தென்றல் வீசுவது போலிருந்தது, மணியைக் கண்ட ராதாவுக்கு. ராதாவின் அழகையும் அடக்கத்தையும் பார்த்த மணி மறுபேச்சுப் பேசாமல் கல்யாணத்துக்கு ஒப்புக் கொண்டு போய் விட்டான்.

மணியின் அம்மாவுக்கும் ராதாவின் மாமி பலவாறாகப் போதித்தாள், அந்தக் கல்யாணம் நடக்காமலிருக்க. ஆனால், மணி உறுதியாக நின்றான். மாமா ராதாவுக்குத் தைரியம் கூறினார். ரொக்கமாக இரண்டாயிரம் ரூபாயைக் கண்ட சீதையம்மாளும் வாயடைத்து நின்றாள். ராதா, மணியின் மனைவியாகப் புக்ககம் வந்து விட்டாள்.

•• •• ••

ராதாவின் துரதிர்ஷ்டம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது! கல்யாணமாகி மூன்று



நான்கு மாதம் கழித்து மணி ஆபீஸ் காரியமாகத் திருச்சி போயிருந்தான். ராதாவின் மாமா வீட்டுக்கும் போயிருந்தான். ராதாவின் மாமா இறந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. மாமி மணியைக் கண்டபடி திட்டிச் சாபம் கொடுத்தாள். மணி கால் வைத்த நேரம் தன் புருஷனை ஒழித்து விட்டதாகவும், தன் புருஷன் ராதாவுக்குச் செய்து செய்து ஓட்டாண்டியாகித் தன்னை நடுத்தெருவில் நிற்க வைத்து விட்டதாகவும் கூறி ஓலமிட்டாள்.

விதியை நொந்து கொண்டு மணி பேசாமல் ஊருக்குத் திரும்பி வந்து விட்டான். ராதாவிடம் கூட இத்தகவலை அவன் கூற விரும்பவில்லை.

"மாமா கடிதமே போடவில்லையே! அவருக்குக் கூட என்னைப் பிடிக்காமல் போய் விட்டதே!" என்று வருந்துவாள் ராதா.

"கடிதம் போட என்ன இருக்கிறது! நீ சௌக்கியம், நான் சௌக்கியம் என்று கடிதம் எழுதினால் தான் அன்பு என்று அர்த்தமா! கடிதம் வராத வரை எல்லோரும் க்ஷேமம் என்று வைத்துக் கொள்" என்று சமாதானம் கூறுவான் மணி.

ராதா மட்டும் கடிதம் போட்டுக் கொண்டேயிருந்தாள். விலாசதாரர் இல்லை என்று அவை திரும்பி விட்டன. ராதாவின் துக்கத்தைக் காணச் சகிக்காமல், மணி ஒரு நாள் உண்மையைக் கூறி விட்டான். அன்று ராதா அழுத அழுகையும், சிதையம்மாள் செய்த ஆர்ப்பாட்டமும் சொல்லில் அடங்காது.

"ஆடிப் பண்டிகைக்குக் கூடச் சீரெடுக்காமல் அந்தப் பாவி மனுஷன் மோசம் செய்து விட்டுப் போய் விட்டானே" என்று குதித்தாள் மாமியார்.

அதிலிருந்தே ராதாவுக்கு வீட்டில் இருக்க முடியாத தொல்லைதான். சாதாரண நாட்களிலாவது எப்படியோ சமாளித்து விடுவான். பண்டிகை பருவம் வந்து விட்டால் சிதையம்மாளிடம் ராதா படும் பாட்டை வர்ணிக்க முடியாது.

பக்கத்து வீட்டு மாட்டுப் பெண் அதிர்ஷ்டசாலி. சிருஷ்டி கர்த்தாவின் கைத் தவறால் கறுப்பாகவும், குரூபியாகவும் பிறந்து விட்டாளே தவிர, அதை ஈடு கட்டக் காசாலும் பணத்தாலும் செய்ய அப்பா, அம்மா, அத்தை, பாட்டி என்று அன்பு நிறைந்த மனிதர்கள் அவளுக்கு இருந்தனர். கணவன் அவளைத் தலைமீது வைத்துக் கொண்டு கூத்தாடத் தயாராக இருந்தான். மாமியார் காமாட்சி மாட்டுப் பெண்ணை சாட்சாத் மகாலக்ஷ்மியாகவே மதித்தாள். மாட்டுப்பெண் பெருமையைச் சிதையம்மாளிடம் சொல்லிக் கொள்ளுவதில் காமாட்சிக்கு ஒரு தனி மகிழ்ச்சி.

** ** **

தீபாவளிப் பண்டிகை நெருங்கி விட்டது. இரண்டே நாட்கள்தான் இருந்தன. மாப்பிள்ளையையும் பெண்ணையும் தலை தீபாவளிக்கு அழைத்துக் கொண்டு போவதற்காகப் பக்கத்து வீட்டுச் சம்பந்திகள் வந்திருந்தனர்.

மணிக்கும் அந்த வருஷம் தலைதீபாவளிதான். அவர்களை அழைக்கவும், கடிதம் போடவும் அவளுக்கு யார் இருக்கிறார்கள்! ராதாவுக்கு ரொம்பத் துக்கமாகத்தான் இருந்தது. பிறந்தகத்தில் கணவனுடன் கொண்டாடும் தலைதீபாவளியின் ஆனந்தமே தனிதான் என்று அவள் கதைகளில் படித்திருக்கிறாள். சிநேகிதிகளும் சொல்லக் கேட்டிருக்கிறாள். அவள்தான் துரதிர்ஷ்டசாலி, சுகமே அனுபவிக்கக் கொடுத்து வைக்காதவள் என்றால், மணியின் அதிர்ஷ்டமாவது நன்றாக இருந்திருக்கக் கூடாதா! தீபாவளி வரையிலாவது மாமா உயிருடன் இருந்திருக்கக் கூடாதா என்று எண்ணி மனம் குமுறினாள் ராதா.

எங்கோ நெய் காயும் மணம் வந்தது. "யார் வீட்டுத் தீபாவளிப் பட்சணம் மணக்கிறதோ!"

ராதாவுக்குச் சட்டென்று நினைவு வந்தது. 'சீக்கிரம் வேலைகளை முடித்துக் கொண்டு தயாராக இருக்கச் சொன்னாரே' என்ற எழுந்து சரசர வென்று வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

ஜவுளிக் கடைக்குப் போகத்தான் நினைத்திருப்பார். 'பிறந்தகம்தான் சரியாக அமையவில்லை. நாம் செய்தால்தானே உண்டு' என்ற எண்ணம் வந்திருக்கும். மணியின் அன்பின் உயர்வையும், தான் பிறந்தகமற்று இருப்பதைச் சொல்லிக் காட்டாமல் இருக்கும் பெருந்தன்மையையும் நினைத்து மனத்துக்குள் உருகினாள்.

"அம்மா! அம்மா! கடிதம் வந்திருக்கிறது" என்ற மணியின் குரல் கேட்டுக் கூடத்தில் எட்டிப் பார்த்தாள் ராதா.

"என்னடா கடிதம்! யாரிடமிருந்து வந்திருக்கிறது!" என்று அலுப்புடன் கேட்டுக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள் சிதையம்மாள்.

ராதாவின் மாமிதான் எழுதியிருக்கிறாள். படிக்கிறேன் கேள்:

"சௌ. ராதாவுக்கும் சிரஞ்சீவி மாப்பிள்ளைக்கும் ஆசீர்வாதம். இப்பவும், தீபாவளி வருகிறது. ராதாவின் மாமா, ராதாவின் தலைதீபாவளியை எத்தனையோ விமரிசையாக நடத்த எண்ணியிருந்தார். ஈச்வர சங்கல்பம் வேறு மாதிரியாகி விட்டது. துக்கத்தால் நானும் என்னை மறந்து கண்டபடி பேசி விட்டேன். நினைக்க நினைக்க வெட்கமாகவும், விசனமாகவும் இருக்கிறது. நடந்ததை எல்லாம் மறந்து விடுங்கள். தீபாவளிக்கு இங்கேயே புறப்பட்டு வந்து விடுங்கள். வழிச் செலவுக்கு ஐம்பது ரூபாய் அனுப்பியிருக்கிறேன். இன்றே புறப்படவும். நீங்கள் வந்ததும் தான் உங்களுக்குப் பிடித்த புடவை, வேஷ்டி, மோதிரம் எல்லாம் வாங்கவேண்டும். கட்டாயம் புறப்பட்டு வரவும். இப்படிக்கு அன்புள்ள மாமி."

மணி சட்டைப் பையிலிருந்து ஐந்து, பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்துக் கீழே போட்டான்.

ராதாவுக்குத் தன் கண்களையும் காதுகளையும் நம்ப முடியவில்லை. மாமியின் மனம் மாறும் என்று அவளால் நினைக்க முடியவில்லை.

"ஐயோ பாவம்! புருஷன் போன துக்கத்தைக் கூடப் பாராட்டாமல் தலை தீபாவளி செய்கிறேன் என்கிறாளே. கபடமற்றவள்! ராதா, சீக்கிரம் புறப்படு. போய் இரண்டு நாள் இருந்து விட்டு வந்தால் அவளுக்கும் ஆறுதலாக இருக்கும். உனக்கும் ஒரு மாறுதல்" என்றாள் சிதையம்மாள்.

"போ அம்மா, அந்த வீட்டு வாசற்படியைக் கூட நான் மிதிக்க மாட்டேன். மரியாதை தெரியாத ஜன்மம். அவள் முகத்தில்கூட விழிக்க மாட்டேன்" என்று குதித்தான் மணி.

"மணி! பேசாமலிருடா. பின்னைத்தாய்ச்சிப் பெண். அவள் எதிரிலேயே அவள் மனிதர்களைத் தூஷித்தால் மனசு சங்கடப்படாதா! சீருக்கும், வரிசைக்கும் மட்டும் உன்னைப் போகச் சொல்லவில்லை. பூவுக்கும் உண்டே புதுமணம். வரப் போக இருந்தால்தான் மதிப்பு. ராதாவுக்குப் பிறந்தகம் நன்றாக அமையவில்லை என்று பக்கத்து

விட்டுக் காமாட்சிக்கு எத்தனை இளப்பம் தெரியுமா! அவள் வாயை அடைக்கவாவது நீங்கள் அங்கு போய் விட்டுத்தான் வர வேண்டும்'' என்று கூறினாள் சீதையம்மாள்.

மணி வேண்டா வெறுப்பாகத்தான் ஒப்புக் கொண்டான். காப்பியைக் கொடுத்து விட்டு ஏதோ பேச வாயெடுத்தாள் ராதா.

''உஷ், பேசினால் தெரியுமா!'' என்று கோபிப்பவன் போலக் கத்தினான் மணி.

அவன் குறும்புச் சிரிப்பும், கேலிப் பார்வையும் ராதாவுக்குப் புரியவே இல்லை. திகைப்புடனேயே ராதா மாமியாரை நமஸ்கரித்து விட்டுக் கணவனுடன் புறப்பட்டாள்.

ரயில்வே ஸ்டேஷன் சென்றதும் மணி சென்னைக்கு இரண்டு டிக்கெட்டுகள் வாங்குவதைக் கண்ட ராதா ஒன்றும் புரியாமல் விழித்தாள். வண்டியில் உட்கார்ந்ததும் மணி விஷயத்தை விளக்கிக் கூறத் தொடங்கினான்.

''என்ன, ராதா! ஒன்றும் புரியவில்லையா? உன் மாமியும் கடிதம் எழுதவில்லை; பாட்டியும் எழுதவில்லை. என் திட்டம் என்ன தெரியுமோ? இந்த ராஜாவும் ராணியும் பட்டணம் போய் முதல் தரமான ஓட்டலில் அறை எடுத்துக் கொண்டு நாலு நாள் ஆனந்தமாக ஊரைச் சுற்றிப் பார்க்கப் போகிறார்கள். தீபாவளியன்று அண்டா ஸ்நானம் செய்து விட்டுக் கங்கா ஸ்நானம் செய்ததாகச் சொல்ல வேண்டியதில்லை. கங்கை கலக்கும் சமுத்திரத்திலேயே நாம் ஸ்நானம் செய்து விடலாம். உனக்குப் புடவை, எனக்கு வேஷ்டி, மோதிரம் எல்லாம் வாங்கிக் கொள்வோம். திரும்பி வந்து அம்மாவிடம், மாமி ரொம்பப் பிரியமாக இருந்ததாகச் சொல்லி விடலாம். எப்படி என் திட்டம்!'' என்றான்.

ராதாவின் முகம் வாடி விட்டது. அவள் பயந்து நடுங்கினாள். மாமியாரின் பிடுங்கலிலிருந்து அவளைத்



தப்புவிக்க மணி என்னவெல்லாம் பாடுபடுகிறான்!

** ** **

ராதா சந்தோஷத்துக்கும் துக்கத்துக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்தாள். விடியற்காலம் சென்னை வந்திறங்கினர், மணியும் ராதாவும். ராதா அதற்கு முன்னால் சென்னைக்கு வந்ததில்லை. சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டு நின்றாள். மணி சிறிது தூரத்தில் வாடகைக்கு வண்டி பேசிக் கொண்டிருந்தான்.

அச்சமயம் திடீரென்று நடுத்தர வயதுள்ள மாது ஒருத்தி ராதா அருகில் வந்து 'கண்ணம்மா' என்று அவளைக் கட்டிக் கொண்டாள். தன் கூடவே வந்த புருஷரிடம், ''கண்ணம்மா வர மாட்டாள் என்று சொன்னீர்களே. இதோ வந்து விட்டாள் பாருங்கள்'' என்றாள் குதூகலத்துடன்.

அந்த மனிதரின் முகம் அளவற்ற வேதனையைக் காட்டியது. ராதா, என்னவோ ஏதோ என்று பயந்து தவித்தாள். கூச்சலிட்டு விடுவாள் போலிருந்தது. அதற்குள் மணி அவர்கள் பக்கத்தில் வந்து விட்டான். அந்த மனிதர் மணியைத் தனியாக அழைத்து என்னவோ கூறினார்.

மணி, ''ராதா! இவர் என் நண்பர். அவர் வீட்டுக்கு நாம் வர வேண்டும் என்று கட்டாயப் படுத்துகிறார். புறப்படு'' என்றான்.

வழி முழுவதும் அந்த அம்மாள், ''கண்ணம்மா! உனக்கு நீலவர்ணம் ரொம்பப் பிடிக்குமே என்று நீலப் பட்டுப் புடவை தான் எடுத்து வைத்திருக்கிறேன். நீ கேட்டிருந்தாயே பச்சைக் கல் வளை, அது செய்யச் சொல்லி யிருக்கிறேன். கண்ணம்மா! உனக்கு என்ன கோபம்? ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?'' என்று தொண, தொணவென்று விடாமல் பேசிக் கொண்டே இருந்தாள்.

'அடையாளம் தெரியாமல் நம்மை யாரோ என்று நினைத்துக் கொண்டு உளறும் இந்தப் பைத்தியத்திடம் வந்து சிக்கிக் கொண்டோமே' என்று ராதா அலுத்துக் கொண்டாள்.

"கண்ணம்மா! உங்கப்பா முன்போல் இல்லே. உன் பேச்சை எடுத்தாலே அவருக்குப் பிடிக்க வில்லே. பேச்சை மாற்றி விடுகிறார். பெற்ற பெண் ணுக்குச் செய்யக்கூட மனமில்லே. மாப்பிள்ளை அப்பாவை ஏதாவது சொன்னாரா!" என்று கூறிக் கொண்டிருந்த மனைவியை அந்த மனிதர் சமாதானம் செய்ய முடியாமல் தவித்தார்.

கடைசியாக அவளை, நல்ல வார்த்தை சொல்லிப் படுக்க வைத்து விட்டு, "கண்ணம்மாவையும் மாப்பிள்ளையையும் கடை வீதி வரை கூட்டிக் கொண்டு போய் விட்டு வருகிறேன். தட்டான் பச்சைக் கல் வளையை இன்று கொடுப்பதாகச் சொல்லி யிருக்கிறான்" என்று சாக்குச் சொல்லி ராதா - மணியுடன் வெளியே புறப்பட்டார்.

மூவரும் 'பார்க்கில்' போய் உட்கார்ந்தனர். கண்களைத் துடைத்துக் கொண்டே பெரியவர் பேச்சை ஆரம்பித்தார்:

"கண்ணம்மா எங்கள் ஒரே குழந்தை. கண் ணுக்குக் கண்ணாக வளர்த்துக் கல்யாணம் செய்து கொடுத்தோம். எங்கள் துரதிர்ஷ்டம் ஊருக்குப் புறப்பட இருந்த மாப்பிள்ளை தவறுதலாக மின் சாரக் கம்பியைத் தொட்டு விட்டதால் மாண் டார். புருஷன் கண்ணெதிரே கருகுவதைக் கண்ட கண்ணம்மா அவனைக் காப்பாற்ற நினைத்து அவன் கையைப் பிடித்திழுத்தாள். எங்கள் வயிற் றில் தீயை மூட்டி விட்டு அவளும் போய் விட் டாள். பெண்ணையும் மாப்பிள்ளையையும் வரவேற்க ரயிலடிக்கு வந்திருந்த எங்களுக்கு இடி போல் இந்தச் செய்தி கிடைத்தது. இடீரென்று நேர்ந்த இந்தத் துக்கத்தால் என் மனைவியின் புத்தி பேதலித்து விட்டது. 'இன்று கண்ணம்மா வரு கிறாள். ரயிலடிக்குப் போக வேண்டும்.' இது ஒன்று தான் அவள் நினைவில் இருக்கிறது."

"ஐயோ பாவம்" என்று அங்கலாய்த்தான் மணி. ராதாவின் கண்களில் நீர் கசிந்தது.

"ராதாவைப் பார்த்ததும் நானே பிரமித்து விட்டேன். ராதாவைப் பார்த்தால் எங்கள் கண்ணம்மாவைப் பார்க்க வேண்டாம். அச்சு அடையாளம் அப்படியே இருக்கிறது. கடவுள் படைப்பில் என்னவெல்லாம் அதிசயம் பாருங்கள்! மணி! ராதா! நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வதெல்லாம், 'நான் கண்ணம்மா இல்லே, ராதா' என்று உண்மையை என் மனைவியிடம் கூறி விடாதீர்கள் என்பதுதான்" என்று விம்மி விம்மிப் பேசினார்.

பெரியவர் மறுபடியும் பேச ஆரம்பித்தார்: "நான் மகா பாவி. கடவுள் எனக்குச் சரியான தண்டனை தான் கொடுத்தார். என் மூத்த மனைவி இறந்ததும், அவள் பெற்ற குழந்தையைக் கண் டாலே எனக்குப் பிடிக்காமல் போய் விட்டது. அம்மாவை விழுங்க வந்த அசுர ஜன்மம் என்று பச்சைக் குழந்தையை வெறுத்தேன். மைத்துன னிடம் அதை விட்டு விட்டுக் கிளம்பியவன் தான். தாயில்லாக் குழந்தை தகப்பனின் அன்புக்கு எப்படி ஏங்கினாளோ! மாமா, மாமியிடம் எத்தனை கஷ்டப்பட்டாளோ! அவளை அப்படித் தவிக்க விட்டதன் பலன் தான் நான் இப்பொழுது பெண் ணையும் பறி கொடுத்து விட்டுப் பெண்டாட்டி யையும் பைத்தியமாகப் பார்த்துக் கொண்டு தவிக் கிறேன். என் மூத்தாள் பெண் உயிரோடு இருப் பது தெரிந்தால் கூடப் போதும். அவளிடம் மன் னிப்புக் கேட்டுக் கொண்டு, என் அந்தியக் காலத்தை நிம்மதியாகக் கழிப்பேன்" என்றார்.

"தேடிப் பார்க்கலாமே. உங்கள் மூத்தாள் பெண்ணின் பெயர் என்ன?" என்று பரிதாபமாகக் கேட்டாள் ராதா.

"அந்தப் பெண்ணுக்கு நான் அருமையாகப் பெயரிட்டுப் பெருமையாக அழைக்க வில்லே. என் மைத்துனன் என்ன பெயரிட்டு அழைத்தானோ, ஒன்றும் தெரியவில்லே. சிவராமனைப் பற்றி நான் திருச்சியில் விசாரிக்காத பேரில்லே, தேடாத இட மில்லே. 'சிவராமன் செத்துப் போய் ஆறுமாச மாயிற்று; அவன் மனைவி போன இடம் தெரிய வில்லே!' என்று நேற்றுத்தான் தகவல் வந்தது."

"சிவராமனா! ராதாவின் மாமா பெயர் கூட சிவராமன் தானே..." என்றான் மணி.

"உங்கள் பெயர் விசுவமில்லையா!" என்று துக்கம் நெஞ்சை அடைக்கக் கேட்டாள் ராதா.

"ஆமாம், அம்மா. உனக்கு எப்படித் தெரியும்!"

"அப்பா" என்று அவர் தோளில் சாய்ந்து கொண்டு கதறினாள் ராதா. தந்தையும் மகளும் அடையாளம் கண்டு கொண்ட காட்சியை ரசித்துக் கொண்டு நின்றான் மணி.

தீபாவளியன்று காலையில் காப்பியைக் கொண்டு வந்து தந்த ராதாவிடம் மணி, "எல்லோருக்கும் தலைதீபாவளிக்குப் புதுப்புடவை, புது நகை தான் கிடைக்கும். உனக்குப் புது அப்பா, புது அம்மா எல்லாம் கிடைத்திருக்கிறதே. இதுவரையில் எவருமே கண்டிராத தீபாவளிப் பரிசு அல்லவா இது! உன்னுடைய யோகமே யோகம்" என்று கூறிக் கலகலவென்று சிரித்தான்.



"அக்கா, இந்தக் காப்பியைக் கொஞ்சம் தொடு, அக்கா!"

"ஏண்டா?"

"அம்மா சீனி டப்பாவைப் பூட்டி வைத்து விட்டுப் போய்விட்டாள். காலையிலே அத்திம் பேர்தான் உன் கை பட்டாலே இனிக்கிறது என்று சொல்லிக் கொண்டிருந்தாரே!"



உங்கள் மங்களத்திருவிளக்குச் சுடர்
வருடம் முழுதும்
மங்காதொளி தருக!
வினைப்பயன்களின் வேதனைகள் குறைக. நோவு, தலை வலி, ஜலதோஷம் அல்லது ஜ்வரம் இவற்றினின்று ''அனாஸின்'' நிச்சயமாக நிவாரணம் அளிக்கும் என்பதை நினைவிலிருத்துங்கள்.
'அனாஸின்'
வில்லைகள்
வேதனைகளிலிருந்து விடுதலைபெற
இந்தியாவின் தயாரிப்பாளர்கள் :
ஜெயப்ரே, மானர்ஸ் & கோ. லிமிடெட். பம்பாய், கல்கத்தா, மதராஸ், டில்லி.
டிரேட் மார்க் உரிமையாளர்கள் : ஒயிட் ஹால் பார்மகல் கம்பெனி, நியூயார்க் யு.எஸ்.ஏ.

தாழையூர்க் கன்னி

சங்கர்

"ஏ, கன்னி!"

கோயில் சந்நிதியை நோக்கி ஒரு கும்பிடு போட்டு விட்டுப் பூக்குடலை கையில் ஊசலாட விரைவாகத் திரும்பிக் கொண்டிருந்த கன்னியம்மா சட்டென்று திகைத்து நின்றாள். காற்றோடு ஓடிக் கொண்டிருந்த தாழம்பூவின் நறுமணம் எல்லாத் திசைகளிலும் பரவியது.

யார் கூப்பிட்டது?

தெரிந்த குரல், ஆனால் எதிர்பாராத இடத்தில்! கன்னியம்மாவின் கண்கள் நாலாபுறமும் சுழன்றன.

பெற்றெடுத்த பிள்ளைகளால் புறக்கணிக்கப் பட்ட ஒரு தாயைப் போலப் பாழடைந்து நின்ற அந்தத் துர்க்கையம்மன் கோயிலைச் சுற்றிச் சூழ்ந்திருந்த சூன்யம்,—ஒரு காலத்தில் மக்கள் பக்தி வழி பாட்டுக்குப் பாத்திரமாகி, அதனை எதிரொலிக்கும் நினைவுச் சின்னமாக இன்றும் ஓடாமல் நின்று கொண்டிருக்கும் ஓட்டு உருவங்கள், வாகனங்கள்; நாவிருந்தும் நல்ல ஓசையிருந்தும் அன்னையின் மகத்துவத்தை மக்களுக்கு அறிவிக்க முடியாமல், களிம்பேறி, ஊமையாக, சரஞ்சரமாகத் தொங்கிக் கொண்டிருந்த வெண்கல மணிகள்,—சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சுதந்திரமாகக் கோபுரத்துச் சந்து பொந்துகளில் கூடு கட்டி வாழ்ந்து வரும் புறாக் கணங்கள்—இவைகளைத் தவிர அங்கே அந்த அந்தி நேரத்தில் வேறு மனித சஞ்சாரத்தையே காணோம்.

பின் யார் கூப்பிட்டது!

"ஏதோ பிரமை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டே, கன்னியம்மா மேலே நடந்தாள். பூக்குடலையின் சலனத்தால் கலைந்த காற்றோடு பூவின் மணமும் கலந்து மிதந்தது.

அதைத் தொடர்ந்து அந்த வாசனையை "ம்ம்ம்...ம்..." என்று ஆர்வத்தோடு ஆழ்ந்து முகரும் ஒலி கேட்கவே, கன்னியம்மா கலவரத்துடன் மீண்டும் திரும்பிப் பார்த்தாள்.

இப்போது அவளுடைய பார்வை, ஒலி வந்த திக்கில் பாய்ந்து சென்றது. அவ்வளவுதான்; அவள் முகத்தில் சோகமும் விவரிக்க முடியாத உணர்ச்சியும் தென்பட்டன.

கோயில் பிராகாரச் சுவரை அடுத்து நின்று கொண்டிருந்த வில்வ மரக் கிளையில் சாய்ந்தபடியே உட்கார்ந்து கொண்டு கலகலவென்று நகைத்தான் அழகு நம்பி!

அங்கு நிற்கப் பிடிக்காதவளைப்போல மேலே நடக்க யத்தனித்த கன்னியம்மாளை, மரத்திலிருந்து கீழே குதித்த அழகு நம்பி ஓடி வந்து இரு கைகளையும் விரித்து வழி மறித்தான்.

"கன்னி, நிஜமாகவே நீ பயந்து போய் விட்டாயா! உன்னைப் பார்ப்பதற்காக எவ்வளவு நேரம் நான் இந்தக் கோயிலில் தவம் இருந்தேன், தெரியுமா!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினான் அழகு நம்பி.

அவனை ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சிய கன்னியம்மா தொண்டை தழுதழுக்க, "இதோ பாருங்கள், ஊரிலே தள்ளி வைக்கப்பட்ட ஒரு பெண்ணோடு உங்களுக்கு என்ன பேச்சு! அன்றைக்கு உங்கள் அம்மா என்னைத் திட்டினதை அதற்குள் மறந்து விட்டீர்களா!" என்றாள்.

அழகு நம்பி இடைமறித்தான்.

"கன்னி, அம்மா பேசினதை மறந்து விடு. நீ போன பிறகு அவளே மிகவும் வருத்தப் பட்டாள். பழையனூர்க்காரர்களைப் பற்றி நீ கொஞ்சமும் பயப்பட வேண்டியதில்லை. ஆனால் உங்களைத் தாழையூர் ஜனங்கள் தள்ளி வைக்கலாம்; உன் கொண்டையிலிருக்கும் தாழம்பூகூட அதன் மணத்தைத் தள்ளி வைக்கலாம். ஆனால் என் உள்ளத்தை விட்டு உன்னை ஒருபோதும் ஒருவராலும் தள்ளி வைத்துவிட முடியாது."

கன்னி அப்படியே கற்சிலையாக மெய்ம் மறந்து நின்றாள். அழகு நம்பி அவள் குடலையிலிருந்து ஒரு முல்லைச் சரத்தை எடுத்து முகரப் போனான். கன்னியம்மா வெடுக்கென்று அவன் கையிலிருந்த முல்லைச் சரத்தைப் பிடுங்கினாள்.

பூவை முகர முடியாமல் போய் விட்டாலும், அப் பூவைக் காட்டிலும் மென்மையான அவள் மலர்க்கரம் தன்னை ஸ்பரிசித்ததில் அழகு நம்பிக்கு அளவற்ற திருப்தி ஏற்பட்டது.

"இப்படிக் கொடுக்க மாட்டாயா, கன்னி!" என்று மீண்டும் கரங்களை நீட்டினான் அவன்.

"போதும். அன்றைக்கு உங்கள் அம்மா சொன்னதை மறந்து விட்டீர்களா!" என்று கூறியவள், வக்கணையான குரலில், "எங்கள் பூக்காரச் சாதியே அப்படித்தான்; நீங்கள்! மணமாலைக்குள் பாம்பை வைத்துக் கட்டிய பரம்பரையல்லவா!" என்று குத்தலாகக் கேட்டாள்.

அவள் குறும்புப் பேச்சைக் கேட்டு ஒரு கணம் வியந்த அழகு நம்பி, அன்புடன் அவள் கரங்களைப் பற்றியவாறே சொன்னான்:

"கன்னி, இந்த அம்பிகை சந்நிதியில் வைத்துச் சொல்லுகிறேன். என்னுடைய அம்மா மட்டு மல்ல, இந்தத் தாழையூர்க்காரர்கள் எல்லோரும் எதிர்த்தாலும் சரி, நான் உன்னைத் தவிர வேறு யாரையும் கண்ணெடுத்துக்கூடப் பார்க்க மாட்டேன். தெரியுமா! இது சத்தியம்."

இரவு உலகை இறுகத் தழுவ முற்படும் அந்த நேரத்திலே, அங்கே அவ்விருவருக்கு மிடையில் சிறிது நேரம் ஆழ்ந்த மௌனம் நிலவியது. வெறும் வார்த்தைகளும் அவற்றின் ஒலியும் வெளியிட்டு விட முடியாத பரஸ்பர நேசத்தை இருவருக்கு மிடையில் பரிமாறியது அந்த மௌனம்.

மறுகணம் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளைப் போல, பூக்குடலையிலிருந்த அம் முல்லைச் சரத்தை எடுத்து அவன் கையில் கொடுத்து விட்டுப் பழையனூரை நோக்கி விரைந்தாள் கன்னியம்மா.

★

பொய்முத்தாறின் வட கரையில் தாழையூர்; தென் கரையிலே பழையனூர். அழகிய அவ்விரு கிராமங்களையும் இணைத்துக் கொண்டு ஓடிய பொய்முத்தாறு வற்றாத ஜீவ நதியாக விளங்கியது. அந்த நதியின் சலசலவென்ற பிரவாக ஒலத்தை நாம் கொஞ்சம் உன்னிப்பாகக் கேட்டால், அதில் ஒரு ஏக்க பாவம் இழையோடு வதைக் கவனிக்கலாம்.

போன தலைமுறையில் இரண்டு கிராமங்களும் நட்போடு வாழ்ந்து வந்தன. ஆடி மாதம் பதினெட்டாம் பெருக்குப் புதுப்புனல் விழா அங்கே

வெகு விமரிசையாக நடக்கும். இரு கிராமத்து மக்களும் அன்னியோன்னியமாக அன்போடு கூடி மகிழ்வார்கள். குழந்தைகளின் ஆனந்தக்களிப்பைப் பார்ப்பதற்கே கோடிக் கண்கள் வேண்டும்! ஆற்றுப் படுகையின் பொன் மணல் விரிப்பில் வெண் முத்துக்களைப்போல உதிர்ந்து கிடக்கும் புன்னை மொட்டுகளைக் குழந்தைகள் பொறுக்கி மாலையாகக் கோத்துப் போட்டுக் கொண்டு குதித்து விளையாடுவார்கள். ஒருவேளை அதன் காரணமாகத்தான் "பொய் முத்தாறு" என்று அதற்குப் பெயர் ஏற்பட்டதோ, என்னவோ!

அன்று உலவி வந்த அந்த உறவு இப்போது எங்கே போய் விட்டது! மெய்யாக நிலவி வந்த பாச பந்தங்கள் எல்லாம் இன்று பொய்யாக, பழங்கதையாகப் போனதற்கு யார் காரணம்!

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கதை கற்பித்தார்கள். அந்தப் பகைமைக் கதையை ஏன் இன்னும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்! ஊர் எல்லையும் கயாகலமும் அவர்களின் விரிந்த இதயத்தைச் சுருக்கி வேலி கட்டின.

பழையனூர் நாட்டாண்மை கொஞ்சம் பரந்த நோக்கமுடையவர். சமரசத்துக்கு எவ்வளவோ முயன்று பார்த்தார். ஆனால் தாழையூர் நாட்டாண்மை நல்லசிவம் சிறிதும் மசிந்து கொடுக்க வில்லை.



இந்தப் பகைமைச் சிக்கலில் அகப்பட்டுக் கொண்டு துன்பமடைந்தோர் எத்தனையோ பேர்.

என்றாலும் நம் கதைக்குக் காரணமானவர்கள் மூன்று பேர்! முதல் இருவர் இளங் காதலர்களான கன்னியம்மாவும் அழகுநம்பியும்; அடுத்தது தாழையூர் தெய்வமான துர்க்கையம்மன்தான்!

ஒற்றுமையோடு இருந்தபோது விளைச்சல் பெருகிச் செல்வச் செருக்குடன் வாழ்ந்துவந்த மக்கள் பிரிவினைக்குப் பின் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்கள் மனத்தைப் போல் வானமும் பொய்த்து, வயற் காடெங்கும் வறட்சி தட்டியது. வறுமை தாண்டவமாடவே தாழையூர் துர்க்கையம்மன் கோயிலும் கொஞ்சம் கொஞ்சமாகத் தூர்ந்து கொண்டே வந்தது. விழாக் காலங்கள் கவனிப்பாரற்றுக் கடந்து சென்றன.

இதற்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு. அதாவது அந்தத் துர்க்கையம்மனைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் பழையனூரில் தான் இருந்தனர். ஆகவே மக்களினின்றும் பிரிக்கப்பட்ட அந்தக் கோயில் பொய்முத்தாற்றின் வடகரையில், தாழையூர் நத்தத்தில் தனியே நின்று கொண்டிருந்தது. அத் தனிமைக்கு மத்தியிலும் அத் தெய்வத்தை அங்கு சென்று வழிபடும் ஜீவன்கள் ஊருக்கொருவராக இருவர் இருந்தனர். அவர்கள் வேறுயாருமில்லை; தாழையூர்க் கன்னியும் பழையனூர் அழகு நம்பியுந்தான்!

கன்னியம்மாவும் அவள் பாட்டியும் தாழையூரிலே வசித்து வந்தனர். பூ விற்பது அவர்கள் பிழைப்பு. ஒரு நாள் கூடை நிறையத் தாழம்பூ மடல்களுடனும் கையில் ஒரு பந்து முல்லைச் சரத்துடனும் கன்னியம்மா பழையனூருக்குப் போய்க் கொண்டிருக்கும் பொழுது, தற்செயலாகத் தாழையூர் நாட்டாண்மை நல்லசிவத்தின் கண்களில் பட்டு விட்டாள். அவர் கோபம் உச்ச நிலையை அடைந்து விட்டது.

"இதோ பாரு பொண்ணு, உன் பூ வியாபாரத்தை இன்றோடு நிறுத்திப் போடு. தாழையூர்ப் பூவின் ஒரு இதழ் கூடப் பழையனூர்ப் பக்கம் போகக் கூடாது!" என்று மிகுந்த கோபத்துடன் இரைந்து விட்டுப் போய் விட்டார்.

கன்னியம்மாவுக்குத் திகைக்கிறது. அவளுக்

குப் பழையனூரில் நல்ல வியாபாரம். மாலையில் பெண்கள் அவளை எதிர் நோக்கி இருப்பார்கள். எல்லாவற்றையும்விட அழகு நம்பி ஏங்கிக் கொண்டிருப்பானே! என்ன செய்வது!

ஆகவே அந்த மயக்கத்திலிருந்த கன்னியின் காதில் நாட்டாண்மைக்காரர் பேச்சு சரியாக விழவில்லை. தினமும் தலை மறைவாகப் பூக்கொண்டு போக ஆரம்பித்தாள்.

இந்தச் செய்தி காதுக்கு எட்டியதும் நல்ல சிவம் துடித்துப் போனார். கன்னியம்மா ஊரை மதிக்காமல் நடந்த காரணத்துக்காக அவளையும் அவள் பாட்டியையும் ஊரிலிருந்து விலக்கிவைத்துவிட்டார். தாழையூர் மக்கள் யாரும் அவர்களிடம் பூ வாங்குவதோ பேசுவதோ கூடாது என்று ஊரில் கூட்டம் கூடித் தீர்மானிக்கப் பட்டது.

கன்னியம்மா அதைக் கண்டு கொஞ்சமும் கலங்கவில்லை. வழக்கம்போல் அவள் தோட்டத்துக் கொடி முல்லை பூத்துச் சொரிந்தது. தாழை மடல் பிளந்து வாசம் கக்கியது. கன்னியம்மாவின் பூ வியாபாரம் வழக்கத்துக்கு அதிகமாகப் பழையனூரை நோக்கித் திரும்பியது.



★

கன்னியம்மா பேச்சைக் கேட்ட பொழுது அவள் பாட்டிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"என்ன, இந்தப் பிறந்த மண்ணை உதறி விட்டுப் பழையனூருக்கா என்னைக் கூப்பிடுகிறாய்! என் உயிர் போவதாக இருந்தாலும் அது நடவாத காரியம்... இதோ பார் கன்னி, நீ வேண்டுமானால் அந்தப் பயல் அழகோடு பழையனூருக்குப் போ. ஆனால் என்னை மட்டும் கூப்பிடாதே!" என்று தெளிவாகச் சொல்லி விட்டு, இடித்து உருட்டிய வெற்றிலையை வாய்க்குள் போட்டு அடக்கிக் கொண்டு மௌனமாக இருந்தாள்.

கன்னியம்மா எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கிழவி தாழையூரை விட்டு நகர மறுத்து விட்டாள். ஆனால் கன்னிக்கு ஒருவகையில் சந்தோஷம்; தன் காதலை ஆதரித்து விட்டாளல்லவா!

கிழவியின் சம்மதம் அழகு நம்பியின் காதுக்கு எட்டியதும் அவனும் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தான். கருக்கல் நேரத்தில் யாரும் அறியா வண்ணம் தாழையூருக்கு வந்து பாழடைந்து கிடந்த துர்க்கையம்மன் கோயிலில் கன்னியைச் சந்தித்து வந்த அழகு நம்பி, இப்போது கன்னியம்மாவின் வீட்டுக்கே வரத் தொடங்கினான். கிழவிக்கு, அவன் நாள் தவறாமல் அக்கறையுடன் கொண்டு வரும் காணிக்கைப் பொருள்களான பழையனூர் கொழுந்து வெற்றிலை, கமுகம் பாக்கு இவைகளோடு அவனையும் பிடித்திருந்தது.

ஆனால் காலடையில் கிழவிக்கு உள்ளூற ஒரு கவலை அரித்து வந்தது. ஊரார் அவர்களைத் தள்ளி வைத்திருக்கும் பொழுது, எப்பொழுது எப்படிக் கன்னிக்கு ஊரறியக் கல்யாணத்தை நடத்துவது என்பதுதான். அதுவும் பழையனூர் வாசியான அழகு நம்பிக்கு எப்படிப் பெண்ணைக் கொடுப்பது என்பது அவளுக்கு இன்னும் பெரிய பிரச்னையாக இருந்தது.

"அழகு, நீ தாழையூர்ப் பக்கம் நடமாடுகிற விஷயம் ஒருத்தருக்கும் தெரியப் படாது. நாட்டாண்மைக்காரருக்கு எங்கள் மேல் ஏற்கெனவே கோபம். அதனாலே உனக்கு ஏதாவது......" என்றாள் கிழவி.

"அதெல்லாம் நீ ஒன்றும் கவலைப் படாதே, பாட்டி. துர்க்கையம்மன் கிருபையாலே எனக்கு எந்த ஆபத்தும் வராது. அப்படியே வந்தாலும் கன்னியம்மா விஷயத்திலே என் உயிரைக் கூடக் கொடுக்க நான் தயங்க மாட்டேன்."

கன்னியின்மேல் அவனுக்கு இருக்கும் ஆசையும் அன்பும் கிழவியை மெய்சிலிர்க்கச் செய்தன.

★

ஜய வருஷம் பிறந்தது. அந்த வருஷப் பிறப்பு அவ்விரு கிராமங்களின் வாழ்க்கையில் ஒரு மகத்தான மாறுதலை ஏற்படுத்தியது. வானம் பொழிந்தது. மக்கள் வாழ்விலும் கொஞ்சம் பசுமை துளிர்த்தது. தாழையூரில் ஒரு புது ஜீவன் பிறந்த மாதிரி தோன்றியது. பழை

சாவணன்.

யனூர் மக்களுடைய அன்பும் ஆதரவும் பராமுகமாயிருந்த தாழையூர் மக்களை ஈர்த்தன.

அந்தச் சூழ்நிலையில்தான் அந்த முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது.

அன்று ஆடிப் பெருக்கு. தாழையூர் மக்கள் பொய்முத்தாற்றங் கரையிலே உல்லாசமாகக் கூடி இன்புற்றனர். ஆனால் அன்று முழுதும் கன்னி வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்தாள். ஊர் பூராவும் ஆற்றின் கரையிலே கூடியது அவர்கள் சந்திப்புக்கு இடையூறாக இருந்தது. அழகு நம்பி வரமாட்டான் என்ற நினைப்பில் கன்னியம்மா வீட்டிலேயே சோர்ந்து கிடந்தாள்.

ஆற்றின் தென் பக்கம் பழையனூர்க் கரையில் நின்று கொண்டு எதிர்க்கரையில் கன்னி தென்படுகிறாளா என்று காத்திருந்து பார்த்து விட்டுப் பொறுமை யிழந்தான் அழகு நம்பி. தன்னைச் சுற்றிக் கவியும் இருளையும் கவனியாமல் அப்படியே பிரமை பிடித்தவனைப் போலப் புன்னை மரத்தடியில் உட்கார்ந்தான்.

வட கரையில் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து கொண்டு வந்து, முடிவில் ஓரிரு உருவங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடமாடுவது இருளில் இலேசாகத் தெரிந்தது.

இந்நிலைமையில், திடீரென்று இருட் படலத்தைப் பிளந்து கொண்டு 'கூ கூ' என்ற கூக்குரல் அழகு நம்பியின் மோனத்தைக் கலைத்தது. எதிர்க்கரையில் படித்துறையில் நின்று கொண்டிருந்த சில பெண்களிடமிருந்து அந்தக் குரல் வருவதாகத் தெரிந்தது.

அழகு பரபரப்புடன் ஆற்றுக்குள் இறங்கினான். தூரத்தில் தத்தளிக்கும் ஒரு உருவத்தைப் பிரவாகம் அடித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தது. அடுத்த கணம் சரேல் என்று பிரவாகத்தைக் கிழித்துக் கொண்டு பாய்ந்த அழகு, பத்து வயதுப் பாலகன் ஒருவனை இழுத்துக் கொண்டு மீண்டும் பழையனூர்க் கரைக்கு வந்து சேர்ந்தான். பையன் தண்ணீரைக் குடித்திருந்தபடியால் மூச்சு விடுவதற்குக் கஷ்டப்படவே, அவனைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு சிகிச்சை செய்வதற்காகப் பழையனூர் நாட்டாண்மைக்காரர் வீட்டை நோக்கி ஓடினான்.

தாழையூர் நாட்டாண்மைக்காரர் நல்லசிவத்தின் பிள்ளை ஆற்றில் தவறி விழுந்த விவரமும் அதைப் பழையனூர்வாசி ஒருவன் காப்பாற்றிக் கரை சேர்த்துத் தூக்கிக் கொண்டு போன விவரமும் தாழையூர் பூராவும் நெருப்புப் போல் பரவின.

மகனுக்கு ஏற்பட்ட ஆபத்தை நினைத்துப் பார்க்கவே நல்லசிவத்துக்கு நெஞ்சு நடுங்கியது. இன்னது செய்வதென்றறியாமல் மாலை மாலையாகக் கண்ணீரைச் சிந்தினார். பிள்ளையை எண்ணிப் பரிதவித்த அவர் மனைவி "வாருங்கள், பழையனூருக்குப் போய்ப் பிள்ளையை அழைத்துக் கொண்டு வருவோம். இவ்வளவு காலும் அடம் பிடிச்சப் பகையாக்கினது போதும். போகலாம் வாருங்கள்" என்று படபடப்புடன் அழைத்தாள்.

நல்லசிவத்தின் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது. போலி வைராக்கியத்தை உதறி எறிந்து விட்டு மனைவியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு பழையனூரை நோக்கிப் புறப்பட்டார். அவர்கள் இருவரும் ஆற்றுப் பாலத்தில் கால் வைத்தபோது நல்லசிவத்தின் நெஞ்சு நெகிழ்ந்தது.

"கொஞ்சம் இரு பொன்னம்மா, ஆற்றிலே இரண்டு முழுக்குப் போட்டு விட்டு வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய்க் குளித்து விட்டு வந்தார் நல்லசிவம்.

புத்திர பாசத்தால் தவித்தபடியே ஓடோடியும் வந்த அந்தப் பெற்றோர்களை இதயம் குளிர வரவேற்றார் பழையனூர் நாட்டாண்மைக்காரர். இருவரும் ஒருவரை யொருவர் மனமார அன்போடு தழுவிக் கொண்டனர்.

குழந்தையைக் கண்ட தாய் ஓடிப் போய் அவனை "என் கண்ணே!" என்று வாரியணைத்துக் கட்டிக் கொண்டாள்.

பகைமை மறைந்தது. அன்பு பிறந்தது. நல்லசிவம் தன் மகனைக் காப்பாற்றிய அழகு நம்பியை நன்றியோடு பார்த்தார். அதன் பிறகு அழகு நம்பியின் துணையோடு தாழையூருக்கு அவர்களை அனுப்பினார் பழையனூர் நாட்டாண்மைக்காரர்.

கையில் அரிக்கன் லாந்தருடன் ஆற்றுப் பாலம் வரையில் வந்து வழி யனுப்பினான் அழகு நம்பி. நல்லசிவம் ஆற்றைப் பார்த்தார். பூமியை மட்டுமல்லாமல் இரு கிராமத்து மக்களையும் ஒன்றாக இணைத்த பொய்முத்தாறு அமைதியாகவும் கம்பீரமாகவும் ஓடிக்கொண்டிருந்தது.

பிரியா விடைபெற்ற நல்லசிவத்தின் காதோடு காதாக அழகு நம்பி ஏதோ கூறி விட்டு நாணத்தால் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டான்.

நல்லசிவம் சிரித்தார்.

"என்ன தம்பி அப்படிச் சொல்லி விட்டாய்! இனிமேல் நமக்குள்ளே ஏது பகை? எல்லாம் ஆற்றோடு போய் விட்டது" என்று உணர்ச்சி பொங்கக் கூறியவர் கலகலவென்று சிரித்தார்.

மேலும் அவர் தொடர்ந்து, "நீ சிறிதும் கவலைப்படாதே; அந்தக் கன்னியைப் பிடித்து உன்னிடம் ஒப்படைக்க வேண்டியது இனி என்னுடைய கடமை" என்று கூறினார்.

★

மறு நாள் காலையில் ஒன்றுபட்ட அக்கிராமத்து மக்களின் மலர்ந்த முகங்களைப் பார்க்க ஆதவன் வழக்கத்துக்கு முன்னதாகவே எழுந்து வந்தான். எங்கு பார்த்தாலும் குதூகலமும் கொண்டாட்டமுமாக இருந்தன.

நாட்டாண்மைக்காரர் தம் மனைவியுடன் சென்று கன்னியம்மாவின் பாட்டியைப் போய்க் கண்டார். கன்னியம்மா ஆனந்தம் நிலை கொள்ளாமல் பூரித்துப் போயிருந்தாள். கல்யாணப் பேச்சை முடித்துக் கொண்டு வெளி வந்த அவர் கண்களில் கன்னியம்மா தென்பட்டாள்.

"பலே கைக்காரிதான், கன்னி நீ! உனக்குப் பூக் கட்ட மட்டுந்தான் தெரியும் என்று நினைத்தேன்."


"ஏன், புருஷனைக் கூடக் கட்டிக்கிட்டாளாக்கும்!" என்று இடைமறித்துக் கேட்டாள், அவருடைய மனைவி சிரித்துக் கொண்டே.

"அதைச் சொல்ல வில்லை. பழையனூரையும் தாழையூரையுமே சேர்த்துக் கட்டி விட்டாளே!" என்று சொல்லிச் சிரித்தார் அவர்.

கன்னியம்மாவின் விருப்பப்படி அவளுக்கும் அழகு நம்பிக்கும் தாழையூர் துர்க்கையம்மன் கோயில் சன்னதியில் திருமணம் விமரிசையாக நடந்தது. கோயிலில் உறங்கிக் கிடந்த மணிகள் மறுபடியும் ஒலிக்கத் தொடங்கின.

பழையனூர் மக்கள் தங்கள் குல தெய்வமான மாதாவைக் காணத் திரள் திரளாக வந்தனர். கோயில் மீண்டும் உயிர் பெற்றது. அன்னையின் அருளால் ஒன்றுபட்ட மக்களின் ஒற்றுமையான உழைப்பால் பல வளங்களும் பெருகின.

இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் கன்னியம்மாவின் கல்யாணத்தைத் தொடர்ந்து பல



திருமணங்கள் நடந்தன. பழையனூர் சோமன் தாழையூர்க் குழலியையும் தாழையூர் ரங்கன் பழையனூர்க் கோதையையும் கைப்பிடித்தனர்.

*

சரிகை வேஷ்டி அரையில் பளபளக்க, கையில் ஒரு கவுளி துளிர் வெற்றிலே, பச்சைப் பாக்கு இவைகளுடன் வீட்டுக்குள் நுழைந்த கணவனைக் கண்டு பூரித்துப் போனுள் கன்னியம்மா.

" கன்னி, இந்தா கொழுந்து வெற்றிலே. ஆனல் இது உன் பாட்டிக்கு இல்லே. உனக்குத்தான், போட்டுக் கொள்" என்று சொல்லி அவளிடம் கொடுத்தான் அழகு நம்பி.

" ஊம் ! உங்களுக்கு நினைத்த காரியம் முடிஞ்சு போச்சு. இனிமேல் இந்தக் கிழவியை ஏன் கவனிக்கப் போறீங்க!" என்று ஜாடையாகக் கூறிய கிழவி, பூக்கூடையை எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டாள்.

"பாட்டி ! இருட்டுவதற்குள் வந்து விடு" என்று வழியனுப்பினுள் கன்னி. கிழவி தலை மறைந்ததும் கன்னியைப் பார்த்துப் புன்முறுவல் செய்து கொண்டே புதிர் ஒன்று போட்டான் அழகு நம்பி :

"செக்கச் சிவந்திருக்கும்
செங்காடு பூத்திருக்கும்
— அது என்ன !"

"தெரியவில்லியே!" என்ற பாவத்தில் உதட்டைப் பிதுக்கினுள் கன்னி.

"தெரியவில்லியா ! உன் உதடுகள்தான். கண்ணுடியைப் பார் !" என்று சொல்லி அவள் கரங்களைப் பற்றினுன் அழகு நம்பி.

கன்னியம்மாவின் அதரச் சிவப்பு முகம் பூராவும் பரவி வியாபித்தது. கைகளே விடுவித்துக் கொண்டு வெட்கத்தால் உள்ளே ஓடினுள் கன்னி.

எமது பாலிஸிதாரர்கள்
அன்பர்கள் அனைவருக்கும்

தீபாவளி வாழ்த்துகள்

உங்களுக்கு வேண்டிய சகலவிதமான இன்ஷ்யூரன்ஸிற்கும் நாங்கள் குறைந்த விகிதங்களில் உயர்ந்தபக்ஷ அனுகூலங்களும், சிறந்த வசதிகளும் வழங்குகிறோம்

வான்கார்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

வான்கார்டு பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

"வான்கார்டு ஹவுஸ்"

11 & 12, செகண்ட் லைன் பீச் :: மதராஸ்-1



புகை வண்டியிலே

பெ. தூரன்

இரண்டாம் வகுப்பு ரயில் பெட்டிகளின் வெளியே செருகியுள்ள ரிசர்வேஷன் கார்டுகளை ஒவ்வொன்றாகப் படித்துக் கொண்டே அவன் நடந்தான். 'சுந்தர வதனன்' என்று ஒரு கார்டில் பெயரைக் கண்டதும் அந்தப் பெட்டியில் தனது படுக்கையை விரிக்கும்படி அவன் போர்ட்டருக்குக் கம்பீரமாக உத்தரவு கொடுத்தான். பெட்டிக்குள்ளே நுழைந்து அங்கிருந்த நிலைக் கண்ணாடியில் ஒருமுறை தனது முகத்தைப் பார்த்துக் கொண்டான்.


"சுந்தரவதனன், சுந்தரவதனன்—என்ன அழகான பெயர்! ஆனால் முகத்தைப் பார்த்தாலோ?"—இந்த நினைப்பு அவனுக்கே சிரிப்பை உண்டாக்கியது.

எட்டுக்கால் பூச்சி மீசையும் உதட்டை வெளியே தள்ளித் துருத்திக் கொண்டு தோன்றும் பல் வரிசையும் அவனுடைய முகத்துக்கு ஒரு விநோதமான தோற்றமளித்தன. பச்சை நிறத்திலே நல்ல தடிப்பான சட்டம் போட்ட மூக்குக் கண்ணாடி ஒன்றும் அவன் அணிந்திருந்தான். அது அந்தத் தோற்றத்தை மேலும் மிகைப்படுத்திக் காட்டியது. ஆனால் பெயர் மட்டும் சுந்தரவதனன்!

"அதனாலென்ன? நான்தானா அப்படிப் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறேன்? நம் நாட்டிலே எத்தனையோ பேருக்கு இப்படி 'இயற்கைக்கு நேர் மாறாகப் பெயர் அமைந்திருக்கவில்லையா? நேற்றுக் கடற் கரையிலே பார்த்தேனே அந்தப் பெண்ணுக்கு மீனாட்சி என்று பெயராம். அவளுக்கு மீனைப் போலவா கண்ணிருந்தது; புளியங் கொட்டை போலத்தானே காட்சியளித்தது?" என்று இவ்வாறு அவன் சிந்தனை ஓடிற்று.

புளியங் கொட்டையைக் கண்ணுக்கு உபமானமாக நினைத்ததில் அவனுக்குத் தன் கற்பனைத் திறமையைப் பற்றி ஒரு தனிப் பெருமையும் நம்பிக்கையும் எழுந்தன. படுக்கையைத் தூக்கிக் கொண்டு வந்ததற்காகப் போர்ட்டர் கூலி கேட்டபோதுதான் தற்பெருமை செய்து கொண்டிருந்த அவனுடைய சிந்தனை திடீரென்று தடைப்பட்டது.

போர்ட்டருக்கு நான்கணாவைக் கொடுத்து அனுப்பியபின், சுந்தரவதனன் ரயிலை விட்டுக் கீழிறங்கிப் பிளாட்பாரத்தில் அங்குமிங்கும் நடமாடத் தொடங்கினான். அங்கு கண்ட காட்சிகள் அவன் சிந்தனைக்குப் புதிய விருந்தாக இருந்தன. "காரியாலயத்துக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பதால் எத்தனை அனுபவங்கள் எனக்குக் கிடைக்காமல் போகின்றன! இன்றாவது வெளியே உல்லாசமாகப் போய்வரப் புறப்பட்டேனே, ரொம்ப புத்திசாலித்தனமான காரியம்" என்று தன்னைத்தானே மெச்சிக் கொண்டான்.



அவன் கண்கள் துருதுருவென்று வருவார் போவாரை யெல்லாம் மிகவும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தன.

★

ரயில் புறப்படுவதற்கு அறிகுறியாக முதல் மணி அடித்தது. சுந்தரவதனன் தான் ஏற வேண்டிய பெட்டியை நோக்கி நடந்தான். அந்தப் பெட்டிக்குள்ளே இப்பொழுது தாடியும், துருக்கிக் குல்லாவுமாக ஒரு தடி மனிதர் அமர்ந்திருப்பதைக் கண்டான். வண்டியில் ஏறும் பாவனையிலேயே அவர் ரிசர்வேஷன் கார்டை மற்றொரு முறை பார்த்தான். அதிலே 'சையத் காதர்' என்ற பெயர் அவன் பெயருக்குக் கீழே தென்பட்டது.

"கூடப் பிரயாணம் செய்பவரின் பெயரை எவ்வளவு நாகரிகமாகத் தெரிந்து கொண்டேன்!" என்று அவனே பெருமைப் பட்டுக் கொண்டு விரிக்கப் பட்டிருந்த தனது படுக்கையிலே அமர்ந்தான். எதிர்ப் பக்கத்து மெத்தையிலே மற்றவர் அமர்ந்து தாடியை நிதானமாக நீவிக் கொண்டிருந்தார். அந்தப் பெட்டியில் அவர்கள் இருவரையும் தவிர வேறு யாரும் ஏறவில்லை.

சரியாக இரவு எட்டே கால் மணிக்கு நீலகிரி எக்ஸ்பிரஸ் சென்ட்ரல் ஸ்டேஷனை விட்டுக் கிளம்பியது.

சுமார் பதினைந்து நிமிஷம் இருவரும் மௌனமாகவே இருந்தனர். அந்தப் பதினைந்து நிமிஷம் ஒரு யுகம்போல இருந்தது. சுந்தர வதனனால் அதற்கு மேல் அந்த மௌனத்தைத் தாங்க முடியவில்லை. "சையத் காதர் என்பது தாங்கள்தானே?" என்று பேச்சை ஆரம்பித்தான்.

அவன் பேச்சைக் கேட்டு மற்றவருக்கு ஏதோ சந்தேகம் தோன்றி யிருக்கிறது. அதனால்தான் அவர் பதில் கொடுப்பதற்குச் சற்றுத் தாமதமாயிற்று.

"உங்கள் பெயர் எப்படி எனக்குத் தெரிந்தது என்று ஆச்சரியப் படுகிறீர்களோ? அதெல்லாம் வெகு சுலபம். எதையும் கவனித்துப் பார்க்கும் திறமை கொஞ்சம் இருந்தால் போதும்" என்று அவன் சற்றுப் பெருமையோடு கூறினான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை.........நான் என்னமோ யோசனை செய்து கொண்டிருந்தேன்......ம்...தாங்கள் எதுவரையிலுமோ?" என்று சையத் காதர் கேட்டார்.

"ரொம்ப தூரம் ஒன்றுமில்லை. சும்மா அப்படியே புறப்பட்டேன்" என்று அனுயாசமாகப் பதில் கூறிவிட்டுச் சுந்தரவதனன் யோசனையில் ஆழ்ந்தான்.

"இந்த மனிதனுடைய குரல் பழகின குரலாகத் தெரிகிறதே, இவனை எங்கு பார்த்திருக்கிறேன்? ஞாபகத்துக்கு வரவில்லையே? மனிதர்களுக்குள்ளே இப்படிக் குரல் ஒற்றுமை எவ்வளவிருக்கிறது பார்த்தாயா? இதை நான் இதுவரையில் தெரிந்துகொள்ளாதது ஆச்சரியந்தான்" என்று அவன் தன்னைத் தானே கடிந்து கொண்டான்.

"இப்பொழுதெல்லாம் ரயில் பிரயாணம் அவ்வளவு ஜோர் இல்லை. திருட்டு ரொம்ப ஜாஸ்தியாகி விட்டது. கூடப் பிரயாணம் செய்பவர்களையே நம்ப முடிகிறதில்லை" என்று சையத் காதர் தமக்குத் தாமே ஒரு மாதிரியாகச் சொல்லிக் கொண்டார்.

'திருட்டு' என்ற வார்த்தையைக் கேட்டதும் சுந்தரவதனன் திடுக்கிட்டுப் போனான். ரயிலிலே நடைபெறும் பயங்கரத் திருட்டுக்களைப் பற்றி அவன் பத்திரிகையிலே ஒன்று விடாமல் படித்திருக்கிறான். அவையெல்லாம் அவன் நினைவிலே வந்தன.

"என்ன ஸார், திருட்டு என்றால் உங்களுக்கும் பயந்தானே?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் சையத் காதர்.

அப்பொழுதுதான் சுந்தரவதனனுக்குத் தான் தன் மனநிலைமையை வாய் விட்டுக்கூறி வெளிப்படுத்தியது புலனாயிற்று. இருந்தாலும் அதைக் காண்பித்துக் கொள்ளாமல், "இல்லை, சாகேப், அப்படியெல்லாம் நான் பயப்படுகிற ஆசாமியல்ல" என்று மிடுக்காகச் சொன்னான்.

சாகேப்புக்கு அந்த பதில் திருப்தியளிக்கவில்லை. 'உண்மையிலேயே இவன் பயப்படாத ஆசாமியா அல்லது அப்படி பாவனை செய்கிறானா? அல்லது இவனே ஒரு திருடனாக இருந்தால் — இப்படிக் கூடவே வந்து இனிமையாகப் பேசித் திருடுகிறதைப் பற்றி எத்தனையோ தடவை படித்திருக்கிறேனே? இந்தப் பெட்டியிலே என்னையும் அவனையும் தவிர வேறு யாருமே இல்லையே? தூங்கிய பிறகு இவன் தனது கைவரிசையைக் காட்டி விட்டால்? எதற்கும் இப்பொழுதே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்றெல்லாம் தீவிரமாக எண்ணமிட்டார் அவர்.

அதனுல்தான் அவர் அப்படிப் பயங்கர மாகப் பேசவும் நடக்கவும் தொடங்கினுர்.

''என்ன, உமக்குப் பயமில்லையா? ரயில் திருட்டைப் பற்றி யெல்லாம் கேள்விப் பட்டால் பயமே அறியாதவன் கூடப் பயப் பட்டுப் போகவேணுமே? அமானுல்லாகான் தெரியுமா உமக்கு?'' என்று அவர் கூர்ந்த பார்வையோடு கேட்டார்.

"யார், ஆப்கானிஸ்தானத்துக்கு முன்னே ராஜாவாக இருந்தாரே அவர்தானே?"

"ஆமாம். அவரேதான். சமீபத்திலே ஐரோப்பாவில் அவர் ரயிலிலே போகிற போது இரண்டாயிரத்து இருநூறு பவுனை அவரிடத்திலிருந்து எவனே அபகரித்துக் கொண்டு போய் விட்டானும்."

"பணத்தோடு தானே தொலைந்தான்? அமானுல்லாவுக்குப் பணத்துக்குக் குறைச் சலா என்ன?'' என்று அசட்டையான குரலில் பேசுவதுபோல சுந்தரவதனன் பாசாங்கு செய்து, சையத்காதரை உற்று நோக்கினுன்.

சையத் காதருக்கு அது மேலும் சந்தே கத்தை உண்டாக்கியது. ''இவன் திருட்டைப் பற்றி அலட்சியமாகப் பேசுகிறுனே? பார் வையைப் பார்த்தாலும் ஏதோ திருட்டு விழியாகத்தான் தெரிகிறது. பயமா அல்லது திருட்டுப் பாசாங்கா என்று இப்படி மேலும் சந்தேகம் வலுத்தது.

"பணம் மட்டுமா போச்சு? உயிர் தப்பி யதே பெரிய காரியமாய் விட்டது'' என்று கூறினுர் சையத் காதர்.

திருட்டைப் பற்றியே தொடர்ந்து பேசி ஆளை அளந்து பார்த்துவிட வேண்டும் என்பது அவருடைய எண்ணம்.

''பத்திரிகையிலே அப்படி வரவில்லையே?'' அதே அசட்டைக் குரலில் 'சுந்தரவதனன் கூறினுன். ஆனுல் நெஞ்சு மட்டும் திக் திக் கென்று அடித்துக் கொண்டது.

''பத்திரிகையில் வெளியாகாமல் அப்படியே அமுக்கி விட்டார்கள். அந்த ரகசியம் எனக் குத் தெரியும். நம்ம ஆள் ஒருத்தன் எனக்கு அதை எழுதினுன்.''

"இப்படி யெல்லாம் ஐரோப்பாவிலே நடந்தாலும் நம்ம நாட்டிலே நடக்காது. நம்ம திருடர்கள்கொலை பாதகர்கள் அல்ல. பணத்தை எடுத்தாலும் ஆளை ஒன்றும் செய்யமாட்டார்கள்'' என்று சுந்தரவதனன் தனக்குத்தானே தைரியம் கொடுத்துக் கொள்ளச் சொல்லிக் கொண்டான்.

அவனுக்கு அந்தத் தாடிக்காரன் திருடன் தான் என்கிற எண்ணம் நிமிஷத்துக்கு நிமிஷம் வலுத்துக் கொண்டிருந்தது.

திருடனுக இல்லாவிட்டால் அமானுல்லா வைத் தாக்கியது அவனுக்கு எப்படித் தெரி யும்? அப்படித் திருடனுக இருந்தால் பணத் துடனுவது தொலையட்டும் என்பது சுந்தர வதனனுடைய நோக்கம். அதற்காகத்தான் பேச்சை அப்படி மாற்றினுன். இருந்தாலும் அவனுடை முகத்திலே, மனத்திலேயிருந்த கலவரத்தின் சாயல் நன்ருகத் தெரிந்தது. அவன் மிரண்டு மிரண்டு விழித்தான். அது மேலும் சையத் காதருக்குச் சந்தேகத்தை உண்டாக்கி விட்டது.

''நம்ம ஊரிலா ஒன்றும் செய்ய மாட் டார்கள்? எவனுவது தனியாக ரயில் பெட்டி யில் அகப்பட்டுக் கொண்டால் அவனை என்ன செய்தாலும் யாருக்குத் தெரியப் போகிறது? தூங்கும் போது கழுத்தை நெரித்துவிட்டுக் கொள்ளை யடித்தால் என்ன செய்ய முடியும்?'' என்ருர் சையத் காதர்.

இந்த வார்த்தைகளை அவர் பேசினுர் என் பதைவிட அவருடைய பயம் பேசிற்று என்று சொன்னுல் மிகப் பொருத்தமாக இருக்கும். மனத்திலெழுந்த பயம் அப்படி அவரையும் மீறிக் கொண்டு வெளி வந்து விட்டது.

'' தூங்கும்போது கழுத்தை நெரிக்கிறதா? யார் தூங்கப் போகிருர்கள், பார்க்கலாம்? தூங்குவதற்கு முன்னதாகவே சரியான காரியம் நான் செய்து காண்பிக்கிறேன்''

என்று சுந்தர வதனன் எழுந் தான். அபாய அறிவிப்புச் சங் கிலியைப் பிடி த்து இழுத்து ரயிலை நிறுத்த வேண்டுமென் பது அவன்





எண்ணம். அதற்காக அவன் முன்னாலே கையை நீட்டிக் கொண்டு எட்டி வைத்தான்.

அவன் உருட்டி விழிப்பதையும், கையை நீட்டுவதையும் கண்ட சையத் காதருக்கு அவன் தன்னைத் தாக்க வருவதாகவே புலப்பட்டது. உடனே தற்காப்பு உணர்ச்சியால் தூண்டப்பட்டு அவர், "டேய், அப்படியே நில். இன்னும் ஓரடி காலை எடுத்து வைத்தால் உயிரை வாங்கி விடுவேன்" என்று கர்ஜனை புரிந்து கொண்டே எழுந்தார். மீசையை முறுக்கினார். தாம் அணிந்திருந்த கோட்டின் கைகளைமேலே மடக்கிக் கொண்டு விறைப்பாக நின்றார்.

சுந்தரவதனன் திருடனென்பதில் அவருக்கு இப்பொழுது சந்தேகம் துளிக்கூட இல்லை. "இப்படிப் பேசியாவது அவனிடமிருந்து தப்பப் பார்க்கலாம்" என்று அவர் நினைத்தார். ஆனால் அவர் எதிர்பாராத விதமாக மின்னல் வேகத்தில் காரியம் நடந்தது.

"ஐயோ, திருடன் திருடன்—என் உயிர் போச்சே!" என்று அலறிக் கொண்டு மூர்ச்சை போட்டுத் தடாலென்று படுக்கையில் சாய்ந்தான் சுந்தரவதனன்.

சையத் காதர் நடுங்கிப் போனார். "அடே! இவன் என்னையா திருடனென்று நினைக்கிறான்? இவன் திருடனல்லவா?" என்று கூறிக்கொண்டே சுந்தரவதனன் அருகில் வந்தார். அவனது விகாரமான முகம் இருளடைந்து பயங்கரமாகத் தோன்றியது. உடம்பில் உயிர் இருப்பதற்கான அறிகுறிகள் ஒன்றுமே தென்படவில்லை.

சையத் காதருக்கு இப்பொழுது வேறொரு விதமான பயம் பிடித்துக் கொண்டது. 'இவன் செத்துப் போனால் அதற்கு நான் அல்லவா ஜவாப்தாரியாக வேண்டும்? என்னால்தானே இவன் இறந்தான்?'

சையத் காதருக்கு என்ன செய்வதென்று புலப்படவில்லை. அவர் உடம்பெல்லாம் வெடவெட வென்று நடுங்கியது. மூச்சுத் திணறியது. "அடடா, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டு விட்டதே" என்று பதைபதைத்து அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார். ஏன் அப்படிச் செய்ய வேண்டுமென்று அவர் யோசிக்கவே இல்லை.

வேகமாக ஓடிக் கொண்டிருந்த எக்ஸ்பிரஸ் கொஞ்ச தூரத்துக்குள் வேகம் குறைந்து சடக்கென்று நின்றது. ரயில்வே போலீசார் ஓடி வந்தார்கள்; மற்றவர்களும் கீழிறங்கி என்ன விஷயம் என்று காண விரைந்தார்கள்.

போலீசார் உள்ளே நுழையும் போதே சையத் காதர், "ஐயா! இவர் ஏனோ திடீரென்று மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விட்டார். மார்படைப்போ என்னவோ தெரியவில்லை" என்று பயத்தைச் சமாளித்துக் கொண்டு கூறினார்.

"டாக்டர் யாராவது இருந்தால் கூப்பிடுங்கள்" என்று யாரோ கூவினார்கள்.

"முகத்திலே தண்ணீரைத் தெளியுங்கள்" என்று வேறு யாரோ சொன்னார்கள்.

ஒரு போலீஸ்காரன் தண்ணீரைத் தெளித்து மின்சார விசிறியை சுந்தரவதனன் பக்கம் திருப்பினான். மற்றொருவன் சையத் காதரைக் கேள்விகள் கேட்கத் தொடங்கினான். "ரயில் புறப்படும் போதே அவர் தமது மார்பிலே இடது பக்கம் கையை வைத்து அழுத்திக் கொண்டிருந்தார். சற்று முன்பு திடீரென்று மூர்ச்சை போட்டு விழுந்து விட்டார். அதைக் கண்டதும் நான் அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்தேன்" என்று அவர் விளக்கம் கூறினார்.

ஆனால் சுந்தரவதனனுக்கு உயிர் போய் விடவில்லை. முகத்திலே தண்ணீர் பட்டதும் மூர்ச்சை தெளிந்து சுய நினைவு வர ஆரம்பித்தது. சையத்காதர் கூறிய கடைசி வார்த்தைகள் நன்றாகக் காதில் ஒலித்தன.

"அந்தத் திருடனை விடாதீர்கள். பிடித்துக் கொள்ளுங்கள். அவன்தான் திருடன்" என்று அவன் கத்த ஆரம்பித்தான்.

போலீஸ்காரர்கள் சையத்காதரை இறுகப் பிடித்துக் கொண்டார்கள். "ஐயா, நான் திருடனல்ல; திருடனாக இருந்தால் நானே சங்கிலியைப் பிடித்து ரயிலை நிறுத்துவேனா? நிறுத்தி விட்டு நீங்கள் வரும் வரையில் பெட்டிக்குள்ளேயே இருப்பேனா?" என்றார்.

"யார், நீயா சங்கிலியைப் பிடித்து இழுத்தது? நானல்லவா இழுத்தேன்? சங்கிலியை இழுத்ததைக் கண்டு என்னை நீ தாக்கக்கூடாதென்பதற்காக மூர்ச்சையானது போல் பாசாங்கு செய்தேன்" என்று சுந்தரவதனன் கூறினான். அவனுடைய கற்பனைத் திறம் முழுவதும் அவன் உதவிக்கு வந்து விட்டது.

பிறகு சையத்காதர் எவ்வளவு கூறியும் பயன் ஏற்படவில்லை. அவர் வார்த்தையை யாரும் நம்பவில்லை. போலீஸ்காரர்கள் அவருடைய பெயரை இதற்குள்ளே அறிந்து கொண்டிருந்தும் வழக்கம்போலக் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்கள். "உன் பெயர் என்ன?" என்று ஒரு போலீஸ்காரர் கேட்டார்.

"நாகராஜன்" என்றார் சையத்காதர். மற்றொரு போலீஸ்காரர் அவர் முதுகிலே ஓங்கி ஒரு குத்து விட்டார்.

"ஏண்டா, பெயர் கேட்டால் பொய்யா சொல்லறே?" என்று அவர் கர்ஜித்தார்.


"இல்லை ஐயா, என் பெயர் அப்துல் காதர்" என்றார் நடுங்கிக் கொண்டே.

மறுபடியும் ஒரு குத்து விழுந்தது. அப்பொழுதுதான், "இல்லை ஐயா. என் பெயர் சையத் காதர்" என்ற பதில் வந்தது.

"இவன் பலே கைதி, முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பவன்" என்று விளக்கம் கூறினார் ஒரு போலீஸ்காரர்.

கடைசியில் சையத்காதரைக் கைது செய்து போலீசார் கைக்கு விலங்கிட்டார்கள்.

நீலகிரி எக்ஸ்பிரஸ் அரக்கோணம் ஜங்ஷன் போய்ச் சேர்ந்தது. சையத் காதரை அங்கே இறக்கினார்கள். சுந்தரவதனன்


கட்டிடம் எதுவாயினும்
திடத்திற்கும், தரத்திற்கும்
சூலம் மார்க்
சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட் ஸிமெண்டையே உபயோகியுங்கள்
SANKAR
I C
BRAND
இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட். சென்னை - 1

அரக்கோணம் வரையில்தான் டிக்கெட்டு வாங்கி யிருந்ததால், அவனும் அங்கேதான் இறங்க வேண்டும்.

போலீஸ் சப் இன்ஸ்பெக்டரிடம் வாக்கு மூலம் கொடுத்து விட்டுச் செல்லலாமென்று அவனை அழைத்துச் சென்றார்கள்.

சப் இன்ஸ்பெக்டருடைய கொடூரமான முகத்தைப் பார்த்ததும் சையத் காதருக்கு உள்ள தைரியமும் போய்விட்டது. இனிமேல் உண்மையை ஒப்புக் கொள்ளாமல் வழி யில்லை என்று தெரிந்தது.

ஆதலால் அவர் நடந்தது முழுவதையும் ஒளிக்காமல் கூறுவதாகத் தாமாகவே கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். சப் இன்ஸ் பெக்டர் அதற்குச் சம்மதிக்கவே, அவர் சொல்ல ஆரம்பித்தார் :

"ஐயா, எனக்கு நெடு நாளாகவே ஒரு ஆசையுண்டு. அதாவது வாழ்க்கைச் சம்பவங் களை யெல்லாம் நேரில் பார்த்துக் கதை எழுத வேண்டுமென்பது அந்த ஆசை. அதற் காகவே இன்று நான் புறப்பட்டேன். இந்த ஆசாமியுடன் தனியாக இரண்டாம் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்யத் தற்செய லாக நேர்ந்தது. பேச்சு எப்படியோ ரயில் திருட்டைப் பற்றி ஆரம்பித்தது. திருடர்கள் வந்தாலும், அவர்கள் பயமுறுத் தினாலும் தனக்குப் பயமுண்டாகாது என்ற தோரணையிலே இவர் பேசினார். அவரே ஒரு திருடன்தானோ என்று எனக்குப் பய முண்டாகி விட்டது. நான் தூங்கிய பிறகு எனக்கேதேனும் கெடுதல் செய்து விட் டால் என்ன செய்வதென்று பயமடைந் தேன். இந்த ஆசாமி திருட னென்று நிச்சயமாக நான் நம்பினேன். இவரிட மிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காகவே மிரட்டுவது போலப் பேசினேன். இவர் திடீரென்று மூர்ச்சை போட்டு விழுவா ரென்று நான் எதிர்பார்க்கவில்லை. அத்தனை கோழை என்று எனக்கு முதலில் தெரியாது போயிற்று. இவர் மூர்ச்சை போட்டு விழவே எனக்கு வேறொரு விதமான பயம் பிடித்துக் கொண்டது. இவரைக் காப்பாற்றும் நல் லெண்ணத்தோடு தான் அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்தேன். நான் ஓர் எழுத் தாளன். உண்மையில் என் பெயர் சையத் காதர் அல்ல. யாருக்கும் தெரியாமல் சென்று வாழ்க்கையை நேருக்கு நேராகக் காணவே இந்த வேஷம் போட்டேன். என் பெயர் நாகராஜன்தான்" என்று கூறிக்கொண்டே அவர் தம்முடைய பொய்த் தாடி மீசை களையும் எடுத்தார்.

"ஆ, என் நண்பன் நாகராஜனா? நானும் உன்னைப் போலத் தாண்டா வந்தேன்" என்று கூவிக் கொண்டே சுந்தரவதனன் ஓடி அவனைத் தழுவிக் கொண்டான்.

"நீ என் நண்பனா?" என்று திடுக்கிட்டுக் கத்தினான் நாகராஜன்.

"ஆமாம்; நான்தான் சுந்தரேசன்" என்று கூறிக் கொண்டே அவன் தனது மூக்குக் கண்ணாடி, பொய்ப் பல், எட்டுக்கால் பூச்சி மீசை எல்லாவற்றையும் களைந்தான்.

"அடே சுந்தரேசா, நாம் நெடுநாட்களா கப் போட்ட திட்டம் இப்படி அசம்பாவித மாகவா முடிய வேணும்? நீ இன்று புறப் படுவதாக எனக்கு ஒரு பேச்சுக் கூடச் சொல்லவில்லையே?" என்று நாகராஜன் தேம்பி யழுதான்.

சுந்தரேசன் கண்களிலும் நீர் தாரை தாரையாகப் பெருக்கெடுத்தது.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சிகளைக் கண்டு சப்-இன்ஸ்பெக்டரும், போலீஸ்காரர்களும் கொல்லென்று சிரித்து விட்டார்கள்.

"ஆமாம், எழுத்தாளர்களே ! உங்களுக்கு வேஷம் போட இவ்வளவு நன்றாக எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார் சப்-இன்ஸ் பெக்டர். அவருக்கு அவர்களிடம் இப் பொழுது அநுதாபம் பிறந்து விட்டது.

"ஸார், நாங்கள் அமெச்சூர் நாடக சபா வில் அங்கத்தினர்கள். வேஷம் போடுவதில் இரண்டு பேரும் கெட்டிக்காரர்கள். இரண்டு பேரும் ஒரே பத்திரிகையில் தான் வேலை செய்கிறோம். நெடுநாளைய நண்பர்கள் நாங்கள்" என்று இரண்டு பேரும் ஒரே சமயத்தில் கூறினார்கள்.

"சரி சரி, இப்போது எல்லாம் விளங்கி விட்டது. ஆனால் அபாயச் சங்கிலியை இழுத் தது யாரென்றுதான் இன்னும் நிச்சயமாக வில்லை" என்று சப்-இன்ஸ்பெக்டர் புன்ன கையோடு சொன்னார்.

"அது நானல்ல, அவன்தான் ஸார்" என்று சுந்தரேசன் ஒப்புக் கொண்டான்.

"நீயே சங்கிலியை இழுத்ததாக முன்னால் சொன்னாயே?"

"திருடன் மேலே குற்றம் நன்றாக ஏற் படட்டும் என்றுதான் அப்பொழுது கற்பனை செய்தேன். மன்னித்து விடுங்கள்."

"எழுத்தாளருக்கு வேண்டிய கற்பனை யெல்லாம் உங்களிடம் நன்றாக இருக்கத்தான் செய்கிறது" என்று கூறிச் சப்-இன்ஸ்பெக் டர் உரக்கச் சிரித்தார்.

அவர்கள்மீது வழக்கு ஒன்றும் எடுக்கப் படா விட்டாலும் ரயிலை அனாவசியமாக நிறுத்தியதற்கு அபராதம் கொடுக்க வேண்டி ஏற்படலாம் என்றும், கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என்றும் அவர் எச்சரிக்கை செய்தார். அபராதம் கொடுத்துவிடத் தயா ரென்றும், அவசியமானபோது ஆஜராவதாக வும் வாக்குக் கொடுத்துவிட்டு, அதோடு இச் சம்பவத்தைப் பற்றிப் பத்திரிகைகளுக்குத் தெரிவிக்கக் கூடாதென்றும் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

சப்-இன்ஸ்பெக்டர் அவர்களுடைய வேண்டுகோளுக்குச் சம்மதம் தெரிவித்த தோடு, போவதற்கு அனுமதியும் தந்தார். நாகராஜனும், சுந்தரேசனும் ஒருவர் தோள் மேல் ஒருவர் கையைப் போட்டுக் கொண்டு வெளியே கிளம்பினார்கள்.



இன்றுவரை எங்களுடன் பறந்து சென்ற யாவருக்கும். இது போல் எதிர்காலத்தில் எங்கள் விமானத்தில் பறந்து செல்லப் போகும் அனைவருக்கும் எங்கள்

தீபாவளி வாழ்த்துகள்

பி. ஓ. ஏ. ஸி. உங்கள் நலத்தைக் கருதி
சேவை செய்கிறது

விவரங்களுக்கு பி. ஓ. ஏ. ஸி. நியமித்த ஏஜண்டிடமோ அல்லது பம்பாய், கல்கத்தா, டில்லி, மதராஸ் இவ்விடங்களிலுள்ள பி. ஓ. ஏ. ஸி. ஆபீஸ்களுக்கோ எழுதுங்கள்.


FLY BY B·O·A·C

பி. ஓ. ஏ. ஸி. விமானம் மூலம் பறந்து செல்லுங்கள்

பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேஸ் கார்ப்பரேஷன்



இருக்கு வழிக் குபேரன் புராணம்
முன்னொரு காலத்தில்...
தேவலோகத்தில் குபேரன், பூலோகத்தில் தனக்குப் போட்டியாகக்கிறுக்குவழிக்குபேரன் ஒருவன் முளைத்திருப்பதாகவும் அவனை ஸம்ஹாரம் செய்து தன்னை ரட்சிக்கும்படி முறையிட...
பிரம்மாவும் மனமிரங்கி ஒருஅழகான பெண்ணைச் சிருஷ்டித்தார்.
இதை நாரதர் மூலம் ரகசியமாக அறிந்த கிறுக்கு-வழிக்குபேரன், புடவைகளையும் நகைகளையும் கொடுத்து
மேற்படி பெண்ணைத்தன் வசப்படுத்திக் கொண்டு அவளுக்கு 'கிராஸ்வேர்ட் மோகினி' எனப் பெயர் சூட்டி அவளைக்கொண்டே ஜனங்களிடம் பணம் பறிக்கிறான்.
அதனால் நிகழும் விந்தைகள் வருமாறு :-
?
தலை தீபாவளிக்கு மாமனார் வீட்டுக்குச் செல்லும் மாப்பிள்ளை அத்தனை மகத்தான வரவேற்பும் தனக்கு என எண்ண, அது போட்டி முடிவு கொண்டு வரும் தந்தி-சேவகனுக்குக் கிடைக்கிறது.
பெண்...
போட்டிக் கூப்பன்கள் கண்டு திகைக்கிறான்


தீபாவளிப்பரிசாக மாமனர் கொடுத்த வைர-மோதிரம் ——— என்று மாப்பிள்ளை நினைக்கிறார் ① ரெங்கூன் கமலம் ② கில்ட் மோதிரம்
மாமனர் வீட்டு மைசூர்ப் பாகை உடைப்பதற்கு ——— வேண்டும் ① ரம்பம் ② சுத்தி
மாமனர் வீட்டு உபசாரங்களைக் கவனியாமல் மாப்பிள்ளை "ஒன்ரு? இரண்டா?" கண்டுபிடிப்பதில் மனத்தைச் செலுத்தியிருக்கிறார்!
அதனால் பட்டாஸும் வாணமும் வெடித்துக் குதூகலமாக இருக்க வேண்டிய குடும்பத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்து ஏக்கம் ததும்புகின்றது.
இவ்வாறு படித்தவர் பாமரர் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோரிடமும் பணம் பரித்து . . .
அபேஸ்
குபேரா
குறுக்கு வழிக்குபேரனிடம் சேர்க்கிறாள் கிராஸ்வேர்ட்-மோகினி?
இதனால் மேலும் வளர்ச்சி அடைந்த குறுக்குவழிக் குபேரனைக் கண்டு நடுநடுங்கிய தேவலோககுபேரன்
சிவன்
கோவிந்தா
3000000
கப்ஸா
7000000
மூவர்களிடம் முறையிடப்போக அவர்களும் பரிசுப்போட்டி எழுதக்கண்டு மூர்ச்சையாகி விழப்போகும் போது நாரதர் தோன்றிக் குபேரனுக்கு ஆறுதல் சொல்லி, பிரசாரத்தின்மூலம் ஒவ்வொருவரையும் கிராஸ்வேர்ட்ஸ் ஸ்தாபனம் ஆரம்பிக்க வைப்பதால், போட்டி எழுத ஒருவரும் இல்லாமல் போக, கிராஸ்வேர்ட் மோகினி மறைந்து, குறுக்குவழிக்குபேரனும் ஒழிந்து, தேவலோககுபேரன் சுகமாக வாழ்கிறன். சுபம்!
இதைப்படித்தவர்களும் படிக்கக் கேட்டவர்களும் 'குறுக்கெழுத்துப் போட்டி எழுதிப் பணம் குவிக்கலாம்' என்கிற மாயை அகன்று நல்வாழ்வு வாழ்வார்கள்.
. . . . இத்துடன் குறுக்கு வழிக்குபேரனின் புராணம் முற்றிற்று!

வான வெளியில்!



காற்றி லேறியவ் விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே! —பாரதியார்.



எங்கும் ஜோதி
எல்.ஜி
L.G
தேசமெங்கும் கடல் கடந்தும் மக்கள் மனத்தில் பதிந்து
ஒளியும் புகழும் பெருமையுமுடையது எல்.ஜி. பெருங்காயம்
லால்ஜி கோது & கம்பெனி, சென்னை-1.
தலைமை: பம்பாய்
கிளை: கும்பகோணம்


எமது மனமார்ந்த
தீபாவளி
வாழ்த்துக்கள்
தி டாடா அயரன் &
ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

ப்ளிட்டில் நாங்கள் ஆறு கீடநாசினிகளை சேர்ப்பதன் காரணம்


எந்த ஒரு கீடநாசினிக்கும் எல்லா பூச்சிகளையும் கொல்லும் சக்தி கிடையாது. உதாரணமாக கீடநாசினி 'A' அது ஸ்பர்சிக்கும் எல்லா ஈக்களையும் கொன்று விடக்கூடும்—ஆனால் கரப்பான் பூச்சிகள் சிலவற்றைத்தான் சாக அடிக்கும்: கொசுக்களை ஒன்றும் செய்வதில்லை.





அதற்கு மாருக, கீடநாசினி 'B' எல்லா கரப்பான் பூச்சிகளையும், சில கொசுக்களையுங்கூட கொல்லுகிறது—ஈக்களை பாதிப்பதேயில்லை.

உண்மையில் எல்லா பூச்சிகளையும் சாக அடிப்பதற்கு நிச்சயமான ஒரே வழி, ப்ளிட்டிலுள்ளது போல் பலவேறு கீடநாசினிகளை கலந்து உபயோகிப்பதுதான். ப்ளிட்டில் ஆறு கொடிய விஷப்பொருள்கள் கூடுமான அளவு ஸம்ஹார சக்தி பெறும்படியாக பக்குவமான அளவுகளில் கவனமுடன் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. இந்த சமஷ்டி சக்தியின் பயனுகவே ப்ளிட் நீங்கள் வாங்கக் கூடிய வேறெந்த கீடநாசினியையும் விட அதிக சக்தி வாய்ந்ததாகவிருக்கிறது.





அதனுல்தான் நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு அணுவிற்கும் **ப்ளிட்** அதிகமான பூச்சிகளைக் கொல்லுகிறது

ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி

(கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

V. 9303

திருவிளக்கு நாச்சியார்

வை. மு. நரசிம்மன்

ஹிந்து தர்மத்தில், அந்தகாரத்தை அகற்றும் தீபங்களுக்கு மிகவும் முக்கிய ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறது.

சாதாரணமாக விளக்குகள் மிகப் புனிதமானவையாகக் கருதப்படுகின்றன. அவைகள் மங்களத்தை, நற்பயனைக் குறிக்கும் அறிகுறியாகவும் விளங்குகின்றன.

நமது கோவில்களில் பூஜைக்கு மிக இன்றியமையாத சாதனங்களுள் தீபங்களே முதன்மையானவை. அதனால்தான் இன்றைக்கும் கோவில்களில் பலவகைப் பட்ட அற்புத வேலைப்பாடுகளுடன் கூடிய பண்டைக் கால விளக்குகளைப் பார்க்க முடிகிறது. ஆண்டவனின் அருளைப் பெறுவதற்குரிய சாதனங்களில் தீபமும் ஒன்றாகக் கருதப்படுவதிலிருந்து, அதன் முக்கியத்தை, பெருமையை ஊகித்துக் கொள்ளலாம்.

கடவுளின் சன்னதியில் வைக்கப்படும் திருவிளக்கு, அதை ஏற்றி வைப்போரின் உள்ளத்தே எழும் பக்தியின் ஒளியையே பிரதிபலிப்பதாகக் கூறுகிறார்கள். இத்தகைய பக்தர்களின் காணிக்கையான திருவிளக்குகளைப் பற்றிய கல்வெட்டுக்களை இன்றும் நமது கோவில் சுவர்களில் காணலாம்.

மேலும், என்றும் விடாமல் இரவு பகலாக எரியும் விளக்குகளான நந்தா விளக்குகளைப் பாதுகாக்கும் கைங்கரியத்துக்காக ஆடு மாடுமங்கைகளைக் கோவில்களுக்கு விடுவதும் நமது மூதாதையரின் வழக்கமாக இருந்து வந்தது.

கோவில்களில் விளக்கு வைக்கும் வழக்கம் பண்டைக் கால யவனரிடமும் இருந்து வந்ததாகத் தெரிகிறது. அலெக்சாண்டர், தேம்ஸ் நகரத்தை அழித்ததற்காக அக்காலத்தில் ஸைம்மியிலுள்ள அபொல்லோ கோவிலில் தொங்கும் விளக்கை ஏற்படுத்தினராம்!



குஜராத்திலிருக்கும் பாவை விளக்கு

பகவத்கீதையில், காற்றில்லாத இடத்திலுள்ள விளக்குச் சுடரை அசையாமல் வீற்றிருக்கும் ஓர் யோகிக்கு ஒப்பிட்டுள்ளது. வேதத்திலும், பல சடங்குகளுக்கு இன்றியமையாத விளக்குகளைப் பற்றிய விவரங்கள் ஏராளமாக உள்ளன. சிற்ப சாஸ்திரங்களிலும், விளக்குகளின் பல வகைகள், அவைகளைச் செய்யும் விதங்கள், அவைகளின் உபயோகங்கள் முதலியவை மிக விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திருவிளக்குகள் பதினாறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. யானை, புலி, விருஷபம், கருடன், நாகம் போன்ற உருவங்களைக் கொண்டுள்ள தீபங்கள் மிக முக்கியமானவை. காணிக்கை செலுத்துவோர், தமது இஷ்ட தேவதைகளின் வாகன உருவங்களைத் திருவிளக்குகளாக அமைத்தனர் போலும்!

திருவிளக்குகள் கடவுள் பூஜைக்குரிய முக்கிய சாதனமாக விளங்குவதாலேயே, நமது பண்டைக் கால சிற்பிகள் வெண்கலத்தில் பல வகைப்பட்ட நேர்த்தியான, நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கூடிய விளக்குகளைச் செய்ய முற்பட்டனர். இன்றைக்கும் இந்த வகைத் தொழில் கும்பகோணம், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற இடங்களில் சிறப்பாக நடந்து வருகிறது. இத்தொழில் தென்னிந்தியாவிலும், நேபாளத்திலும், சிறிய அளவு குஜராத்திலுமே நடக்கிறது. வட இந்திய விளக்குகள், அமைப்பிலும் மினு மினுப்பிலும் மிக நேர்த்தியானவை தான். எனினும் தென்னிந்தியாவிலுள்ள கணக்கற்ற அபூர்வமான நிலுசுகளைப் போல் வட இந்தியாவில் இல்லை.

* * *

சர்வ சாதாரணமாகக் கோவில்களில் குத்து விளக்குகள், மரத்தைப் போன்று நேரான நடுத் தண்டிலிருந்து

பிரியும் பல கிளைகளைக் கொண்டு, ஒவ்வொரு கிளையின் நுனியிலும் ஓர் அகலை ஏந்தி நிற்கும் விளக்குகள், மிக அழகாக வார்க்கப்பட்ட சங்கிலிகளில் தொங்கும் பல மாதிரியான அற்புத சர விளக்குகள் முதலியவற்றைக் காண்கிறோம்.

இன்றும் அகல் ஏந்திய அழகிய பெண் பாவை விளக்குகளையும் நாம் பல இடங்களில் பார்க்கலாம். இவை **தீபலக்ஷ்மி** என்றும் **திருவிளக்கு நாச்சியார்** என்றும் சொல்லப்படுகின்றன. இவ்வகை விளக்குகளில், பாவைகளின் இடது தோள் மீது கிளியொன்று இருப்பதைக் காணலாம்.

சிற்சில இடங்களில் இவ்வகை விளக்குகள், நீண்ட பிடியின் நுனியில் தலைமுதல் இடுப்பு வரையிலும் உள்ள பெண்களின் உருவத்தைக் கொண்டனவாக இருக்கும். இவைகள் தீப ஆரத்திக்காக உபயோகிக்கப் படுகின்றன. இப்பாவை விளக்குகள், இவற்றைக் காணிக்கையாகக் கொடுக்கும் பெண்களைக் குறிக்கின்றன. இன்று கிடைத்துள்ள பாவை விளக்குகள் மிகப் பண்டைக் காலத்தைச் சேர்ந்தவையாகத் தெரியவில்லை. இருந்தாலும், பண்டைக் காலத்தில் பாவை விளக்குகள் இருந்தமை பற்றிய வரலாறுகள் சங்க நூல்களில் காணப்படுகின்றன. பண்டைக் காலத்தில் பாவை விளக்குகள் விழாக் காலங்களில் அலங்காரத்துக்காக வைக்கப்பட்டன என்று முல்லைப் பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்கள் கூறுகின்றன. பாவை விளக்குகள் தென்னிந்தியாவின் தனிச் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகும் என்று கூறுவது பிழையாகாது. அவ் விளக்குகள் யவனரிடமிருந்தே வந்ததாக வின்சென்ட் ஸ்மித் போன்ற மேல் நாட்டு மேதாவிகள் கூறுகின்றனர். ஆனால் நமக்குக் கிடைத்துள்ள கிரேக்-ரோம் விளக்குகளில் அகல்களே மிகப் பிரதானமாக இருக்கின்றன.


* * *



2. வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள அழகிய பாவை விளக்கு

தஞ்சை மாவட்டத்திலிருக்கும் வைத்தீஸ்வரன் கோவிலில் வைத்தியநாத சுவாமி சந்நிதானத்தில் இருக்கும் மிக அழகான பாவை விளக்கின் முன், பின் தோற்றங்களைப் பாருங்கள். இவ் விளக்கு நமக்குத் தெரிந்த எல்லாப் பாவை விளக்குகளையும் காட்டிலும் மிக அழகானது எனச் சொல்லலாம். இது, அக்காலத்திலே எப்படி பெரிய இடத்துப் பெண் விசேஷ காலத்தில் தென்படுவாளென்பதைத் தெரிவிக்கிறது. இவ் விளக்கின் பீடத்திலுள்ள எழுத்துக்கள், இது கி. பி. 1857–58ல் செய்யப் பட்டதாகக் குறிப்பிடுகின்றன. பாணினி (கி. மு. 400) யால் சொல்லப்பட்ட பல நகைகள் இச் சிலையின்மேல் உள்ளன. அமராவதியில் காணப்படும் தலையில் அணிவதற்குரிய **சூடாமணி**, காளிதாசனால் மேகதூதத்தில் வருணிக்கப்பட்ட **கனக கமலங்கள்**, அவைகளிலிருந்து தொங்கும் **ஜிமிக்கிகள்**, ஹர்ஷ சரித்திரத்தில் விவரிக்கப் பட்டுள்ள **கர்ணிகா** எனப்படும் மேல் காது அணிகள், தொன்று தொட்டு வரும் பல வகைக் கழுத்தணிகள், பலவிதமாக வர்ணிக்கப்படும் இடுப்புக் கட்டுகள், அஜந்தா ஓவியங்களிலுள்ளது போன்ற பல நேர் கோடுகளைக் கொண்ட இடுப்புத் துணி, **மஞ்ஜீரா** என்னும் கால் வளையல்கள் முதலிய அணிகலங்களைப் பூண்டிருக்கின்றாள் அப்பாவை. அந்தப் பிம்பத்தின் அழகிய வடிவை நேரே பார்த்துத்தான் தெரிந்து கொள்ள முடியும்.

மதுரையை அடுத்த சோலைமலை அழகர் கோவிலில் உள்ள விநோ



3. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் காணப்படும் பண்டைய காலத்துத் தீபங்கள்.



உனது பற்களை இன்று மக்ளீன் செய்தாயா?

தப் பாவை விளக்கைப் பாருங்கள். அதன் தலைப்பாகையும், அரையில் கட்டியுள்ள துணியும், பொதுவான தோற்றமும் எகிப்து தேசத்திலுள்ள சில பண்டைக் காலச் சிலைகளையும், **பெருங்கதையி**லும் **நெடுநல்வாடையி**லும் கூறப்பட்டுள்ள விளக்கேந்திய யவன பொம்மைகளையும் நமக்கு ஞாபகமூட்டுகின்றன. சரித்திர வாயிலாகவும், அழகர் கோவிலுக்கு அருகில் முன்பு யவனர்கள் இருந்தனரென அறிகிறோம். கி. மு. 30-ம் ஆண்டில் சில யவனரின் பொன், வெள்ளி நாணயங்களும் அங்கு அகப்பட்டுள்ளன. ஆகையால் இந்த விளக்கு ஓர் யவன அபிமானியால் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

* * *

மிகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலுள்ள பழைய ஐந்து விளக்குகளை மற்றொரு படம் காட்டுகிறது. அதில் முதலிலும் கடைசியிலும் இருக்கும் "வால் விளக்கு"களின் மேல், பாதி அழிந்து போன எழுத்துக்கள் தென்படுகின்றன. அவைகளிலிருந்து இவ்விரண்டு விளக்குகளும் விஜய நகர ராஜ்யத்தில் இருந்தவை என்று ஏற்படுகின்றன.



4. பாரசீகத்தில் உள்ள பட்சி விளக்கும் யூதர்கள் உபயோகிக்கும் பூஜை விளக்குகளும். 5. இலங்கை பட்டிகோலா பக்கம் காணப்படும் மூன்று அகல் விளக்குகள். 6. மத்திய ஐரோப்பாவில் இருக்கும் நபித்துக்களுடைய விளக்குகள். 7. அழகர் கோவிலில் காணப்படும் விநோதப் பாவை விளக்கு.

மேலே குறித்த அதே புகைப் படத்தில் இரண்டாவதாக உள்ளது, 'அகல்' வகையைச் சேர்ந்த விளக்கு. இது ஓர் மாடத்திலோ அல்லது தனியான பீடத்தின் மேலோ வைக்கப்படும். இம்மாதிரியான மிக வேலைப்பாட்டுடன் காணப்படும் விளக்குகள் தென் இந்தியாவிலும், இலங்கையிலுமே அதிகமாக இருக்கின்றன. இவை எந்தத் தேவதைக்கு உபயோகிக்கப் படுகின்றனவோ, அதைத் தெளிவாக வெளிப்படுத்த அந்தத் தேவதைக்கு ஏற்பட்ட சின்னத்தைக் கொண்டனவாக இருக்கும். சில விளக்குகளில் சூரிய சந்திரர்களின் உருவங்களைப் பார்க்கலாம். இந்தச் சின்னங்கள், அந்த விளக்குகள் சதா காலமும், சூரிய சந்திரர் இருக்கும் வரையில் எரிவதற்காக ஏற்படுத்தப்பட்ட "**நந்தா விளக்குகள்**" என்பதைக் குறிக்கும்.

நமது பாரத நாட்டுக்கு வெளியே உள்ள சில விளக்குகளையும் வேறொரு படத்தில் காணலாம். நமது நாட்டுக் கலை எப்படி அவ்விடங்களில் பரவியிருக்கிறது என்பதை அவைகள் நன்கு காட்டுகின்றன.

மேலே கூறப்பட்ட இத்தகைய கலைச் செல்வங்கள் நமது கோவில்களிலே இன்றும் உபயோகத்தில் இருந்து வருகின்றன. மற்றும் பல, உபயோகிக்கப்படாமல் இருண்ட அறைகளில் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. அவைகளைக் கோவில் அதிகாரிகள் எடுத்து, பொது சேவார்த்திகள் பார்க்கும்படி வைக்க வேண்டும். அவற்றை அவர்கள் வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றவும் வேண்டும். அவை நமது நாட்டு விலையிலாக் கலைச் செல்வங்கள். நமது சந்ததிகள் அவைகளைப் பார்த்துப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.


விசிறி நட்சத்திரம்!
பேஷ்! இப்பொழுதுதான் சரியாக இருக்கிறது!
...காமிராமேன் விசிறியை மாத்திரம் நன்றாக எடுங்கள்!
சாமா


க்ஷணத்தில் நுரையும் ஸன்லைட் அடித்துத்துவைக்காமலே
வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்
"என் துண்டு எவ்வளவு வெண்மையாயிருக்கிறதென்று பார்த்தீர்களா? அதற்குக்காரணம் ஸன்லைட் சோப் உபயோகித்து அதைச் சலவை செய்ததுதான். ஸன்லைட் சோப்பின் க்ஷணத்தில் பொங்கிவரும் நுரை அழுக்கைத்திரட்டி வெளிக்கொண்டுவருகிறது. அதனால் உங்கள் துணிகள்யாவும் பளிச்சென்று வெண்மையாகச் சலவை செய்யப்படுகின்றன."
"கலர் துணிகளுக்கு மலர்ச்சி அளிக்க ஸன்லைட் சலவை போல வேறொன்றுமில்லை. ஸன்லைட் சோப்பின் மிருதுவான நுரை அடித்துத் துவைக்காமலேயே அழுக்கை அகற்றுகிறது. அதனால் துணிகள் நீடித்து வருகின்றன."
SUNLIGHT
ஸன்லைட் சோப்
துணிகளைக்காப்பாற்றுகிறது. சிரமத்தைக்குறைக்கிறது. பணத்தை மிச்சப்படுத்துகிறது
S. 221-50 TM
இந்தியாவில் தயாரித்தது.



பூவும் செடியும்

அந்தக் கடிதத்தை மீண்டும் ஒரு முறை படித்துச் சொல்லும்படி கேட்டார் ராமையாத் தேவர். அவரால் அதை நம்பவே முடியவில்லை!

மீனாட்சிபுரம் ராமையாத் தேவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. வருகிற கடிதங்களை வேறு யாராவது "கண்" உள்ளவர்கள் தான் படித்துக் காட்ட வேண்டும்! ஆனால் திறமையோ?—அது எழுத்துக் குள்ளேதானா உட்கார்ந்து கொண்டிருக்கிறது? ராமையாத்தேவரின் மூளைக்குள்ளே இருந்தது அது!

ராமையாத் தேவர் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள வில்லையே தவிர, பண்ணையார் வீட்டு நிர்வாகம் எல்லாம் அவரேதான்! காணி, அரைக்காணி, மாகாணி, மா, முந்திரி, அரை முந்திரி என்று மனக் கணக்கிலேயே நுட்பமான கணித பின்னங்களையெல்லாம் தீர்த்துக் கட்டி விடுவார்! 'குழிப் பெருக்கல்' ஒன்றை வைத்துக் கொண்டே. 'லகர'க் கணக்கில் பெருக்கி வகுத்து மிச்சம் காட்டி விடுவார் ராமையாத் தேவர்!

இப்படிப் பட்ட திறமை சாலியான தேவருக்குத்தான் திருவவதாரம் செய்தான், வேலய்யா!—அதாவது வேலாயுதம்! சிறுசி லிருந்தே வேலியில்லாமல் சுதந்திரமாக வளர்ந்த பயிர் அது!

எந்தத் தோட்டத்துக் குள்ளேயும் துணிந்து நுழைந்து விடுவான் வேலய்யா! மாங்காய் பறிக்க வேண்டுமென்றால் மாமரத்திலே போய் ஏற மாட்டான்! அந்த மாமரத்தை ஒட்டி வேலியிலே வளர்ந்திருக்குமே பூவரச மரம், அதிலே தான் ஏறுவான்! அதில் ஏறிக்கொண்டே லாகவமாக மாங்காய்களைக் கணக்குப் பார்த்து விடுவான்! யாராவது கேட்டால், "பூவரச மரத்தில் குழை பறிப்பதற்கு ஏறினேன்!" என்று! 'டிமிக்கி' கொடுத்து விடுவான்!

வேலய்யாவுக்குத் தகப்பனுருடைய சாமர்த்தியத்தில் பாதி இருந்தது. ஆனால்



அது உருப்படியான பாதையில் செல்ல வில்லை. விடலைகளோடு சுற்றுவதிலும், "மைனர்"களோடு சேர்ந்து விளையாடு வதிலுமே தோய்ந்து பதினெட்டு வயதுக் குள்ளேயே பட்டம் பெற்று விட்டான். 'சண்டியன்' என்று! திருநெல்வேலி ஊரில் அவனைக் கண்டால், குழந்தைகள், ஆடவர், பெண்டிர் எல்லாருக்குமே ஒரு ஆட்டந்தான்! 'வேலய்யாவோ வாலய் யாவோ' என்று சொல்வார்கள்.

2

ஒருநாள் கிராம முனிசீபு நெல்லை யப்ப பிள்ளையவர்கள் ராமையாத் தேவ ரைக் கூப்பிட்டு விட்டார்.

"தேவரே, மகனை இந்த மாதிரித் தட்டி வளக்காமல் போனீரே வேய்! வெறும் படுக்காளியா யிருக்கானே வேய்!" என்று வாழைப் பழத்திலே ஊசியை இறக்கினார்! தேவருக்கும் இது ஏற்கெனவே தெரிந்த விஷயந்தான். மனசு மிகவும் கஷ்டப் பட்டது. வேலி யைத் தாண்டிப் போகிற ஆடு மாடு களைப் "பவுண்டிலே" கொண்டு அடைக் கலாம். அந்தக் காரியத்தைக் கிராம முனிசீபே செய்து விடுவார். ஆனால் இந்தப் பயலை என்னதான் செய்வது! கட்டிவைத்து உதைக்கலாம் என்றாலோ, தேவருடைய தாட்சண்யம் ஒரு பக்கம், வேலய்யாவினுடைய கிறுதா ஒரு பக்கம். இரண்டும் மாறி மாறித் தயக்கம் காட்டின!

தேவர் அன்று வீட்டுக்கு வரும்போது, தைரியத்தைக் கொஞ்சம் வரவழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார். எங்கோ மிக்க அவசரமாகப் புறப்படுவதற்காக, ஏதோ ஒரு பஞ்ச வர்ணத் தைலத்தைத் தலையிலே தடவிக் கிராப்பைச் சீவிக் கொண்டிருந்தான் வேலய்யா! அவனு டைய கருள் மூடி சீப்புக்குப் பணியாமல் விம்மிக்கொண்டு சிதறியது! உடம்பிலே போட்டிருந்த மஸ்லின் சட்டையிலிருந்து ஏதோ ஒரு இரண்டரை அணா 'ஸெண்ட்' 'கும்'மென்று அனல்-வாசனையை வீசிக் கொண்டிருந்தது! "ஏலே!" என்றார் தேவர். பையன் ஏறிட்டுப் பார்த்தான்.

"ஏலே, ஒரே வார்த்தையிலே சொல் லிப் புட்டேன். மரியாதையா இந்தக் கிராப்பை யெல்லாம் ஒளிச்சுப்புட்டு, குடுமி வச்சுக்கிட்டு வாரதானா, இந்த வூட்டுலே மிதி. இல்லை, இந்த நிமிசமே ஒளிஞ்சிரு! ஆமா!" என்று ஆத்திரத் துடன் சொன்னார் ராமையாத் தேவர்.

"இதென்ன உங்களுக்குப் புத்தி இந்த மாதிரிப் போச்சு!" என்று இழுத்தாள் தேவருடைய சம்சாரம்.

"இந்தா மூதி! நீ என்னமும் பேசி னேன்னா, ஒரே அடியிலே ஒன் மண் டையைப் புளந்திடுவேன், சாக்ரதை! பய இனிமே வூட்டிலே மிதிச்சான், ஒன் மண்டைதான் உருளும், ஆமாம்!"

மூடி விழிக்கிற நேரத்தில் இத்தனை வார்த்தைகளும் பரி மாறின! அவ்வளவு

சோமு

தான்! அந்த விநாடியே அங்கிருந்து புறப்பட்ட வேலய்யாவிடமிருந்து, நாளது தேதி வரை எவ்வித தகவலும் இல்லை! அவனுடைய ஏக்கத்திலேயே தேவர் மனைவியும் இந்த உலகிலிருந்து போய் விட்டாள். தேவரோ தாம் உண்டு, தம்முடைய வீட்டுக்குப் பின்னால் உள்ள தோட்டம் உண்டு என்று, காலத்தைக் கழிக்கலானார்!

இப்படி யிருக்கும் போது தான், இன்று, தீபாவளிக்கு முன் தினம், — இப்படி ஒரு கடிதம் வேலாயுதத்திடமிருந்து வந்திருக்கிறது! தூக்கி வாரிப் போடாமல் என்ன செய்யும் தேவருக்கு!

"தம்பியா பிள்ளை! அப்படியானு, வேலய்யா நாளைக்கு வாரானு இங்கே!" என்று மறுபடியும் கேட்டார் தேவர்.

"ஆமா வேய்! வாராரு, உம்முடைய புத்திர பாக்கியம்! நல்ல கோடி வேட்டியா எடுத்து வையும்!" என்று சொன்னார் கிராம முனிசீபு நெல்லையப்ப பிள்ளை அவர்களின் மூத்த மகன் சிவசுப்பிரமணிய பிள்ளை!

3

ஊரை விட்டுக் கிளம்பிய நிமிஷத்திலிருந்து, வேலய்யா எங்கெங்கோ சுற்றினான். ஊர் ஊராக அலைந்தான். 'சேக்காளி'களுக்கு ஒன்றும் குறைச்சலே இல்லை. 'சண்டியன்' என்ற பட்டத்துக்கு ஒரு நல்ல செல்வாக்கு இந்தக் கூட்டங்களில் இருக்கத்தான் செய்தது!

ஆனால் எத்தனை நாள் இது ஓடும்? சென்னைப் பட்டினத்தில் குடிப் பழக்கம் இருக்கிற வரை, வேலய்யாவின் பாடு கொண்டாட்டமாக இருந்தது! வெறியர்களுக்குள் சண்டை வந்து விட்டால், இரண்டு கட்சியுமே வேலய்யாவிடம் மத்தியஸ்தம் நாடும்! எனவே, அவனுக்கு ஒரே 'கிராக்கி'யாக இருந்தது. ஆனால் எந்த நிமிஷத்தில் புண்ணிய வாளர்கள் மதுவை விலக்கினார்களோ, அன்றிலிருந்து வேலய்யாவின் தொழிலுக்குப் "பிசு" குறைந்து விட்டது. படிப்படியாகச் சாப்பாட்டுக்கே கூட "லாட்டரி" அடிக்க வேண்டிய நிலைமைதான்!

வயிறு பட்டினி கிடந்தால், மூளை சரியாக வேலை செய்யும் என்று சொல்லுவார்கள். வேலய்யாவுக்கு இப்பொழுது மூளை கொஞ்சம் இயங்க ஆரம்பித்தது! சென்னைப் பட்டினத்தின் எல்லையிலே வளரும் புதிய நகரங்கள் வழியாக அவன் ஆடி அசைந்து நடக்க ஆரம்பித்தான், வயிற்றுக்கு வழி தேடி!

அடையாற்றில் ஒரு பிரபல மனத்தத்துவப் பேராசிரியர் புதிதாக வீடு கட்டியிருந்தார். வீட்டைச் சுற்றித் தோட்டம் பிரமாதமாக இருந்தது. இந்தத் தோட்டத்தைப் பாதுகாக்கிற வேலையாவது தனக்குக் கிடைக்காதா என்று எண்ணி, உள்ளே நுழைந்தான் வேலய்யா.

"நான் அனாதை. எனக்கு இந்தத் தோட்டக் காவலாவது குடுங்க. ஒழுங்கா யிருப்பேன்" என்றான் வேலய்யா.

மனத் தத்துவப் பேராசிரியர் அவனை ஏற இறங்கப் பார்த்தார்!

"இந்தச் சௌடால் கிராப்பை எடுத்து விட வேணும். கிறுதாவை இவ்வளவு இறக்கி வைத்துக் கொள்ளக் கூடாது! இந்த இரண்டு நிபந்தனைக்கும் இஷ்டமானால், தோட்டத்தைக் கவனி!" என்றார் ஆசிரியர்.

வேலய்யா 'சரி' என்றான். வயிற்றுக்குள்ளே யிருந்து வந்தது அந்த வார்த்தை! உடனே வெளியே வந்தான். கிராப்பை ஒரு கணத்தில் 'அப்பனக் குடுமி'யாகக் கத்திரித்தான். கிறுதாவை எடுத்தெறிந்தான். குனிந்த தலை நிமிராமல், வேகமாகப் பங்களாவுக்குள்ளே நுழைந்தான் வேலய்யா!




4

தோட்டக்காரன் வேலய்யாவினிடம் பேராசிரியருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. மிகவும் பிரியமாகவே இருந்தார். ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் கண்டிப்பு! வேலய்யாவும் அவனோடு வேலைக்காரர்கள் பலர் இருந்தும்கூட, பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பியதும், ஆசிரியர் தாமே போய் வாளியிலே தண்ணீர் ஏந்தி வந்து, பூஞ்செடிகளுக்கெல்லாம் ஊற்றுவார்! மாங்கன்று, மாதுளங் கன்று — இவைகளுக்கு எல்லாம் தாமே பாத்தியைக் கிறி அதில் உரத்தை வைப்பார். வேலய்யா போய்த் தடுத்தாலும் அவர் கேட்க மாட்டார். மற்ற எந்த விஷயத்தில் விட்டுக் கொடுத்தாலும், இதில் மட்டும் மிகவும் கண்டிப்பு அவர்!

வேலய்யாவுக்கு இது புரியவில்லை. ஒரு நாள் ஆசிரியரிடமே நேரில் சென்று இதைக் கேட்டு விட்டான்.

"நாங்க எத்தனையோ பேரு இருக்கும் போது, நீங்க இந்த மாதிரி..."

"வேலய்யா, இந்த ஒரு வேலையிலே மட்டும் எனக்கு எவ்வளவு ஆனந்தம் இருக்கு, தெரியுமா! வருஷந்தோறும் எத்தனையோ பிள்ளைகளுக்குக் 'கல்வி' என்னும் விதையை ஊனி, வெளியே அனுப்புகிறேன்! எத்தனையோ பிள்ளைகளை வளர்த்துப் படிக்க வைக்கிறேன்! ஆனா, எதிலேயும் இல்லாத



எமது தீபாவளி வாழ்த்துக்கள்..
Phœnix
போனிக்ஸ் விசிறிகள்
EWI LTD
சிக்கனச்செலவில் சுகம்..
அழகிய தோற்றம்..
ஆர்எம்.எஸ். & கோ, லிட்., பிராட்வே, மதராஸ்..
இந்தக் குதூகல தீபாவளி தினத்தில் 24" சீலிங் விசிறிகளை ரூ. 115/- விலையில் விற்பனை செய்யத் துவங்குகிறோம் என்பதை எங்கள் ஆதரவாளர்களுக்கு மிக்க சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சந்தோஷம் இதிலே இருக்கு!" என்றார் பேராசிரியர். வேலய்யா அவருடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே ஆசிரியரின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அவர் தொடர்ந்து சொன்னார்:

"இன்று சாயந்திரம் இந்தப் பூச் செடிக்குத் தண்ணீர் ஊற்றினால், நாளைக்குக் காலையில் அது தன்னுடைய நன்றியை மலர்களாகப் பூத்து மகிழ்ச்சியாக வெளியிடுகிறது. இந்த வருஷம் உரம் கொடுத்தால் அடுத்த வருஷம் வட்டியும் முதலுமாகச் சேர்த்து அந்தக் கடனை அடைக்கிறது மாமரம்! வாழ்க்கையில் நாம் வளர்த்துப் பாதுகாக்கிற மனிதப் பயிரைப் பற்றி எதுவும் உறுதியாகச் சொல்வதற்கில்லை. கண்ணீரையே ஊற்றி வளர்த்தாலும் விஷக் கனிகளாகவே தருகிற பிள்ளைகளும் உண்டு!"

வேலய்யாவுக்குத் தலைசுற்றியது. பேராசிரியருக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டுக் குடிசைக்குள்ளே போனவன், மறுநாட் காலையிலேதான் வெளியே வந்தான். வந்து, பேராசிரியர் காலிலேயே விழுந்தான்.

"என்னடா?" என்றார் ஆசிரியர்.

"இது வரை நான் என்னைப் பத்தி ஒரு பெரிய பொய் சொல்லிட்டேன். நான் அனாதைன்னேன், அது தப்பு. எனக்கு ஒரு அப்பா இருக்காரு ஊரிலே. இந்தத் தீவாளிச் சமயத்திலே அவரைப் போய்ப் பாக்கணும்னு ஆசையாயிருக்கு!"

இரண்டு ஜதை கோடி வேட்டிகளை எடுத்துக் கொடுத்து வேலய்யாவை வழியனுப்பி வைத்தார் பேராசிரியர்.

5

தீபாவளி என்ற குதூகலமான பண்டிகை கோடி வஸ்திரமும் பட்டாசுகளுமாக ஜமாய்த்துக் கொண்டிருந்தது! மீனாட்சிபுரத்தின் தெரு வீதிகளெல்லாம் 'சடசடா படபடா' என்று கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தன! வேலய்யா நுழைந்தான்!

"அப்பா" என்று அவன் கூப்பிட்டபோது, பதில் இல்லை. ராமையாத் தேவர் தம்முடைய வீட்டுப் புறவாசலிலே இருந்த தோட்டத்தில், சுறுசுறுப்பாக நின்று கொண்டிருந்தார்! சத்தம் செய்யாமல் மெதுவாக உள்ளே போய் அவருக்குப் பின்புறமாக நின்று, அவரையே பார்த்தான் வேலய்யா.

விசாலமாக இருந்த அந்தத் தோட்டத்தில் பூஞ் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார் அவன் தந்தை! ஆனந்தமாகச் சிரித்த அந்த வண்ண மலர்கள் தன்னுடைய தந்தைக்கு நன்றி செலுத்தினவா, அல்லது, தன்னைப் பார்த்து நகைத்தனவா என்று சிந்தித்தான் வேலய்யா!

அப்பாவைக் கேளுங்கள்!

பி. எஸ். மணி

சந்துரு அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். அவன் உள்ளம் கவர்ந்த அத்தை மகள் அமலா வருவாள், வருவாள் என்று எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தான்.

அமலா நாணிக் கோணிக் கொண்டு ஒரு மணி நேரத்துக்குப் பிறகு வந்து சேர்ந்தாள்.

"என்ன அமலா! உன் தரிசனம் கிடைப்பது அபூர்வமாகி விட்டதே!"

"இல்லை! அப்பா இப்பொழுதுதான் வந்தார். அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து விட்டு வருவதற்கு நேரமாகி விட்டது!"



"சரி! நாம் கடற்கரைக்குப் போய்விட்டு வரலாமா?" என்றான்.

"அப்பாவை ஒரு வார்த்தை கேளுங்களேன். நான் இப்பொழுதே வந்து விடுகிறேன்!"

"இதற்கெல்லாம் அப்பாவிடம் கேட்க வேண்டுமா?" என்றான் சந்துரு.

"நானே போய்ச் சொல்லி விட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுத் தந்தையிடம் அநுமதி பெற்று வந்தாள் அமலா.

இருவரும் கடற்கரைக்குப் புறப்பட்டார்கள். வழி நெடுகத் தன் அப்பாவின் பெருமைகளைக் கூறி வந்தாள் அமலா.

இருவரும் மணலில் போய் உட்கார்ந்தார்கள். அப்போது அங்கே ஒரு நீளக் கார் வந்தது. காரிலேயே சிற்றுண்டி தயாரித்துக் கடற்கரைக்கு வருபவர்களுக் கெல்லாம் காப்பி, பலகாரம் வியாபாரமாகிக் கொண்டிருந்தது. சந்துரு மௌனமாக இருப்பதைப் பார்த்து, "என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் அமலா. "இல்லை! என் உள்ளத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. ஆனால்...?"

"ஏன் தயங்குகிறீர்கள்? சொல்லுங்கள்!" என்று ஆவலுடன் கேட்டாள் அமலா.

தன்னை மணந்து கொள்ள வேண்டும் என்று அவன் கேட்கப் போகிறான் என்று எதிர்பார்த்தாள்.

"இல்லை! உன் அப்பாவின் சம்மதத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்ட பிறகு......" என்று இழுத்தான் சந்துரு.

"அப்பா இங்கே இல்லையே! பரவாயில்லை! என்னிடம் சொல்லுங்கள்!" என்றாள் அமலா.

"உனக்கு 'மோபைல் கான்டீனி'ல் ஒரு கப் காப்பி வாங்கிக் கொடுக்கணும்னு தோன்றியது. ஆனால் உன் அப்பாவைக் கேட்காமல் கொடுக்க முடியாதே என்பதனால் தயங்கினேன்!" என்று ஒரு போடு போட்டான்.

அமலா வெட்கத்தினால் தலை குனிந்தாள்.

அழியாப் புகழ்

எஸ்.வி.எஸ்

கந்தசாமி உண்மையான தேசபக்தர், சிறை சென்றவர், போலீஸ் குண்டாந் தடியடி பட்டவர். ஆனால் சந்தர்ப்பவாதியல்ல. தான் புரிந்த தியாகத்துக்கு விலைகூறிப் பெறுபவரல்ல. ஒரு காலத்தில் அவர் நல்ல செல்வந்தராக இருந்தார். ஆனால் இப்போது அவர் நிலை மாறிவிட்டது. அவர் வீட்டில் பெரும்பாலான நாட்கள் அடுப்பில் பூனைதான் படுத்துத் தூங்கி வந்தது.

தீபாவளிக்கு முதல் நாள். அவருடைய இரண்டு குழந்தைகள் ஜவாஹரும் விஜயாவும் 'அப்பா பட்டாசு,' 'அப்பா புதுத் துணி' என்று நச்சரித்து வந்தன. 'வாங்குவோம், வாங்குவோம்' என்று சொல்லித் தேற்றிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயம் வீட்டின் உள்ளே யிருந்து, "உங்களைத்தானே! இந்தப் பழம் பேப்பர்களையெல்லாம் மிட்டாய்க் கடையில் போட்டாலாவது நாலணா வரும். குழந்தைகளுக்கு மத்தாப்புப் பெட்டிகளாவது வாங்கித் தாருங்களேன்..." என்று அவர் மனைவி மீனாட்சி யோசனை சொன்னாள்.

"நம்ம வீட்டில் பழம் பேப்பர் ஏதடி? நானே இலவச வாசக சாலைக்குப் போய் அன்றாடச் செய்திகளைப் படித்து விட்டு வருகிறேன்..."

"சே...சே...அந்தச் செய்திப் பத்திரிகைகளைச் சொல்லவில்லை. நாடக நோட்டீஸ்கள், சினிமா நோட்டீஸ்கள், கல்யாணப் பத்திரிகைகள், தேர்தல் பிரசுரங்கள், உங்களுக்கு வந்த வறட்டுப் புகழ்ச்சிக் கடிதாசிகள் — இப்படியாக வீட்டில் குப்பையாகக் கிடந்தவைகளைச் சேர்த்து வைத்திருக்கிறேன். கிட்டத் தட்ட அரை வீசை இருக்கும்; கொண்டுபோய்ப் போடுங்கள்" என்றாள்.

அப்போது, "ஐயா, கந்தசாமி என்கிறது நீங்கள்தானே!" என்று குரல் வந்தது.

கந்தசாமி திரும்பிப் பார்த்தார். கதர் உடை தரித்த ஓர் இளைஞர் நின்று கொண்டிருந்தார்.

"ஆமாம், நான்தான். தாங்கள்...!"

"நான் ஆண்டிப்பட்டி ஆறுமுகத்தின் மகன் ராஜகோபாலன்!" என்றான்.

"ஆறுமுகத்தின் மகனா...ஆறுமுகம் சௌக்கியமா!" என்று சொன்னவர் ஓரே ஆனந்த மேலீட்டால் அவனை இறுகத் தழுவிக்கொண்டார்.

"அப்பா காலமாகி ஒரு வருஷம் ஆகுதுங்க!"

"என்ன!" என்று அலறினார் கந்தசாமி.

பிறகு சற்று நேரம் கழித்து, "ஆகா! ஆறுமுகமும் நானும் தேசியப் போராட்டங்கள் ஒவ்வொன்றிலும் கலந்து உழைத்தோம். ஸைமன் கமிஷன் எதிர்ப்பு, நீலன் சிலை எடுப்புப் போராட்டம், உப்பு சத்தியாக்கிரகம்—இப்படி ஒவ்வொன்றிலும் நாங்கள் சேர்ந்தே உழைப்போம். ஆகா! அவன் எத்தனை எத்தனை தியாகங்கள் செய்தான்!" என்று பரவசப்பட்டுக் கூறினார் கந்தசாமி. அந்த இளைஞன் கண்களில் நீர் துளித்துவிட்டது. "ஏன் அப்பா, அழுகிறாய்! அப்படி உத்தமர்கள் என்றென்றும் நிலைத்திருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா!" என்று ஆறுதல் கூறினார்.

"என் தந்தை இறந்து விட்டாரே என்று அழவில்லை. அப்படியெல்லாம் அருந் தியாகங்கள் செய்த தந்தை பிற்கால வாழ்க்கையில் அதாவது, இரண்டாவது உலக மகா யுத்தம் பிரகடனம் செய்து, நமது அருந் தலைவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டதும், என் தந்தை இரக்கமற்ற கறுப்பு மார்க்கெட்காரராக மாறிவிட்டார். ஐயோ, அப்போது அவர் புரிந்த லீலைகளை நினைக்கவும் என் நெஞ்சம் கூசுகிறது" என்றான்.

"மனிதன் என்றால் குற்றம் குறை இருக்கத்தான் செய்யும். ஆனாலும் அவரிடம் குணங்களே அதிகமாக இருந்ததாக எனக்குத் தோன்றுகிறது" என்றார் கந்தசாமி.

"இல்லையென்றால் அவர் என்னை உங்களிடம் போகச் சொல்லி விட்டுப் போயிருப்பாரா!" என்றான் அந்த இளைஞன்.

"என்ன!"


"ஆமாம். நீங்கள்தான் முதன் முதலில் கடை வைக்க இருநூறு ரூபாய் கடன் கொடுத்து உதவினீர்களாம். ஒரே ஒரு கால் கடுதாசியை அடைமானமாக ஏற்றுக் கொண்டு உதவினீர்களாம். ஆமாம், 'எவ்வளவு நெருங்கிய நண்பனாக இருந்தாலும் ஏதாகிலும் அடமானம் வைத்தால்தான் கடன்கொடுப்பேன்' என்று சொன்னீர்களாம். அப்போது அப்பாவிடம் ஒன்றுமே இருக்கவில்லையாம். தங்க நகை, வெள்ளி நகை எல்லாமே விற்றுப் போய் விட்டதாம். அப்போது நீங்கள், 'உயிர் போல் மதிக்கக் கூடிய பொருள் ஏதாகிலும் இருக்கத்தானே வேண்டும்! அதை அடகு வைத்து வாங்கிக் கொண்டு போ' என்றீர்களாம். 'என்னிடம் கால் கடுதாசி யிருக்கிறது. அதுதான் எனக்கு உயிரினும் மேம்பட்டது' என்று ஏதோ ஒரு கடுதாசி கொடுத்தாராம். 'இதுவே நல்ல அடகுப் பொருள்' என்று இருநூறு ரூபாய் கொடுத்தீர்களாம். பிறகு அப்பாவுக்குத் தங்களைச் சந்திக்கச் சந்தர்ப்பமே ஏற்படவில்லையாம். ஆனால் சாகும் போது தங்கள் பெயரைச் சொல்லித் தங்கள் உயர்ந்த பண்பை நினைத்து நினைத்து உருகினார். இருநூறு ரூபாய்க்கு ஐந்நூறு ரூபாயாகத் தங்களுக்குக் கொடுத்து அந்த அடகுப் பொருளை வாங்கிவந்து, தலைமுறை தலைமுறைக்கு வைத்துப் போற்றி வரும்படி சொன்னார். அதற்குள் அவர் உயிர் பிரிந்து விட்டது. அந்தக் கால் கடுதாசியைப் பெற்றுப் போக, என் கடனைத் தீர்க்க வந்திருக்கிறேன். இதோ ஐந்நூறு ரூபாய் இருக்கிறது. வாங்கிக் கொள்ளுங்கள்" என்றான்.

இதைக் கேட்டதும் கந்தசாமி தம் வீட்டிலிருந்த ஓட்டை பீரோவுக்குச் சென்று பரபரப்புடன் டிராயர்களை இழுத்துப் பார்த்தார். எல்லாம் துப்புரவாகச் சுத்தம் செய்யப்பட்டிருந்தன. அவ்வளவுதான்; அலறிப் போய் விட்டார். ஒரு கணத்துக்குப் பிறகு தம் மனைவி பழைய பேப்பர் சேர்த்து வைத்திருப்பதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது. அந்தக் குப்பைக் காகிதங்களை யெல்லாம் கிளறினார். கடைசியில் ஒரு கடிதம் அதிலிருந்து தேடி எடுத்தார்.

"தம்பி, இதுதானப்பா உன் தந்தை அடமானமாக என்னிடம் வைத்தது" என்று சொல்லி அந்தக் கால் கடுதாசியைக் கொடுத்தார்.

அது காந்தி மகான் ஆறுமுகத்துக்கு எழுதியிருந்த கடிதம் என்றால் இளைஞனின் ஆனந்தத்தை யாரால் கட்டுப் பிடிக்க முடியும்!

அழியாப் புகழ் எய்தி விட்ட கந்தசாமியின் வீட்டிலும் அன்று தீபாவளி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்று சொல்லவும் வேண்டுமா!


தீபாவளி ஒளி போன்றவை
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறித் துணிகள்

சக்கரவர்த்தித் திருமகன்

30. முன்னாள் நிகழ்ச்சி

கௌசல்யை, தசரதனை நிந்தித்துக்கொண்டேயிருந்தாள். அப்படிப் பேசுவதில் புத்திரனை இழந்த தன் பெருந் துக்கத்துக்கு ஒருவித ஆறுதலைக் கண்டாள்.

தசரதன் நிலைமையோ, ஒரு சிக்கலில் அகப்பட்டுப் போய்ப் பெருங் குரூரத்தைச் செய்ய வேண்டியதாக நேரிட்டது. தான் செய்த பிழையும் அதனால் ஏற்பட்ட அக்கிரமமும் அவன் அறியாதவன் அல்ல. ஆயினும் தரும சங்கடத்தினின்று தப்பும் வழி அவன் காணவில்லை. தகப்பன் உத்தரவை மீறி ராஜ்யத்தை விடமாட்டேன் என்று ராமன் எதிர்த்துப் போர் செய்திருந்தால் தசரதனுக்குச் சந்தோஷமாகவே இருந்திருக்கும். தான் பிடிபட்ட வலையிலிருந்து தப்பித்துக் கொண்டிருப்பான். ஆனால் ராமனோ 'தந்தையினுடைய உத்தரவை மீறமாட்டேன், காட்டுக்குப் போவதே என் கடமை' என்று தருமப் பிடிவாதம்செய்து காட்டுக்குப் போய்விட்டான். சீதையும் லக்ஷ்மணனும் ராமனோடு காட்டுக்குப் போவதே தங்களுடைய கடமை என்று யாருடைய யோசனையையும் கேட்காமல் தீர்மானித்துக் கொண்டு வனம் சென்று விட்டார்கள்.

இவ்வாறு ஏற்பட்ட நிலைமையில் அரசன் இன்னது செய்வது என்று தெரியாமல் தத்தளித்து அரை ஜீவனாக இருக்கும் சமயத்தில் கௌசல்யை தனக்குத் தோன்றின நியாயத்தையெல்லாம் சொல்லித் தசரதனுடைய குற்றத்தை வெகு கடுமையான முறையில் குத்திக்குத்திக் காட்டிப் பேசினாள்.

"யாரைப் பற்றி உமக்கு என்ன கவலை? நீர் சத்தியம் தவறாமல் இருந்து விட்டால் உமக்குப் போதும். இளம் பெண்ணோடு சுகமாக இருப்பதில் உமக்குத் திருப்தி ஆகிவிட்டது. எனக்கு யார் கதி? ஸ்திரீக்குப் புருஷன்தான் கதி. நான் பெற்ற புருஷனோ வேறு மனைவியுடன் சேர்ந்து கொண்டு என்னைக் கைவிட்டு விட்டான். என் மகனோ காட்டுக்குப் போய் விட்டான். என் பிறந்தகத்து பந்துக்கள் தூர தேசத்திலிருக்கிறார்கள். புருஷன் உயிரோடிருக்க அங்கே போய் நான் எப்படிப் பந்துக்களை அண்டிப் பிழைக்க முடியும்? நிர்க்கதியாக நிற்கிறேன். உமக்கு இதைப் பற்றியெல்லாம் என்ன கவலை? கைகேயியும் பரதனும் சுகமாக இருந்தால் உமக்குப் போதும். நீர் ஒன்றும் யோசிக்க வேண்டாம். ராமன் காட்டில் பதினான்கு வருஷங்கள் கழித்துத் திரும்பி வந்தாலுங் கூட உம்முடைய சுகத்தை அவன் கெடுப்பான் என்று பயப்பட வேண்டாம். ராமன் திரும்பி வந்தாலும் பரதன் ஆண்ட ராஜ்யத்தை அவன் மறுபடி தீண்டமாட்டான். வேறு மிருகம் கொன்று தின்ற மாமிசத்தின் மிகுதியைக் காட்டுப் புலி தீண்டாது. மீன் தன் குஞ்சுகளைக் கொன்று தின்று விடுவது போல் பெற்ற பிள்ளையைக் கொன்றீர்."

இவ்விதமாகக் காயம் பட்ட புண்ணில் குத்திக் குத்தி வேதனை செய்யும் முறையில் புருஷனைத் தாக்கிப் பேசிக் கொண்டேயிருந்தாள் கௌசல்யை.

இந்தப் பேச்சைக் கேட்டு வேதனைப் பட்ட அரசன், "என்னுடைய கதி ஏன் இப்படியாயிற்று?" என்று பால்ய காலத்து நிகழ்ச்சிகளை மனத்துக்குக் கொண்டு வந்து சிந்தனையில் ஆழ்ந்தான்.

ராஜாஜி

பிறகு கொஞ்ச நேரம் கழித்துப் பெரு



மூச்சு விட்டுக் கண்களைத் திறந்து பார்த்தான்; பக்கத்தில் கௌசல்யை இருப்பதைக் கண்டான்.

பூர்வகாலத்து நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வந்து தசரதனுடைய துக்கம் இருமடங்காயிற்று. இந்தப் பரிதாப நிலையில் மனைவியைப் பார்த்து இரு கைகளும் கூப்பி, "கௌசல்யே, என்பேரில் இரக்கம் கொள்!" என்று அழுதான்.

"அந்நியர்கள் செய்த குற்றத்தைக் கூட நீ எப்போதும் மன்னித்து விடுவாயே? ஏன் என்பால் இப்படி நடந்து கொள்கிறாய்? புருஷனானவன் கெட்டவனாயிருந்தாலும் மனைவிக்கு அவனே தெய்வம் என்றெல்லாம் பெரியோர்கள் சொல்லுகிறார்களே. பெருந் துக்கத்தை நீ அடைந்தாய் என்பது உண்மை. ஆயினும் என்னை இப்படிப் பேசி நீ இம்சிக்கலாமா?" என்றான்.

இதைக் கேட்ட கௌசல்யை, "படையெடுத்து வரும் சத்துருவால் ஏற்படும் துன்பங்களை விட உன்னை வேலை செய்யும் துக்கத்தால் உண்டாகும் தாபம் பெரிது. என்னால் தடுத்துக் கொள்ள முடியவில்லை. மன்னிப்பீராக! ராமன் வனம் சென்று ஐந்து ராத்திரியாயிற்று என்று கணக்குச் சொல்லுகிறார்கள். ஐந்து வருஷங்கள் ஆனதைப் போல் அல்லவா எனக்குத் தோன்றுகிறது. அவனை நினைந்து நினைந்து எனக்கு உண்டாகும் துக்கம், நதிகளில் வெள்ளம் பொங்கிப் பெருகுவது போல் அதிகரிக்கிறது! நான் என்ன செய்வேன்? இந்தத் துயர வெள்ளத்தில் நான் என் வசமிழந்தேன். என்னை மன்னிப்பீராக" என்றாள்.

இவ்வாறு கௌசல்யை பேசிய அன்பான மொழிகளைக் கேட்டுத் தசரதன் கொஞ்சம் ஆறுதலடைந்தான். அந்தச் சமயம் சூரியன் மறைந்து இருள்மூட ஆரம்பித்தது. வேதனையால் ஓய்ந்துபோன அரசன் மெள்ளத் தூங்கிப் போனான்.

* * *

அர்த்த ராத்திரியில் மறுபடியும் தசரதன் விழித்துக் கொண்டு பக்கத்தில் கௌசல்யாதேவி இருப்பதையறிந்தான்.

"பிரியமானவளே! இருக்கிறாயா பக்கத்தில்? கர்ம பலனை மாற்ற முடியாது. நான் செய்த பாவத்தின் விளைவை இப்போது அனுபவிக்கிறேன். அற்ப சந்தோஷங்களுக்காகப் பெருந் தீமை விளைவிக்கக் கூடிய காரியம் அறியாமையால் மக்கள் செய்து விடுகிறார்கள். பிறகு பயனை அனுபவிக்கும் போது வருந்து

இருர்கள். நான் சிறுவனுக இருந்த காலத்தில் குறியைப் பார்க்காமல் ஓசையைக்கேட்டு அம்பு எய்யும் திறமை பெற் றிருந்தேன். இந்தச் சாமர்த் தியத்தின் அற்ப சந்தோஷத் துக்காக ஒரு காலத்தில் நான் பெரும் பாவத்தைச் செய்ய நேர்ந்தது. அந்த நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன், கேள்" என்று ஆரம்பித்தான்.

"அக்காலத்தில் நீ என்னை வந்து அடைந் திருக்கவில்லை. ஒருநாள் இரவில் தேர் ஏறிச் சரயூநதிக் கரையில்வேட்டை யாடப் போனேன். மழை பெய்து மலை தாதுக்களும் புது மண்ணும் கலந்து பலவித நிறங்களில் ஜலம் எங்கு பார்த் தாலும் ஆறுகளாக ஓடிக் கொண்டிருந்தது. பட்சிகளின் சப்தம் ஒடுங்கிப் போய் வனம் தூங்கினாற் போல் இருந்தது. இரவில் தண்ணீர் குடிக்கப் புலி, கரடி முதலிய மிருகங்கள் வரும் சப்தத்தை வைத்துக் குறி பார்த்து அம்பு எய்யும் பயிற்சி எனக்கு இருந்தபடியால் அதைப் பயன் படுத்திப் பரீட்சிக்கலாம் என் கிற ஆசை தோன்றிற்று. நல்ல இருட்டு. அந்தச் சமயம் ஒரு யானை தண்ணீர் குடிக்கும்





ஸ்தாபகர்



தொ. ஆறுமுக முதலியார்

சுதேசி

(ஸ்தாபிதம்: 1906)

டெலிபோன்: 8291

தந்தி: "புவளு"

தீபாவளி இப்புனித நாளில் நண்பர்களுக்கும் அபிமானிகளுக்கும் எங்களது மனமார்ந்த

நல் வாழ்த்துக்கள்!

இதர எந்த தயாரிப்புகட்கும் தலைசிறந்ததும், நீடித்து உழைக்கக் கூடியதும், அழகும் கவர்ச்சியும் பொருந்தியன வாகும். விலையுயர்ந்த நவீன யந்திர சாதனங்களால், மேனாட்டு முறைப்படி தயாரிக்கப்பெற்ற எங்கள் "கணபதி" புதிய தமிழ் எழுத்துக்களும், "ஆறுமுகம்" புதிய தெலுங்கு எழுத்துக்களும் புகழ் சிறந்த பல்லோராலும் பாராட்டப் பெற்றுள்ளன. மேலும், அச்சாபீஸ் நிர்வாகிகள் அனைவருடைய நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றவையாகும்.

பூரா விவரங்களுக்கு எழுதவும்

தொ. ஆ. சுப்பிரமணிய முதலியார்

நிர்வாக பாகஸ்தர்

சத்தம் போல் "பொளு" "பொளு" வென்று கேட்டது. உடனே சாமர்த்தியமாகச் சப்தத்தைக் குறியாக வைத்து அம்பை எய்தேன். என்னுடைய அம்பு விஷ சர்ப்பம்போல் பாய்ந்து சரியாகவே போய்க் குறியைத் தாக்கிற்று. 'ஐயோ! செத்தேன்!' என்று ஒரு மனிதக் குரல் கிளம்பியதைக் கேட்டுத் திடுக்கிட்டேன்.

"'என் பேரில் யாருக்குத் துவேஷம்? நான் யாருக்கும் ஒரு குற்றமும் செய்யவில்லையே. தண்ணீர் மொண்டு கொண்டு போக வந்த என்னை எவனோ கொன்றானே! என்ன பயனைக் கருதி என்னைக் கொன்றான்? நான் ஒரு பாவமும் செய்யவில்லையே. விரத வாழ்க்கை வாழும் தபஸ்வியான என் பேரில் யாருக்கு என்ன விரோதம்? கண்ணில்லாத என் கிழத் தாயும் தகப்பனாரும் இனி என்ன செய்வார்கள்? என்னையே நம்பியிருந்தார்களே, அவர்கள் இனி எப்படி உயிர் வாழ்வார்கள்? ஐயோ, நான் இப்படி அநியாயமாய்க் கொல்லப்பட்டேனே!' என்று பரிதாபக் குரலில் ஒருவன் அழுத வார்த்தைகளைக் கேட்டேன். பெருந் திகிலடைந்து என் வில்லும் கையிலிருந்த அம்பும் கீழே நழுவி விழுந்தன.

"அழுகுரல் வந்த இடம் நோக்கிச் சென்றேன். தலைமுடி விரிந்து சிதறி, உடல் எல்லாம் ரத்தமும் சேறுமாகத் தரையில் புரண்டு கொண்டிருந்த ஒரு தபஸ்வியைக் கண்டேன். பக்கத்தில் தண்ணீர்க் குடம் உருண்டு கிடந்தது. என்னைப் பார்த்ததும் அவர் கண்களிலிருந்து வீசிய ஒளி என்னைச் சுடும்போலிருந்தது.


"'பாவி, நீயா என்னைக் கொன்றது? தண்ணீர் மொள்ள வந்த என் பேரில் ஏன் அம்பு எய்து கொன்றாய்? கண்ணிழந்த வயோதிகப் பெற்றோர் ஆசிரமத்தில் தாகத்தோடு காத்திருக்கிறார்களே! நான் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவேன் என்று இப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அடே பாவி! ஏன் என்னைக் கொன்றாய்? ஐயோ தெய்வமே, என் தவமும் விரதமும் வேதஅத்யயனமும் வியர்த்தமாய்ப் போயிற்றா? நான் இப்படி அடிபட்டுக் கிடக்கிறேன் என்பது என் வயோதிகத் தாய் தந்தையருக்குத் தெரியாதே! வருவான், வருவான் என்று எதிர்பார்த்த வண்ணமாகவே இருப்பார்கள். விஷயம் தெரிந்தாலும் நடக்க முடியாத கபோதிகள் என்ன செய்வார்கள்? நீ யார்? கோசல தேசத்து அரசன் அல்லவா? என்னை அரசனா கொன்றான்? சரி, அரசனே! நீயே போய் அவர்களுக்கு விஷயத்தைச் சொல்லி அவர்கள் காலில் விழுந்து சரணமடைவாய். இல்லாவிடில் அவர்களுடைய கோபம் உன்னை எரித்து விடும். அவர்களுடைய சாபம் உன்னைச் சாம்பலாக்கி விடும். தாமதமின்றி அவர்கள் இருக்கும் ஆசிரமத்துக்கு நேராகப் போவாய். இங்கிருந்து அவ்விடத்திற்கு ஒற்றையடிப் பாதை போகிறது. அதன் வழியாகச் சீக்கிரம் சென்று உன்னைக் காப்பாற்றிக் கொள். ஐயோ, இந்த அம்பு என் பிராணனை வேதனை செய்கிறது. இதை இழுத்து எடுத்து விட்டுப் போ' என்றார் தபஸ்வி.

"தபஸ்வியின் உடலில் பாய்ந்திருந்த அம்பைப் பிடுங்கினால் அவருடைய வேதனை தீரும். ஆனால் என் கையால் உடனே அவர் உயிரும் போய்விடும்படியான காரியத்தைச் செய்ய மனம் வரவில்லை. இந்தத் தரும சங்கடத்தில் நான் ஒன்றும் செய்யத் தோன்றாமல் ஒரு கணம் திகைத்து நின்றேன்.

"அப்போது அந்த முனி குமாரர், 'யோசிக்க வேண்டாம். அம்பைப் பிடுங்கி விட்டு என் வேதனையைத் தீர்த்து விடு. ஸ்திர சித்தமடைந்து விட்டேன். உன் பாவத்தைப் பற்றி யோசிக்காதே. தைரியமாக அம்பைப் பிடுங்கியெறிந்து என் உயிர் வெளிபோகச் செய்வாய்' என்று சொன்னார்.

"அம்பைப் பிடித்து மெதுவாக இழுத்து விட்டேன். உடனே தரையில் புரண்டு வேதனைப் பட்டுக் கொண்டிருந்த தபோதனர் என்னைப் பார்த்த வண்ணம் பெருமூச்சு விட்டு உயிர் நீத்தார்.

"இந்தப் பாவமல்லவா என்னை இப்போது வாட்டுகிறது. கபோதியான அந்தப் பெற்றோர்கள் பட்ட துக்கத்தை நான் இப்போது அனுபவிக்கிறேன்" என்றான்.



OUR HEARTY DEEPAVALI GREETINGS TO ALL

50 Years OF SERVICE IN THE TEXTILE WORLD & MOVING AHEAD WITH MARCH OF TIME

THE KALEESWARAR MILLS LTD.
COIMBATORE

Spinners of

29s to 80s 'KAMADENU' YARNS

Manufacturers of

5000, 9000 GREY SHEETINGS
306, 286 TOWELS
303, 703 BLEACHED MULLS
444 LONGCLOTH, DHOTIES
SHIRTINGS ETC. ETC.

★

POST BOX No. 503

Phone: OFFICE 59
with 4 extensions
RESIDENCE 60

Grams: KALEESWARAR




TOTAL LOOMS	...	325
TOTAL SPINDLES	...	50,314

ADDITIONAL 100 LOOMS UNDER ERECTION

P.S.S. SOMASUNDARAM CHETTIAR
GENERAL MANAGER-IN-CHARGE:

BP


தீபாவளி
பட்டாஸ்
திருசுகள்
மத்தாப்பு, கம்பி மத்தாப்பு, ஒலிவெடி
சக்கரம், மற்றும் நூதனமான
பட்டாஸ் வெடிகள் !!
தயார் செய்யுமிடம் :
ஸ்ரீ காளீஸ்வரி பயர் ஒர்க்ஸ்,
சிவகாசி.





4. இரும்புக் கூண்டில்

வீரப்ப தேவன் உள்ளே நுழைந்த போது, வீரசிம்மன் ஒரு பெரிய அறையில் உட்கார்ந்திருந்தான். அரசாங்க உடை தரிக்காமல் அரசன் வெள்ளைப் பைஜாமாவும் முழங்கால் வரையிலும் வரும் ஒரு சட்டையும் அணிந்திருந்தான். அந்த நீளச் சட்டையிலே முப்பது அல்லது முப்பத்தி ஐந்து பித்தான்கள் இருந்தன. காலில் வெல்வெட்டினால் செய்யப்பட்ட மெல்லிய செருப்புகளைப் போட்டுக் கொண்டிருந்தான்.

வீரசிம்மன் உட்கார்ந்திருந்த அறை வெகு விசாலமாக இருந்தது. தரையில் ரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. அதன்மீது பலவித உயர்ந்த சோபாக்களும் நாற்காலிகளும் இருந்தன. அறையைச் சுற்றிலும் எங்கு பார்த்தாலும்- நிலைக் கண்ணாடிகள் இருந்தன. அந்த அறையைப் பார்த்தால் கொலு மண்டபம் போல் தோன்றியது. ஆனாலும் அரசன் அப்பொழுது அங்கு உட்கார்ந்திருந்தது அரசனுக்காக அமைக்கப் பட்டிருந்த சிம்மாசனத்தில் அல்ல. ஒரு மூலையிலே இருந்த ஒரு சாதாரண நாற்காலியில்தான் உட்கார்ந்திருந்தான். அவன் உட்கார்ந்திருந்த மாதிரியைப் பார்த்தால் எதைப் பற்றியோ சிந்தனை செய்து கொண்டிருப்பது போலத் தோன்றியது. அவன் எப்பொழுதும் தனியாகவே இருந்தது கிடையாது. யாராவது இரண்டு மந்திரவாதிகளிடமாவது பேசிக் கொண்டிருப்பான். அவன் தனியாக உட்கார்ந்திருந்ததிலிருந்து அவன் ஏதோ இரகசியமான சமாசாரத்தை எதிர்பார்த்த வண்ணமாக உட்கார்ந்திருப்பது போல் தெரிந்தது.

வீரப்பதேவன் உள்ளே சென்று தன் வணக்கத்தைத் தெரிவித்தான். "வா, வா, வீரப்பா! உன்னைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டே வீரப்பன் கைகளைப் பற்றிக் கொண்டான் அரசன்.

வீரப்பதேவன் மிகவும் சாமர்த்தியசாலி. அரசன் அவனுக்குச் சம உரிமை காட்டி உள்ளே அழைத்துச் சென்றாலும் தான் ஒரு சேவகன்தான் என்பதை அவன் மறக்கவில்லை. அதனால்தான் அவன்மீது அரசன் கோபிக்கச் சந்தர்ப்பமே ஏற்படவில்லை. அரசன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். "வீரப்பா, அந்த நாற்காலியை என் அருகில் இழு. அதில் உட்காரு. அவர்கள் கதி என்ன ஆயிற்று? அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா?



"எங்கு இருக்கிறார்கள்? நீ அவர்களைப் பார்த்தாயா? சீக்கிரம் சொல்" என்று அரசன் சரமாரியாகப் பதட்டத்துடன் கேள்விகள் கேட்டான்.

ஆனால் வீரப்பதேவன் அரசன் சொல்லியும் நாற்காலியில் உட்காரவில்லை. உட்காராமல் பேசுவதற்குத் தயங்கினான். அறையைச் சுற்றியும் பல முறைகள் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன வீரப்பா, பேசாமல் இருக்கிறாய்! இந்த அறையில் ஒருவருமில்லை. நீ போய் விட்டு வந்த சமாசாரத்தைப் பின்பு விவரமாகச் சொல்லலாம். முதலில் அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா, அதைச் சொல்லு!" என்றான் அரசன்.

"ஆமாம், அங்கே அவர்கள் இப்பொழுது உயிருடன்தான் இருக்கிறார்கள். அவர்கள் உயிருக்கு ஒருவித ஆபத்தும் வராதபடி ஏற்பாடு செய்து விட்டு வந்திருக்கிறேன்" என்று கூறி விட்டுத் தான் போய் வந்த சமாசாரத்தை விவரமாகச் சொன்னான்.

அந்தச் சமயத்தில் யாரோ மெதுவாக 'டக் டக்' என்று கதவைத் தட்டிய சத்தம் கேட்டது. "இந்த நள்ளிரவிலே தைரியமாகக் கதவைத் தட்டுவது யார்? யாராவது முக்கியமானவராக இல்லா விட்டால் காவலாளர்கள் உன்னை அனுமதித்திருக்க மாட்டார்கள். எதற்கும் அவசரப்பட்டுக் கதவைத் திறக்காதே. அந்த ஜன்னல் வழியாக யார் என்று எட்டிப் பார்!" என்றான் அரசன் வீரசிம்மன்.

ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த வீரப்பதேவன், வேகமாகச் சென்று அரசனிடம் வந்தவர் யார் என்று தெரிவித்தான்.

அதைக் கேட்ட அரசன் உடனே எழுந்திருந்து, "வாருங்கள், வாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்தான்.

வந்தவருக்கு நன்றாக வளர்ந்த நரைத்த மீசையும் தாடியும் இருந்தன. தலையெல்லாம் சடை விழுந்திருந்தது. ஒரு கையில் தடியும் மற்றொரு கையில் ஒரு கமண்டலமும் இருந்தது. காவி வஸ்திரம் அணிந்து கொண்டிருந்தார். அவருக்கு வயது சுமார் எண்பது அல்லது எண்பத்தைந்து இருக்கலாம். வந்தவரின் பெயர் வித்யாசாகரர். அவர்தான் அந்த வீரசிம்மராஜாவின் குலகுரு. வீரசிம்மன் அரசாட்சி செய்வதற்கு முன்பாகவே பல வருஷங்களாக அந்த அரசாங்கத்துக்குக் குலகுருவாக இருந்து வருபவர். மிகவும் நேர்மை தவறாதவர். அவரிடம் மந்திர சக்தியும் உண்டு. ஆனால் அதைத் தீய வழிகளில் உபயோகப் படுத்த மாட்டார். அதனால் சில சமயம் அவருக்கும் வீரசிம்மனுக்கும் சிறிய சச்சரவுகள் ஏற்படும். இருந்தாலும் வீரசிம்மன் குலகுருவுக்கு உரித்தான மரியாதைகளைக் கொடுக்கத் தவறியதே இல்லை. முடிந்தவரையில் குலகுருவின் வார்த்தைகளை மீறி நடக்க மாட்டான்.

உள்ளே வந்த வித்யாசாகரரின் கண்கள் முதலில் வீரப்ப தேவனின் மீது பட்டது. வீரப்ப தேவனும் அவரையே பார்த்த வண்ணமாகக் கைகட்டி நின்று கொண்டிருந்தான். "அது யார், வீரப்பனா?" என்று புருவத்தில் தனது வலது கையை வைத்துக் கொண்டே வியப்புடன் கேட்டார் வித்யாசாகரர்.

"ஆமாம், சுவாமி" என்று சொல்லிவிட்டு அரசன் முகத்தைப் பார்த்தான் வீரப்பன்.

அரசன் "வீரப்பா, நீ போய் நாளைக் காலையில் என்னைச் சந்தித்து விட்டுப் போ" என்று உத்தரவிட்டு அனுப்பினான்.

வித்யாசாகரர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். அவருக்கருகில் அரசன் வீரசிம்மனும் உட்கார்ந்தான். "சுவாமி, ஒரு நாளும் நீங்கள் நள்ளிரவில் அரண்மனைக்கு வந்தது கிடையாதே. இன்றைய தினம் விசேஷச் செய்தி ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டார் வீரசிம்மன்.

"அரசே! அதெல்லாம் ஒன்றுமில்லை. அரண்மனைப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தேன். அரண்மனைக்கு எதிரில் வீரப்ப தேவனின் குதிரை கட்டப்பட்டிருந்தது. வீரப்பதேவன் அரண்மனைக்கு வருவதாக இருந்தால் ஏதோ முக்கியமான விஷயமாகத் தானிருக்க வேண்டும். ஏதாவது விசேஷம் உண்டா என்று அறிந்து போகவே வந்தேன்" என்றார் வித்யாசாகரர்.


"ஆமாம். முக்கிய விசேஷமுண்டு. நேற்று கவனக்கிடமாக இருந்த சமாசாரம் வீரப்ப தேவனின் உதவியால் இது வரையிலும் நன்றாக முடிந்திருக்கிறது" என்று கூறி அரசன் வீரப்பதேவன் சொல்லிப் போன சமாசாரங்கள் யாவற்றையும் வித்யாசாகரருக்குத் தெரிவித்தான்.

"ஏதோ இரும்புக் கூண்டில் அடைத்து வைத்திருப்பதாகச் சொன்னீர்களே. அவர்களை அங்கு வைப்பானேன்? அந்த இரும்புக் கூண்டு இப்பொழுது எங்கே வைக்கப்பட்டிருக்கிறது?" என்று மிகவும் ஆர்வத்துடன் கேட்டார் வித்யாசாகரர்.

"வயல் காட்டுக்கு அருகே குன்றிமணித் தோட்டம் இருக்கிறது அல்லவா? அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. வீரப்ப தேவன் அவர்களை எங்கு அழைத்துப் போவது என்று கேட்கத்தான் வந்தான். நாளை அதிகாலையில் என்னை வந்து பார்க்கும்படி அவனுக்குச் சொல்லி அனுப்பினேன்" என்றான் அரசன்.

"அரசே, என் குணம் உனக்குத் தெரியும். நான் நல்லவனுக்கு நல்லவன்; தீயவனுக்கும் நல்லவன். அதனால்தான் உன் பிடிவாத குணத்தையும் மன்னித்து உன் மீது அன்பு கொண்டிருக்கிறேன். நான் உனக்குப் பலமுறை சொல்லிப் பார்த்தேன். ஆனால் என் வார்த்தையைக் கேட்காமல் இந்த இரண்டு அருமைக் குழந்தைகளையும் பாதுகாப்பிலேயே வைக்க ஆசைப்படுகிறாய். சரி, அது இருக்கட்டும். ஆனால் நீ எனக்கு வாக்குறுதி செய்திருப்பதை மாத்திரம் மறந்து விடாதே!"

"சுவாமி, நான் கெட்ட குணம் படைத்தவனாக இருக்கலாம். ஆனால் இந்த வீரசிம்மன் செய்த வாக்குறுதியிலிருந்து தவறவே மாட்டான். அது சத்தியம்! ஆனால் சில சந்தர்ப்பங்களில் மாந்திரீகத்



தினால் அவர்களை வேறு உருவங்களாக மாற்றும்படி நேரிட்டால் அவர்களை அவர்களுடைய சுய ரூபத்துக்கே இருபத்தி நாலு மணி நேரத்துக்குள்ளே மாற்றி விட ஏற்பாடு செய்வேன்" என்று சொல்லிக் கொண்டே குருதேவரை நமஸ்கரித்தான்.

"சபாஷ் வீரசிம்மா!" என்று கூறி பாராட்டி விட்டு வித்தியாசாகரர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்.

குன்றிமணித் தோட்டத்தில் பிரபாகரனையும் உமாவையும் அடைக்கப்பட்டு வைத்திருந்த இரும்புக் கூண்டு மேல் பக்கமும் அடிப் பக்கமும் நல்ல கனமுள்ள இரும்புத் தகட்டினால் செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூண்டுக்குக் கீழ்ப்புறம் நான்கு சிறிய இரும்புச் சக்கரங்கள் அமைக்கப் பட்டிருந்தன. ஆதலால் அதை எளிதில் யாரும் வெகுதூரம் பூமியிலேயே சுலபமாக இழுத்துக் கொண்டு செல்லலாம். அந்தக் கூண்டு பழைய காலத்தில் சிங்கங்களையும் புலிகளையும் பூட்டி வைப்பதற்காகச் செய்யப்பட்டது. அதனால் அதனுடைய நான்கு பக்கங்களிலும் பொருத்தப் பட்ட இரும்புக் கம்பிகள் ஒவ்வொன்றும் இரண்டு அங்குல கனம் இருந்தன.

பிரபாகரனும் உமாவும் அந்த இரும்புக் கூண்டில் வேதனையுடன் இருந்தார்கள். பிரபாகரன் மடியில் உமா தலை வைத்துப் படுத்துக் கொண்டிருந்தாள். உமாவின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வந்து பிரபாகரனின் பைஜாமாவை நனைத்தது. "உமா, அசடே! எதற்காக அழுகிறாய்? நான் உன்கூட இருக்கும் பொழுது உனக்கு என்ன பயம்? இவர்களால் நம்மை என்ன பண்ண முடியும்? நாம் யாருக்கு என்ன குற்றம் செய்தோம்! கடவுள் நம்மைக் கட்டாயம் காப்பாற்றுவார். நீ பயப்படாதே" என்றான். உமா சமாதானம் அடைந்து தூங்கலானாள். பிரபாகரனும் களைப்பு மேலிட்டமையால் கம்பிகளில் சாய்ந்த வண்ணமாகவே லேசாகத் தூங்க ஆரம்பித்தான்.

அப்பொழுது யாரோ ஒருவர் கையில் தடியை வைத்துக் கொண்டு மெதுவாக நடந்து கொண்டே வந்து கொண்டிருந்தார். அவர் தலைமுதல் கால் வரையில் ஒரு பெரிய வெள்ளைத் துணியால் போர்த்திக் கொண்டிருந்தார். அவர் சற்றுத் தள்ளாடிக் கொண்டே நிதானமாக நடந்து வந்ததினால் அவர் வயதானவர் என்று தெரிய வந்தது. மெதுவாக அந்த மனிதர் இரும்புக் கூண்டை நெருங்கினார். பிறகு அவர் மெதுவாகப் பூட்டுப் பூட்டியிருந்த பக்கம் வந்தார்.

பிறகு அவர் "யார் இந்தக் கூண்டுக்குள்ளே?" என்று மெல்லக் கேட்டார்.

உரத்த குரலில் "நீங்கள் யார் எங்களைக் கேட்பதற்கு?" என்றான் பிரபாகரன்.

"அப்பா, குழந்தாய்! நான் யார் என்று கேட்கிறாய்? நான் ஒரு நாடோடி. காடோடியும் கூட!"


"அப்படி என்றால்...?"

"நாட்டிலும் திரிபவன், காட்டிலும் திரிபவன். நான் ஒரு துறவி. ஏதோ இப்படி நடந்து வந்தேன். இந்த இரும்புக் கூண்டைக் கண்டேன். இதில் ஏதாவது துஷ்ட மிருகங்கள் அடைபட்டு இருக்கிறதோ என்று பார்த்தேன்; ஏமாந்தேன். உன் பெயர் என்னப்பா?"

"என் பெயர் பிரபாகரன். இதோ இருக்கிறாளே இவள் என் தங்கை. இவள் பெயர் உமா. உமா, எழுந்து உட்கார்ந்து கொள்" என்றான் பிரபாகரன்.

"குழந்தை உமா, என்னைப் பார்த்து ஏன் பயப்படுகிறாய்? நான் உங்களுக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டேன்" என்றார் அந்த வந்த சாமியார். (தொடரும்)

மூன்று குரங்குகள்!




KAMADHENU
காமதேனு
வனஸ்பதி
CAUVERY BAR SOAP
காவேரி
பார் சோப்
CAUVERY SUPER SOAP
காவேரி
சூபர் சோப்
மேட்டூர்
சந்தன சோப்
தீபாவளி
வாழ்த்துக்கள்
புனித ஸ்நானம் புரிந்து
புத்தாடை உடுத்தி,
புது மகிழ்ச்சி மலர்ந்திருக்கும்
இத்தீபாவளிப் புதுநாளில்
உங்களுக்கு எங்கள்
மங்கள வாழ்த்துக்கள்.
மேட்டூர் கெமிகல் &
இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை, சேலம் ஜில்லா
மேனேஜிங் ஏஜெண்ட்ஸ்
சேஷசாயி பிரதர்ஸ் லிட்.


மையலில் வளர்ந்ததும்
இருந்ததும் உரைக்க
மெய்யினை விடத்தும் உறும்
ஐயம்விடல் உற்ருன்
ஐயனை அகத்து
வடிவேயல புறத்தும்
கைவினை நிறுத்துபு
கடைக்கணின் உணர்ந்தான்


மின்னொத் தகீற்றக் கனல்விட்டு
விளங்க நின்ற
பொன்னொத் தமேனிப் புயலொத்த
தடக்கை யானை
என்னத் தனன்றோ இமைதுரை
முனிந்தி லாநீ
சன்னத் தன்ஆகித் தனுஏந்துதற்(கு)
ஏது என்றான்.
-சந்திரா-


ஆழநீர்க் கங்கை
அம்பி கடாவிய
ஏழை வேடனுக்
கெம்பிநின் தம்பி,யான்
தோழன் மங்கை
கொழுந்தி எனச்சொன்ன
வாழி நண்பினை
உன்னி மயங்குவாள்!
சங்கிரா


கும்பகர்ணன் கூறுகிறான் :
'பெய்த வத்தின்ஓர் பெண்கொடி
எம்உழை பிறந்தாள்
செய்த குற்றம் ஒன்(று) இல்லவள்
நாசிவெம் சினந்தாள்
கொய்த கொற்றவ மற்றவன்
கூந்தல்தொட்(டு) ஈர்த்த
கைத லத்திடை விழ்ந்துவன்,
காக்குதி!' என்றான்.



தி சோமசுந்தரம் மில்ஸ் லிமிடெட்,

✧ கோயமுத்தூர். ✧

தந்தி: சோமசுந்தரம் — டெலிபோன்: 69

மானேஜிங் ஏஜெண்ட்: பி எஸ். எஸ். சோமசுந்தரம் செட்டியார்

★

கதிர்கள்	...	24592
விசைத் தரிகள்	...	390

★

10 நெ. முதல் 80 நெ. வரை ஒத்தை முறுக்கு, பஞ்சு ஸ்டேபிள் நூல்களும் வேஷ்டிகள், துண்டுகள், லாங்கிளாத் டவல், ஷர்டிங், மல், காடா ரகங்கள் தயாரிக்கிறோம்.

★


எங்களுடைய பதிவு செய்யப்பட்ட புதுமாதிரித் துணி ரகங்கள்:

மான்பட்சி, குதிரைத்தலை, மூன்று மாங்காய்
கிளேட்பாய், பெர்ரிமென்

★

வாடிக்கைக்காரர்களது திருப்தியே எமது குறிக்கோள்

ஜெய் ஹிந்த்!


S.R.V.S.L
S.R.V.S.L
துரிதமும்
அன்பும் நிறைந்த
பிரத்தியேக
சேவைக்கு ★
ON
தஞ்சை ஜில்லாவில்...
கார் ஸர்வீஸ் செய்வது
பிரயாணிகள்
போக்கு வரத்து
இன்ஜின்களை
பழுது பார்ப்பது
புதுப்பிப்பது
பழைய மற்றும்
புதிய சேஸிஸ்களில்
உடல் கட்டுவது
ON
டீஸல் இன்ஜின்களைப்
பொருத்துவது
ஸர்வீஸ் செய்வது
குரோமியம் பிளேடிங்
இலேசான
இன்ஜினியரிங்
சாமான் உற்பத்தி
செய்வது
இவைகள், இன்னும்
மற்றும் சில
★ கடந்த பன்னிரண்டு
ஆண்டுகளுக்கு மேலாக
உங்களுக்கு சேவை புரிந்து
வருகிறோம். உங்களுடைய
பூரண திருப்தியே எங்க
ளது மகிழ்ச்சிக்கும் அபிவி
ருத்திக்கும் காரணமாகும்.
SRI RAMA VILAS SERVICE LTD.
ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட், ராஜன் தோட்டம், கும்பகோணம்



முன்னுரை

அன்றொரு நாள் விழுப்புரத்திலிருந்து சென்னைக்குச் சாலை மார்க்கமாக வந்துகொண்டிருந்தேன். புதுச்சேரி விடுதலை இயக்கத் தலைவர் ஒருவருடைய வண்டி. பிரெஞ்சு போலீஸாரிடம் அகப்படாமல் துரிதமாகச் சென்று அந்த வண்டிக்குப் பழக்கமாகியிருந்தது. ஆகையால் வண்டி ஓட்டியவரிடம் எவ்வளவு சொல்லியும், அவரால் மணிக்கு அறுபது மைல் வேகத்துக்குக் குறைவாகப் போக முடியவில்லை.

திடீரென்று சாலையின் நட்ட நடுவில் ஒருவர் வழிமறித்து நின்று வண்டியை நிறுத்தும்படி கையைக் காட்டினார்.

"ஆள் மேலே ஓட்டட்டுமா? ஒதுக்கி ஓட்டட்டுமா?" என்று டிரைவர் கேட்டார்.

"வேண்டாம், வேண்டாம்! சற்று நிறுத்தித்தான் பார்க்கலாமே! ஏதாவது அவசரமாக ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய காரியமாயிருக்கலாம்!" என்றேன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. வண்டியை நிறுத்தச் சொல்லி சிகரெட்டு பற்ற வைக்க நெருப்புப் பெட்டி இருக்கிறதா என்று கேட்பார்கள். இந்தப் பக்கத்து வழக்கம் அது!" என்று சொல்லிக்கொண்டே டிரைவர் வண்டியை நிறுத்தினார்.

சாலையில் நின்றவர் என் பக்கம் வந்து, "ஐயா! மிக்க அவசரமான காரியம் ஒன்று தங்களிடம் சொல்ல வேண்டும். வண்டியில் ஏறிக் கொண்டால் தாம்பரம் போவதற்குள் சொல்லி முடித்து விடுவேன்! ஏறிக்கொள்ளலாமா!" என்று கேட்டுக் கொண்டே என்னுடைய பதிலுக்காகக் காத்திராமல் கதவைத் திறந்து வண்டிக்குள் காலை வைத்து விட்டார். அப்புறம், அவரைப் பிடித்து வெளியே தள்ளினால் தவிர, இறங்கச் சொல்வதற்கு வேறு வழி இல்லை. அதைக் காட்டிலும் தாம்பரத்தில் கொண்டு போய் இறக்கி விட்டு விடுவதே நல்லது என்று எண்ணி அவர் உட்காருவதற்கு இடம் கொடுத்தேன்.

டிரைவர் மறுபடி வண்டியை விட ஆரம்பித்த போது, அதன் மெல்லிய இயந்திரக் கருவிகளின் மீது தம் கோபத்தையெல்லாம் காட்டினார். வண்டி பூகம்பத்தினால் அசைவது போல் அசைந்து விட்டுத் 'தடார், படார்!' என்று சத்தமிட்டுக் கொண்டு, கிளம்பும் போதே மணிக்கு அறுபது மைல் வேகத்தில் கிளம்பிற்று!

"என்ன அவ்வளவு அவசரமாக என்னிடம் சொல்ல விரும்பிய காரியம்!" என்று கேட்டேன்.

"உம்முடைய தலைமையில் ஒரு கூட்டம் போட்டுப் 'பழந் தமிழர் நாகரிகம்' என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமென்று சில நாளாக எனக்கு ஆவல்!"

இதைக் கேட்டதும் என்னையறியாமல் வாய் விட்டுச் சிரித்து விட்டேன்.

"எதற்காகச் சிரிக்கிறீர்!" என்று கேட்டார்.

"எதற்காகவா! எல்லாம் வள்ளுவர் பெருமானுடைய வாக்கை நிறைவேற்றுவதற்காகத்தான். 'இடுக்கண் வருங்கால் நகுக!' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார் அல்லவா!"

"எனக்குத் தெரிகிறது. சொற்பொழிவு ஆற்றுவதற்கு இவ்வளவு அவசரமா, வண்டியைச் சாலையின் நடுவில் நிறுத்த வேண்டுமா என்று நினைத்துச் சிரிக்கிறீர். யக்ஷனுடைய கேள்விக்குத் தர்ம புத்திரர் கூறிய பதிலை உமக்கு ஞாபகப் படுத்துகிறேன். இலக்கியத் துறையில் ஈடுபட்டவர்கள் திடீர் திடீரென்று ஒவ்வொருவராகக் காலமாகிக் கொண்டு வருகிறார்கள்!......"

அவர் தம்மைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறாரா, அல்லது எனக்கு எச்சரிக்கை செய்கிறாரா என்று எண்ணி வியந்தேன்.

"ஆகையால், ஒவ்வொருவரும் ஏதாவது முக்கியமாகச் செய்யவேண்டிய காரியமிருந்தால், ஒத்திப் போடாமல் உடனே செய்து விடவேண்டும். இந்த வண்டி போகிற வேகத்தைப் பார்த்தால்......"

"எல்லாவற்றுக்கும், நீங்களும் ஒத்திப்போடாமல் உடனே ஆரம்பித்து விடுவது நல்லது."

"நான் இன்றைக்கு உயிரோடிருப்பதும், உம்முடன் இந்த வண்டியில் ஏறி வருவதும் மிக மிக அதிசயமான காரியங்கள். ஆறு மாதத்துக்கு முன்பே என் ஆயுள் முடிந்திருக்க வேண்டியது. என்னுடைய அதிசயமான அநுபவத்தைத் தமிழ் மக்கள் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இறைவன் என்னைக் காப்பாற்றி இவ்வளவு நாள் உயிரோடு வைத்திருக்கிறார் என்று நம்புகிறேன். இறைவனுடைய கருணையையும் ரொம்பச் சோதிக்கக் கூடாது அல்லவா! ஆகையால் இதோ என் கதையை ஆரம்பித்து விடுகிறேன். ஆமாம்; கதை போலத்தான் இருக்கும். உண்மையில் நடந்தது என்று சொன்னால், யாரும் நம்பப் போவதில்லை. ஆகையால், கதையென்று சொல்லி விடுவதே நல்லது. நீரும் என் அநுபவத்தை எழுதுவதாயிருந்தால், 'இந்தக் கதையில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் எல்லாம் கற்பனையே; யாரையும் குறிப்பிட வில்லை' என்று திட்டமாக அறிவித்து விடுவது நல்லது!" என்று சொன்னார்.

அத்தியாயம் 1

சுமார் ஒரு வருஷத்துக்கு முன்னால் என் பெயரைப் பத்திரிகைகளில் நீங்கள் பார்த்திருக்கலாம். அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியா வழியாக இந்தியாவுக்குப் பிரயாணமான ஓர் ஆகாச விமானம் காணாமற் போய்ப் பல நாள் வரை யாதொரு தகவலும் தெரியாமலிருந்ததல்லவா! அந்த விமானத்தில் பிரயாணம் செய்தவர்களின் ஜாபிதாவில் மதிவாணன் எம். ஏ. என்ற பெயர் இருந்திருக்கும். அதுதான் என் பெயர். அதற்கு ஆறு மாதத்துக்கு முன்னால் ஒரு முக்கியமான ஆராய்ச்சி கோஷ்டியில் சேர்ந்து அமெரிக்காவுக்கு நான் சென்றேன். இந்தியாவிலிருந்து இப்



போதெல்லாம் பல நிபுணர் கோஷ்டிகளும் கலைஞர் கோஷ்டிகளும் உலகிலுள்ள பற்பல நாடுகளுக்கும் போய்க் கொண்டிருக்கின்றன அல்லவா! அந்தந்த நாடுகளில் பற்பல அபிவிருத்தி மார்க்கங்களைத் தெரிந்து கொண்டு வந்து இந்தியாவில் வளங் கொழிக்கச் செய்வதற்காகத்தான் அவர்கள் போகிறார்கள். நான் போன காரியம் அமெரிக்காவில் டென்னஸி மாகாணத்தில் உள்ள வாத்துப் பண்ணைகளைப் பற்றிப் படித்துத் தெரிந்து கொள்ளுவதற்காக. அங்கேயுள்ள வாத்து ஒவ்வொன்றும் தினம் எட்டுப் படி பால் கொடுக்கிறதாம்! நம் ஊரில் மட்டும் ஒரு வாத்து அரைப் படிப் பாலுக்கு மேல் கொடுக்க மறுப்பதேன்! டென்னஸி பண்ணையில் உள்ள வாத்துக்களுக்கு அப்படி என்ன ஆகாரம் கொடுத்துப் போஷிக்கிறார்கள்! அவை பிறக்கும் போது எடை எவ்வளவு! பால் கறப்பதற்கு முன்னாலும் பின்னாலும் எடை எவ்வளவு!—என்னென்ன விடமின் சத்துக்கள் உணவில் சேர்த்துக் கொடுப்பதால் அவை அவ்வளவு பால் கறக்கின்றன! அந்த விடமின்களை நாமும் அமெரிக்காவிலிருந்து வரவழைத்து நம்மூர் வாத்துக்களுக்குக் கொடுக்கலாமா! அல்லது வாத்துக்களையே தருவித்து விடலாமா! இம்மாதிரி பிரச்னைகளை நேரில் ஆராய்ந்து தெரிந்து கொண்டு வருவதற்காக இந்திய சர்க்கார் என்னையும் என் சகாக்களையும் அனுப்பி வைத்தார்கள்.

உலகெங்கும் ஆராய்ச்சி அறிவைப் பரப்புவதற்காக அமெரிக்கக் கோடீசுவரரான ராக்பெல்லர் பிரபு ஒரு பெரிய நிதியை ஏற்படுத்தியிருக்கிறார். அந்த நிதியிலிருந்து எங்கள் ஒவ்வொருவருடைய பிரயாணச் செலவுக்காகவும் இருபத்தையாயிரம் ரூபாய் கொடுத்தார்கள். அதற்குச் சமமான தொகை இந்திய சர்க்காரும் கொடுத்தார்கள்.

அடுத்த ஐந்து வருஷத் திட்டத்தில் இந்தியாவில் மொத்தம் இருபது கோடி வாத்துக்கள் வளர்த்து இருநூறு லட்சம் படி வாத்துப் பால் உற்பத்தி செய்தே தீருவது என்று ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தா தீர்மானித்திருக்கிறார் அல்லவா! இதை நீங்கள் மனத்தில் வைத்துக் கொண்டால், எங்களது ஆராய்ச்சிப் பிரயாணம் எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

துரதிர்ஷ்ட வசமாக நாங்கள் அமெரிக்கா சென்ற சமயம் எங்கள் ஆராய்ச்சிக்கு உகந்த சமயமாக இல்லை. சென்ற சில வருஷங்களாக அமெரிக்க மார்க்கெட்டிலும் உலக மார்க்கெட்டிலும் வாத்துப் பால் 'ஸப்ளை' மிக அதிகமாகி, விலை குறைந்து வந்ததாம். இதைச் சமாளிப்பதற்காக அமெரிக்க வாத்துப் பண்ணை முதலாளிகள் இரண்டு வருஷங்களுக்கு வாத்துப் பால் உற்பத்தியை அடியோடு நிறுத்திவிடத் தீர்மானித்து விட்டார்கள். வாத்துக்களை யெல்லாம் பனிக் கட்டியில் வைத்துப் பதனிட்டுப் போர்மோஸாத் தீவில் உள்ள சீனத் துருப்புக்களுக்கு உணவாக அனுப்பி வந்தார்கள். ஆகவே, நாங்கள் போன காரியம் என்னமோ, கைகூடவில்லை.

ஆயினும் எங்களுக்காக இந்திய சர்க்கார் செலவு செய்த பணம் வீணாகப் போய் விடக் கூடாது என்று எங்கள் கோஷ்டியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் வெவ்வேறு ஆராய்ச்சியில் ஈடுபடத் தீர்மானித்தார்கள். ஒருவர் மெக்ஸிகோவில் உள்ள முட்டையிடும் குதிரைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்குச் சென்றார். இன்னொருவர் பிரேஸில் தேசத்தில் பருத்திக் கொட்டைக்குப் பதிலாகக் காப்பிக்கொட்டை தின்று காப்பியாகவே கறக்கும் காளை மாடுகளைப் பற்றித் தெரிந்துவரச் சென்றார்.


நானும் பல யோசனைகள் செய்த பிறகு ஆஸ்திரேலியா தேசத்துக் கங்காருக்களிடம் புதிதாகப் பரவி வரும் மர்ம நோயைப் பற்றி ஆராய்ச்சி செய்யத் தீர்மானித்து ஆகாச விமானத்தில் புறப்பட்டேன். ஆனால் கடவுளுடைய விருப்பம் வேறுவிதமாக இருந்தது. பழந் தமிழர் நாகரிகத்தைப் பற்றிய ஓர் அற்புதமான உண்மையை என்மூலமாக உலகத்துக்கு வெளிப்படுத்த வேண்டுமென்பது இறைவனுடைய சித்தம். எனக்கு ஏதாவது திடீரென்று நேர்ந்து விட்டதாக வைத்துக் கொள்ளுங்கள். நான் நேரில் பார்த்த அத்தகைய அற்புதம் ஒன்று இருந்ததற்குச் சாட்சியே இல்லாமற் போயிருக்கும். ஆகையினாலேதான் உம்மிடம் அதைப் பற்றிச் சொல்லுவதற்கு இவ்வளவு அவசரப்படுகிறேன்.

ஆகாச விமானம் புறப்பட்டுப் பஸிபிக் சமுத்திரத்தின் மேல் பறந்து போய்க் கொண்டிருந்தது. அந்த மாபெரும் சமுத்திரத்தின் அகலம், நீளம், ஆழம் ஆகியவை குறித்தும், அதன் விஸ்தாரமான நீர்ப் பரப்பிலே எத்தனை கோடானு கோடி ஜீவராசிகள் வாழ்ந்திருக்கின்றன என்பது குறித்தும் யோசனை செய்து கொண்டிருந்தேன். அது மட்டுமா! ஆதி காலத்திலிருந்து எத்தனை எத்தனை வியாபாரக் கப்பல்கள் அந்தச் சமுத்திரத்தில் மூழ்கிக் கிடக்கின்றன! எத்தனை ஸ்பானிஷ் கப்பல்கள் மெக்ஸிகோவின் தங்கத்துடன் அந்தக் கடலின் ஆழத்தை அடைந்திருக்கின்றன! எத்தனை பிரிட்டிஷ் கப்பல்கள்! எத்தனை பிரஞ்சுக் கப்பல்கள்! முன்னொரு காலத்தில் தமிழர்கள் பெரிய பெரிய நாவாய்களைச் செலுத்திக் கொண்டு ஏழு சமுத்திரங்களிலும் பிரயாணம் செய்திருக்கிறார்கள். தமிழர்களுடைய கப்பல்கள்கூட அந்தச் சமுத்திரத்தின் அடியில் கிடத்தல் கூடும். அவற்றில் உள்ள செல்வங்களை யெல்லாம் மட்டும் திரட்டிச் சேர்த்து எடுக்க முடியுமானால்!......

இவ்வாறு நான் எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோது, எங்கள் ஆகாச விமானம் வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாக ஆடத் தொடங்கியது. பெரியதொரு சுழற் காற்றில் அகப்பட்டுக் கொண்டதாகத் தெரிய வந்தது. பிரயாணிகளின் முகங்களில் கவலை குடி கொண்டது. அவர்கள் கவலைப்படுவதற்குக் காரணம் உண்டென்பதும் தெரிய வந்தது. சுழற் காற்றின் மையத்தில் சிக்கிக் கொண்டால் விமானம் தப்புவது துர்லபம்; அந்த மையத்திலிருந்து தப்புவதற்காக விமான ஓட்டிகள் திசை மாறிச் செலுத்தினார்கள். வெகு நேரத்துக்குப் பிறகு சுழற் காற்றிலிருந்து விமானம் தப்பி விட்டதாகத் தெரிந்தது. ஆனால், போகும் திசையையும் அது அடியோடு தவறி விட்டது. திசையறியும் கருவி வேலை செய்யவில்லை. ரேடியோக் கருவி பழுதாகி விட்டது. விமானம் பறந்து கொண்டேயிருந்தது. ஆனால் எங்கே போகிறது என்று கண்டு பிடிக்க முடியவில்லை. விமான ஓட்டிகளின் மூளைகளும் இதற்குள் குழம்பிப் போயிருக்கவேண்டும். பஸிபிக் சமுத்திரத்தின் ஒரு மூலைப் பகுதியில் நாங்கள் ஏறியிருந்த விமானம் வட்டமிட்டுச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. சீக்கிரத்தில் பெட்ரோலும் தீர்ந்து போய் விட்டது.

அவரவர்களும் 'பாராசூட்' கருவியை எடுத்துக்கொண்டு கீழே குதிக்க வேண்டியதுதான் என்று அறிவித்து விட்டார்கள்.

கீழே குதித்தால், பஸிபிக் சமுத்திரத்திலேதான் குதிக்க வேண்டும்! அதில் என்ன பயன்! எத்தனை



உத்சாகத்-
தையும் ஊக்
கத்தையும்
கொடுப்பது
எது?
சபாஷ்! ரைட்! காப்பி அடிச்சுத் தெரிந்து கொண்டீர்-களா?
இல்லை! காப்பி குடிச்சுத் தெரிந்து கொண்டோம்!
நரசுஸ் காப்பி
நரசுஸ் காப்பி
நரசுஸ்
மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்
சேலம் ∴ மதறாஸ்


குழந்தை
அவைகளை
விரும்புகிறது
ஜே. பி. மங்காராமின்
NOURISHING
நரிஷிங் பிஸ்கட்ஸ்
NOURISHING
Biscuits
NOURISHING
நரிஷிங் பிஸ்கட்டுகளை குழந்தை ருசி பார்க்கட்டும். அவைகளில் அதிக மான மணங்கவர் மணமும் இனிய ருசியும் ஆரோக் கிய மளிக்கும் வைடமின் களும் அடங்கி யிருப்ப தால் அவைகளை அவள் மிகவும் விரும்புகிறாள்.
தரமேன்மை பெற்றது
வைடமின்கள் மிகுதியானது
ஜே. பி. மங்காராம் & கோ., குவாலியர்
சென்னை ஆபீஸ்: 35/37, தம்பு செட்டித் தெரு, சென்னை-1
NAS
M. 1

நேரம் உயிரோடு இருக்க முடியும் ?—அதைவிட விமானத்திலிருந்தபடியே விழுந்து உயிர் விடுவது மேல் அல்லவா !

இந்தக் கேள்விகளுக்கும் பதில் கிடைத்தது.

பஸிபிக் சமுத்திரத்தில் லட்சக்கணக்கில் சிறிய சிறிய தீவுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கண்டு பிடித்து, இவ்வளவு தீவுகள்,—இங்கிங்கே இருக்கின்றன,—என்று இன்னும் நிர்ணயிக்கப்பட வில்லை. கண்டு பிடிக்கப்படாத தீவுகள், ஜன சஞ்சாரமே இல்லாத தீவுகள், அநாகரிக காட்டு மிராண்டி ஜாதியார் வசிக்கும் தீவுகள், பாதி நாகரிக மடைந்த மக்கள் வாழும் தீவுகள்,—இப்படி எவ்வளவோ இருக்கின்றன. அத்தகைய தீவுகளில் ஒன்றில் தற்செயலாக இறங்கினால், உயிர் தப்பிப் பிழைக்க ஏது உண்டு.

ஆனால் இந்த அற்ப நம்பிக்கையானது அநேக ருக்கு விமானத்தி லிருந்து வெளியில் குதிப்பதற் குரிய [தைரியத்தை அளிக்க வில்லை.

சாதாரணமாக நான் அவ்வளவு தைரியசாலி என்று [பெயர் பெற்றவன் அல்லவென்றாலும், அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ எனக்குத் தைரியம் பிறந்தது.

பாராசூட்டை எடுத்துக் கவனமாக மாட்டிக் கொண்டேன். கண்கள் இரண்டையும் இறுக மூடிக் கொண்டேன். விமானத்திலிருந்து வான வெளியில் குதித்தேன்.

'உயிர் போவது' என்று சொல்கிறார்களே, அது என்ன என்பது எனக்கு அப்போது தெரிந்தது. என் மண்டை வெடிப்பது போலவும், உடம்புக் குள்ளிருந்து உயிர் வெளிப்பட்டு மேலே போய் விட்டது போலவும், உடம்பு மட்டும் கீழே விழு வது போலவும் தோன்றியது. 'ஆகா! இந்தப் பாராசூட் ஏமாற்றி விட்டது! துரோகம் செய்து விட்டது!' என்று எண்ணினேன். நல்ல வேளை யாக, உடனே நினைவு இழந்து விட்டேன். அப்புறம் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது.

அத்தியாயம் 2

வாயிலும் மூக்கிலும் உப்பு ஜலம் ஏறி மூச்சுத் திணறுவது போன்ற உணர்ச்சியுடன் சுய நினைவு பெற்றேன். பொல்லாத உயிர் என் உடம்பை விட்டுப் போய்விட வில்லை. இந்திய சர்க்காரிடம் பெற்ற உதவித் தொகைக்கு ஈடாக ஏதேனும் நான் ஆராய்ச்சி செய்து என் கடனைக் கழித்தே ஆக வேண்டும் அல்லவா! அதற்காகவே பிழைத் தேன் போலும்! வாயில் புகுந்திருந்த உப்பு ஜலத்தைத் துப்பிக் கொண்டு எழுந்து நின்ற போது, கடலோரத்தில் இடுப்பளவு ஜலத்தில் நிற்கக் கண்டேன். பெரிய அலை ஒன்று என்னை மோதி அடித்துக் கொண்டு சென்றது. அலை போன பிறகு பார்த்தால் ஈர மண்ணில் தரையில் கிடந்தேன். சட்டென்று எழுந்து இன்னும் கொஞ்சம் கரையை [நோக்கிச் சென்றேன். அங்கிருந்த ஒரு மலைப் பாறை மீது தாவி ஏறிக் கொண்டேன். பிறகு நாலா புறமும் பார்த்தேன். அதிர்ஷ்டம் என்று சொல்வதா, கடவுளின் கருணை என்று சொல்வதா என்று தெரியாமல் திகைத்தேன். பஸிபிக் சமுத்திரத் தின் மத்தியில் ஆங்காங்கு இருப்பதாகக் கேள் விப்பட்டிருந்தேனே, அந்தத் தீவுக் கூட்டங்களில் ஒன்றில் நான் இருப்பதாக அறிந்து கொண்டேன். ஒரு தீவின் கரையில் நான் ஒதுங்கி யிருந்தேன். சுமார் ஒரு மைல் தூரத்துக்கு அப்பால் இன் னொரு தீவு தெரிந்தது. அதற்கு அப்பால் கொஞ்ச தூரத்தில் இன்னொரு தீவு காணப்பட்டது.

பஸிபிக் சமுத்திரத்திலுள்ள சில தீவுகள் சொர்க்க லோகத்துக்கு இணையான வளப்பமும் வளமும் பொருந்தியவை என்று புத்தகங்களில் படித்திருந்தது நினைவு வந்தது. அமெரிக்காவில் நான் ஏறிய விமானம் என்னை நேரே சொர்க்க லோகத்துக்குக் கொண்டு வந்து சேர்த்து விட்ட தாகவே எண்ணிக் கொண்டேன்.

என்னுடைய அதிர்ஷ்டத்தை எண்ணி நானே சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கையில் என் னுடன் விமானத்தில் வந்தவர்களைப் பற்றிய நினைவு உண்டாயிற்று. கப்பல்களிலும் ஆகாச விமானங்களிலும் பிரயாணம் செய்கிறவர்கள் சாதாரணமாகப் 'பைனகுலர்' என்னும் தூர தரிசினிக் கண்ணாடி கொண்டு போவது வழக்கம். ஆம்; கிரிக்கெட், புட்பால் விளையாட்டுக்கள் பார்க்கப் போகிறவர்களும் 'பைனகுலர்' கொண்டு போவதுண்டு. நான் என் தோளில் மாட்டித் தொங்க விட்டுக் கொண்டிருந்த 'பைனகுலர்' இத்தனை ஆபத்துக்களுக்கும் தப்பிச் சேதமாகாம லிருந்தது. அதை எடுத்துக் கண்களில் வைத்துக் கொண்டு முதலில் எனக்கு எதிரே அகண்டமாக விரிந்து கிடந்த சமுத்திரத்தை நோக்கினேன்.

தெய்வமே! ஏன் பார்த்தோம் என்று கதிகலங் கும்படியான காட்சியைக் கண்டேன். நாங்கள் வந்த விமானம் கடல் நடுவில் விழுந்து கொஞ்சங் கொஞ்சமாக அமுங்கிக் கொண்டிருந்தது. அதி லிருந்த பிரயாணிகள் சிலர் வெளியேறிக் கடலில் நீந்த முயற்சி செய்தார்கள். இது ஒருகணம் தெரிந்தது. மறு கணத்தில், அம்மா! என்ன பயங்கரம்! ஒரு பிரம்மாண்டமான மகரமீன் கூட்டம் பாய்ந்து வந்ததைக் கண்டேன். அந்த மீன்களின் கோரமான வாய்க்குள் நீந்த முயன்ற வர்கள் சென்றதையும் கண்டேன். என் உடம்பு நடுங்கியது. எப்படிப்பட்ட விபத்திலிருந்து தப்பி னேம் என்று எண்ணிக் கொண்டு எனக்கு வலது புறத்திலிருந்த தீவின்மீது பார்வையைச் செலுத்தி னேன். அங்கே அதைவிடப் பன்மடங்கு பயங் கரமான காட்சி எனக்குக் காத்திருந்தது.

ஆப்பிரிக்கா தேசத்து உட்பிரதேசங்களில் நர மாமிசம் உண்ணும் காட்டு மிராண்டி ராட்ச ஸர்கள் வசிப்பதாகக் கேட்டிருக்கிறீர்கள் அல்லவா! புத்தகங்களில் படித்திருப்பீர்கள்; ஸினிமாக்களிலும் பார்த்திருப்பீர்கள். அம்மாதிரி ராட்சஸக் கூட்டம் ஒன்று அங்கே களிக்கூத் தாடிக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தின் களிப்புக்குக் காரணம் என்ன என்பதும் தெரிந்து போயிற்று. ஆகாசவிமானத்தில் எனக்குப் பக்கத்து ஆசனத்தில் உட்கார்ந்திருந்த பஞ்சாபி நண்பர் அக் கூட்டத்தின் மத்தியில் நின்று கொண்டிருந்தார். அவர் முகத்தில் காணப்பட்ட பீதியையும் வேத னையையும் சொல்ல முடியாது. என்னால் ஒரு கண நேரத்துக்குமேல் அதைப் பார்க்க முடியவில்லை. நான் இறங்கி யிருக்கும் தீவிலும் அத்தகைய காட்டு மிராண்டிகள்தான் இருக்கிறார்களோ, என்னமோ! இப்படி நினைத்ததும் என் உடம்பு நடுங்கியது. தீவுக்குள் போகலாமா, வேண்டாமா என்று யோசித்தேன். அதற்குள் கடலில் ஏதோ சலசலப்புச் சத்தம் கேட்டது. சத்தம் கேட்ட திசையை நோக்கிப் 'பைனகுல'ரை வைத்துப் பார்த்தேன். நூறு இருநூறு, இல்லை, ஆயிரம் பதினாயிரம் சுறா மீன்கள் ஒரு பெரிய யானை மந்தையைப் போல் கடல் நீரைக் கிழித்துக் கொண்டு நான் இருந்த திசையை நோக்கி வெகு வேகமாக வந்து கொண்டிருந்தன. அப்போது நான் அடைந்த பயத்தைப் போல் என் வாழ் நாளில் எப்போதும் அடைந்ததில்லை.



என் நிலைமை இன்னதென்பதை என்னுடைய பயமே எனக்கு உணர்த்தி விட்டது. அது வரைக்கும் கடல் நீர் வடியும் நேரமாயிருந்தபடியால், நான் இருந்த தீவைச் சுற்றிக் கொஞ்சம் பூமிப் பிரதேசம் தெரிந்தது. கடல் பொங்க ஆரம்பித்து விட்டால் ஜலம் தரையை யெல்லாம் முழுக அடித்துக் கொண்டு மேலே வந்து விடும். நான் அப்போதிருந்த பாறைகூடத் தண்ணீரில் மூழ்கிவிடும். அப்படியென்றால், சுறா மீன்கள் அங்கேயும் வந்துவிடக் கூடும்.

நான் பார்த்துக் கொண்டிருக்கும் போது கடல் பொங்க ஆரம்பித்து விட்டதைப் பார்த்தேன். உடனே குதித்து எழுந்து அந்தக் கற்பாறைகளின் மீது தத்தித் தாவி ஏறினேன். அங்கங்கே வழுக்கிய இடங்களில் கீழே விழுந்து மறுபடி எழுந்தேன். உயிர் மீதுள்ள ஆசை, முக்கியமாக அந்தச் சுறா மீன்களின் பற்களின் இடையில் அகப்பட்டுக் கொள்வதைப் பற்றிய பீதி, என்னை அங்கு நிற்க விடாமல் துரத்தி அடித்தது.

சுமார் அரை மணி நேரம் விழுந்து விழுந்து ஓடித் தாவி ஏறி மூச்சுத் திணறிய பிறகு, அவ்வளவு முயற்சியும் வீண் என்று கண்டேன்.

எனக்கு எதிரே செங்குத்தான ஒரு பெரிய மதில் சுவர் நின்றது. அண்ணாந்து பார்த்தால் உச்சி தெரியாதபடி அவ்வளவு உயரமான சுவர். அந்தச் சுவர் ஓரமாகவே வழுக்கிய பாறைகளில் நிதானமாகக் கால் வைத்து நடந்து சிறிது தூரம் சென்றேன். சுவர் முடிவில்லாமல் சென்றது.

ஏற்கெனவே களைத்துப் போயிருந்தேன். அத்துடன் ஏமாற்றமும் மனச் சோர்வும் சேர்ந்து கொண்டன. அந்த மதில் சுவரில் மண்டையை மோதிக் கொள்ளலாமா என்று தோன்றியது. அதில் ஒன்றும் பயனில்லை. அதைக் காட்டிலும் மலைப் பாறை உச்சியிலிருந்து கடலில் குதித்து உயிரை விடலாம் என்று தோன்றியது. ஆகாய விமானத்திலிருந்து விழுந்து உயிர் பிழைத்துவிட்டு இப்போது உயிர் விடுவதற்காகப் பாறையிலிருந்து குதிக்க வேண்டியிருந்ததை நினைத்தால் எனக்கே சிரிப்பு வந்தது.

கடலோரமாக உயரமான பாறையொன்றை அணுகி அதன் பேரில் உட்கார்ந்தேன். என்னுடைய நிலைமை பற்றி நிதானமாக யோசிக்கலுற்றேன். எதிரே யானைகளைக் கூட விழுங்கக் கூடிய சுறா மீன்கள் மந்தை மந்தையாக உலாவும் கடல். அப்பால் மனிதர்களைப் பலி கொடுத்து உண்ணும் ராட்சஸ மக்கள் வசிக்கும் தீவு. இந்தப் பக்கம் திரும்பினால், கண்ணுக் கெட்டிய தூரம் வானை நோக்கி உயர்ந்திருந்த மதில் சுவர். நான் இருந்த பாறைக்குச் சற்றுத் தூரத்தில், இன்னொரு பாறையின் பேரில் இரண்டு பெரிய கழுகுகள் வந்து உட்கார்ந்தன.


மணியம்

அவைதான் எனக்குத் தோழர்கள். அவற்றின் நோக்கம் என்ன என்பது பற்றி அதிகமாகச் சந்தேகப்படுவதற்கில்லை. அடுத்த தீவிலுள்ள ராட்சஸ மக்களை விட இந்தக் கழுகுகள் நல்லவைதான். ஏனெனில், நான் இறந்துபோகும் வரையில் காத்திருப்பதற்கு வேண்டிய பொறுமை இவற்றுக்கு இருக்கின்றன அல்லவா!

முடிவில் இந்தக் கழுகுகளுக்கு இரையாவதற்குத்தானா உயிர் பிழைத்தோம் என்று எண்ணினேன். இல்லை, இல்லை. வேறு வழி ஏதேனும் இருக்க வேண்டும். உயிர் உள்ள வரையில் நம்பிக்கைக்கு இடம் உண்டு அல்லவா! மீண்டும் பிரயத்தனம் செய்து பார்க்க வேண்டும். இந்தக் கோட்டை மதில் சுவர்மேல் ஏறுவதற்கு எங்கேயாவது வழி இல்லாமலா போகும்! எப்படியாவது இந்த மதிலைக் கடந்து உள்ளே போய்ப் பார்க்க வேண்டும். யாரோ நாகரிகத்தில் முன்னேற்றமடைந்த மனிதர்கள் இந்த மதிலைக் கட்டியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. அடுத்தாற்போல், அந்த இன்னொரு தீவில் உள்ள ராட்சதர்கள் கோட்டை கட்டிக் கொள்ளவில்லையே! ஒருவேளை அந்தக் காட்டுமிராண்டிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே இந்தத் தீவில் உள்ளவர்கள் இவ்வளவு பெரிய மதில் சுவர் எழுப்பியிருக்கிறார்களோ, என்னமோ! அப்படியும் இருக்கலாம். அல்லது கோட்டை கட்டியவர்கள் அனைவரும் மாண்டு மடிந்து போயிருக்கலாம். கோட்டைக்குள் இப்போது வசிப்பவர்கள் காட்டு மிராண்டி இனத்தாராகவே இருக்கலாம். அல்லது மனிதர்களே இல்லாத நிர்மானுஷ்யமான தீவாக இருந்தாலும் இருத்தல் கூடும். பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது. மனிதர்கள் வசிப்பதாயிருந்தால், மதில் சுவரின் உச்சியில் யாராவது இருக்கலாம் அல்லவா! கோட்டையும் மதில் சுவரும் கட்டிக்கொண்டு வாழ்கிறவர்கள் மேலே காவல் வைக்காமலா இருப்பார்கள்!

அத்தியாயம் 3

அடுத்த கணம் பைனாகுலரை எடுத்துக் கண்ணில் பொருத்திக் கொண்டு மதில் சுவரின் உச்சியில் பார்வையைச் செலுத்தினேன். ஏதோ சில நிழல் வடிவங்கள் தெரிந்தன. அவை சித்திரமா, சிற்பமா, உயிருள்ள வடிவங்களா என்று தெரியவில்லை. உயிர் உள்ளவர்களாயிருந்தால், அவர்களுடைய கவனத்தை எப்படிக் கவர்வது என்று சற்று நேரம் யோசித்தேன்.

தொண்டையின் பலம் முழுவதையும் உபயோகித்துச் சத்தம் போட்டுப் பார்த்தேன். கேள்வி முறை ஒன்றுமில்லை. தொண்டை வறண்டது தான் மிச்சமாயிற்று. அதிலிருந்து, தாகமாயிருக்கிறது என்ற நினைவு வந்தது. வர வர, நாவறட்சியும் தாகமும் அதிகமாகிக் கொண்டிருக்கும். சமுத்திரம் நிறையத் தண்ணீர் இருக்கிறது; ஆனால் குடிப்பதற்கு ஒரு துளி தண்ணீர் இல்லை. கழுகுகள் அதிக நேரம் காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இராது!

ஏதோ ஒரு மெல்லிய சத்தம்,— தாழ்ப்பாள் திறப்பது போன்ற சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கித் திரும்பினேன். மதில் சுவரின் அடிப்பக்கத்தில் ஒரு சிறிய துவாரம் தென்பட்டது போலிருந்தது. அடுத்த நிமிஷம், அந்தத் துவாரத்தில் ஒரு முகம் காணப்பட்டது. ஆகா! அது ஒரு பெண்ணின் முகம். பைனாகுலரை உடனே எடுத்துக் கண்ணில் வைத்துக்கொண்டு பார்த்தேன். பைனாகுலர் என்னை ஏமாற்றுகிறதா, அல்லது பசி தாகத்தினால் நான் சித்தப்பிரமை அடைந்து விட்டேனா! பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன்; பல சாதி, பல இனங்களைச் சேர்ந்த பெண்களைப் பார்த்திருக்கிறேன். நேரிலும் பார்த்திருக்கிறேன்; சினிமாக்கள், நாடகங்கள், டெலிவிஷன் காட்சிகள் ஆகியவற்றிலும் பார்த்திருக்கிறேன். ஆனால் இம்மாதிரி அழகிய ஒரு பெண்ணை நான் பார்த்ததில்லை. அழகு மட்டுமல்ல; உலகில் எத்தனையோ அழகிகள் இருக்கிறார்கள். ஆனால் இந்தப் பெண்ணினுடைய முகத்தில் தோன்றிய வசீகரம் இதுவரை நான் பார்த்திராத தெய்வீக வசீகரமாயிருந்தது.

பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, வானத்தில் தோன்றிய மின்னல் மறைவது போல் அந்த முகம் மறைந்து விட்டது. மறு கணம், துவாரத்தையும் காணோம். மதில் சுவர்தான் இருந்தது.

நான் பார்த்தது, வெறும் மனப் பிரமையாக இருந்தாலும் இருக்கலாம். பாலைவனத்தில் பிரயாணம் செய்கிறவர்களின் கண்ணுக்கு வெறும் மணல் படர்ந்த இடத்தில் குளிர்ந்த நீர் நிலை தோன்றும் என்பார்கள். அது போன்ற ஒரு கானல் நீர்க் காட்சிதானோ என்னமோ, இது! ஆயினும் அங்கு சென்று பரிசோதனை செய்து பார்த்துவிட விரும்பினேன்.

செய்வதற்கு ஒரு காரியம் ஏற்பட்ட படியால், உடம்பிலும் சுறுசுறுப்பு உண்டாயிற்று.

நான் குதித்து எழுந்து மதில் சுவரை நோக்கி விழுந்து அடித்து ஓடத் தொடங்கியதைப் பார்த்து, அந்தக் கழுகுகள்கூட மிரண்டு போய்ச் சிறகுகளை அடித்துப் பறக்கத் தொடங்கின.

துவாரம் தெரிந்த இடத்தை நெருங்கி உற்றுப் பார்த்தேன். முதற் பார்வைக்கு வெறும் சுவராகத் தெரிந்தது. மறுபடியும் கூர்ந்து கவனித்த போது ஓரிடத்தில் இரண்டு பெரிய கதவுகள் இருப்பதாகத் தோன்றியது. அவற்றின் அமைப்பும் மேலே பூசியிருந்த வர்ணப் பூச்சும் சுவரோடு சுவராகத் தென்படும்படி செய்திருந்தன. கதவு என்று தோன்றிய இடத்தில் அங்கு மிங்கும் கையினால் அமுக்கிக் கொண்டே வந்தேன். ஓரிடத்தில் கொஞ்சம் அசைந்து கொடுத்தது. அங்கே பலம் கொண்ட மட்டும் அழுத்தித் தள்ளினேன். பெரிய கதவுக்குள் பொருத்தப்பட்டிருந்த ஒரு சிறிய கதவு, சுமார் இரண்டு அடி சதுரமுள்ள கதவு, உட்புறமாகத் திறந்து கொண்டது. அதற்கு ஒரு பலமான தாழ்ப்பாள் இருந்தது. சற்று முன் அதைத் திறந்து பார்த்த பெண் மறதியாகத் தாளிடாமல் சென்றிருக்க வேண்டும். துவாரத்தின் வழியாக உள்ளே பார்த்த போது, ஒரு அழகிய சிறிய பட்டணம் காட்சி அளித்தது. விசாலமான வீதிகள், சாதாரண ஓட்டு வீடுகள், நடுநடுவே இரண்டொரு மாட மாளிகைகள், ஊருக்கு மத்தியில் அழகிய விஸ்தாரமான குளம், படித்துறை, ஒரு பெரிய அரச மரம், — ஊருக்கு அப்பால் பசுமையான வயல்கள், கரும்புத் தோட்டங்கள்,— இவ்வளவையும் அந்தச் சிறு துவாரத்தின் வழியாக நன்றாகப் பார்க்க முடிந்தது.

அவ்வளவுதான். ஒரு கணமும் யோசனை செய்யாமல் கதவின் வழியாக உள்ளே குதித்தேன். அந்தப் பெண் செய்யத் தவறிய காரியத்தை நான் செய்தேன். கதவைச் சாத்தி உட்புறத்தில் பலமாகத் தாளிட்டேன்.

மறுபடியும் சுற்று முற்றும் பார்த்தேன். வெளியிலிருந்து பார்த்த போது என் பார்வையின்



பிரபல திருமணம்



சௌபாக்கியவதி மோகனும்பாள் — சிரஞ்சீவி சிவசங்கரன் B.E.,

பவர் பிரிக் ஒர்க்ஸ் கம்பெனியின் பங்குதாரரும், 'கால்டெக்ஸ்' பொருள்களின் விநியோகஸ்தருமான திரு சி. கே. புருஷோத்தம நாயகர் இரண்டாவது புதல்வி சௌ. மோகனும்பாளுக்கும் ஹைவேஸ் இலாக்காவில் ஜூனியர் இன்ஜினீயராக இருக்கும் சிரஞ்சீவி எம். சிவசங்கரன், B. E க்கும் சென்ற செப்டம்பர் மாதம் 9ம் தேதி சென்னை ஓட்டேரியில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. காலையில் முகூர்த்தத்துக்கும் மாலையில் நிகழ்ந்த வரவேற்பு நிகழ்ச்சிக்கும் ஏராளமான நண்பர்களும் உற்றாரும் மற்றும் ஸ்ரீ எம். பக்தவத்சலம், ஸ்ரீ மாணிக்கவேலு நாயகர், ஸ்ரீ எஸ். எஸ். ராமசாமிப் படையாச்சி, சபாநாயகர் ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை, ரெவின்யூ போர்டு முதல் அங்கத்தினர் ஸ்ரீ வி. என். குடுவா முதலிய பிரபலஸ்தர்களும் வந்து சிறப்பித்தனர். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வந்தன.

கலியாணத்திற்கு வந்தும், வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் அனுப்பிய எல்லோருக்கும் திரு சி. கே. புருஷோத்தம நாயகர் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

கோணத்தில் அகப்பட...; ஒன்றைக் கண்டேன். எனக்கு வலது புறத்தில் கொஞ்ச தூரத்தில் ஒரு சிறிய குன்று இருந்தது. திருநீர் மலையிலுள்ள குன்றை அதிலுள்ள கோயிலுடன் இங்கே யாரோ கொண்டு வந்து வைத்து விட்டது போலிருந்தது. ஆனால் திருநீர்மலையில் உள்ளது பெருமாள் கோவில்; இது முருகன் கோயில் என்று தெரிந்தது. கோயிலுக்கு எதிரே இருந்த ஸ்தம்பத்தில் கட்டிப் பறந்த சேவல் கொடியிலிருந்து அவ்விதம் ஊகித்துக் கொண்டேன்.

குன்றின் உச்சியிலிருந்த கோயிலுக்கு மூன்று புறத்திலும் மேடும் பள்ளமுமாகப் பாறைகள் இருந்தன. அவற்றில் ஒன்றில் ஒரு புள்ளிமான் துள்ளி ஓடிற்று. இன்னொரு பாறையில் ஒரு மயில் தோகையை விரிப்பதற்குப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தது.

இவற்றின் மீதெல்லாம் என் கவனம் அதிகமாக நிற்கவில்லை. ஏனென்றால், இன்னொரு பாறையின் மீது, பூங்கொத்துக்கள் குலுங்கிக் கொண்டிருந்த ஒரு குட்டையான மரத்தின் அடியில், கதவைத் திறந்து பார்த்த அந்தப் பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் என் பக்கம் பார்க்கவில்லை. சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்த திசையை நோக்கிக் கொண்டிருந்தாள். அங்கே அப்போது இந்திர ஜால மகேந்திர ஜாலங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. நீல மேகங்களின் வரம்புகள் ஒரு நிமிடம் பொன் வண்ணம் பெற்றுத் திகழ்ந்தன. அடுத்த நிமிடம் நீலமேகங்கள் செந்தாமரை நிறமாக மாறின. பிறகு, மேல் வானம் முழுதும் தங்க நிறம் பெற்று ஒளிர்ந்தது. தங்க நிறம் உடனே ரத்தச் சிவப்பு நிறமாக மாறியது.

இந்த வர்ண ஜாலக் காட்சிகளில் சிந்தையைச் செலுத்தி உட்கார்ந்திருந்த பெண்ணை நோக்கி நான் மெள்ள மெள்ள நடந்து சென்றேன். பாதை நல்ல பாதையாக இல்லை. பள்ளத்திலிருந்து மேட்டிலேறி, மேட்டிலிருந்து பள்ளத்திலிறங்கி, மறுபடியும் மேட்டிலேறி, சில இடங்களில் தாண்டிக் குதித்து, சில இடங்களில் காலாலும் கையாலும் தவழ்ந்து, — இப்படி யெல்லாம் போக வேண்டியிருந்தது. அது ஒன்றையும் நான் லட்சியம் செய்யவில்லை. இரும்பைக் காந்தம் இழுக்கும் என்பார்களே, அது மாதிரி ஏதோ ஒரு சக்தி என்னை இழுத்துக் கொண்டு சென்றது.

அந்தப் பெண்ணின் பின்புறமாக அவளுக்கு வெகு சமீபத்தில் போய் விட்டேன். அப்போது என் கால்கள் தாமாக நின்று விட்டன. ஏனெனில் அவள் பாடத் தொடங்கினாள். பாட்டை ஏதோ இயன்ற வரையில் ஞாபகப் படுத்திக் கொண்டு சொல்கிறேன். சிற்சில வார்த்தைகள் மாறுதலாகவும் இருக்கலாம். ஆனால் பாதகமில்லை. கருத்து ஒன்றுதான்.

"இன்பக் கனவினிலே—சகியே
இன்னிசை பாடிவந்தான்—ஏவனோ
இன்னிசை பாடிவந்தான்! (இ)

பொன்முகத்தில் நகை பூத்திட நோக்கினான்
கன்னங்குழிந்திடக் கண்மலர் சூட்டினான் (இ)
பொன்னி நதிக்கரையில்—வெண்ணிலா

பொங்கிப் பொழிகையிலே
என்பும் உருகும் நல் கீதங்கள் பாடினான்
என்னகந் தொட்டுப் பின் எங்கேயோ
சென்றிட்டான்!" (இ)

ஊரில் எனக்குச் சங்கீதத்தில் மோகமுள்ளவன் என்று எப்போதும் ஒரு பெயர் உண்டு. என்னுடைய சங்கீதக் கிறுக்கு ஒரு நாள் என்னைச் சங்கடத்தில் மாட்டி வைக்கப் போகிறது என்று என் நண்பர்கள் எச்சரித்ததும் உண்டு. அது இச் சமயம் உண்மையாயிற்று. அந்தப் பெண் இரண்டாவது அடியைப் பாடி முடிப்பதற்குள் நான் என்னை மறந்து பலமாகத் தாளம் போட ஆரம்பித்து விட்டேன்.

அந்தப் பெண் என்னைத் திரும்பிப் பார்த்தாள். அதற்கு முன் அம்மாதிரி அதிசயத்தை என்றும் கண்டறியாதவள் போல் அத்தனை வியப்புடன் என்னைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

"மிச்சப் பாட்டையும் பாடு! ரொம்ப நன்றாயிருக்கிறது. எங்களூர்க் கனமணி பாடிய பாடல் மாதிரியல்லவோ இருக்கிறது!" என்றேன்.

அந்தப் பெண் தட்டுத் தடுமாறி, "நீர் யார்! உமக்கு எந்த ஊர்!" என்று கேட்டாள்.

"எனக்கு இந்தியா தேசம்; இந்தியா தேசத்தில் என்றியுள்ள மதராஸ் இராஜ்யத்தைச் சேர்ந்தவன்........."

"அப்படியென்றால் என்ன! அது எங்கே இருக்கிறது!"

"ஓஹோ! உனக்குப் பூகோள சாஸ்திரமே தெரியாது போலிருக்கிறது. பிறகு விவரமாகச் சொல்கிறேன். அந்தப் பாட்டைப் பாடி முடி!"

"பாட்டு உமக்கு ரொம்பப் பிடிக்குமோ!"

"ஆமாம்; பாட்டு ரொம்பப் பிடிக்கும். அதைக் காட்டிலும் பாடுகிறவர்களைப் பிடிக்கும். முக்கியமாக, இப்போது உன்னைப் பார்த்தால்......"

அந்தப் பெண்ணின் முகத்தில் திடீரென்று பயம் காணப் பட்டது. அதன் பொருளை நான் அறிந்து கொள்ள வில்லை.

"ஏன், என்னை இப்படிப் பார்க்கிறீர்!" என்று கேட்டாள்.

நான் சிரித்தேன். அவளை நோக்கி நடந்து கொண்டே, "நீ ஏன் இவ்வளவு அழகாய் இருக்கிறாய்! அதனாலேதான் இப்படிப் பார்க்கிறேன்!" என்றேன்.

அந்தப் பெண் நடுங்கிய குரலில் "உமக்குப் பசியாயிருக்கிறதா!" என்று கேட்டாள்.

எனக்கு அப்போதும் அவளுடைய பயத்தின் காரணம் விளங்கவில்லை.

தமாஷாகப் பேசுவதாய் எண்ணிக் கொண்டு "ஆமாம்; ரொம்பப் பசியாயிருக்கிறது! உன்னை அப்படியே விழுங்கி விடலாமா என்று தோன்றுகிறது!" என்றேன்.

அவ்வளவுதான்; அந்தப் பெண் 'வீல்' என்று ஒரு சத்தமிட்டாள்.

அதற்குப் பதில் குரல் கொடுப்பது போல் என்னைச் சுற்றிப் பல திசைகளிலிருந்தும் "வேல்!" "வேல்!" என்ற முழக்கங்கள் கேட்டன.


முழக்கங்கள் வந்த திசைகளை நோக்கினேன். மதிள் சுவர் மீதும் மலைப் பாறைகளின் மீதும் மரங்களின் உச்சியிலும் கையில் வில்லை வளைத்து அம்பு தொடுத்து என் பேரில் விடுவதற்கு ஆயத்தமாக வீரர் பலர் நின்றார்கள்.

அத்தியாயம் 4

எனக்கு அப்போது எவ்வளவு அதிசயமாக இருந்திருக்கு மென்று நீங்களே ஊகித்துக் கொள்ள வேண்டியதுதான். பல தடவை கண்ணை மூடித் திறந்து பார்த்தேன். அந்தக் காட்சி அதே

மாதிரி தெரிந்தது. அந்த வீரர்கள் என் பேரில் அம்பை விடாததற்குக் காரணம் நான் அந்தப் பெண்ணுக்கு வெகு சமீபத்தில் இருந்ததுதான் என்று தெரிந்து கொண்டேன்.

என் மூளை அந்த அபாயகரமான வேளையில் சரியாக வேலை செய்தது. அடுத்த தீவில் உள்ள ராட்சத மக்களின் உணவு வழக்கம் நினைவுக்கு வந்தது. நான் விளையாட்டாகப் பேசிய பேச்சு



அப் பெண்ணின் உள்ளத்தில் உண்டாக்கி யிருக்கக் கூடிய கலக்கத்தை அறிந்து கொண்டேன்.

அதற்குள் அந்தப் பெண்ணுக்கும் கொஞ்சம் சந்தேகம் தோன்றியிருக்க வேண்டும்.

சட்டென்று நாலு அடி நடந்து வந்து அம்புகள் என்மேல் விழாமல் குறுக்கிட்டுத் தடுப்பவள் போல் நின்று கொண்டாள்.

"என்ன சொன்னீர்கள்! இன்னொரு தடவை சொல்லுங்கள்!" என்றாள்.

"உன்னைப் பார்த்தாலே போதும், பசி தாகம் பறந்துவிடும் என்று சொன்னேன்! நீ எதற்காகக் கூச்சல் போட்டாய்! இவர்கள் எல்லோரும் யார்! எதற்காக வில்லை வளைத்து அம்பு தொடுக்கிறார்கள்!" என்று கேட்டேன்.

அணு குண்டு—ஹைட்ரஜன் குண்டுகளைப் பற்றி உலகம் பீதி யடைந்திருக்கும் காலத்தில் வில்லும் அம்பும் வைத்துக் கொண்டு சண்டையிடும் வீரர்களும் இத் தீவில் இருக்கிறார்களே என்னும் அதிசயம் என் மனத்தில் பொங்கிக் கொண்டிருந்தது.

நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் அந்தப் பெண் "நீர் என்ன சாப்பிடுவது வழக்கம்!" என்று கேட்டாள்.

"இட்லி, தோசை, சாதம், முறுக்கு, சீடை, இடியாப்பம், பொருவிளங்காய் உருண்டை இன்னும் எது கிடைத்தாலும் சாப்பிடுவேன்!" என்றேன்.

அந்தப் பெண் ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சுற்றிலும் நின்ற வில்லம்பு வீரர்களுக்கு ஏதோ சைகை காட்டினாள். அவர்களில் ஒருவன் அருகில் வந்தான். அவனிடம் "நலங்கிள்ளி! என் தந்தையை உடனே அழைத்து வா!" என்றாள்.

அந்த வீரனை அவள் அழைத்த பெயர் எனக்கு மிக்க வியப்பை உண்டாக்கியது. பழந் தமிழ் நாட்டுப் பெயராக வல்லவோ இருக்கிறது!

"உன் தந்தையின் பெயர் என்ன!" என்றேன்.

"இளஞ்சென்னி நெடுஞ்செழியன் சேரலாதன்!"

இதைக் கேட்டு நான் அடைந்த அதிசயத்தைக் காட்டிலும் அவளுடைய 'பெயரை அறிந்து கொள்ளும் ஆர்வம் அதிகமாயிற்று.

"உன் பெயர் என்னவோ!"

"மயில் விழி மான்!"

"என்ன! என்ன! நீ இப்போது சொன்னது உன் பெயரா! அல்லது உன்னைப் பற்றிக் கவிஞரின் வர்ணனையா!"

"என் பெயர்தான்! இப்போது இங்கே கவிஞர்கள் யாரும் இல்லை. ஒருவேளை தமிழ்நாட்டில் இருக்கிறார்களோ என்னமோ! நீங்கள் ஏதோ ஒரு தேசத்திலிருந்து வந்ததாகச் சொன்னீர்களே! அங்கே பக்கத்தில் செந்தமிழ் நாடு என்று எங்கே யாவது இருக்கிறதா!" என்று கேட்டாள்.

"மயில் விழி மானே! கேள்! இந்தியா தேசத்தில் ஒரு பகுதிதான் செந்தமிழ் நாடு. நானே செந்தமிழ் நாட்டைச் சேர்ந்தவன் தான்! மதுரைக்கு அருகில் ஒரு கிராமத்தில் பிறந்தவன்!" என்றேன் நான்.

"எந்த மதுரை! தமிழ்ச் சங்கம் இருந்ததே அந்த மதுரையா!"

"அதே மதுரைமா நகரந்தான்!"

"இன்னும் அங்கே சங்கம் இருக்கிறதா!"

"ஒரு சங்கமல்ல; வீதிக்கு வீதி சங்கங்கள் இருக்கின்றன!"

"அப்படியா! செந்தமிழ் நாட்டில் இப்போது தமிழர்கள் வசிக்கிறார்களா!"

"சுமார் இரண்டரைக் கோடி தமிழர்கள் இருக்கிறார்கள்! தமிழ்க் கவிஞர்களும் இரண்டொருவர் இருக்கிறார்கள்!"

"அப்படி யென்றால், இப்போது அங்கே ராட்சதர்களின் பயமே இல்லையா!"

"ராட்சதர்களா! எந்த ராட்சதர்கள்!"

"இலங்கையை ஆண்ட இராவணன் குலத்து ராட்சதர்கள்!......"

"இலங்கையிலேயே இப்போது ராட்சதர்கள் இல்லையே!"

"பின்னே யார் இருக்கிறார்கள்!"

"இலங்கையில் இப்போது சிங்களவர் என்ற சாதியார் ஆட்சி செய்கிறார்கள். தமிழர்கள் பலரும் அங்கே வசிக்கிறார்கள்."

"அந்தச் சிங்களவர்கள் நம் தமிழர்களைப் பிடித்துச் சாப்பிடுவதில்லையா!"

"இன்னும் அவ்வளவுக்கு வரவில்லை! தமிழர்களைத் தமிழ் நாட்டுக்குப் போகும்படி விரட்டியடிக்கத்தான் பார்க்கிறார்கள்! ஆனால் உங்கள் பக்கத்துத் தீவில் ராட்சதர்கள் இருக்கிறார்கள் போலிருக்கிறதே!"

"ஆமாம்; தமிழ் நாட்டி லிருந்து எங்களைத் துரத்திக் கொண்டு வந்தவர்கள். அவர்களுக்காகத்தான் இவ்வளவு பெரிய கோட்டைச் சுவர் கட்டியிருக்கிறோம்; காவலும் வைத்திருக்கிறோம்."

"மயில்விழி மானே! என்னையும் அந்த ராட்சதக் கூட்டத்தைச் சேர்ந்தவனாகக் கருதிப் பயப்பட்டாய் அல்லவா!"

"இல்லை, இல்லை! நடுவில் உங்களுடைய ஒரு வார்த்தை அம்மாதிரி சந்தேகத்தை எனக்கு உண்டாக்கியது. அது தவறு என்று உடனே தெளிந்தேன். நீங்கள் தமிழராகத்தான் இருக்க வேண்டுமென்று உங்களைப் பார்த்தவுடனேயே எனக்குத் தெரிந்து போயிற்று. அதோ என் தகப்பனார் வருகிறார்; நீங்கள் சொல்லுவதையெல்லாம் கேட்டால் மிக்க மகிழ்ச்சி அடைவார்!" என்று சொன்னதும், திரும்பிப் பார்த்தேன். சேர சோழ பாண்டிய மன்னர்களை யொத்த கம்பீரத் தோற்றமுடைய ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

"உன் தந்தை இளஞ்சென்னி நெடுஞ் செழியன் பெருஞ் சேரலாதர்—என்மீது கோபித்துக் கொள்வாரோ, என்னமோ!"

"எதற்காகக் கோபித்துக் கொள்ளவேண்டும்!"

"அனுமதியில்லாமல் கோட்டைக்; கதவைத் திறந்து கொண்டு வந்ததற்காகத்தான்."

"நான் உங்களைப் பார்த்து விட்டு, வேண்டுமென்றேதான், கதவைத் தாள் போடாமல்

வந்தேன். செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் வரவேண்டுமென்று நாங்கள் எவ்வளவு ஆயிரம் ஆண்டுகளாகத் தவங் கிடந்து வருகிறோம்!''

"மயில் விழி மானே! உன் வயது என்ன!'' என்று கேட்டேன்.

"பதினெட்டு!''

"ஆயிரம் வருஷம் என்று சொன்னாயே!''

"என் பாட்டனுக்குப் பாட்டனுக்குப் பாட்டனார்—அவருக்குப் பாட்டனுக்குப் பாட்டனுக்குப் பாட்டனார்,—நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்தார்!''

"எதற்காக!''

"அதையெல்லாம் என் தந்தையிடம் கேளுங்கள்; விவரமாகச் சொல்வார். பசிக்கிறது என்று சொன்னீர்களே! நான் போய் ஏற்பாடு செய்கிறேன். இட்லி, தோசை, இடியாப்பம்,—இவற்றில் எது உங்களுக்கு அதிகமாகப் பிடிக்கும்!''

"அப்படி யெல்லாம் எனக்குப் பாரபட்சம் கிடையாது. அறம், பொருள், இன்பம்—இவற்றில் எதுவேண்டும் என்று கேட்டால், என்ன பதில் சொல்கிறது! மூன்றும் வேண்டியதுதான்!''

மயில் விழிமான் என்னை விழித்துப் பார்த்துச் சிரித்து விட்டு அவளுடைய தந்தைக்கு என்னைச் சுருக்கமாக அறிமுகம் செய்து வைத்தாள். பிறகு, துள்ளிக் குதித்து ஓடினாள். அப்போது அவள் பெயரின் பொருத்தம் நன்கு வெளியாயிற்று.

"மானின் விழி பெற்று மயில் வந்ததென வந்தாள்'' என்ற கம்பன் பாடலுக்கு மாறாக இருந்தாலும், மயிலின் பார்வையிலும் ஒரு தனி அழகு இருக்கத்தான் இருக்கிறது. மானின் துள்ளலில் உள்ள கவர்ச்சியைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை யல்லவா!

அத்தியாயம் 5

இளஞ் சென்னி நெடுஞ்செழியன் பெருஞ் சேரலாதர் என்னிடம் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் ஒருவாறு பதில் சொல்லிச் சமாளித்த பிறகு அவர்களுடைய வரலாற்றையும் கேட்டுத்தெரிந்து கொண்டேன். அந்த வரலாறு இதுதான் :—

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகம் குமரி முனையிலிருந்து விந்திய பர்வதம் வரையில் பரவிச் சீரும் சிறப்பும் பெற்று மேன்மையுற்று விளங்கி வந்தது. சேர சோழ பாண்டியர்கள் நட்புரிமை கொண்டு அவர்களுடைய இராஜ்யங்களை நீதி தவறாமல் ஆண்டு வந்தார்கள். குடி மக்கள் எல்லாத் துறைகளிலும் செழிப்படைந்து ஓங்கி யிருந்தார்கள். அது போலவே தமிழிலக்கியமும் மேன்மை யடைந்து வளர்ச்சியுற்று வந்தது. செந்தமிழ்க் கவிஞர்கள் பலர் இனிய எளிய செந்தமிழில் அழகிய கவிகளும் காவியங்களும் இயற்றி வந்தார்கள். மதுரையில் முதலாவது தமிழ்ச் சங்கம் சிறப்பாக நடைபெற்று வந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் மேலைக்கடல் பிரதேசத்து நாடுகளிலிருந்து காட்டுமிராண்டிகளான அநாகரிக ராட்சஸ மக்கள் சிலர் கப்பல் ஏறி வந்தார்கள். அவர்கள் நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் அவர்களை வேறு நாடுகளைத் தேடிப் போகும்படி செய்தது. அவர்கள் முதலில் தமிழ் நாட்டில் இறங்கப் பார்த்தார்கள். அது முடிய வில்லை. பின்னர், இலங்கைத் தீவில் இறங்கி அத் தீவைத் தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள். அவர்களுடைய அரச பரம்பரையில் இராவணன் என்னும் ஒரு ராட்சதன் தோன்றினான். அவன் அறிவும் ஆற்றலும் மிக்கவன். ஆனால் மிக மிகப் பொல்லாதவன்.

இராவண குலத்தைச் சேர்ந்த ராட்சதர்கள் நர மாமிச பட்சணிகள். அவர்கள் நாட்டிலேயே பஞ்ச காலத்தில் அந்தப் பயங்கரமான வழக்கம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. இலங்கைக்கு வந்து குடியேறிய பிறகு, அடிக்கடி தமிழகத்துக்கு அவர்கள் கும்பல் கும்பலாக வருவதும், திடீரென்று தமிழர்களைத் தாக்கிக் கொல்வதும், கொன்றவர்களைத் தின்று விட்டுப் போவதும் வழக்கமாயிற்று. தமிழர்களைத் தின்று பார்த்த போது, அவர்கள் வேறு எந்தச் சாதியைக் காட்டிலும் தமிழ் சாதியின் உடம்பு அதிகச் சுவையுடன் இருக்கிறது என்று கண்டார்கள். இழுமெனும் ஓசையுடைய மதுரத் தமிழ் மொழி இனிமைக்கும் பெயர் போனதன்றோ! 'அமுதம்' என்ற சொல் மருவித் 'தமிழ்' என்று ஆயிற்று என்றும் சொல்கிறார்கள் அல்லவா! தமிழர்களின் உடல் தின்பதற்கு ருசியாயிருந்ததுடன், அவர்களைத் தின்றால் ஆயுள் வளரும், ஆயிரக் கணக்கான வருடங்கள் சாகாமல் இருக்கலாம்



என்ற நம்பிக்கையும் இராவண குலத்து ராட்சதர்களுக்கு ஏற்பட்டது. இதன் பலன் என்னவென்றால், ஒரு சில வருடங்களுக்குள் தமிழ் நாட்டில் தமிழ் மக்களின் ஜனத்தொகை மிகவும் குறைந்து விட்டது. போர்க் களத்தில் நேருக்கு நேர் நின்று போர் செய்வதா யிருந்தால், தமிழர்களை அந்த ராட்சஸர்களால்கூட வென்றிருக்க முடியாது. ஆனால் எதிர்பாராத இரவு நேரங்களில் மக்கள் தூங்கிக் கொண்டிருக்கும் போது வந்து தாக்கிக் கொன்று தின்று விடும் ராட்சஸர்களை எதிர்த்துப் போராடுவது எப்படி! சோழ சேர பாண்டிய ராஜ்யங்களில் மிகச் சிறந்த பட்டணங்கள், கிராமங்கள் எல்லாம் பாழாய்ப் போய்க் கொண்டிருந்தன. ராட்சதர்களிட மிருந்து தப்பிப் பிழைத்த சிலர் மலை உச்சிகளில் உள்ள குகைகளிலும் கடற் கரையோரங்களிலிருந்த காடுகளிலும் ஒளிந்து வாழத் தொடங்கினார்கள்.

தமிழின் பெருமையை உணர்ந்து உலகமறியச் செய்த மாமுனிவர் அகஸ்தியர், இந்த அபாயத்திலிருந்து தமிழர்களைத் தப்புவிப்பதற்கு ஓர் உபாயம் செய்து பார்த்தார். தமிழ் மிக்க இனிமையான மொழியா யிருப்பதால் அல்லவா அம்மொழியைப்

பீடகம் தமிழர்களுக்கு இந்தக் கதி நேருகிறது! தமிழைச் சற்று கடினமான மொழி ஆக்குவதற்காக மிக்க பிரயத்தனப்பட்டுத் தமிழ் இலக்கணம் ஒன்று செய்து கொடுத்தார். மேலும் அவருடைய சீடர்களிடம், இனி எளிய இனிய நடையிலேயே பாடல்கள் எழுதாமல் கரடு முரடான கொடுந் தமிழில் கவிதைகள் எழுதச் சொன்னார். சீடர்கள் அப்படியே செய்து பார்த்தார்கள். அதிலும் பயனில்லை. தமிழை எவ்வளவு கரடு முரடாக்கினாலும் அதன் சுவை என்னவோ குன்றவில்லை. ஆகவே அகஸ்தியரும் தமது தோல்வியையுணர்ந்து பொதிகை மலையை விட்டுப் புறப்பட்டு வடக்கே விந்திய மலைக்குத் தென்புறத்தில் தண்டகாரண்யத்தில் வசிக்க வேண்டியதாயிற்று.

இந்தத் தீவில் இப்போது வசிக்கும் மக்களின் மூதாதைகள் ராட்சதர்களுக்கு இரையாக விரும்பாமல் கொற்கை யென்னும் துறைமுகத்துக்கு அருகில் ஒரு பெரிய காட்டில் ஒளிந்து வாழ்ந்தார்கள். அதே சமயத்தில் அவர்கள் தாங்களிருக்கும் இடத்தை எப்படியும் அரக்கர்கள் கண்டு பிடித்து விடலாம் என்று எண்ணி, ஒரு பெரிய மரக்கலம் கட்டி வந்தார்கள். ஏதாவது அபாயம் நேர்ந்தால் கப்பலில் ஏறிக் கடல் கடந்து சென்று வேறொரு நாட்டில் குடியேறி விடலாம் என்று எண்ணியிருந்தார்கள்.


இராவணனுடைய ஒன்றுவிட்ட தம்பியாகிய கரன் என்னும் ராட்சதன் தண்டகாரண்யத்தையொட்டிய ஜனஸ்தானம் என்னுமிடத்தில் தன் தோழர்களுடன் வசித்து வந்தான். கரனுக்கு முரன் என்று ஒரு மகன் இருந்தான். அவன் தமிழகத்தில் மிச்சம் மீதி தமிழர்கள் இருக்கிறார்களா என்று தேடி வந்தான். கடைசியில் கொற்கைத் துறைமுகத்துக் கருகில் காட்டில் வசித்த தமிழர்களைக் கண்டு பிடித்தான். அவன் அவர்களைத் தாக்குவதற்கு முன்னால், அந்தத் தமிழர்கள் தயாராக வைத்திருந்த கப்பலில் ஏறிக் கொண்டு கிழக்குக் கடலில் கிளம்பினார்கள். முரன் உடனே தானும் ஒரு கப்பலை அவசர அவசரமாகக் கட்டிக் கொண்டு கிளம்பினான். இரண்டு கப்பல்களும் வெகு தூரம் கிழக்கு நோக்கிப் பிரயாணம் செய்த பிறகு ஒரு பெரிய சண்டமாருதத்தில் சிக்கிக் கொண்டன. கப்பல்கள் உடைந்தன. ஒரு கப்பல் ஒரு தீவின் அருகிலும் இன்னொரு கப்பல் இன்னொரு தீவின் அருகிலும் சென்று அடைந்தன. அதாவது ஒரு தீவில் இளஞ்சென்னி நெடுஞ்செழியன் பெருஞ் சேரலாதனும் அவனுடன் வந்தவர்களும் இறங்கினார்கள். இன்னொரு தீவில் முரனும் அவனுடைய சகாக்களும் இறங்கினார்கள். கப்பல்கள் இரண்டும் சிதைந்து சின்னா பின்னமுற்றுக் கடலில் மறைந்து மூழ்கி விட்டன.

தமிழர்கள் ஒரு தீவிலும், முரனுதி அசுரர்கள் இன்னொரு தீவிலும் குடியேறினார்கள். தலைமுறை தலைமுறையாகப் பல்லாயிரம் ஆண்டுகளாக அங்கேயே வசித்து வருகிறார்கள். வெளி உலகத்துச் செய்திகள் ஒன்றுமே அவர்களுக்குத் தெரியவில்லை. இரண்டு தீவுகளிலும் பெரிய மரங்கள் இல்லாதபடியால் கப்பல் கட்டிக் கொண்டு பிரயாணம் கிளம்ப முடியவில்லை. ராட்சதர்கள் சில சமயம் பழைய ஞாபகத்தை வைத்துக் கொண்டு தமிழர்களைப் பிடித்துக் கொண்டு போய்க் கொன்று தின்பதற்காகச் சமயம் பார்த்து வருவார்கள். சில சமயம் சிறு படகுகளிலும் சில சமயம் நீந்தியும் வருவார்கள். வருஷத்தில் ஒரு மாத காலம் சுறா மீன்கள் எல்லாம் வேறு எங்கேயோ போய்விடும். அச் சமயம் பார்த்துத்தான் அநேகமாக வருவார்கள். அவர்கள் திடீரென்று வந்து தாக்க முடியாமலிருப்பதற்காகவே தமிழர்கள் அவ்வளவு பெரிய கோட்டை கொத்தளங்கள் கட்டிக் கொண்டு வசிக்கிறார்கள். அதுமட்டுமின்றி, எப்போதுமே கோட்டைச் சுவர்கள் மீதும் பாறை உச்சிகளிலும் காவல்காரர்களை நிறுத்தி வைப்பது வழக்கம். இவ்வளவு பாதுகாப்புகளையும் சில சமயம் அந்த அரக்கர்கள் தாண்டிக் கொண்டு வந்து தமிழர்கள் சிலரைப் பிடித்துப் போய் விடுவது உண்டு. அப்போதெல்லாம் தமிழர்கள் வசித்த அமுதத் தீவில் அழுகைச் சத்தம் கிளம்பும்; அரக்கர் தீவிலே கோலாகலமாயிருக்கும்.

இந்த விவரங்களை யெல்லாம் சொல்லி விட்டு இளஞ்சென்னி நெடுஞ்செழியர் சேரலாதர், "ஐயா, மதிவாணரே! தமிழ் ஆனாலும் மிக 'அபாயகர'மான மொழி! அதன் இனிமையே அதற்கு இவ்வளவு அபாயத்தையும் அளித்திருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டில் இப்போது ராட்சதர்களின் தொல்லை அடியோடு இல்லை யென்றா சொல்கிறீர்கள்!" என்று கேட்டார்.

"ஆமாம்; உண்மையாகவே கிடையாது. நீங்கள் புறப்பட்டு வந்த சில நாட்களுக்கெல்லாம் இராமர் என்பவர் வந்து இராவணனாதி ராட்சதர்களை அடியோடு ஒழித்து விட்டார்! ஆனால் இந்த நாளில் சிலர் 'நாங்கள் இராவணனுடைய சந்ததிகள்' என்று சொல்லிக் கொண்டு கிளம்பியிருக்கிறார்கள். அவர்கள் இராவண பூஜை செய்கிறார்கள்! தமிழைத் தாங்கள் காதலிப்பதாகவும் சொல்லிக் கொள்கிறார்கள்!" என்றேன்.

"அப்படி ஒரு அதிசயமும் செந்தமிழ் நாட்டில் இருக்கிறதா! நல்லது; அவ்வாறு சொல்லும்


Coffee
ours for quality
RAW
ROAST
OR
GROUND
GANESH & Co
(MADRAS) LTD.

மனிதர்களை இந்த அரக்கர் தீவுக்கு அனுப்பி வைப்பது தானே ! அனுப்பி வைத்தால் அவர்களுடைய இராவண பக்தியைச் சோதித்துப் பார்க்கலாம் !'' என்றார் இளஞ்சென்னி நெடுஞ்செழியர் சேரலாதர்.

அத்தியாயம் 6

மூன்று மாத காலம் அந்த அழகிய அமுதத் தீவில் வசித்தேன். சொர்க்க லோகத்தில் வசித்தேன் என்றே சொல்லலாம். வாழ்க்கை அவ்வளவு குதூகலமாகச் சென்று கொண்டிருந்தது. அகஸ்தியருக்குப் பிற்காலத்தில் தமிழ்நாட்டில் இயற்றப்பட்ட கவிதைகளைப் பற்றிக் கேட்டார்கள். நானும் திருவள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள், இராமலிங்க அடிகள், பாரதியார், கவிமணி முதலியவர்களின் கவிதைகளில் எனக்கு நினைவு இருந்தவற்றை யெல்லாம் சொல்லிக் காட்டினேன். அவர்கள் அப்பாடல்களின் எளிமையையும் இனிமையையும் கவிதை அழகையும் சுவைத்துச் சுவைத்து மகிழ்ந்தார்கள்.

அகஸ்தியருக்கு முற்காலத்திய கவிஞர்களின் பாடல்களை அவர்கள் பாடிக் காட்டினார்கள். அவற்றில் முத்தொள்ளாயிரப் பாடல்கள் சில மட்டும் நாம் இப்போது அறிந்திருப்பவை. மற்றவை நாம் கேட்டதே இல்லை. தமிழகத்தில் கடல் கொண்டு போய் விட்ட நூல்களில் அப்பாடல்கள் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

அகஸ்தியருக்குப் பின்னால் வந்த புலவர்கள் சிலர் தமிழ் மொழியைக் கரடு முரடாக்க முயன்றதைப் பற்றியும் அவர்களுக்கு எடுத்துக் கூறினேன்.

'' கால்பார் கோத்து ஞாலத்தியக்கும்
காவற்சாகா டுகைப்போன் மாணின்
ஊறின்றாகி யாறினிது படுமே
உய்த்தறேற்றா னாயின் வைகலும்
பகைக் கூழள்ளற் பட்டு
மிகப்பஃ றீ நோய தலைத்தலைத் தருமே.'

இதுபோன்ற பாடல்கள் சிலவற்றை நான் சொல்லக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

மயில் விழி மானுக்கும் எனக்கும் முதல் சந்திப்பிலேயே ஏற்பட்ட நட்பு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. ஒருவரை யொருவர் பிரிந்து ஒரு நிமிடமும் உயிர்வாழ முடியாது என்ற நிலைமை ஏற்பட்டது. அமுதத் தீவில் குழந்தைகள் பிறந்து சில நாளைக்குள்ளேயே இன்னாருக் கின்னார் என்று முடிவு செய்து விடுவது வழக்கமாம். மயில் விழி மானினுக்கு அவ்விதம் முடிவு செய்யப்பட்டிருந்த யுவனைச் சிறு பிராயத்திலேயே ராட்சதத் தீவினர் கொண்டு போய் விட்டார்கள். ஆகையால் மயில் விழி மானின் திருமணத்தைப் பற்றி அவள் பெற்றோர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். நான் ஒருவன் போய்ச் சேர்ந்தது அவர்களுக்குச் சௌகரியமாய்ப் போயிற்று. தை பிறந்ததும் முதல் காரியமாக முருகன் கோவிலில் எங்களுக்கு மணம் முடித்து வைப்பது என்றும் தீர்மானித்திருந்தார்கள்.

ஆனால் கடவுளின் விருப்பம் வேறுவிதமாக இருந்தது. நான் அமுதத் தீவை அடைந்த சில மாதங்களுக்கெல்லாம் அத்தீவின் மேலாக அடிக்கடி ஆகாச விமானங்கள் குறுக்கும் நெடுக்குமாய்ப் போகத் தொடங்கின. ஏதோ பூகோள ஆராய்ச்சி செய்கிறவர்களைப் போல் தோன்றியது. சில நாளைக் கெல்லாம், அத்தீவுக்குச் சில மைல் தூரத்தில் ஒரு பிரம்மாண்டமான அமெரிக்கக் கப்பல் வந்து நின்றது. இவற்றை யெல்லாம் பார்த்ததும் எனக்கு ஊருக்குப் போகும் சுரம் வந்து விட்டது. மயில்விழி மானின்மீது எனக்கு எவ்வளவு ஆசை யிருந்தாலும், அவளை அழைத்துக் கொண்டு ஊருக்குப் போவதுதான் நல்லது. தமிழ் நாட்டுக்குப் போன பின்னர் பொது மக்களுக்கும் பொதுஜன சர்க்காருக்கும் அமுதத் தீவையும் அரக்கத் தீவையும் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். பழைய சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு இது மிகவும் உபயோகமா யிருக்கும். சர்க்காரும் யுனிவர்ஸிடி நிர்வாகிகளும் கட்டாயம் உதவி செய்வார்கள். நாலாயிரம் வருஷத்துக்கு முந்திய தமிழர்கள் எப்படி யிருந்தார்கள், எப்படி வாழ்ந்தார்கள், அவர்களுடைய நடை உடை பாவனைகள் எவ்வாறிருந்தன என்பவற்றை நேரிலேயே தெரிந்து கொள்ளலாம் அல்லவா !

இதையெல்லாம் இளஞ் சென்னிக்கும் மயில் விழி மானுக்கும் எடுத்துச் சொல்லி அவர்களையும் சம்மதிக்கும்படி செய்தேன்.

அதன் பிறகு கோட்டைச் சுவருக்கு வெளியில் உயரமான ஒரு பாறையில் போய் ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கத் தொடங்கினேன். ஆகாசத்தில் விமானத்தைப் பார்த்தபோதெல்லாம் கையில் இருந்தபடியில் ஒருதுணியை முடிந்துவிட்டு ஆட்டு ஆட்டு என்று ஆட்டினேன். கடைசியாக, ஓர் ஆகாச விமானத்தில் உள்ளவர்கள் என்னைக் கவனிப்பதாகத் தோன்றியது. அந்த விமானம் கொஞ்ச தூரம் போய் விட்டுத் திரும்பி வந்தது. வரும்போது அதன் அடியில் ஏதோ ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. கிட்ட வந்த பின் அது ஒரு வலை என்று தெரிந்தது. அந்த வலை என்னை அப்படியே பாறை மேலிருந்து தூக்கிக் கொண்டு போயிற்று. தூக்கிய அதிர்ச்சியிலேயே நான் நினைவு இழந்து விட்டேன். பிறகு நினைவு வந்து பார்த்த போது, அமுதத் தீவிலிருந்து பார்த்த பிரம்மாண்டமான அமெரிக்கக் கப்பலில் இருந்தேன். எனக்குப் பிரமாதமான உபசாரங்கள் அக் கப்பலில் செய்யப்பட்டன. நான் அங்கு வந்து சேர்ந்ததைப் பற்றியும் நான் பார்த்தவற்றைப் பற்றியும் கேட்டார்கள். எல்லாம் சொன்னேன்.

ஆனால் கப்பல் நிர்வாகிகள் விமானத்தி லிருந்து நான் விழுந்ததை மட்டும் ஒப்புக் கொண்டார்களே தவிர, மற்றது ஒன்றையும் ஒப்புக் கொள்ளவில்லை. நான் பார்த்த தெல்லாம் என் சித்தப்பிரமை என்றார்கள். அவர்கள் ஏதாவது சொல்லிக் கொண்டு போகட்டும் ; தாய்நாடு சேர்ந்ததும் நேரு சர்க்காரிடம் சொல்லிக் கப்பல்கள் அனுப்பி அமுதத் தீவிலுள்ளவர்களைத் தாய்நாட்டுக்கு அழைத்து வரச் செய்வது என்று தீர்மானித்தேன். அசுரத் தீவில் உள்ளவர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. பஸிபிக் சமுத்திரத்தில் எத்தனையோ தீவுகளில் அம்மாதிரி காட்டுமிராண்டிகள் உளர் என்பதை நான் அறிந்திருந்தேன் அன்றோ !

எனவே, கப்பல் புறப்படும் நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஏன் அங்கே கப்பல் நீடித்து நிற்கிறது, அதிலிருந்து புறப்பட்டுப் போய்ப் போய்த் திரும்பும் விமானங்கள் எதற்காக அப்படிப் போய் வருகின்றன என்று எனக்குத் தெரியவில்லை ; ஒருவரும் சொல்லவும் இல்லை. கடைசியில் ஒரு நாள் கப்பல்

அங்கிருந்து புறப்பட்டது. சுமார் மூந்நூறு மைல் தூரத்துக்கு அப்பால் சென்று மறுபடியும் நின்றது. விமானங்கள் மீண்டும் கிளம்பிச் சென்றன.

சில நிமிஷ நேரத்துக்கெல்லாம் ஆயிரம் பதி னையிரம் இடிகள் சேர்ந்தாற்போல் இடித்தது போன்ற ஒரு சத்தம் கேட்டது. அம்மாடிரி காது செவிடுபடும்படி ஒரு கோர பயங்கரச் சத்தத்தை அதுவரை நான் கேட்டது கிடையாது. சிறிது நேரத்துக்கெல்லாம் வெடித்த இடத்திலிருந்து புகைத் திரள் கிளம்பி வானை அளாவியதுடன் நாலா திசையும் பரவியது. கப்பலில் இருந்தவர்களை யெல்லாம் உடம்பை மூடிக் கொள்வதற்காகக் கவசம் அணிந்து கொள்ளச் சொன்னார்கள்.

அப்போதுதான் என் மந்த மதிக்கு உண்மை புலனாயிற்று. 'ஹைட்ரஜன் குண்டு' பரிசோதனை நடத்தினார்கள் என்பதை அறிந்தேன். மனிதர்களே இல்லாத பிரதேசங்கள் என்று நினைத்து அங்கே ஹைட்ரஜன் குண்டைப் போட்டார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம் புகை கலைந்தது. நெஞ்சு பதை பதைக்க, வயிறு கலக்க மடைய, அமுதத் தீவு இருந்த திசையை நோக்கினேன். அங்கே அமுதத் தீவையும் காணவில்லை; அருகிலிருந்த அசுரத் தீவையும் காணவில்லை! எல்லாம் ஹைட்ரஜன் குண்டில் பஸ்மீகரமாகிக் கடலில் கலந்து மறைந்து விட்டன.

கத்து கத்து என்று கத்தினேன். அழு அழு என்று அழுதேன். கப்பல் அதிகாரிகளிடம் முறையிட்டேன். யாரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. நான் குறிப்பிட்ட இடங்களில் இருந்த தீவுகளில் ஜனங்களே இல்லை யென்று அவர்கள் சாதித்து விட்டார்கள்.

சில நாளைக்கெல்லாம் வேறு கப்பலில் ஏற்றி என்னை இந்தியாவுக்கு அனுப்பினார்கள். இங்கே வந்த பிறகு சர்க்கார் இலாகாக்களைப் போய்ப் பார்த்தேன். ஒருவரும் என் பேச்சை நம்பவும் இல்லை; எனக்குத் தைரியம் கொடுக்கவும் இல்லை. 'சித்தப் பிரமை சரித்திர ஆராய்ச்சியாகாது' என்று சொல்லி விட்டார்கள்.

அவ்வளவுதான் என் வரலாறு. தூய பழந் தமிழர் நாகரிகத்தின் உறைவிடமாகப் பசிபிக் சமுத்திரத்தில் ஒரு தீவு இருந்தது என்பதற்கு நான்தான் கடைசி சாட்சி. நீங்கள் எப்படியும் நம்புவீர்கள் என்று உங்களிடம் சொன்னேன். இந்திய சர்க்காரிடம் நான் பெற்ற இருபத்தைந் தாயிரம் ரூபாய்க்கும் பிரதி செய்து விட்டதாகவே கருதுகிறேன். நான் எதற்காகப் போனேனோ, அந்த ஆராய்ச்சி செய்யவில்லைதான். அதனால் என்ன! அதைவிடப் பன்மடங்கு முக்கியமான சரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படக்கூடிய செய்திகளைத் தெரிந்து கொண்டு வந்தேன். என்னுடைய கடன் தீர்ந்ததென்று கருதுகிறீர்களா, இல்லையா! இதோ தாம்பரம் வந்து விட்டது. வண்டியைச் சிறிது நிறுத்தச் சொல்லுங்கள். இறங்கிக் கொள்கிறேன்! * * *"

முடிவுரை

தாம்பரத்தில் வண்டி நின்றது. மதிவாணர் எம். ஏ. வண்டியிலிருந்து இறங்குவதற்கு முன்பு அவர் அமெரிக்கர்களைத் திட்டியதற்கு அளவே கிடையாது. "இராவணாதி ராட்சஸர்களை விட அமெரிக்கர்கள் பொல்லாத காட்டு மிராண்டிகள். அவர்களாவது வயிற்றுக்கு உணவுக்காக மனிதர்களைக் கொன்றார்கள். இவர்கள் ஆராய்ச்சி என்ற பெயரில், ஒரு காரணமும் இல்லாமல் அல்லவா கொன்று விடுகிறார்கள்! ஐயாயிரம் வருஷத்துக்கு முந்தைய பழந்தமிழர் நாகரிகம் குடிகொண்டிருந்த ஒரு தீவையே அழித்து விட்டார்களே! பாவிகள் பழந் தமிழர்களும் அவர்களுடைய நாகரிகமும் எப்படியாவது போகட்டும்! என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மயில் விழி மானை இனி நான் என்று காணப் போகிறேன்! காண முடியாமல் செய்து விட்டார்களே பாவிகள்!—ஆம்; சொர்க்க லோகத்தில் கட்டாயம் அவள் எனக்காகக் காத்திருப்பாள் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்!"

இவ்வாறு சொல்லிக் கொண்டே மதிவாணர் எம். ஏ. இறங்கிச் சென்றார். அவர் கூறியதில் எவ்வளவு உண்மையாயிருக்கும்! எவ்வளவு அவரது கற்பனையாயிருக்கும் என்பதை நேயர்களே ஊகித்துக் கொள்ளக் கோருகிறேன்.

அன்னமே! இரங்காயோ?

அன்னப் பறவைகளிலே அரசப் பறவை அது. ஒருநாள் தமயந்தி யிருந்த குண்டினபுரத்துக்குச் சென்றது. தமயந்தி நந்தவனத்திலிருந்தாள். அவளிடம், நளமகாராஜனின் அழகைப் புகழ்ந்தது; வீரத்தைப் புகழ்ந்தது. கொடைத் திறனைப் புகழ்ந்தது. இதை யெல்லாம் கேட்கக் கேட்கத் தமயந்தியின் உள்ளத்தில் காதல் பொங்கியது. கட்டுக் கடங்காமல் பொங்கியது! இந்தக் காதலை நளனுக்குத் தெரிவிக்க வேண்டுமே! இதை இந்த அன்னத்தைத் தவிர வேறு யார் போய் நளனிடம் கூற முடியும்! ஆனால் இந்த அன்னமோ தமயந்தியின் காதலை ஒரு பொருளாக மதிப்பதாகவே தெரியவில்லையே! முதலில் இந்த அன்னத்தினிடம் தன் நிலையை அதன் மனத்தில் பதியும் வண்ணம் சொல்ல வேண்டும்:

ஒரு கணம் யோசித்தாள். கம்மென்று மணம் வந்தது. தாமரை மலரின் மணம். இந்தத் தாமரையின் தலைவன் கதிரவன். கதிரவன் வரவில்லை எனில் தாமரையும் மலர்வதில்லை.

மணம் வீசும் ஆம்பல் மலரின் நிலையும் அப்படித்தான். சந்திரன் வந்தால்தான் ஆம்பலும் மலரும்! தாமரைக்கும் ஆம்பலுக்கும், முறையே கதிரவனும் சந்திரனும் தவிர்த்து வேறு தலைவர்கள் இல்லை யல்லவா!

"விரையு யிர்க்கும் தாமரைக்கு
வெய்யவனும் சேதாம்பல்
மருவு யிர்க்கும் நாண்மலர்க்கு
மாமதியு மல்லாமல்
உரைபெறு நற்றலை வர்பிறர்
உளர்கொலோ பொலன்சிறைய
அரச மடஅன மேலனையும்
அன்னவாய் எண்ணுதியால்."

'அரச அன்னமே! என்னையும் அந்தத் தாமரை, ஆம்பல் வகையில் வைத்து எண்ணுவாயாக! எனக்கும் நளனை விட்டால் வேறு தலைவர் கிடையாது! இதை மனத்தில் கொண்டு என் நிலையை நளனிடம் சொல்வாயாக!' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள் தமயந்தி.

அவள் அன்னத்தை மிக மிக இறைஞ்சிக் கேட்டுக் கொள்ளும் பாவம் பாலு சகோதரர்கள் வரைந்துள்ள சித்திரத்தில் (பக்கம் 89 – அ) வெகு நேர்த்தியாக வந்திருக்கிறது.



சகுந்தலை
பெற்ற
மதலை

★

கல்கி
தீபாவளி
மலர்
1954

தற்போது பம்பாய் மிகவும் அழகாக இரு[illegible]றது!

நேர்த்தியான ஸ்பன் ஆர். ஸி. ஸி. கம்பங்களை உபயோ[illegible]!



எங்களது விளக்கு கம்பங்களினால் ஏற்படும் அனுகூலங்கள்

★ பெயின்ட் அடிக்கத் தேவை இல்லை பராமரிப்பு செலவு கிடையாது.

★ அழகான தோற்ற மளிக்கிறது.

★ பொருத்தப்பட்ட இடத்தையும் அழகு படுத்துகிறது.

★ நிரந்தரமான நீடித்த உழைப்பு.

★ நிர்மாணிப்பது மிக சுலபம்; ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்ற முடியும்.

★ விலையில் மிகவும் சிக்கனம்.

★ இந்தியாவில் அருகாமையிலுள்ள தொழிற்சாலையிலிருந்து சப்ளை செய்யப்படும்.

★ கவர்ன்மெண்ட் மற்றும் முனிசிபாலிடிகளால் வெகுவாக ஆதரிக்கப் படுகிறது.


★ சாஸ்திரீய முறையில் தயாரிக்கப் படுகிறது.

இந்தியா, பாகிஸ்தான், ஸிலோன் இவ்விடங்களில் 50 தொழிற்சாலைகள் உள்ளன

இதர கவர்ச்சிகரமான டிசைன்களுக்கும் விவரங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

கான்கிரீட்டினால் தயாரிக்கப்பட்ட

ஹ்யூம் ஸெப்டிக் டாங்க்



ஸெப்டிக் டாங்கை பொருத்தி கக்கூஸுடன் இணைப்பதால் கக்கூஸை தாராளமாக தண்ணீர் விட்டு கழுவி சுத்தம் செய்யலாம்.

ஸெப்டிக் டாங்கிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரிலிருந்து துர்நாற்றமில்லை; அந்தத் தண்ணீரை காம்பவுண்டுக்குள்ளேயே காய்கறித் தோட்டங்களுக்கு உபயோகிக்கலாம்.

நாற்றுக்கணக்கில் விற்பனையாகின்றன. பம்பாய் நகரத்தை சுற்றியுள்ள இடங்களில் விற்பனை மேலும் மேலும் அதிகரித்து வருகிறது.

தி இந்தியன் ஹ்யூம் பைப் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: கன்ஸ்டரக்ஷன் ஹவுஸ், பல்லார்ட் எஸ்டேட், பம்பாய்-1

ஜலதோஷம், இன்புளுயன்ஸா
தலை பாரத்திற்கு

பெரியவர்கள்

குழந்தைகள்

எல்லோருக்கும் ஏற்றது



(இங்கிலாந்தில் தயாரானது)



கிபாக்
இன்ஹேலன்ட் ரப்

- நாசித் துவாரங்களுக்குள் பூசிக்கொண்டால் தலை பாரத்தைப் போக்குகிறது.
- மார்பு, கழுத்து, முதுகில் தேய்த்துக்கொண்டால், மார்ச்சளியை முறித்துச் சுலபமாக மூச்சுவிட உதவுகிறது.

கிபாக்
இன்ஹேலர்

நாசித் துவாரங்களுக்குள் சுலபமாக நுழையும்படியும் உறிஞ்சுவதற்கு சௌகரியமாகவும் இது சாஸ்திரியமாகத் தயாரிக்கப் பட்டிருக்கிறது. இதனுடைய மருந்து சக்தி தீர்ந்தவுடன், இதற்கு மறுபடியும் புதிய இன்ஹேலன்ட் சுலபமாகப் பொருத்திக்கொள்ளலாம்.





கிபாக்
இன்ஹேலன்ட்

கைக்குட்டையில் சில துளிகள் போட்டவுடன் மணம் கமழும். கிருமி நாசன ஆவி இதிலிருந்து வெளிவந்து, தடையின்றிச் சுகமாக மூச்சுவிட உதவுகிறது.

ஏஜண்டுகள்

ஓரியன்டல் மெர்க்கன்டைல் ஏஜன்ஸி

99-ஏ, அரண்மனைக்காரத் தெரு - சென்னை-1

உள்ளம் கவர் கள்வன்

ஸோமாஸ்



கோதையும் ரங்கனும் ஒருவர் மீது ஒருவர் இணையற்ற அன்பு கொண்டிருந்தனர். கோதை வேறு யாரும் இல்லை. ரங்கன் குடியிருந்த வீட்டுக் காரரின் பெண். வீட்டுக்காரரான ராமஸ்வாமி தன் வீட்டு மாடியை ரங்கனின் பெற்றோர்களுக்கு வாடகைக்கு விட்டு விட்டு, தாம் கீழே இருந்தார்.

அந்த ராமஸ்வாமியின் ஏகபுத்திரிதான் கோதை, ரோஜாவின் மென்மை, செதுக்கியெடுத்த சந்தனக் கட்டையின் நிறம், குயிலின் குரல், மயிலின் சாயல், தென்றலில் கலந்திருக்கும் மிருதுத்தன்மை இவ்வளவும் கொண்டு கோதை பிறந்திருந்தாள். இல்லை, இல்லை, அவதரித்திருந்தாள். ரங்கனுக்கு அப்படிச் சொன்னால்தான் சந்தோஷமாயிருக்கும்!

அந்த வீட்டை அவன் அப்பா நிர்மாணித்த போது, ரங்கனுக்கு அவ்வளவாக உற்சாகம் இருக்கவில்லை. முன்பு அவர்கள் குடியிருந்த வீடு அவன் ஆபீஸுக்குப் பக்கத்தில் இருந்தது. ரங்கன் சுபாவத்திலேயே கொஞ்சம் சோம்பேறி. இப்பொழுது பார்த்திருந்த வீடு ஆபீஸுக்கு ரொம்ப தூரத்தில் இருந்தது. அந்த வீட்டுக்குக் குடி போய் விட்டால் இப்பொழுது மாதிரி நடந்தே ஆபீஸுக்குப் போய்விட முடியாது. பஸ்ஸில் தான் போக வேண்டும். பஸ்ஸில் போவதானால் ஆபீஸுக்குப் போக வேண்டிய ஆயத்தங்களை முன்னதாகவே செய்துகொள்ள வேண்டும். இது ரங்கனால் கொஞ்சமும் இயலாத காரியம். இவ்வளவு பக்கத்தில் ஆபீஸ் இருக்கும் போதே, பேனாவை மறந்து வைத்து விடுவதும், டிபனை மறந்து விடுவதுமாகத் தவிப்பான். ஆகவே, அவன் இந்த மாடி வீட்டுக்கு வேண்டா வெறுப்புடன்தான் வரச் சம்மதித்தான்.

"உனக்கென்னடா, தெரியும்! நீ முழுச் சோம்பேறி. அந்த வீட்டு மாடிக் காற்றை ஒருமுறை வாங்கினால் போதும். அங்கேயே படுத்து விடுவாய். ஆபீஸுக்குப் பக்கத்தில் இருக்கிறது என்பதற்காக இந்த உதவாக்கரை வீட்டைக் கட்டிக் கொண்டு அழவேண்டுமா!" என்று ரங்கனின் தகப்பனார் ஒரே போடாகப் போட்டு ஒரு நல்ல நாளில் புது வீட்டில் குடிபுக எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டார்.

தகப்பனார் பேச்சுக்கு எதிர்ப் பேச்சுப் பேசும் தைரியம் என்றைக்குமே ரங்கனுக்கு இருந்ததில்லை. இன்றைக்கு மட்டும் அது எங்கிருந்து வந்துவிடும்! ஆகவே, மௌனமாக அப்பாவின் நிர்மானத்தை ஆதரித்தான்.

ரங்கன் பரம சாது. ஒரு வம்புக்கும் போகமாட்டான். ஆள் பார்ப்பதற்கு நன்றாயிருப்பான். ஆனால் அவன் தோற்றத்தில் ஆண்மையின் கம்பீரமோ, வாலிபத்தின் மிடுக்கோ இருக்க வில்லை. ஆட்டுக் குட்டியின் சாதுத் தன்மையும், அணிற் பிள்ளையின் சுறு சுறுப்பும் பயமும் கலந்த பார்வையுங் கொண்டு அவன் தனிப் பிறவியாக விளங்கினான். மேலும், பள்ளிக்கூடத்தை விட்டதும் சர்க்கார் காரியாலயத்தில் வேலைக்கு அமர்ந்து விட்டான். ஆகையினால் அவனுக்கு உலக அநுபவம் பெறுவதற்குப் போதிய சந்தர்ப்பம் கிட்டவில்லை.

வயது வந்தால் அவரவர்களுக்குத் தானே உலக விஷயங்களெல்லாம் விளங்கி விடுகிறது என்பது எவ்வளவு உண்மை!

ஒரு பாவமும் அறியாமல், ஆபீஸ் உண்டு, தன் வேலை உண்டு என்று இருந்த ரங்கன் ஆபீஸைத் தவிர வேறு உலகமும் இருக்கிறது என்பதை இந்தப் புது வீட்டுக்குக் குடிபுகுந்த சில தினங்களில் புரிந்து கொண்டான்.

அதைத் தன்னுடைய மின்சாரக் கவர்ச்சியுள்ள கண்களின் வீச்சினால் கோதைதான் அவனுக்குப் புரிய வைத்தாள்.

புது வீட்டில் குடிபுகுந்து இரண்டு மூன்று நாட்கள் வரையில், ரங்கன் கொஞ்சங் கூட உற்சாகம் இல்லாமல் இருந்தான். ஆபீஸுக்குப் போவது அவனுக்குப் பெரும்பாடாயிருந்தது.

ஆபீஸுக்குப் புறப்படும் ரங்கன் எதையாவது மறந்து விட்டு மீண்டும் மீண்டும் மாடிப்படியேறிப் போவதைப் பார்த்துக் கொண்டு கோதையினால் சும்மா இருக்க முடியவில்லை. அப்பாவி ரங்கனிடம் அவளுக்கு அளவு கடந்த அநுதாபம் பிறந்து விட்டது. அன்று அவளையும் மீறிக் 'களுக்' கென்று சிரித்து விட்டாள்.

இது வரையில் ஏறெடுத்தும் பார்க்காதிருந்த ரங்கன் சிரித்த ஒலி கேட்டு அவள் பக்கம் திரும்பினான். ஆகா! அவன் இது வரையில் அவ்வளவு அழகுள்ள பெண்மணியைப் பார்த்ததில்லை. அவன் அவளைப் பார்த்துப் பிரமித்துப் போனான்; பிறகு மின்சார விசையால் தாக்குண்டவன் மாதிரி துடித்தான்; அணிற் பிள்ளை மாதிரி மருண்டு மருண்டு பார்த்தான். பிறகு ஆட்டுக் குட்டி மாதிரி சாதுவாக மாறித் தலையைக் குனிந்து கொண்டு தயங்கியபடி நின்றான்.

பாவம், கோதையின் கோமள இதயம் இளகிவிட்டது. அப்பாவி ரங்கனின் தவிப்பைப் பார்த்துக் கொண்டு அவளால் சும்மா இருக்க முடியவில்லை.

"ஐயோ! உங்களுக்கு மறதி அதிகம் போலிருக்கிறது. மனசைக் குழப்பிக் கொண்டு அவசரப் படாதீர்கள். உங்களுக்கு ஆட்சேபணை யில்லை என்றால்...நான்...தினம் எல்லாவற்றையும் உங்களுக்கு ஞாபக மூட்டுகிறேன்......!" என்றாள் கோதை தயங்கியபடியே.

ஆகா! ரங்கனுக்கு உடம்பெல்லாம் வியர்த்து விட்டது. "...... நீங்கள்... பாவம்... உங்களுக்கு

வீண் சிரமம்...!'' என்று கூறி விட்டு, விவரிக்க முடியாத தாப உணர்ச்சி கலந்த பார்வையை அவன் மீது செலுத்தி விட்டு 'விர்'ரென்று ஆபீஸுக்குப் போய் விட்டான்.

அவ்வளவுதான்; அந்தப் பார்வை கோதையின் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. இது வரையில் அவனுக்கு ரங்கனிடம் அநுதாபம் மட்டும் இருந்தது. இந்த நிமிஷத்திலிருந்து அவனிடம் ஒரு இனந் தெரியாத அன்பும் பிறந்தது.

இப்பொழுதெல்லாம் ரங்கன் கோதையிடம் பேசக் கூச்சப்படுவதில்லை. கொஞ்ச நஞ்சமிருந்த கூச்சத்தையும் பயத்தையும் கோதை தன் சாமர்த்தியத்தினால் போக்கி விட்டாள். ரங்கனது சாமர்த்தியத்தையும் நாகரிகத்தையும் கண்டு அவனது ஆபீஸ் நண்பர்களே விஷயம் புரியாமல் வியந்தனர்.

தினம் ரங்கன் ஆபீஸுக்குப் புறப்படும் போது கோதையும் கூட இருந்து அவன் ஒன்றையும் மறந்து விடாமல் பார்த்துக் கொள்ளுவாள். வர வர, நாள் ஆக ஆக, கோதையில்லா விட்டால் ரங்கனால் ஆபீஸுக்குப் போக முடியாது என்கிற நிலைமை ஏற்பட்டு விட்டது.

அவனுக்கு இலக்கியத்தில் ரொம்ப ஆர்வம். ஓயாமல், பத்திரிகைகளும் புத்தகங்களும் படித்துக் கொண்டிருப்பான். கோதை தன் பெற்றோர்களுக்குச் செல்வப் புதல்வியாதலால், ரங்கனிடம் அவள் சகஜமாகப் பேசிப் பழகியதைக் கூட அவளது பெற்றோர்கள் தடுக்கவில்லை. மேலும், ரங்கனுடைய சாதுவான தோற்றம் அவர்களை மிகவும் கவர்ந்து விட்டது.


ரங்கன் அந்த வீட்டுக்குக் குடி வந்து ஒரு வருஷம் பூர்த்தியாகி விட்டது. கோதையின் இதமான பேச்சும், பரிவு கலந்த உபசரணையும் ரங்கனைப் புது மனிதனாக்கி விட்டன.

ஆனால் அன்று அவள் சொன்ன ஒரு விஷயம் தான் அவனைக் கவலையில் ஆழ்த்தி விட்டது.

"நான் வருவதற்கு முன்பு நீ உன் நேரத்தை எப்படிச் செலவழிப்பாய், கோதை!'' என்றான்.

"அதையா கேட்கிறீர்கள்! என் உள்ளத்தைக் கவர்ந்த அன்பர் ஒருவர் இருக்கிறார். அவரோடு மனம் ஒன்றிப் பழகுவேன். அதில் நேரம் செல்லுவதே எனக்கு நினைவு இருக்காது......''

உடனே ரங்கன் ஒரு விதப் பட படப்புடன், "......கோதை, இப்பொழுது அந்த அன்பர் வருவதைக் காணோமே! ஒரு வேளை நான் ... அவருக்குத் தடையாய் வந்து சேர்ந்தேனோ! என்னை மன்னித்துவிடு, கோதை!'' என்று கூறிவிட்டு, அவள் பதிலுக்குக் கூடக் காத்திராமல், மாடி யேறிப் போய் விட்டான்.



கோதைக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவனை அழைக்கவோ, அவனைத் தொடர்ந்து மாடிக்குப் போகவோ அவளுக்குத் தைரியம் உண்டாகவில்லை.

மறு நாளிலிருந்து ரங்கன் கோதையின் உதவியை நாடாமல், பழையபடி தானுமாகத் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டு ஆபீஸுக்குப் போகலானான். கோதையின் பக்கம் அவன் திரும்பிப் பார்ப்பதுகூட இல்லை. காற்றுடன் நெருப்பும் கலந்தது போல், ரங்கனை ஒரு பதினைந்து நாட்களுக்கு வேலூருக்கு மாற்றினார்கள். அவனுக்கு அது ரொம்ப நிம்மதியைத் தந்தது.

பாவம், கோதை! அந்தப் பதினைந்து நாட்களில் மெலிந்து போனாள். தாங்க முடியாத வேதனை அவள் உள்ளத்தை அரித்துத் தின்றது.

ரங்கன் அன்று மாலை ஊரிலிருந்து வந்தான். மாடியில் அவன் தன் அறைக்குச் சென்றபோது அங்கே கோதை அமர்ந்து, ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தாள். ரங்கன் சற்றுத் தயக்கத்துடன் வெளியேற முயன்றான்.

சட்டென்று, ஆவேசம் வந்தவள் மாதிரி கோதை எழுந்து அவன் வழியை மறைத்துக் கொண்டாள்.

"...இவ்வளவு நிதான மில்லாதவரா நீங்கள்! என்னை மன்னிக்க வேண்டும். உங்கள்...அறையில்...'' என்று ஏதோ சொல்ல முயன்ற கோதையைப் பொங்கி வந்த அழுகை தடுத்து விட்டது.

ரங்கன் மிகவும் அழுத்தமாக, "ஏன், உன் அன்பர் இன்று வரவில்லையா! அழுவானேன்! அவரோடு...'' என்று படபடவென்று பேசிக் கொண்டு போனான்; ரங்கனை, கோதை இடைமறித்து, "அடாடா, அதில் வந்த விபரீதம் தானா இது! தயவுசெய்து நீங்கள் இப்படி வந்து உட்காருங்கள். என் அன்பரை உங்களுக்கு நான் அறிமுகம் செய்து வைக்கிறேன்...'' என்றாள்.

"கோதை, ... என்ன தைரியம் உனக்கு!'' என்று பதறினான் ரங்கன்.

உடனே கோதை அவனை நிமிர்ந்து பார்த்து, "இதோ என் அருமை அன்பர்! என் உள்ளத்தைக் கவர்ந்தவர்!'' என்று கூறி, பாரதியாரின் கவிதையை எடுத்துக் காட்டினாள்.

அப்பாவி ரங்கன் முகத்தில் அசடு வழிந்தது. அவன் என்ன செய்வான் பாவம்!

கோதை, "இன்னும் உங்கள் அசட்டுச் சந்தேகமும் விபரீதக் கோபமும் தணிய வில்லையா!'' என்று கேட்டாள்.

"கோபமா...! கோதை, இனி அதைப் பற்றிச் சொல்லாதே. நான் முட்டாள். என்னை மன்னித்துவிடு!'' என்றான் ரங்கன் மிகவும் குழைவுடன்.

கோதை, உடனே அவன் வாயைப் பொத்தினாள். ரங்கன் அவள் தளிர்க் கரங்களைப் பற்றினான். கோதையின் முகம் குப்பென்று சிவந்தது.


சிகைகளும் நன்றாக வாரி அமைந்திருக்கின்றன—
இவர்கள் உபயோகிப்பது
*வாஸிலீன் ஹேர் டானிக்
தினம் சில துளிகளே தேவை
தலையைப் பண்புடன் வைப்பதுடன் சிகையை
யும் மிக்க அழகுடன் விளங்கச் செய்கிறது.
Vaseline
HAIR
TONIC
டிரேட் *வாஸிலீன் மார்க்
பிராண்ட்
ஹேர் டானிக்
*வாஸிலீன் சிஸ்பரோ மான்யுபாக்
சரிங் கம்பெனி கன்ஸாலிடேட்
டரின் வர்த்தக முத்திரையாகும்.
வாஸிலீன் லிக்விட் ஷாம்பு
ஸோப் உபயோகிக்காமலே சுத்தம் செய்கிறது
உங்கள் கூந்தலின் இயற்கை வனப்பை அதிகரிக்கச் செய்கிறது

பரிசுக் கதை

அன்புக்குண்டோ

ஜானகி, தன் கணவன் வீட்டுக்கு வரும் பொழுது தான் எவ்வளவு கஷ்டப் பட்டாலும் பக்கத்திலுள்ளவர்களை யெல்லாம் சந்தோஷப் படுத்த வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு வந்தாள். மூன்று குழந்தைகளை அனாதையாக்கி விட்டு இந்தப் பூலோகத்தை விட்டு மறைந்த ருக்மிணியின் ஸ்தானத்தை அவள் பற்றிக் கொண்டிருந்தாள். அத்துடன் அந்தக் குழந்தைகளின் அனாதைத் தனத்திலிருந்து விடுவிக்கும் பொறுப்பையும் அவள் ஏற்றுக் கொண்டிருந்தாள்.

உலகத்தாருக்கு முன் சுந்தரேசனுக்கு இளையாளாக வாழ்க்கைப் பட்டிருந்த அவள் அவனது குழந்தைகள் தன்னைச் சொந்தத் தாயாகப் பாவிக்கும்படி நடந்து கொள்ளத் தீர்மானித்தாள். அதனுடன் அந்தக் குழந்தைகளைப் பார்த்த பொழுது அவள் எண்ணம் இன்னும் ஊர்ஜிதமாயிற்று.

சீமந்த புத்திரன் கோபுவுக்குப் பத்து வயதிருக்கும். அவனது விசாலமான கண்களும் குறு குறுப்பான பார்வையும் அவளை மிகவும் வசீகரித்து விட்டன.

இரண்டாவது பெண் கமலாவுக்கு எட்டு வயதிருக்கும். இந்தப் பெண் அவளைக் கண்டதும் மிகவும் சகஜமாகப் பேசத் தொடங்கி விட்டாள். இவளைச் சந்தோஷப் படுத்துவது அவ்வளவு கஷ்டமான காரியம் அல்ல என்று ஜானகி நினைத்தாள்.

நாலு வயதுக் குழந்தை சரோஜாவோ இவளைத் தன் சொந்தத் தாயாகவே கருதி, இவளுடன் ஒட்டிக் கொண்டது.

மிக்க அழகோடு கூட இளையாளாக வாழ்க்கைப் பட்டிருக்கிற படியால் கணவனைச் சந்தோஷப் படுத்துவது மிகவும் எளிதே யல்லவா?


மற்றவர்கள் எல்லாரும் ஜானகியை விரும்பினார்களாயினும், கோபு அவளை விஷத்தைப் போல் வெறுத்தான். அவனுடைய சகா நாராயணனுடைய இளைய தாயாரை அவன் நன்றாய் அறிவான். அவள் தன் மூத்தாள் மகனை மிகவும் கண்டித்து வந்தாள். ஒவ்வொரு சமயம் அவள் ராட்சஸி போல் போடும் கூச்சல் இரண்டு தெருவுக்கு அப்பாலும் கூடக் கேட்பதுண்டு. ஆகவே இளைய தாயார்கள் எல்லாருமே கொடும் ராட்சஸிகளென்று கோபு தீர்மானித்ததில் ஆச்சரியமொன்று மில்லை.

இரண்டு மூன்று மாதங்கள் ஜானகி வீட்டிலுள்ளவர்களைச் சந்தோஷப் படுத்துவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொண்டு உழைத்தாள். அதோடு அவள் கோபு தன்னை வெறுப்பதை அறிந்து விசனமடைந்தாள். அவன் மனத்தைத் திருப்புவதற்காக அவள் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டாள்.

ஆனால் பாவம்! அவள் அவனைச் சந்தோஷப் படுத்துவதற்காகச் செய்யும் ஒவ்வொரு காரியமும் அவனது வெறுப்பை அதிகப் படுத்திக் கொண்டே போகிறதென்று அறிந்திருந்தால்......

ஒரு நாள் கோபு பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் மேஜை மேல் புத்தகங்களை எறிந்து விட்டு அவசர அவசரமாகக் காப்பி குடித்து விட்டுப் பந்தாடப் போய் விட்டான். அவன் போன பிறகு ஜானகி அந்த அறையில் பிரவேசித்து எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தத் தொடங்கினாள். மேஜை மீது இறைந்து கிடக்கும் புத்தகங்களையும் ஒழுங்காக அடுக்கி வைத்தாள். அவை கோபுவினுடைய புத்தகங்களென்று அறிந்து அவன் படிப்பில் எப்படியிருக்கிறான் என்று அறிவதற்காக ஒரு தடித்த நோட்டுப் புத்தகத்தைத் திறந்தாள். அது 'ரப்' நோட்டு போலிருக்கிறது. அதனுள் அவியலைப் போன்ற சகல சமாசாரங்களும் இருந்தன. உபாத்தியாயர் பிள்ளைகளின் கைகளை ஒடிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு அவசர அவசரமாகக் கொடுக்கும் 'நோட்ஸ்' களெல்லாம் காக்காய் மூக்கு அக்ஷரங்களில் எழுதப் பட்டிருந்தன.

ஒரு பக்கத்தில் ஆமை முதல் ஒட்டகம் வரையிலுள்ள உபாத்தியாயர்களின் சூசகப் பெயர்களும், வெள்ளைப் பரங்கியிலிருந்து, பலகைப் பல்லன் வரையிலுள்ள அவனிடம் காய் விட்டிருந்த பள்ளிப் பையன்களின் சூசகப் பெயர்களும் காணப் பட்டன. இன்னொரு ஐந்தாறு பக்கங்களில் நொண்டிக் காலும், வழுக்கை மண்டையும் கூனல் முதுகுமாக அனேகக் கேலிச் சித்திரங்கள் வரையப் பட்டிருந்தன. அவைகளைப் பார்த்



அபஜெயம்

அகில உலக சிறுகதைப் போட்டி

ஸ்ரீமதி ஸி. வி. ராம்நாத்

ததும் ஜானகிக்குச் சிரிப்பு தாள முடிய வில்லை. தன்னிடத்தில் உம்மென்று நடந்து கொள்கிறானே தவிரப் பள்ளிக் கூடத்தில் பெரிய வாலாயிருப்பான் போலிருக்கிறதே என்று நினைத்துக் கொண்டாள்.

அடுத்த நிமிஷம் கதவு படாரென்று திறக்கப் பட்டது. கோபு மேல் மூச்சு வாங்கப் பாதி பந்தாட்டத்திலிருந்து தண்ணீர் குடிப்பதற்காக ஓடி வந்திருந்தான். அவனைக் கண்டதும் ஜானகிக்குப் பாதிப் பிராணன் போய் விட்டது. அவன் இல்லாத சமயத்தில் புஸ்தகங்களைத் திருட்டுத்தனமாகப் பார்வை யிடுவதாக நினைத்துக் கொண்டு விடுவானே என்று வருந்தினாள். குற்றவாளியைப் போல் தலையைக் குனிந்து கொண்டு சட் டென்று புத்தகங்களை யெல்லாம் அடுக்கி வைக்கத் துவங்கினாள்.

கோபு தன் 'ரப்' நோட்டை ஜானகி தன் கையில் வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான். தான் குறும்புத்தன மாகக் கிறுக்கி யிருப்பதைப் பார்த்து எங்கே தன் தகப்பனாரிடம் சொல்லி விடுவாளோ என்று பயந்தான். இதனால் அவள் பேரில் அவனுக்குக் கோபமும் இகழ்ச்சியும் தோன் றின. புத்தகத்தைச் சீர்படுத்திவிட்டு அவள் போன பிறகு ஒரு தரம் கோபு நோட்டைப் பார்வை யிட்டான். எல்லாம் சரியாக இருந் தன. தண்ணீர் குடித்து விட்டு மறுபடியும் விளையாடப் போய் விட்டான். தன்னுடைய குறும்புத் தனத்தைப் பற்றித் தன் தகப்பனார் இரவே கண்டிப்பாரோ என்று பயந்து கொண்டிருந்தான். ஆனால் நல்ல காலமாக அந்த மாதிரி ஒன்றும் நடக்க வில்லை. அதிலிருந்து அவன் தன் புத்தகங்களைத்தானே அடுக்கி வைத்துவிட்டுப் போக ஆரம்பித்தான்.

* * *

மற்றொரு நாள் அவனுடைய நிஜாரை யும் சட்டையையும் கழற்றித் தாழ்வாரத்தில் போட்டு விட்டு வெளியே போய் விட்டான். வேலைக்காரித் தாயி அன்று வேலைகளை யெல்லாம் செய்துவிட்டுச் சீக்கிரமாக வீட்டுக் குப் போய் விட்டாள். மறு தினம் அவள் வரும் வரையிலும் அங்கேயே கிடக்க வேண்டாமென்று எண்ணி ஜானகி அவை களை எடுத்து நன்றாகச் சோப்புப் போட்டுத் துவைத்து உலர்த்தி விட்டாள்.

இரவு எட்டு மணிக்குக் குளிக்கப் போகும் சமயம் பளிச்சென்று அவை கோபுவின் கண் களில் பட்டன. இது வேலைக்காரி தாயியின் கை வேலை அல்ல என்று அவன் சட்டென்று ஊகித்து விட்டான். அப்படித்தான் அவ் வளவு நன்றாக அவள் துவைத்து விட்டாலும் இவ்வளவு அழகாக உலர்த்தவே அவளுக்குத் தெரியாது. அவளும் ஒரு வருடமாக இங்கு வேலை செய்கிறாள். ஒரு நாளாவது இந்த மாதிரி உலர்த்தியதே கிடையாது. வீட்டுக் குப் போகும் அவசரத்தில் கொடி மேல் தூக்கி எறிந்து விட்டுப் போய் விடுவாள்.

ஆகவே, 'அவள்' (அதாவது அவனுடைய இளைய தாயார் அவள் என்பதைத் தவிர அவளுக்கும் அவனுக்கும் வேறு எந்த விதமான சம்பந்தமும் கிடையாதென்பது அவனுடைய அபிப்பிராயம்.) தான் இதைச் செய்திருக்க வேண்டும். இவளை யார் செய்யச் சொன்னது? பிறகு அப்பாவிடம் 'நான் உங்கள் பிள்ளையின் துணிகளைக் கூடத் துவைக்க வேண்டியிருக்கிறது' என்று குறை கூறுவதற்குத்தானே என்று நினைத்தான். அவனுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. முற்றத்தில் நின்ற படியே "அடி கமலா!"" என்று பலமாகக் கூச்சல் போட்டான்.

கமலா கூடத்தில் ஜானகி சொல்லும் கதையைக் கேட்டுக் கொண்



டிருந்தாள். அவள் காதில் கோபுவின் கூச்சல் விழுந்தும் கவனியாமல் மும்முரமாகக் கதை கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அடி கழுதை, இங்கே வரப்போகிறாயா, இல்லையா?" என்று மறுபடியும் அவன் கூக்குரல் கேட்டு, அவள் எழுந்து முற்றத்துக்கு ஓடி வந்தாள். பின்னோடு ஜானகியும் வந்து தாழ்வாரத்தில் நின்று கவனிக்கத் தொடங்கினாள்.

"என்னோட நிஜாரையும் சட்டையையும் தாயி துவைக்கலையா?" என்று கேட்டான்.

கமலா, சித்தி பின்பலமாக இருப்பாள் என்ற தைரியத்தினால், "ரொம்ப அழகா இருக்கு. அது எனக்கெப்படித் தெரியும்? அதோ கொடியிலே துவைத்து இருக்கே. பின்னே எதுக்காக இவ்வளவு கூச்சல் போடறே? வா, அம்மா! எனக்குப் பாக்கிக் கதையையும் சொல்லு" என்று சொல்லிக் கூடத்துக்கு ஓட எத்தனிப்பதற்குள் கோபு அவளுடைய காதைப் பலமாகப் பிடித்துக் கொண்டான்.

"ஏண்டி, கழுதை எங்கே ஓடறே? இந்தத் துணிகளைத் துவைச்சது தாயி அல்ல. இதை யார் துவைச்சது? எதுக்காக என்னுடைய துணியை அன்னியர் துவைக்கணும்? அப்படியே போட்டு வைக்கிறதுதானே?" என்பதற்குள், காது வலி பொறுக்க முடியாமல் கமலா, "ஐயோ அம்மா" என்று வீறிட்டு அலறினாள்.

ஜானகிக்கு அவன் பண்ணும் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு கோபம் வந்து விட்டது.

"எதுக்காக கோபு, அவளைப் போட்டு வாட்டறே? நான்தான் நாளை வரை அங்கேயே கிடக்க வேண்டாமென்று உன் துணிகளைத் துவைத்தேன். அவளை விடு, பாவம்!" என்றாள்.

கோபு கமலாவை விட்டு விட்டு 'உர்' என்று முகத்தை வைத்துக் கொண்டு அங்கிருந்து போய் விட்டான். அன்னியர் என்று தான் கூறியதைத் தன் தகப்பனாரிடம் கூறி விடுவாளோ என்று பயந்தான். இனிமேல் தான் இப்படியெல்லாம் நடந்து கொள்ளக் கூடாது என்று நினைத்துக் கொண்டானானாலும், அவனுடைய வெறுப்பு வளர்ந்து கொண்டே இருந்தது.


ஆனால் அன்றைய சமாசாரமும் அப்பா காதுக்கு எட்டவில்லை. இதனால் கோபுவுக்கு அதிக தைரியம் வந்து விட்டது.

சில நாட்கள் எந்த விதமான சச்சரவில்லாமலே கழிந்து போயிற்று. கடைசியில் கோபுவுக்கு ஒரு காரணம் கிடைத்தது. அவன் அதை விடவில்லை.

ஒரு நாள் விறகு ஈரமாக இருந்ததால் அடுப்பு எரியவில்லை. விடியற் காலத்திலிருந்து பூ, பூ என்று ஊதி ஜானகியின் முகமும் கண்களும் சிவந்து போயின. சமையலறையில் நடக்கும் சமாசாரத்தைக் கோபு அறிந்ததும் அவனுக்குக் குஷி கிளம்பியது. அவன் தனக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போகச் சீக்கிரம் சமைத்துப் போடவில்லை என்று அப்பா அறிய வேண்டும் என்று நினைத்தவனாய், தினமும் போவதிலிருந்து கால் மணி நேரம் முன்னதாகவே புத்தகங்களை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான். ஜானகி ஏற்கெனவே இதைப் பற்றித்தான் பயந்து கொண்டிருந்தாள். அவளுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது. ஊதுகுழலைக் கையில் வைத்திருந்தபடியே அவள் கோபுவின் அறையில் பிரவேசித்தாள்.

"சமையல் இன்னும் பதினைந்து நிமிஷங்களில் ஆகிவிடும், கோபு! சாப்பிட்டு விட்டுப் போகலாம்" என்றாள்.

அவளைப் பார்க்காமலே அவன், "எனக்கு இன்று சீக்கிரம் பள்ளிக்கூடம் போய் மற்றொரு பையனிடம் புத்தகம் வாங்கிப் படிக்க வேணும். அதைப் படிக்காத போனால் வாத்தியார் வகுப்பை விட்டுத் துரத்தி விடுவேன் என்று சொல்லியிருக்கிறார். நான் ஒரு மணிக்கு வந்து சாப்பிட்டுக் கொள்கிறேன்" என்று சொல்லி விட்டு, அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதைக் கூடக் கவனியாமல் ஓடி விட்டான்.



ஜானகி அடுக்களையில் வந்து பொத்தென்று விழுந்தாள். அவனுக்காகத் தான் இவ்வளவு வருத்தப்படுவானேன் என்று அவளுக்குத் தெரியவில்லை. இளையாளாக

தீபாவளி வாழ்த்துக்கள்

தீபாவளித்திருநாள் இரவு தனிச்சிறப்புடையது. எங்கு பார்த்தாலும் தீபாலங்காரம். வாணங்கள் ஒளிக்கோடிட்டு வானமெங்கும் நட்சத்திரங்களை வாரி இறைக்கின்றன. பட்டாசு வெடிமுழக்கம் மக்களின் மனமகிழ்ச்சியை அறைகூவுகிறது. இந்த சுபதினத்தன்று ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும் சீராடி, புத்தாடை அணிந்து அளவிலா ஆனந்தத்துடன் ஒருவரையொருவர் வாழ்த்துகின்றனர். தங்களது தீபாவளி வாழ்த்துக்களை மேலும் இனிதாகச்செய்ய குடும்பஸ்திரீகள் பலவகை தித்திப்புப் பண்டங்களை தயாரிக்கிறார்கள். கண்ணுக்கும், நாவிற்கும் விருந்தளிக்கும் தித்திப்புப்பண்டங்களைத் தயாரிப்பதற்கான சகவெத்தை தெரிந்துகொண்டிருக்கும் லக்ஷக்கணக்கான இந்நாட்டு மக்களைப்போலவே நீங்களும் தீபாவளி விருந்தை டால்டா வனஸ்பதி உபயோகித்துத் தயாரித்து விசேஷ சிறப்புடையதாக ஏன் செய்யக்கூடாது? இன்றே ஒரு டின் டால்டா வனஸ்பதி வாங்குங்கள். காற்றுப்புகாத, சீல் செய்த ½, 1, 2, 5, 10 பவுண்டு டின்களில் கிடைக்கிறது.





டால்டா வனஸ்பதி

சிறந்த சமையல் — குறைந்த செலவு



மர அடையாளமுள்ள டின்னை பார்த்து வாங்குங்கள்

இலவசம்! பண்டிகைகளுக்கான சமையல் என்ற சிறுபுத்தகம் ருசிமிக்க தின்பண்டங்களை தயாரிப்பதற்கான செய்முறை குறிப்புகளும் படங்களும் கொண்டது. இப்புத்தகம் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, வங்காளி, குஜராத்தி, மராத்தி என்ற மொழிகளில் கிடைக்கும்.

உங்கள் பிரதிக்கு இன்றே எழுதுங்கள்:
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 227-50 TM

வாழ்க்கைப் பட்டதின் கஷ்டத்தை அவள் அப்பொழுதுதான் உணர்ந்தாள். அவனுடைய சொந்தத் தாயாராயிருந்தால் அவனைப் பிடித்திழுத்து நாலறை அறைந்து, "சீ, கழுதை! சாப்பிட்டு விட்டுப் போடா மரியாதையாக" என்று சொல்லியிருக்கலாமே. யார் கேட்பதற்கு?

* * *

கணவனுக்குச் சாதம் போட்டு விட்டு ஜானகி இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தாள், மெதுவாக.

"கோபு சாப்பிடாமல் பள்ளிக்கூடம் போய் விட்டான். சீக்கிரம் சமையல் பண்ணாதது என் குற்றம்தான்" என்றாள்.

"போக்கிரிக் கழுதை இப்பொழுது ஒன்பதே முக்கால் மணிதானே ஆகிறது? இப்பொழுது சாப்பிட்டு விட்டுப் போனால் போதாதோ?" என்றார்.

"இல்லை, ஏதோ மற்றொரு பிள்ளையிடமிருந்து புத்தகம் வாங்கிப் படிக்கணும் என்று சீக்கிரம் போய் விட்டான்" என்று கூறினாள் ஜானகி.

"அதற்கு நான் என்ன செய்ய வேணுமென்கிறாய்?" இப்போது அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. இளையாளாக வாழ்க்கைப்பட்ட ஜானகி துன்பமேஅநுபவிக்கக் கூடாதென்பது அவருடைய எண்ணம். எல்லோரிலும் பெரியவனான கோபுவே அவளை இந்த மாதிரி அலைக் கழிக்கிறான் என்று அறிந்ததும் கோபுவைக் கொன்று விடுவதற்கான கோபம் வந்தது அவருக்கு.

"டிபன் அடுக்கில் சாதம் வைத்திருக்கிறேன்" என்றாள் ஜானகி பயந்தபடியே.

இதைக் கேட்டதும் அவர் குதித்தார். "நானென்ன அவனுக்கு வேலைக்காரனா? சாதம் கொண்டு போய்க் கொடுக்க? ஏற்கெனவே ஆபீசுக்கு நேரமாகி விட்டது. போக்கிரிப்பயல் வரட்டும். அவன் கழுத்தைத் திருகி விடுகிறேன்" என்று கத்தினார்.

ஜானகி நடுங்கிப் போய் விட்டாள். தான் எதற்காக இதை அவரிடம் சொல்லப் போனோம் என்றாகி விட்டது அவளுக்கு.

கோபு ஒரு மணிக்கு வந்து சாப்பிட்டு விட்டுப் போன பிறகுதான் அவள் சாப்பிட்டாள். சாயந்திரம் என்ன விபரீதம் நடக்குமோ என்று அவள் பயந்தாள்.



கோபுவோ அப்பா இதையறிந்தால் தன்னுடைய சித்தி ஜானகியைத் தான் கோபித்துக் கொள்வார் என்று நினைத்தான்.

மாலை ஏழு மணிக்குப் பந்தாடி விட்டுக் கோபு வீட்டுக்கு வந்த போது அப்பொழுது தான் ஆபீஸிலிருந்து வந்த அவன் தந்தை கோட் ஸ்டாண்டில் உடைகளைக் களைந்து மாட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவன் சத்தத்தைக் கேட்டு அவர் திரும்பிப் பார்த்தார். காலையில் நடந்த விஷயத்தை அவர் மறந்து விடவில்லை. இனிமேல் அந்த மாதிரி நடக்க விடக் கூடாது என்று எண்ணினார். ஆகவே அவர்:

"அடே போக்கிரி! காலமே ஏண்டா சாப்பிடாமல் போனாய்? உனக்கு எட்டு மணிக்குச் சமைத்துப் போடச் சமையல்காரியை வைத்திருக்கிறாயா?" என்று அங்கே மாட்டியிருந்த ஒரு கழியை எடுத்துக் கொண்டார். ஆபீஸிலிருந்து வந்து ஒன்றும் சாப்பிட்டிருக்கவில்லை. பசியினாலும் கோபத்தினாலும் அவர் முகம் சிவந்திருந்தது.

"பள்ளிக்கூடத்துக்குச் சீக்கிரம் போய்க் கொஞ்சம் பாடம் படிக்க வேண்டியிருந்தது" என்றான் கோபு பயந்து கொண்டே.

"உருப்படாப் பயலே! எவ்வளவு புத்தகம் உனக்கு வாங்கித் தந்திருக்கிறேன்? மறுபடியும் இன்னொரு பையனிடமிருந்து வாங்கிப் படிக்க என்ன பாக்கி வைத்திருக்கிறது? பொய் சொல்லுகிறாயா, கழுதை? உன் காலை ஒடிச்சுடறேன்" என்று கூறித் தனக்கிருந்த கோபத்தையெல்லாம் வைத்து ஓங்கிக் காலில் ஒரு அடி அடித்தார்.

கோபு ஒரு துள்ளுத் துள்ளினான். "ஐயோ! அப்பா வேண்டாம்," என்று கதறினான்.

அதே சமயம் காப்பியை எடுத்துக் கொண்டு வந்த ஜானகியும், "ஐயோ! வேண்டாமே. குழந்தையை அடிக்காதீர்களேன். அவன் பேரில் ஒரு தப்புமில்லை. எல்லாம் என் பேரில்தான்" என்று கதறினாள்.

அவன் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழியத் தொடங்கியது. அவன் உதடு வார்த்தைகளைச் சரியாகக் கூற முடியாமல் துடித்தது. கையிலிருந்த டம்ளர் விழுந்து விடும் போல் தோன்றவே அதைத் தன் சக்தியை யெல்லாம் வைத்துக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

விறைத்துக் கொண்டு கூனிக் குறுகி நின்று கொண்டிருந்த கோபுவைப் பார்த்ததும் அவள் கண்களிலிருந்து இன்னும் வேகத்துடன் கண்ணீர் பெருகியது.

இவர்கள் இரண்டு பேரையும் ஒரு தரம் பார்த்து விட்டு அவர் பிரம்பைத் தூக்கி எறிந்தார். சட்டென்று காப்பியை வாங்கி வேண்டா வெறுப்புடன் சாப்பிட்டு விட்டு ஸ்நானம் பண்ணப் போய் விட்டார்.

ஜானகி கோபுவைப் பார்த்தாள். அவனும், வெறுப்பும், கோபமும், பயமும் கலந்த ஒரு பார்வை அவளைப் பார்த்தான். அடுத்த நிமிஷம் ஜானகி அந்த அறையிலிருந்து வெளியே வந்து விட்டாள்.

ஆம்! கட்டாயம் அவள் தான் தந்தையிடம் சொல்லிக் கொடுத்து உதை வாங்கி வைத்திருக்க வேண்டும் என்று கோபு நினைத்துக் கொண்டிருப்பான்.

"ஐயோ, கடவுளே! அவனுக்கு எப்படி விளக்குவது? இனிமேல் அவனிடமிருந்து உண்மை அன்பை ஒரு சொட்டுக் கூட எதிர் பார்க்க முடியாது" என்று ஜானகிக்குத் தோன்றியது. அவளுக்கு என்னமோ செய்தது. அவள் தோற்று விட்டாள். அதற்கப்புறம் அவளுக்கு அந்த வீட்டிலிருக்கவே சிறிதும் பிடிக்க வில்லை.

* * *

என்ன ஆச்சரியம்! கடவுள் அவள் மனத்திலுள்ளதை அறிந்து விட்டார். அதனால் தானோ என்னமோ மறுநாளே அவள் தாயிடமிருந்து "உடனே புறப்பட்டு வரவேண்டும். குழந்தை நீலு ஜுரமாகப் படுக்கையிலிருக்கிறான். 'அக்கா! அக்கா!' என்று பிதற்றுகிறான்" என்று கடிதம் வந்தது.

அவளுக்கு ஏற்கெனவே இருந்த துக்கத்தினால் இந்தச் செய்தி அதிக துயரைக் கொடுத்தது. உடனே பறந்து நீலுவிடம் போய்விட நினைத்தாள். அவள் சுபாவமே அப்படி. குழந்தைகளிடம் அவள் நிரம்பவும் பிரேமை வைத்திருந்தாள். அவளது மூத்தாள் குழந்தைகள் பேரிலும் அவளுக்கு அளவு கடந்த பிரியம்.

கணவனிடம் கடிதத்தைக் காட்டி, அவசியம் தான் போக வேண்டுமென்றாள். அன்றைய தினம் அமாவாசையாக இருந்ததால் அன்றே புறப்பட்டுப் போய் விட்டாள். அவர் ஸ்டேஷன் வரை சென்று தனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தாருடன் அவளைப் பிறந்தகம் அனுப்பி விட்டு வந்தார்.

குழந்தை சரோஜாவையாவது தன்னுடன் அழைத்துப் போக வேணுமென்று அவள் சொல்லியும் அவர் ஒரேயடியாகக் கூடாது என்று சொல்லி விட்டார். அவளுக்கு ஒரு தொந்தரவும் கொடுக்கக் கூடாது என்பதல்லவா அவர் எண்ணம்!

கோபு தன் துடையில் பட்டிருக்கும் தழும்பைப் பார்த்துப் பார்த்து அவன் சித்தி ஜானகி பேரிலிருக்கும் வெறுப்பை வளர்த்து

வந்தான். அவள் தான் அதற்குக் காரணம் என்று அவன் நினைத்தான். ஆகவே அவள் போவதில் அவனுக்கு ஒருவித வருத்தமும் இல்லை. கமலாவுக்கு மாத்திரம் அழுது அழுது முகம் சிவந்து விட்டது. சரோஜாவுக்குக் கை நிறைய மிட்டாயும் பிஸ்கோத்தும் கொடுத்ததும் 'ஹி, ஹி' என்று சிரித்தாள். அப்பாவுடைய தோளில் சவாரி பண்ணும் போது அவளுக்கு வேறென்ன வேண்டும்?

ஓட்டல் சாப்பாடு உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. தன் கையால் எவ்வளவு நாட்கள் சமைத்துச் சாப்பிடுவது? மூன்று மாதங்களுக்கு முன்பே, பட்டணத்தையும் அங்குள்ள கோயில்களையும் பார்க்க வேணுமென்று எழுதியிருந்த அவரது மூத்த தமக்கையையும் இப்போது வந்து சேரும்படி எழுதி விட்டார் கோபுவின் தகப்பனார்.

அத்தை வந்து விட்டாள். குழந்தைகளுக்கு ஒரே குஷி. முறுக்கு, சீடை எல்லாம் நிறையக் கிடைத்தன. எல்லாரையும் விடச் சந்தோஷமடைந்தவன் கோபுதான். அவள், அப்பாவின் சொந்தத் தமக்கை. ஜானகி வேறு குடும்பத்தினள். அத்தையோ அவளைவிட அவனுக்கு நூறு மடங்கு சொந்தம். அவனுக்கு அத்தையைக் காண்பதற்குள்ளேயே ரொம்பவும் பிடித்துப் போய் விட்டது.

அத்தை அம்மாளுக்கு இந்த வீட்டில் காலெடுத்து வைத்ததுமே ஜானகியைக் காணாமல் கோபம் கோபமாய் வந்தது. நாத்தனார் ஸ்தானம் நன்றாகக் கொண்டாட வேணும் என்று வந்தவள் தலையில் சொல்லாமல் கொள்ளாமல் சமையல் வேலை வந்து விழுந்தால் அவளுக்கு ஆத்திரம் வராமல் என்ன செய்யும்?

அப்பாவோ கோயில்களைக் காட்டிக் கொடுக்கும் பொறுப்பைக் கோபுவின் தலையில் சுமத்தி விட்டார். அத்தைக்கு அந்தச் சிறு பயல் கோயில்களை நன்றாகக் காட்டித்தர மாட்டான் என்ற எரிச்சல். கோபு அத்தைக்கு ஒவ்வொரு கோயிலையும் தினமும் கூட்டிச் சென்று காட்டிக் கொடுத்தான்.

"ஏண்டா பயலே எல்லாம் பார்த்தாயிற்றா? விளையாடப் போகிற குஷியிலே எல்லாம் போதும் என்று வைத்து விட்டாயா? அப்படிச் செய்தால் அப்பாவிடம் சொல்லி உதை வாங்கி வைப்பேன். மரியாதையாக எல்லாவற்றையும் காட்டிக் கொடு" என்று அவள் அவமரியாதையாகப் பேசியதும் கோபுவுக்குக் கோபம் அளிக்கவில்லை.

அத்தை வந்ததிலிருந்து பத்தரை மணிக்கு முன்பு அவனால் பள்ளிக்கூடம் போக முடியவில்லை. அதற்கு முன்னால் அத்தை சமையலை முடித்தால்தானே? சாப்பிடாமல் போக அவனுக்குத் தைரியமில்லை.

தினந்தோறும் இப்படியே நடப்பது உபாத்தியாயருக்குக் கோபம் வந்து ஒருநாள் அவன் வரும் பொழுதே வகுப்புக்குள் வரக் கூடாது என்று வெளியில் நிறுத்தி விட்டார். முக்கால் மணி நேரம் வகுப்புக்கு வெளியே

நின்றதில் கோபுவுக்கு அவமானம் தலையைத் தூக்க முடியவில்லை.

அப்பா கடைக்குப் போகும் போது மறந்து போய், மறுபடியும் பச்சை மிளகாய் வாங்குவதற்காக அவனைக் கடைக்குப் போகச் சொன்னாள் அத்தை. அவன் அதை வாங்கிக் கொண்டு வந்தவுடனே, தானே, "அடாடா! கொத்தமல்லி இல்லையே! சாம்பாருக்குக் கொத்தமல்லி போடா விட்டால் கொஞ்சம் கூட நன்றாயிருக்காதே" என்று ஒரு காலணாவைக் கொடுத்து மறுபடியும் அவனைக் கடைக்கு ஓட்டும் போது கூட அவனுக்கு அத்தை பேரில் கோபம் வரவில்லை. ஆனால் பள்ளிக்கூடத்துக்குப் பத்தரை மணிக்கு மேல் சமையல் பண்ணிப் போடும்போது மாத்திரம் அவனுக்குக் கோபம் வராமலிருக்க வில்லை.

அடுத்த நாள் காலையில் அவன் அத்தையிடம் சொல்லி விட்டான், தனக்குத் தினமும் பள்ளிக்கூடம் போக நேரமாவதால் உபாத்தியாயர் கோபித்துக் கொள்ளுகிறாரென்று.

இதைக் கேட்டதும் அத்தை போட்ட கூச்சலினால் கோபு காதைப் பொத்திக் கொள்ள வேண்டி வந்தது.

"அட வாண்டுப் பயலே. உங்கப்பன் என்னைச் சமையல்காரியாக வைத்திருக்கிறானா என்ன! என்னை வரவழைப்பதற்கு முன்னாடியே தன் பெண்டாட்டியைப் பிறந்தகத்துக்கு அனுப்பி விட்டானே! நாத்தனாருக்குச் சமைத்துப் போட்டு எங்கே உங்கம்மாவைப்போல் அவளும் செத்துப் போய்விடுவாளோ என்று பயந்து விட்டானா? நாங்கள் எல்லாம் அந்தக் காலத்திலே பழையது சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். இப்போ என்னடா என்றால் காப்பியைக் கொண்டா, டீயைக் கொண்டா என்கிறதுகள். வேணுமானால் பழையது சாப்பிட்டு விட்டுப் போ. என்னால் ஏழு மணிக்குச் சமைத்துப் போட முடியாது" என்று கத்தின பொழுது காதுடன் வாயையும் பொத்திக் கொண்டான் கோபு.

பேசாமல் பழையது சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தான்.

இது வரையில் பழையது சாப்பிட்டு வழக்கமில்லையாகையால் அன்று சாயந்திரமே கோபுவுக்கு மண்டையிடியும், காய்ச்சலும் வந்து விட்டன. பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் போர்த்தி மூடிக் கொண்டு படுத்தான். அத்தை அன்று திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலுக்குப் போக வேணுமென்று சொன்ன பொழுது வாரிக் கட்டிக் கொண்டு எழுந்திருந்தான். போகா விட்டால் அதற்கு ஏதாவது சொல்வான் என்று பயந்து அவளுடன் போனான். போகும் வழியெல்லாம் தள்ளாடித் தள்ளாடி அவன் நடந்தான்.

"அட திருட்டுக் கழுதை! உனக்கு இவ்வளவு பாசாங்குத் தனமா? உனக்கு என்னை அழைத்து வந்து காண்பிக்க இஷ்டமில்லை என்றால் வீட்டிலிருந்தே சொல்வது தானேடா? யாரிடமிருந்தடா இவ்வளவு

மாயா ஜாலங்களைக் கற்றாய்? உன் சித்தி சொல்லி வைத்தாளோ?" என்று அவன் காணாத சித்தியைப் பற்றிக் கூடப் பழித்துக் கூறும் அத்தையைப் பற்றிக் கோபு கேவலமாக எண்ணத் தொடங்கியதில் ஆச்சரியமொன்று மில்லை.

வழியெல்லாம் அவனைத் தன் வாயில் வந்தபடி வைது கொண்டே இருந்தாள் அவள்.

இரவு அவன் சாப்பிட வேண்டாமென்று சொல்லியும் கட்டாயப் படுத்தி மோரும் சோறும் போட்டாள். மறு நாள் காலையிலும் அவன் தலையில் பழைய சோறுதான் எழுதியிருந்தது! உடம்பு சரியில்லை என்று சொன்னால் சண்டைக்குவருவாளே என்று பேசாமல் சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடம் போனான்.

ஒரு மணிக்கு இரண்டு சகாக்கள் பிடித்துக் கொண்டு விட, கோபு வீட்டுக்கு வந்து தடாரென்று விழுந்தான். அத்தை தன் வசவைத் தொடங்கி விட்டாள். அவன் கற்றிருக்கும் மாயா ஜாலங்களைப் பற்றி அளந்தாள். அவனுடைய உடம்பைத் தொட்டுக் கூடப் பார்க்க வில்லை. அவனுடைய தந்தையைப் பற்றியும் இளைய தாயாரைப் பற்றியும் இல்லாததையும் பொல்லாததையும் சளசளவென்று சொல்ல ஆரம்பித்தாள். அத்துடன் உள்ளுக்கும் வெளிக்கும் தடதட வென்று நடந்து "நான் இப்போதே ஊருக்குப் போகிறேன்" என்று ஆர்ப்பாட்டம் பண்ணி அவனுடைய சாமான்களையெல்லாம் கட்டத் தொடங்கினாள்.


இந்த ரகளையிலேயே கோபு எண்ணத் தொடங்கினான். தான் அத்தையைப் பற்றி எண்ணியதெல்லாம் எவ்வளவு தவறு? அதே போல் சித்தியைப் பற்றியும் நினைத்துப் பார்த்தான். அவன் சித்தியை எவ்வளவு பாடு படுத்தியிருக்கிறான்! ஆனால் அவள் இந்த மாதிரி ஒருவார்த்தைகூடப் பேசியதில்லையே!

"ஆம்! நான் அவளைப் படுத்தியதற்கு நன்றாக எனக்கு வேண்டும்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் அவன். மறுபடியும் அவன் மனம் சித்தியை எண்ணியது. அவள் அவனுக்காகச் செய்த ஒவ்வொரு காரியமும் அவனுக்கு நினைவு வந்தது.

"ஹா! என் அம்மா கூட இப்படி என் பேரில் பிரியமாக இருந்ததில்லையே! இனி மேல் சித்திதான் என் தெய்வம்! என் அம்மா!" என்று நினைத்தான். பச்சாத்தாபத்தினால் அவன் உருகினான். கடைசியில் "அம்மா! அம்மா! உன்னை நான் எவ்வளவு பாடுபடுத்தினேன்?" என்று கூறி அழுதான்.

கூடத்தில் அப்பாவுடைய சத்தம் கேட்டது. அத்தை ராட்சஸியைப் போல் அவரிடம் கூச்சலிட்டுக் கொண்டிருந்தாள். கடைசியில் அத்தை புறப்பட்டுப் போய் விட்டாள்.

அப்பா அவள் போன பிறகுதான் இவனிடம் வந்தார். கோபித்துக் கொள்வாரோ என்று பயந்தான். அப்படியொன்றும் நேரவில்லை. அருகில் உட்கார்ந்து அவர் அவன் தேகத்தைத் தொட்டுப் பார்த்தார். ஜுரம்



கனல் போல் காய்ந்து கொண்டிருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் டாக்டர் வந்து ஏதோ மருந்து கொடுத்த விட்டுப் போனார்.

நாலைந்து நாட்களில் கோபு ஜுரம் தணிந்து பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தான். அவன் மனம் சித்தியைக் காணத் துடித்தது.

ஒரு நாள் விடியற்காலம் அவர்கள் வீட்டுக்கு ஒரு தந்தி வந்தது.

சித்திக்கு டைபாய்டு ஜுரம் என்றும், உடனே தான் போக வேண்டு மென்றும், கோபு முதலியவர்கள் அடுத்த தெருவிலிருக்கும் சாம்பு மாமா வீட்டுக்குப் போய் அவர் வரும் வரையிலும் இருக்க வேண்டு மென்றும் அப்பா சொன்னார்.

கோபுவுக்குத் தானும் போக வேண்டு மென்ற ஆவல். ஆனாலும் அப்பாவுக்குப் பயந்து கொண்டு அவர் சொன்னபடி கேட்டான். அவன் மனம் "சித்தி பிழைக்க வேண்டுமே" என்று பிரார்த்தித்தது.

அப்பா போய் அடுத்த நாளே கோபுவும் வரவேண்டு மென்று தந்தி வந்தது. கோபு சந்தோஷத்துடன் புறப்பட்டான். ஒரு பக்கம் கவலையும் இல்லாமலில்லை.

சித்தி ஒரு கட்டிலில் படுத்திருந்தாள். ரொம்பவும் இளைத்திருந்தாள். கோபு போனதுமே அப்பா சித்தியருகில் அவனை அழைத்துக் கொண்டு போனார். கோபுவுக்கு அவளைப் பார்க்க வெட்கமாக இருந்தது. அவர் அவன் காதருகில் வாயை வைத்துக் கொண்டு சொன்னார்: "ஜானகி, இதோ கோபு வந்திருக்கிறான் பார்."

ஜானகிக்கு ஜுரம் அதி வேகத்துடனிருந்தது. அவளுக்கு அடிக்கடி பிரக்ஞை தவறியது. அவள் அடிக்கடி "கோபு, கோபு" என்று கூறியதைக் கேட்டுத்தான் அவர் கோபுவுக்குத் தந்தி யடித்தார். ஜானகி கண்களை விழித்தாள். அவை ஜுர வேகத்தில் சிவந்திருந்தன. அவள் கிணற்றிலிருந்து பேசுவது போல் பேசினாள். ஆனால் அருகிலிருந்த கோபுவுக்கு அவை யெல்லாம் நன்றாகக் காதில் விழுந்தன.

"யார்! கோபுவா அங்கே வந்திருப்பது? இருக்காது. அவனால் வெறுக்கப்பட்ட இவளைப் பார்க்க அவன் ஒருபோதும் வர மாட்டான்" என்று அவள் கூறியபோது கோபுவின் கண்களில் நீர் பெருகியது. அவன் அப்பாவைக் கூட மறந்தான். இன்னும் அருகில் சென்று குனிந்து "அம்மா, நான்தான் வந்திருக்கேன், அம்மா. உன் குழந்தையாகிய நான் செய்த தவறுகளைத் தயவு செய்து மன்னித்துக் கொள், அம்மா" என்று அழாக்குறையாகக் கூறினான். அதற்குள் அவன் தொண்டை அடைத்துக் கொண்டது. அவன் கண்ணிலிருந்து பெருகிய கண்ணீர்த் துளிகள் அவள் சூடான முகத்தில் விழுந்து உலர்ந்து போயின. ஆச்சரியத்தினாலும் ஆனந்தத்தினாலும் அவள் முகம் மலர்ந்தது.

"என்னது! என் குழந்தை! கோபு, என் கண்ணே! நான் உன் அம்மா! கடைசியில் என் தவம் பலித்ததா? என் அருகில் வா. இன்னொருதரம் என்னை 'அம்மா!' என்று கூப்பிடு" என்றாள் அவள்.


இதைக் கேட்டதும் கோபுவின் கண்களில் கண்ணீர் ஊற்றைப் போல் பெருகியது. அவனுடைய தந்தை விம்மும் சத்தம் கூட அவன் காதில் விழவில்லை. அவன் சகலரையும் மறந்தான். உண்மையான "மாத்ரு பக்தி" அவன் மனத்தில் பொங்கி எழுந்தது.

அவன் அவள் முகத்தோடு முகம் வைத்துக் கொண்டு, "அம்மா! அம்மா! அப்படியெல்லாம் சொல்லாதே" என்று விம்மினான்.

"கண்ணே கோபு! நீ என் மகன். நீ என் மகன்" என்றாள் அவள். அவளுடைய ஆத்மா சாந்தியடைந்தது. அவளுடைய லட்சியம் நிறைவேறி விட்டது. அவள் எதை விரும்பினாளோ, அது கிடைத்து விட்டது. இனிமேல் அவளுக்கு இந்த உலகத்தில் என்ன வேலை? அவளுடைய ஜீவன் ஆனந்தத்துடன் வானுலகை நோக்கிப் பறந்தது.

பொதுஜனங்கள் அனைவருக்கும் "ஒட்டக மார்க்" தீப்பெட்டி
களை ஆதரிக்கும் மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் எமது

தீபாவளி வாழ்த்துகள்



ஒட்டகம் மார்க்

தீப்பெட்டிகள்

குளிர் மழை பிரதேசங்களுக்கு உகந்தது
பூரண உத்திரவாதம் உள்ளது.


எல்லோரும் வாங்கி உபயோகியுங்கள்

விற்பனை டிப்போக்கள்

மங்களூர்	...	678, அஜீஸுடீன் ரோடு
கள்ளிக்கோட்டை	...	2-3, பீச் ரோடு
கண்ணனூர்	...	674, காம்ப் பஜார்
தலைச்சேரி	...	7/233, மெயின் ரோடு
திரூர்	...	127-A, மலப்புரம் ரோடு

சௌத் இந்தியன் லூசிபர் மாட்ச் ஒர்க்ஸ்

தந்தி. LUCIFER.. த.பெ.எ. 26.. சிவகாசி.. போன். 61..


லண்டனுக்கு
போகிறீர்களா ?
பாரிஸ்
குதூகலக் காட்சி
மார்க்கத்தில்
அதிகப்படி கட்டணமின்றி
உங்கள் பிரயாண ஏஜன்டையோ அல்லது அருகிலுள்ள டி. டபிள்யு. ஏ. ஆபீஸிலோ விசாரியுங்கள்.
சிறந்த முறையில் டி. டபிள் யூ. ஏ. மூலம் பிரயாணம் செய்யுங்கள்...
FLY TWA
TRANS WORLD AIRLINES
வருஷத்துக்கு 3,000,000 க்கு மேலான ஜனங்கள் டி. டபிள்யு. ஏ. மூலம் பிரயாணம் செய்ய விரும்புகின்றனர்.

TWA/L/9




See the glories of India's past
THE STUPA, SANCHI
THE TAJ, AGRA
THE LAKE PALACE, UDAIPUR
AMBER PALACE, JAIPUR
THE KAILAS, ELLORA CAVES
TOWER OF VICTORY, CHITORGARH
A FRESCO IN AJANTA CAVES
CENTRAL AND WESTERN RAILWAYS
NEW ROUND TOUR CONCESSIONS INTRODUCED BY INDIAN RAILWAYS NOW ENABLE YOU TO PLAN YOUR HOLIDAYS ECONOMICALLY AND VISIT ALL IMPORTANT PLACES IN THE COUNTRY WHICH ARE LIVING MONUMENTS OF INDIA'S GLORIOUS PAST.
INDIAN RAILWAYS ARE ALWAYS AT YOUR SERVICE.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.



தீபாவளி திகழ
புதிய 1100
பியட்
★ வசதியாக உட்கார இடம்
★ நவீன அமைப்பும், நீடித்த உழைப்பும்
★ பிரயாண சாமான்களுக்கு போதிய வசதி
★ குறைந்த சிலவில் சிறந்த பிரயாணம்
டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிமிடெட்.
மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, சேலம்.
சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்.
மவுண்ட் ரோடு, சென்னை - 6

Regd. as a newspaper in Ceylo

